ஸ்ரீ:

உபய வேதாந்த க்ரந்தமாலை

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

★

ஸ்ரீ உத்தமூர் திருமலைநல்லான் சக்ரவர்த்தி

வீரராகவாசார்யர் இயற்றிய

ப்ரபந்தரக்ஷை

என்னும் உரையுடன்

(மறு பதிப்பு)

1998

ஸ்ரீ:

உபயவேதாந்தக்ரந்தமாலை

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

ஸ்ரீ உத்தமூர், திருமலைநல்லான் சக்ரவர்த்தி

வீரராகவாசார்யர் இயற்றிய

ப்ரபந்தரக்ஷை

என்னும் உரையுடன்

(மறுபதிப்பு)

ஸ்ரீ:

முதற் பதிப்பில் குறிக்கப்பெற்றது பின்வருமாறு

வையத்து வாழ்கின்றவர் எங்குமின்புறும்படி ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவையென்னும் திவ்ய ப்ரபந்தத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளைமூவாயிரப்படி, அழகிய மணவாளப் பெருமாள் நாயினார் ஆறாயிரப்படி, உபநிஷத் பாஷ்யகார ஸ்ரீரங்கராமானுஜஸ்வாமிகளின் வடமொழி வியாக்கியானம், பெரிய பரகாலஸ்வாமிகளின் உரை ஸ்ரீரங்கநாதஸ்வாமிகளின் உரை என்றாற்போன்ற பல உரைகள் பூர்வர்களால் இயற்றபட்டுள. வருஷம்தோறும் மார்கழி மாதத்தில் பல பண்டிதர்கள் பட்டணங்களிலும் பல திவ்ய தேசங்களிலும் இத்திருப்பாவையின் பொருட் சுவையை எல்லோரும் ஒன்று சேர்ந்து ரஸித்துண்டு களிக்கும்படி உபந்யஸித்தும் வருகின்றனர். இந்த வகையிலே நந்தனஸூ மார்கழி மாதத்தில் திருவள்ளூர் திவ்ய தேசவாஸிகளான ஆஸ்திக ப்ரமுகர்களும், விஜயஸூ மார்கழி மாதத்தில் சென்னை, மாம்பலம், திருவல்லிக்கேணி என்ற இடங்களிலுள்ள மஹான்களனைவரும் எனக்கும் இதுவிஷயமாக உபந்யாஸங்களை ஏற்படுத்தினர். அவர்களில் சில மஹான்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்வாபதேசார்த்தத்திலும் ஆராய்ச்சி செய்ய இறங்கின எனது உபந்யாஸங்கள், ஸ்ரீமத் அழகிய சிங்கர் முதலானோர் மகிழ்ந்தருளும்படி இருந்ததால் ஆண்டாளுடையவும், ஆசார்யர்களுடையவும் மற்ற பாகவதர்களுடையவும் அனுக்ரஹத்தினாலே திருப்பாவைக்கு ஓர் உரையெழுதும்படி என்னைத் தூண்டின. நாலாயிரவுரையாக இயற்றும் பிரபந்தரக்ஷையில் பெரியாழ்வார் திருமொழியுரை பூர்த்தியான தருணமாகையாலே இது ப்ராப்தமுமாயிற்று.

பெரியாழ்வார் தமது திவ்ய ப்ரபந்தம் மூலமாகப் பரமைகாந்தி வைஷ்ணவ நிலைமையை நிலைநாட்டினதுபோல,அவர் புதல்வியான ஆண்டாளும், ரஹஸ்யம், ப்ரபத்தி, பஞ்சகால ப்ரக்ரியை முதலான பல விசேஷார்த்தங்களை வெளியிடுமழகு இங்கே விரிவாகக் காணப்படும். எனவே எம்பெருமானார் இதில் ரஸித்து திருப்பாவை ஜீயரெனப் போற்றப் பெற்றதென்க. பல பாசுரங்களுக்கு ஆண்டாள் ஆழ்வார்களை எழுப்புவதாக ஸ்வாபதேசவுரையை வளர்க்கின்றனர். விழித்திருப்பவரை எழுப்புவதைவிட உறங்கும் நம்மை எழுப்பும் உள்ளுரை தகும்.

1966 ப்ரபந்தரக்ஷையாசிரியர்.

4-1

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

ஆண்டாள் திருவடிகளே சரணம்

திருப்பாவை

உரை ப்ரபந்தரக்ஷை

व्यक्ताव्यक्ताक्षरवरतमःकालवैकुण्ठजीवैः तत्त्वग्रामः सह भगवतेवाद्भुतस्त्रिंशदात्मा ।
दिव्यः कन्याव्रतपर-सुधास्यन्दि-सूक्तिप्रबन्धो देवी गोदा ददतु गुरवः श्रीनिधिश्च श्रियं नः ॥

வ்யக்தாவ்யக்தாக்ஷரவரதம:காலவைகுண்டஜீவை:
தத்த்வக்ராம: ஸஹ பகவதேவாத்புதஸ் த்ரிம்சதாத்மா ।
திவ்ய: கந்யாவ்ரதபர ஸுதாஸ்யந்திஸூக்திப்ரபந்தோ
தேவீ கோதா ததது குரவ: ச்ரீநிதிச்ச ச்ரியம் ந: ॥

பெரியாழ்வார் திருமொழிக்கு மேல் முதலாயிரத்திற் சேர்ந்துள்ளது திருப்பாவை. இது ஆண்டாள் அருளிச்செய்த இரு பிரபந்தங்களில் முதன்மையானது. இதற்குத் தனியன்கள் மூன்று.

नीलातुङ्गस्तनगिरितटीसुप्तमुद्बोध्य कृष्णं
पारार्थ्यं स्वं श्रुतिशतशिरस्सिद्धमध्यापयन्ती ।
स्वोच्छिष्टायां स्रजि निगलितं या बलात्कृत्य भुङ्क्ते
गोदा तस्यै नम इदमिदं भूय एवास्तु भूयः ॥

நீளாதுங்க ஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்த்யம் ஸ்வம் ச்ருதிசத சிரஸ்ஸித்த மத்யாபயந்தீ ।
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய: ॥

இத் தனியன் ஸ்ரீபட்டர் அருளிச்செய்ததாம். இது ஸம்ஸ்கிருத பாஷையிலிருப்பதாலும், திருப்பாவையின் ஸாரார்த்தத்தை வெளியிடுவதாலும், உய்யக்கொண்டார் அருளிச்செய்த தமிழ்த் தனியன்களுக்கு முன்னமே அனுஸந்திக்கப்படுகிறது. இதன் பதவுரை—

கோதா—கோதைப் பிராட்டி யென்ற
யா —யாவளொரு பிராட்டி

நீளா	நப்பின்னையினுடைய		
துங்க ஸ்தந	உயர்ந்த மலைபோன்ற		
கிரிதடீ	முலைகளின் தடத்திலே		
ஸுப்தம்	உறங்கினவனை		

க்ருஷ்ணம்—கண்ணனை
உத்போத்ய—எழுப்பி

ச்ருதி	நூற்றுக் கணக்கான
சத சிரஸ்	வேதங்களின் சிரஸ்ஸுக்
ஸித்தம்	களான உபநிஷத்துக்
	களிலே தேர்ந்துள்ள

ஸ்வம் — தனதான
பாரார்த்த்யம் — சேஷத்தன்மையை
அத்யாபயந்தீ — அறிவிக்கின்றவளாய்
பலாத்க்ருத்ய — பலாத்காரம் செய்து
ஸ்வ உச்சிஷ்டாயாம் — தன்னால் சூடிக் களையப்பெற்ற
ஸ்ரஜி — பூமாலையிலே
நிகளிதம் — விலங்கிடப்பட்ட அவனை
புங்க்தே — அநுபவிக்கின்றாள்
தஸ்யை — அந்தப் பிராட்டியின் பொருட்டு
இதம் இதம் நம: — இந்த விந்த ப்ரணாமம் (சாஸ்த்ரோக்த ஸர்வ ப்ரணாமமும்)
பூய ஏவ — மேன் மேலாகவே
பூய: — மறுபடியும், அடிக்கடி
அஸ்து — ஆகக்கடவது

பூர்வார்த்தத்திற்குத் திருப்பாவை யருளினவளென்றது கருத்து. பூமாலையில் அவன் சிக்குண்டது அதற்கு முன்னும் பின்னுமாம்.

பெரியாழ்வாருடைய திருத்துழாய்த் தோட்டத்திலே தோன்ற, அன்னாரால் கோதை யெனப் பெயரிட்டுப் பரிவுடன் வளர்க்கப்பட்ட ஆண்டாள், தான் பூமிப்பிராட்டியின் அவதாரமானபடியாலே எம்பெருமானையே காதலுற்று அவனுடைய உவப்பிற்குத் தக்கவாறு தன்னை யலங்கரித்து வருபவளாய் அவனுக்குச் சாத்துவதற்காகத் தன் தகப்பனார் தொடுத்திருந்த திருத்துழாய்மாலையை முடியிலணிந்து அழகு பார்த்திருக்க ஒரு நாள் அதனைக் கண்ட வாழ்வார், 'இதையெங்ஙனம் எம்பெருமானுக்குச் சாத்துவது; இப் பெண் அறியாது இங்ஙனம் சூட்டிக் கொண்டதே' என்றனுதபித்து அன்றைத்தினம் வெறுமனே யிருந்துவிட, இரவில் எம்பெருமான் ஆழ்வாரின் சொப்பனத்தில் எழுந்தருளி 'உமது பெண் சூடிக்கொடுத்த மாலையே காணும் நமக்கு போக்யமாயுள்ளது' என நியமிக்கப் பிறகு பெரு மகிழ்ச்சியுடன் ப்ரதிதினம் சூடிக்கொடுத்த மாலையையே ஸமர்ப்பித்து வந்தார். இது திருத்துழாய்மாலை யாகையாலே உலகில் பெண்கள் புஷ்பம் சூட்டிக் கொள்ளப் பேராவல் கொண்டு உபயோகிப்பதுபோல் அவள் சூட்டிக்கொண்டாளல்லல். பின் எம்பெருமான் திருவுள்ள முகக்கவே, யென்க. ஸ்ரீதேசிகன், 'துழாய்மாலை முடி சூடிக்கொடுத்த மாதே' என வருளிச்செய்தது காண்க. திருத்துழாய் வனத்திலே யவதரித்தவளுக்குத் திருநாரணனுக்கான திருத்துழாயில் ப்ரீதியும் பஹுமானமும் அதிகம்.

இங்ஙனம் தன் பூமாலையிலே கட்டுண்டவனைப் பாமாலைகளை ஸமர்ப்பித்து வரிக்கக் கோலி, திருவாய்ப்பாடியிலே நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பனை அவனை ஆயச்சிறுமிகள் பள்ளி யெழுப்பிப் பெற்றுக் கூடி குளிர்ந்து களித்திருந்ததை யனுஸந்திக்கும் வ்யாஜத்திலே தனக்கு மவனுக்கு முள்ள ஸம்பந்தத்தை அவனுக்கு நினைப்பூட்டினள். 'நீ க்ருஷ்ணனல்லவோ? க்ருஷ்ணனாவான் பூமிக்கு ஸுகமளிப்பவன். 'க்ருஷிர் பூவாசக: சப்த: ணச்ச நிர்வ்ருதிவாசக:' (कृषिर्भूवाचकः शब्दः णश्च निर्वृतिवाचकः) என்றல்லவோ நிர்வசனம் செய்துள்ளனர். பூமியிலுள்ளாரெல்லோரும் உன்தனக்கு சேஷபூதர்கள். அவர்கள் உனக்குப் பணி செய்து ப்ரீதராம்படி நீ செய்ய வேண்டும். நானோ பூமி, ச்ரீபூமி நீளா ஸமேதனென்ற பிருதம்மட்டும் கொண்டு பெரிய பிராட்டியாருக் கடுத்தவளான என்னைவிட்டு நீளை யென்னும் நப்பின்னையின் முலைத்தடத்திலே கிடந்துறங்குவது ந்யாயமோ? அனந்தமான வேதங்கள் எல்லாம், 'பதிம் விச்வஸ்ய' [पतिम् विश्वस्य] என்றாற்போலே உன்னை ஸர்வசேஷியாகவும் சொல்லுகின்றன. 'ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ', 'உத்த்ருதாஸி வராஹேண க்ருஷ்ணேந சதபாஹுநா' (ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ, उद्धृतासि वराहेण कृष्णेन शतबाहुना) இத்யாதி வசனங்கள் உன்னிடம் என்தனக்குள்ள சேஷத்வத்தையும் சிறப்பாகக் கூறுகின்றன. நான் அவதரித்து வேறுருவம்

கொண்டதாலே என்னை மறந்தாயோ?' என்றவாறு சொல்லி நினைப்பூட்டினளென்றபடி. அத்யாபயந்தீ—தூங்கும் பிள்ளைகளை யெழுப்பி ஆசார்யன் அத்யயனஞ் செய்விப்பதுபோல் கண்ணனை யெழுப்பி ஓதுவித்தாள் போலும். நினைப்பூட்டினள், விண்ணப்பம் செய்து கொண்டனளென்பது பரமார்த்தம்.

பலாத்க்ருத்ய—உலகில் புருஷனோடு புணர்ந்து களிக்கும் சிறுமிகள் புருஷர்களாலே பலாத்கரிக்கும்படி தாங்கள் நாணத்தோடு நிற்பார்களென்பதே பெரும்பாலு முண்டா-கிலும், வெகு பிரயத்தனப்பட்டு, 'எம்பெருமானை யெப்போது நாமணுகுவது' என்று பேராவல் கொண்டிருப்பவர்கள் அவனுடைய திவ்ய ஸௌந்தர்ய லாவண்ய மந்தஸ்மித மதுராலாபங்களை யனுபவித்துத் தம் நிலையறியாமே மேல்விழுந்தனுபவிக்க முயல்வார் களாகயாலே இது எம்பெருமான் விஷயத்திலும் மற்ற விஷயத்திலுமுள்ள வாசி யென்றறிக. இங்ஙனமே, வேறொரு ஸ்த்ரீயுடன் கூடி யொரு புருஷனை யனுபவிக்க விசையார் உலகில் பெண்மணிகள்—எம்பெமானோடு புணரும் போது பிறரையும் கூட்டிக் கலந்து புணர்ந்து களிப்பார்களெனவும் தெளிக.

இவள் ஸாக்ஷாத் பூமிப் பிராட்டி யென்பதை ஸ்ரீதேசிகன் கோதா ஸ்துதியில், 'ஸாக்ஷாத் க்ஷமாம்' [साक्षात् क्षमाम्] என்று தொடங்கி பல ச்லோகங்களிலே விசதமாக அருளிச் செய்துள்ளார், எம்பெருமான் ஸர்வஜ்ஞனானபடியாலே பக்தர்களின் தோஷங் களைக் கண்டிருந்தாலும் காணாதவன் போல் நடிப்பது நீளை யென்னும் நப்பின்னையின் போகங்கள் அவன் கண்களை மறைத்து வைத்ததா லென்றும், பொறுமையே வடிவமெடுத் தாற் போலுள்ள பூமிப் பிராட்டியைப் பார்க்கும் போதெல்லாம், 'எல்லோரையும் சுமந்து வருமெனக்கே இவர்கள் பாரமாகத் தோன்றாமலிருக்க, எனக்கும் முடியாதபோது உம் மிடம் நான் முறையிடுவது வழக்கமு மாயிருக்க. என்னால் பொறுக்கப்பட்டவரையும் ஏன் வதைக்க வேண்டும்' என்று அவள் கேட்கிறதாக நினைத்துத் தான் பாபங்களைப் பொறுத்து விடுகிறான் எம்பெருமானென்றும், பெரிய பிராட்டியார் அறிவென்னும் ஸ்தந்யத்தை யளித்துச் சேதநனைப் போஷித்து எம்பெருமானை யாச்ரயித்தனுபவிக்கச் செய்கிறாள் என்றும் தயாசதகத்திலே ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தபடியிலே பார்க்கும்போது ஆண்டாளைப் பெரிய பிராட்டியின் அம்சமாகவும் நினைக்கவேண்டும்.

ஏனெனில், பெரிய பிராட்டியார் பெருமானை விட்டுத் தனியே அவதரிப்பதில்லை யாகையாலே, யாபி: த்வம் ஸ்தநபாஹுத்ருஷ்டிபிரிவ ஸ்வாபி: ப்ரியம் ச்லாகஸே, (याभिस्त्वं स्तनबाहुदृष्टिभिरिव स्वाभिः प्रियं श्लाघसे) என்று ஸ்ரீ பட்டர் அருளிச் செய்தபடி மற்ற பிராட்டிகள் எல்லோரும் பெரிய பிராட்டியாரின் அம்சமானபடியாலே இவ்வாண்டாளிடத் திலே அப் பிராட்டி அனுப்ரவேசித்து இவளாகவே யாகி, செவிக்கினிய செஞ்சொற்களான பாசுரங்களை யியற்றி இதற்கு முன் தான் செய்துள்ள அவதாரங்களிலே பிரஜைகளுக்குத் தத்துவோபதேசம் செய்து சைதந்யஸ்தந்யத்தை யளிக்காம லிருந்து விட்டதாலே தனக்கி ருந்த க்லேசத்தையும் போக்கிக்கொண்டனள், ஆனது பற்றி, 'கருணயா கமலாமிவாந்யாம்' (करुणया कमलामिवान्याम्) எனவு மருளிச் செய்தார். அஸஹ்யாபசாரத்திலே முனைந்த இராவணனுக்கும், 'மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தானம் பரீப்ஸதா। வதஞ்சா நிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப:' (मित्रमौपयिकं कर्तुं रामः स्थानं परीप्सता। वधं चानिच्छता घोरं त्वयासौ पुरुषर्षभः॥) என்று ஹிதோபதேசம் செய்தருளின பெரிய பிராட்டிக்கு எல்லோருக்கும் உபதேசரூபமாக அருமொழிகள் அருளிச் செய்ய விருப்ப மிருக்கத் தகும். இங்ஙனம் ஆண்டாள், பெரிய பிராட்டியாரும் நேரிற்பெறாத ஆசார்யகத்

னைத்தான் வஹித்ததாலே கீதையை யுபதேசித்து ஆசார்யனும் விளங்கும் கண்ணனுக்கு இவளே தக்க ஸஹ தர்ம சாரிணியாக வேண்டியிருந்தது. தன்னைப் போலே பிறரை உப தேசத்தாலே திருத்தும் க்ருஷ்ண ருபத்திலேயே ஆண்டாளுக்கு காதல் மண்டிற்று.

ஸாமாந்யாதிகாரிகளாக நினைக்கப்பட்ட ஸ்த்ரீகளுக்குப் புருஷர்களுக்கு எட்டாத புருஷார்த்தங்களையும் கொடுத்தருளுகிறவனும், தேவர்களும், ரிஷிகளும் கூட ஸ்த்ரீ களாகப் பிறந்து தன்னோடு கலந்து விளையாடும்படி நடந்து கொண்டவனுமான அம் மஹாபுருஷனை யெல்லோரும் ஆச்ரயிப்பதற்கு தான் இப்போது ஒரு வழி காட்டியாயிருக்க விரும்பி, அற்புதமான செயல்களில் இழிந்து தன்னுடைய ப்ரபந்தங்கள் வாயிலாக அவற்றை சாச்வதமாக உலகுக்கு உணர்த்தி யருளினாள். இதனை யுணர்ந்து இந் நன் னெறியிலே நிலைத்து நடப்பார்க்குப் பலன் கைகூடுவது நிச்சயமென உருபித்தருளினாள்.

ஆகவே இவள் கோதை, கோதா, (गोदा) பூமியைப் பிளந்தெழுந்தவள்; பூமியால் கொடுக்கப்பட்டவள்; வாக்கை யளித்தவள்; எவ்விதம் ப்ரபந்தம் மியற்ற வேண்டுமென்று வழி குறித்தவளென்றவாறு பொருள். இவ் வடமொழிச் சொல் தமிழில் கோதை யெனப் பட்டபோது பூமாலை போன்றவளென்றதையும் குறிக்கும் போலும். இப்படிப் பாமாலைகளை யிட்டு எல்லோருக்கும் ஆசார்யையா யிருப்பதாலும், அர்ச்சையிலுள்ள எம்பெருமானும் தானிட்ட வழக்காய் நடந்துக்கொள்ளும்படி செய்தவளாகையாலும் இவளே ஆண்டா ளெனப்படுவள் ஆழ்ந்தாள் என்ற பதம் ஆண்டாளென வாயிற்றென்பது முண்டு.

ஆகையால் இவள் விஷயத்திலே சாஸ்த்ரங்களிலே அஷ்டாங்க ப்ரணாமம், தண்ட ப்ரணாம மென்றாற் போலே சொல்லப்பட்ட எல்லா ப்ரணாமங்களையும் எத்தனை தரம் செய் தாலும் போதாதெனக்கருதி "நம இதமிதமித்யாதி யருளினது. ப்ரணாமங்கள் பலவகை யுள வென்பதையும், அவற்றில் அஞ்ஜலியென்பது எல்லா ப்ரணாமங்களோடு சேர்ந்தும் தனித்துமிருக்கு மித்யாதிகளையும் ஸ்ரீஸ்தோத்ர பாஷ்யத்திலே ஸ்ரீதேசிகன ருளிச் செய்துள்ளார். பூய ஏவாஸ்து பூய:— முதலில் பூய: என்பதற்கு பஹுதரம் எனப் பொருள். பஹு என்றால் மூன்றுக்குக் குறையாத வென்றதாம். ஆகவே பூய: என்பதே நான்குக் குறையாததைச் சொல்லும். மற்றொரு பூய: என்னும் பதத்திற்கு மறுபடியும் எனப்பொருள். இப்படி நான்குக்குக் குறையாத ப்ரணாமங்கள் மறுபடியும் மறுபடியுமாக வேண்டுமென்றபடி. இங்கே பூயோ பூய: என்று சேர்த்துப் ப்ரயோகிக்காததால் இதை வீப்ஸை யெனக்கொள்ளல் கூடாது.

இனி உய்யக்கொண்டார் அருளிச்செய்த தமிழ்த் தனியன்கள் —

1. அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதிக(ய)ம், — இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

அன்னம்—அன்னப் பக்ஷிகள் ஸஞ்சரிக்கும்
வயல் —கழனிகளையுடைய
புதுவை—ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த
ஆண்டாள்—ஆண்டாள் எனப்படுபவளும்
அரங்கற்கு—ரங்கநாதனுக்கு
பன்னு—ஆராய்தலுக்குரிய

திருப்பாவை—திருப்பாவை யென்ற பெயருள்ள
பல் பதிகம்—மூன்று பதிகங்களுள்ள
நன் பாமாலை—நல்ல பாசுரங்களாகிற மாலைகளான ப்ரபந்தத்தை
இன் இசையால்—இனிய ராகத்தோடு
பாடி—கானம் செய்து,

கொடுத்தாள்—அர்ப்பணம் செய்தவளும்,
பூ மாலை—துளவ மாலையை
சூடி—தான் முதலில் சூடிக்கொண்டு
(களைந்து)

கொடுத்தாளை—எம்பெருமானுக்குச் சூட்டு
வதற்காகக் கொடுத்தவளுமான
கோதைப் பிராட்டியை
சொல்—ஸங்கீர்த்தனம் செய்வாயாக.

அன்னவயல்—மென்னடை யன்னங்கள் வயல்களில் பரந்து விளையாடா நின்றன வென்ற ஊரின் சிறப்புக்கு மிவளே காரணம். அரங்கற்கு என்பது கொடுத்தாள், கொடுத்தாளை என விரண்டோடும் சேரும். வடபெருங் கோயிலுடையான். வேங்கடவன் முதலான மூர்த்திகள் எல்லாவற்றிலும் உள்ள எம்பெருமான் ஒருவனே யாகையாலே ஏதேனுமொரு மூர்த்தியை யிட்டு அவனைச் சொல்லக் கூடுமாகிலும் அரங்கற்கு என்றது ஆண்டாளை அரங்கனே மணந்தானுகையாலே. இதை யொருபடி வெளியிட்டருளும் பாசுரமும், 'கண்ணாலம் கோடித்துக் கன்னி தன்னைக் கைபிடிப்பான் பெண்ணாளன் பேணுமூரரங்கமே' என விவளால் அருளப் பெற்றது. பன்னு-பல உட்பொருள்கள் அடங்கியிருப்பதாலே மிக வாராய்ந்து தெளியக் கூடிய வகையிலே அருளின ப்ரபந்தமிது என்றபடி. பல்பதிகம் — ப்ரபந்தங்களில பத்துப் பத்துப் பாசுரங்கள் தோறும் ஒரு பிரிவுண்டு. அதனைத் திருமொழி, திருவாய்மொழி யென வழங்குவர். இதில் அங்ஙன மிராமல் மூன்று பதிகங்களும் சேர்ந்தொரே மஹாவாக்யமா யிருப்பதைத் தெரிவித்தபடி. பெண்களை யெழுப்ப ஒரு பதிகம்; மற்றவரை யெழுப்ப மற்றொரு பதிகம்; நோன்பை விவரிக்க முதலிலும் கடைசியிலுமாக ஒரு பதிக மெனவுமாம். பல் பதியம் என்ற பாடமாகில் பல பத்தியங்கள் உள்ளது எனப் பொருளாம். அது பாமாலை யென்றதாலேயே தெரியலாகும்.

பூமாலை சூடிக் கொடுத்தா ளென்பது திருப்பாவை யருளினதற்குப் பின்பு போல் முன்பும் நடந்த தொன்றாகையால் அங்ஙனம் தோற்ற வைத்துத் திருப்பாவையின் பொருளையும் தெரிவிக்க மேற்றனியன். முன் தனியனிலே ஆண்டாளுடைய திருநாமங்களைச் சொல்வதே யமையுமென்றார். பிறகு ஆண்டாளநுக்ரஹத்தாலே பெற வேண்டியது இன்னதென்றிங்கே வெளியிட்டருளுகிறார்.

சூடிக் கொடுத்த சுடர்கொடியே! தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய் — நாடி நீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

சூடிகொடுத்த—துளவமாலையை முன்னம்
சூடிக் களைந்து பெருமானுக்குச்
சூட்டக் கொடுத்துவந்த
சுடர் கொடியே—மங்கள தீப லேகையே!
மின்னற்கொடி போன்றவளே!
தொல்பாவை—பழமையான நோன்பைப்
பற்றிய திருப்பாவையை
பாடி—பாடினவளாய் அதன் முகமாக
அருளவல்ல-எல்லோரையும் அனுக்ரஹிக்க
வல்லமை பொருந்தியவளாய்
பல்வளையாய்-பல வளைகளையணிந்தவளே!

வேங்கடவற்கு—திருவேங்கட
முடையானுக்கே
என்னை விதி—என்னை சேஷமாக்கு
நீ, என்ற-என்று – நீ-திருமொழியிலருளின
இம்மாற்றம்—இந்த ப்ரகாரத்தை
நாம்—நாங்கள்
கடவா வண்ணம்—திருப்பாவையிலிருந்து
தெளிந்து, விடாமல்
அனுஷ்டிக்கும் வகையில்
நாடி நல்கு—நீ எங்களையும் எப்பெருமானை
யும் நெருங்கி யிருந்து
உபகரித்தருளவேணும்

சுடர்க்கொடியே என்றதாலே மானிடர் தீண்டக்கூடாத மேன்மையும், எம்பெருமானுடன் சேரத் தக்க சீரும் சொன்னதாகுக. பல் வளையாய்—திருப்பாவை பாடினபோது

தாளத்துக்கொத்து ஒலித்த வளைகளவை, அன்றி, திருப்பாவையின் பெருமையைக் கண்டு கந்தவர் பரிசளித்த வளைகளாம். இம்மாற்றம்—'உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது,' 'உன் தன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம்' மழை பெய்வித்தா னென்றால்; அப்போது ஓங்கி வுலகளந்த வுத்தமன் என்றவாறு அநுஸந்தித்தல் கருதப் பட்டதாம். நல்கு. காமதேவனை நீ கேட்டுக் கொண்டதை நாங்கள் உன்னிடம் கேட்டுக் கொள்ளுகிறோமென்றபடி.. 'வேங்கடவற் கென்னை விதி' யென விருப்பதால் இது திரு மொழித் தனியனென வேண்டா: அதன் பொருளான சேஷத்வம் திருப்பாவையிலேயே தெளிவாகக் கூறப்பட்டுள்ள தன்றோ?

திருப்பாவை யென்ற விப்ரபந்தத்தின் பெயரிலுள்ள பாவை என்னும் பதத்திற்கு நோன்பு என்பது பொருள். திரு என்றது அதன் மேன்மையைக் குறிக்கும். தனியனில் தொல்பாவை யென்றருளிச் செய்தபடி இது ஒரு பழமையான நோன்பாகும். ஆயச்சிறுமி கள் திருவாய்ப்பாடியிலே யனுஷ்டித்த நோன்பாயிது. ஸ்ரீபாகவதத்திலே,

ஹேமந்தே ப்ரதமே மாஸி நந்தவ்ராஜகுமாரிகா: ।
சேருர் ஹவிஷ்யம் புஞ்ஜாநா: காத்யாயந்யர்ச்சநவ்ரதம் ॥
உஷஸ்யுத்தாய கோத்ரை: ஸ்வைரந்யோந்யாபத்த பாஹவ: ।
க்ருஷ்ணமுச்சைர் ஜகுர் யாந்த்ய: காளிந்த்யாம் ஸ்நாது மந்வஹம் ।
ஆப்லுத்யாம்பஸி காளிந்த்யா ஜலாந்தே சோதிதேऽருணே ।
க்ருத்வா ப்ரதிக்ருதிம் தைவீமாநர்ச்சுர் ந்ருப ஸைகதீம் ।
பத்ரகாளீம் ஸமாநர்ச்சு: பூயாந் நந்தஸுத: பதி: ॥

हेमन्ते प्रथमे मासि नन्दव्रजकुमारिका: । चेरुर्हविष्यं भुञ्जाना: कात्यायन्यर्चनव्रतम् ॥
उषस्युत्थाय गोत्रै: स्वैरन्योन्याबद्धबाहव: । कृष्णमुच्चै: जगुर्यान्त्य: कालिन्द्यां स्नानमन्वहम् ॥
आप्लुत्यांभसि कालिन्द्या: जलान्ते चोदितेऽरुणे । कृत्वा प्रतिकृतिं दैवीमानर्चु: नृप सैकतीम् ॥
भद्रकालीं समानर्चु: भूयान्नन्दसुत: पति: ।

என்று அவர்கள் நோன்பு நோற்ற விதம் வரையப்பட்டுள்ளது. இங்கு அவர்கள் மார்கழி மாதத்தில் நோன்பு செய்ததும், விடியற்காலத்திற்கு முன்பே புறப்பட்டு ஒன்று சேர்ந்து கை கோத்துக்கொண்டு கண்ணன் விஷயமாகப் பல கீதங்கள் பாடிக்கொண்டு நீராட்டத் திற்குப் போனதும் திருப்பாவையிலுள்ளபடியே யுள. நோன்புக்குப் பலன் கண்ணன் தங்களுக்குப் பதியாக வேண்டு மென்பது, திருப்பாவையிலும் ''உன்றன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோம்' என முடிவில் ப்ரார்த்தனை செய்திருப்பதால் இப் பலனும் அதுவும் ஒன்றாகக்கூடும். ஆனால் மழை பெய்வதைக் கூடக் கோரினதாகத் திருப்பாவையில் காண்கிறோம், அது அங்கில்லை, காத்யாயனியின் பூஜையாக அங்கே காண்கிறோம். இங்கு அதில்லை. ஒருக்கால் இங்குப் பர்ஜந்யம் எனப்படும் மேகத்தின் பூஜையெனச் சொல்லலாம். ஆகிலும் அதை விட இது வேறாம். அங்கே காத்யாயனி யினிடத்தில் தினந்தோறும் பூஜை முடிந்தவுடன் கண்ணன் கணவனாக வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாக வுளது. இங்கே பூஜை செய்யப் புறப்பட்டவர் இடையிலே கண்ணனிடம் பறைபெற வணுகினபோது அவனிடமே ப்ரார்த்திப்பதாகக் கூறப்பெற்றுள் ளது. இப்படிப் பார்வதியினிடம் ப்ரார்த்தனை செய்ததாகவோ, அவளைப் பூஜித்த தாகவோ இங்குக் காணாமையால் திருப்பாவை யென்ற பெயரில் பாவை யென்றதற்குப் பார்வதி யெனப்பொருள் கொள்வதும், ஏலோ, ரெம்பாவாய்' என்ற விடத்தில் பாவாய்

எனப் பார்வதியை விளித்ததாகக் கூறுவதும் கூடா. ஆக ஸ்ரீபாகவத்திற் சொன்னது போன்றதொரு நோன்பிது, அதை விட் வேறுபாடுள்ள தெனல் வேண்டும்.

ஸ்காந்தமார்கசீர்ஷமாஹாத்ம்யத்திலே- அந்த மாதத்தில் ஸ்நானம், தானம், பூஜை, த்யானம், மௌனம், ஜபம் முதலியனவை செய்யப்பட்டால் பகவான் மிகவுகந்து அனுக்ரஹம் செய்கிருனெனச் சொல்லி, பிறகு திருவாய்ப்பாடியிலுள்ள பெண்கள் கண்ணனுல் ஏவப்பட்டு மார்கழி நீராட்டத்தி லிழிந்து உதயத்தில் முறைப்படி ஸ்நானம் பூஜையெல்லாம் செய்து நைவேத்யமாக எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்த அன்னத்தைப் புசித்து வந்ததாகவும், கடைசியில் கண்ணன் களித்துத் தன்னையே யவர்களுக்கு அர்ப்பணம் செய்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது இங்கே குறித்தற்பாலது. அங்கே வைஷ்ணவ ஸம்ப்ரதாய முறைப்படி ஸ்நானம். ஊர்த்துவ புண்ட்ரம், எம்பெருமானுடைய திவ்யாயுதங்கள் துளசிமாலே, தாமரை மணிமாலே முதலியவற்றை தரிப்பது, கண்டாநாதனம் என்றுற் போன்ற பலவும் பணிக்கப்பெற்றன. மார்கழி மாதத்தில் சங்கத்தை யூதிக்கொண்டு எம்பெருமானுக்குத் திருமஞ்ஜனம் கண்டருளப் பண்ணுல் பித்ருக்களுக்கு ஸ்வர்க்க ப்ராப்தியுண்டென்றது. மார்கழியின் பூர்ணிமையில் உத்ஸவம், கோதானம் அன்னதானம் முதலாக எவ்வித புண்யங்களைச் செய்தாலும் எம்பெருமான் மிக வுகந்தருளுகிரு னெனவும் கூறப்பட்டுள்ளது. இங்குத் திருப்பாவையிலும் 'மதி நிறைந்த நன்னாளால், நாட்காலே நீராடி, ஐயமும் பிச்சையு மாந்தனையும் கைகாட்டி, பாஞ்சசன்னியமே போல்வன சங்கங்கள்' என்ற விடங்களில் அவ்வாறு சில அருளப்பெற்றுள்ளன. ஒரு மாதம் முடிய நடத்தும் வ்ரதமிது. பூர்ணிமையில் முடிவு பெறுகிறதாக அங்கே காண்கிறது, இது வடதேசத்திலுள்ள பார்ஹஸ்பத்யமானத்தால் ஒரு மாதம் எனக் கருதினதாலாம். ஏனெனில், அந்த மானரீதியில் ஒவ்வொரு மாதமும் பூர்ணிமையில் முடிவு பெறும். இங்கும் மார்கழி பூர்ணிமையில் முடியும்படி வ்ரதம் செய்வது கருதப்பட்டிருக்கலாம். மழை பெய்வதற்காக இப்படியொரு வ்ரதமனுஷ்டித்ததாக அங்கே ஸ்பஷ்டமாகவில்லையாகிலும் இந்த வ்ரதம் எல்லாப் பலனையுமளிக்கக் கூடியதானதாலே அப் பலனைக் கோரினுற் போலே ஒருக்கால் கோபிகள் அனுஷ்டித்ததாக வேறு ஏதேனு மொரு ப்ரமாணத்தைக் கொண்டோ பிராட்டியாரான தாம் தம் திருவுள்ளத்தில் ஸாக்ஷாத்கரித்திருப்பதைக் கொண்டோ, அவ்வித கற்பனையைத் தாமிசைந்தோ ஆண்டாள் அருளிச்செய்திருக்க வேண்டும்.

மழைக்காக இவ்ரதமனுஷ்டிக்க முயன்றதாகக் கொள்ளாமலே திருப்பாவையிலுள்ள வாக்யங்களைச் செவ்வனே பொருத்த முடியுமா வென்னில், அது ஸ்வரஸமாகத் தோன்றவில்லை. கண்ணனைக் கணவனுகப் பெறுவதற்கே இந்த வ்ரதத்தைக் கோபிகள் அனுஷ்டித்தார்கள் ஆயினும் மழை பெய்ய வேண்டுமென்றிவர்கள் அபேக்ஷித்தவர்களே. ஆனுஷங்கிகமாகவே, அதாவது இவர்கள் அபேக்ஷிக்காமலிருந்தபோதே இவர்களுடைய யோகக்ஷேமத்தை நடத்திவருப் கண்ணன் தானுகவே மழை பெய்வித்தா னென்ருல், அப்போது ஓங்கி யுலகளந்த வுத்தமன்பேர்பாடி நாங்கள் நம்பாவைக்குச்சாற்றி நீராடினதால் எங்கும் மழை பெய்ய, குடம் நிறைத்தன வள்ளல் பெரும் பசுக்கள் என்று திருப்பாவை முடிவில் அனுஸந்தித்திருக்க வேண்டுமே யல்லது முதலில் தாங்களே அப் பலனை நினைப்பதும், ஆழிமழைக்கண்ணு என்று முதலில் மேகத்தை ப்ரார்த்திப்பதோ அல்லது நியமிப்பதோ செய்வதும் பொருந்தா. ஆனுஷங்கிகபல னென்ருல் அதை முமுக்ஷுவானவன் தான் அபேக்ஷிக்கக் கூடாது. அது தன் கடையே வருவதொன்று. அப் பலன் நேராவிட்டால் 'ஐயோ நம்பினேமே, ஈச்வரன் கைவிட்டானே' என்று நினைப்பது தகாது. சிலர்க்கு அது நேரும். சிலர்க்கு நேராமலும் போம். ஏதேனுமாகட்டு மென்றிருப்பானிவன். அங்ஙனமிராமே சிற்சில பலன்கள் அவச்யம் வேண்டுமென்று தேசகாலங்களுக்குத் தக்கவாறு சிலர்

அபேக்ஷிப்பது முண்டு. அபேக்ஷித்தாலும் தங்கள் நிலைகுலையாதபடி பார்த்துக் கொண்டு ஒருவழியிலிறங்குவார்கள். இங்கே பாசுரங்களின் போக்கை பார்க்கும் போது மழையையும் அபேக்ஷித்ததாகவே ஏற்படுவதால் இடைப்பெண்கள் செய்த இந்த வ்ரதாசரணம் மழைக்காக வென்று தொடங்கப்பட்டுக் கண்ணனுக்கு அடிமை செய்வதென்கிற தங்கள் கருத்திலுள்ள பலனுக்காம்படி தலைக்கட்டப் பெற்றதென்பதே பொருத்தமுள்ளதாம். அப்படித் தொடங்கினாலும் அந்த வ்ரதத்தை யனுஷ்டிப்பதற்கு முன்னமே மேகமானது இவர்களுக்கு ஏவல் தேவை செய்ய நினைத்துத் தானே வந்து பெய்துவிட்டபடியால் பிறகு இவர்கள் தங்கள் வ்ரதத்தை மழைக்கென்று நினைக்காமே அனுஷ்டித்தார்களென்னில் இது நான்காம் பாசுரத்தின் வ்யாக்யானத்தில் ஆராயப்படும். 'மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்' என்று இம்மார்கழி நீராட்டமானது பெரியோர்கள் அனுதியாய் எப்போது மனுஷ்டிப்பித்து வருவதொன்றென்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. அது கண்ணன் கணவனாக வேண்டுமென்பதற்காக வென்னக் கூடுமோ? ஆக அது நித்யமாய் அவசியம் செய்ய வேண்டுவதொன்றாகவோ, சிற்சில காலங்களில் காம்யமாகச் செய்யக் கூடிய தொன்றாகவோ இருக்க வேண்டும். ஆக அவ்விதமான வ்ரதத்தை யனுஷ்டிக்க முன் வந்து இவ்வாய்ச்சிகள் தங்கள் கோரிக்கையையும் நிறைவேற்றிக் கொண்டார்களென்பது யுக்தமாம்.

இது நித்யமான வ்ரதமானாலும் மழையைப் பலனாகக் கூறியிருப்பதால் இதே இப்போது காம்யமாகச் செய்ய நினைக்கப் பெற்றதெனலாம். விசேஷமாக மழை பெய்திருந்தால் இதை அதற்காகச் செய்ய வேண்டிய தில்லையாகையாலே அப்போது துர்பிக்ஷமிருந்த தாகக் கொள்ள வேண்டும். எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடத்திலே எல்லா ருதுக்களும் நன்கு பலித்திருக்க, துர்பிக்ஷம் சொல்லக் கூடுமோ? சீர்மல்கு மாய்ப்பாடியிலே யுள்ள செல்வச் சிறுமிகள் துர்பிக்ஷத்தாலே வருந்தின ரென்னக் கூடுமோ வென்னில், எம்பெருமான் அனுக்ரஹம் நிரம்பினவிடத்திலே பலவித தீங்குகள் நேரும்படி கம்ஸாதிகள் ஏவத்தான் முடியுமோ? இடையர்கள் தாம் இடைப் பெண்களை எம்பெருமானோடு சேராதபடி தடுப்பது தான் உண்மையாகுமோ? ஸ்ரீபாகவதத்திலே சிந்தயந்தி முதலானோரைப் பற்றி யிருப்ப தெல்லாம் ஸத்யமோ? கோபர்கள் தெளிந்து தாங்களும் கூடிக்குளிர்ந்திருக்க வேண்டாவோ? அவர்களுக்கு துரபிப்ராய முண்டாகில் மஹாபகவத்பக்தர்களான கோபஸ்த்ரீகளிடத்திலே அவர்கள் படும் அபசாரத்திற்கு பலன் எம்பெருமான் ஸங்கல்பிக்காம லிருப்பானோ? பிரிந்த வரைப் புணர்வதற்கொரு விரகு தேடுவது அவன் பொறுப்பன்றோ? ஆகக் கண்ணன் அநேக அபாயங்களுக்கு அங்கே இடங் கொடுத்தது போலவே துர்பிக்ஷத்திற்கும் ஒரு ஸமயம் தானே ஸங்கல்பித்துத் தற்சமயம் கோபர்களைத் திருத்தி, கோபஸ்த்ரீகளுடன் கூடிக் களித்தானென்றால் இது கூடாத தொன்றாகாது.

இவர்கள் இந்த வ்ரதத்தை மழைக்காக வென்று ஸங்கல்பித்துச் செய்தார்களா? கண்ணனைப் பெறுவதற்காக ஸங்கல்பித்தா? அல்லது இரண்டையும் ஸங்கல்பித்தா? ஒரு ப்ரயோகத்திலே இரு பலன்களைப் பெறுவது மீமாம்ஸை இசையாததாம். ஒரே பலனென்னில் அது எது எனில், இந்த வ்ரதத்தில் இருவித அம்சங்களைப் பிரித்து இரு பலன்களை யடைக்கலாம். மார்கழி நீராட்டத்திற்கு மழை பலனாகும். அதற்காகப் பறை பெற ப்ரார்த்திக்கப் போனபோது அந்த ப்ரார்த்தனையிலே அவனிடத்தில் அழிவில்லாத தாஸ்ய வ்ருத்தியை ப்ரதான பலனாக்கி ப்ரார்த்தித்தனர் எனலாம். மழைக்காக வ்ரதம் செய்வதாக மேலுக்கு எண்பித்து அதற்கு ப்ரார்த்தனை செய்யப்போவதாகப் பேசிவிட்டு, கண்ணனைக் கண்டு தங்களுக்கு வேண்டியதை மட்டும் கேட்டு நின்றார்கள் என்னலுமாம். அங்ஙனம்

எண்பிப்பானேனென்னில், அல்லாத போது இச்சிறுமிகள் கண்ணனோடு கலந்திராதபடி இவர்களை இடையர்கள் தடுத்திருந்ததாலெனல் வேண்டும். ஆகவே இவர்கள் பறை கொள்ளப் போவதாகவே கடைசிவரையில் பாடிவந்து முடிவில், 'இற்றைப் பறை கொள் வானன்று காண் கோவிந்தா' என்று விண்டு சொன்னார்களென்றதாயிற்று.

கன்னன் முகம் காணாதபடி கோபர்கள் கன்னிகைகளைக் காத்து வந்ததும், அதனால் இவர்கள் துடித்ததும், இவர்களிடம் கிருபை கூர்ந்து கண்ணன் மழையிராத வண்ணம் ஸங்கல்ப்பித்ததும், பிறகு கோபர்கள் கன்னிகைகளை வ்ரதம் அனுஷ்டிக்கத் தூண்டினதும் கண்ணன் ஸஹாயமின்றி அதைச் செவ்வனே நடத்தி முடிக்க இவர்கள் இயலாமலிருந்த தும், அவன் ஸஹாயத்தையும் அவர்கள் ஏற்படுத்தினதும், ஆகவே இந்த நோன்பு கண்ணனைக் கண்டு கலந்து வந்து இவர்கள் தங்கள் கருத்திலுள்ளவற்றைச் சாதித்துக் கொள்ள விரகா யிருப்பதாலே இதை யனுஷ்டிக்க விவர்கள் இழிந்ததும் எல்லாம் பூர்வ வ்யாக்யானங்க ளெல்லாவற்றிலும் விவாதமின்றி ஆங்காங்கு அறிவிக்கப் பெற்றதோடு மாலே மணிவண்ணாவில் விஸ்பஷ்டமாகவும் கூறப்பட்டுள்ளது காண்க.

இப்படிப் பெரியோர்கள் ஸம்ப்ரதாயப்படி யிசைந்த இவ்வர்த்தங்கள் இப்ரபந்தத்திலுட் புகுந்து ஊன்றினபோது தெளியலாகும் வகையையும் வரைகின்றோம் காண்மின். 'ஓங்கி யுலகளந்த'வில் இந்நோன்பு நோற்றால் வேண்டிய மழையும் அதன் மூலமாக - வெல்லா ஐச்வர்யமும் பெறமுடியு மென்றதாலே அப்போது மழையில்லாமே வருந்தினது தெரிய லாகும். 'அம்பரமே' யென்ற பாசுரத்திலே நந்தகோபரை யெழுப்பும்போது, அவர் எல்லோருக்கும் துணியும், தண்ணீரும், சோறுமளிப்பது பெருந்தர்மமெனச் சொல்லப் பட்டுள்ளது. தண்ணீரளிப்பது மார்கழி மாதத்தில் பெரியதோர் அறமாக வேண்டுமென்றால் எவ்வளவு க்ஷாமம் அப்போதிருந்திருக்க வேண்டு மென வாராய்க. துர்பிக்ஷ காலத்திலே ஏழைகளுக்குச் சோறிடுவதும், துணிகொடுப்பதும் பெருந் தர்மமாக நினைக்கப்படுவதை வெகு க்ஷாம மேற்பட்டுள்ள இக்காலத்திலும் ஆங்காங்கு பார்த்து வருகிறோம். எங்கும் ஆஹாரத்திற்கு வசதியிராத அக்காலத்திலே நந்தகோபர் தாம் சேமித்துவைத்திருந்த ஐச்வர்யத்தை யெடுத்துத் ஏழைகளுக்குத் தாராளமாக உபயோகித்து, ஆழமாக அநேகம் கிணறுகளையும் வெட்டிக் கொடுத்துத் தண்ணீர்க் கஷ்டத்தையும் நீக்கிவந்தா ரென்றும், ஆகவே இவ்இளவாய்ச்சிகளும் அவரைப் பார்த்து, 'நீர் எந்த க்ஷாமத்திலுள்ள வறட்கேட்டை விலக்க இவ்வளவு முயற்சி கொண்டிருக்கிறீரோ, அந்த க்ஷாமத்தை நீக்க நியமனப்படி நோன்புநோற்க நாங்கள் தொடங்கியிருப்பதால் நீர் எழுந்திருந்து கண்ணனை யனுப்பி அதை நிறைவேற்றிவைக்க வேணும்' என்று ப்ரார்த்தித்தன ரென்பது ஸ்வரஸ மாய் அப்பாசுரத்தில் இசைய வேண்டிய தொன்றாகையாலே இதை நிராகரிக்க ஆக்ரஹம் கொண்டால் ஸஹ்ருதயத் தன்மையை யிழந்ததாம். இவ்வளவோடு முதற் பாசுரத்தை ஊன்றி யாராய்ந்தால் கோபகன்னிகைகள் கண்ணன் ஸஹாயமின்றி நோன்பு நோற்க விசையாமலிருந்து அது கிடைத்தவாறே அதைச் செய்யத் தூண்டப்படுவது தெளிவாம். ஆதலால் அதற்கு முன் அவ்வண்ணம் நடப்பதற்குத் தடையிருந்ததென்று தெரிவதால், கோபர்கள் கன்னிகைகளைத் தடுத்துவந்தது அனேக ஸந்தர்ப்பங்களில் ஸ்ரீபாகவதாதிகளிலே ஸ்பஷ்டமாகையால் இந்நோன்பு நோற்பதை யிவ்வண்ணம் இடையர் இசைந்தது எவ் வளவோ ப்ரயாஸத்திலானதென வாராயவேண்டும். இதை முதற் பாசுரத்தின் பொழிப் புரையிலும் நன்கு காண்க.

நோன்பு நோற்கப் புறப்பட்டவர்களாயினும் இவர்கள் தங்கள் கருத்திலுள்ளது வேறு என்பதை மேலே படிப்படி யாக விளக்கி யுள்ளார்கள். எங்ஙனெனில், — 23 வது

பாட்டில், 'யாம் வந்த காரியமாராய்ந்தருள்' என்றதிலிருந்து நாங்கள் ஒன்றை மனத்தில் வைத்து மற்றென்றை வெளியிற் சொல்லி வருகிறோம்; ஆராய்ந்து அருள் எனவறிவித்தார்கள். 24—வதில், 'சேவகமே யேத்திப் பறை கொள்வானின்று யாம் வந்தோ மிரங்கு' என்று' 'பறை கொள்ளப்போவாராய் யாம் உன் சேவகமே யேத்திவந்தோம். சேவகமே யேத்துவதும் வருவதுமே யெங்களுக்கு வேண்டுவன' என்றாகள். 25-வதில். உன்னை யருத்தித்து வந்தோம் பறை தருதியாகில் திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து' என்று நாங்கள் உன்னையே புருஷார்த்தமாக அபேக்ஷித்து வந்தோம். நீயாக ஏதேனுந் மாராய்ந்து பறை தருகிறாயாகில்' உன் நியமனப்படி நாங்கள் நடக்க வேண்டியிருப்பதால் சேவகத்தோடு நோன்பு நோற்று அதனால் வரும் பெரும் செல்வத்தையும் உன் பெருமையாகப் பாடி, கோபர்களால் வரு மிடையூறு நீங்கி உன்னையே பெற்று மகிழ்ந்திருப்போம்' என்றனர். 26-ல் 'மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்' என்றதாலே எங்களுக்கு நோன்பு செய்தே யாகவேண்டுமென்பதில்லை. நீ யதைநடத்தி வைக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு என்னென்ன வேண்டு மென்று கேட்கிறாயாகில், இதுவரையில் மேலையார் செய்த வகையிலுள்ளவற்றைச் சொல்லுகிறோம். அதே யல்லது நாங்கள் செய்யவேண்டுமென்று நினைத்திருப்பதொன்றில்லை' என்றனர். 27-ல், 'உன்தன்னைப்பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்' என்றவிடத்திலும் சம்மானம் வேண்டு மென்றிவர்கள் கோரினாரல்லர். மேலையார் செய்யும்போது நோன்பு முடிந்த பிறகு பெறும் சம்மானம் இத்தகைய தென விளக்கினது மாத்திரம். இப்படி யொரு சம்மானம் சொல்லும் வகையிலே தாங்கள் எப்போது மவனோடு கூடி யிருந்து குளிர்ந்திருக்க விரும்புவதை விளக்கினர். 28-லும் 'இறைவா! நீ தாராய் பறை! நாங்களாகக் கேட்கவில்லை' யெனக் குறித்தனர். 29-ல் 'இற்றைப் பறை கொள்வானன்று காண் கோவிந்தா! எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கு முன் தன்னோடுற்றோமே யாவோம்' என நன்றாகவே விளக்கி விட்டனர். இக் கடைப் பாசுரத்தை யனுஸரித்து முன் பாசுரங்களுக்குப் பறை கொள்வதில் நோக்கில்லாதபடி கீழ்க்கண்ட வண்ணம் கருத்துரைக்க வேண்டியதாயிற்று. இல்லையேல், அவற்றில் பறை கொள்வதில் நோக்காகவும் பொருள் ஏற்படுவது ஸஹஜம்.

ஏலோரெம்பாவாயின் பொருள்

இத் திருப்பாவையில் ஒவ்வொரு பாசுரத்தின் முடிவிலும் ஏலோரெம்பாவாய் என உள்ளது. கடைப் பாசுரத்தில் மட்டும் ஏலோர் என்பதில்லை. எம்பாவாய் என்பது மட்டுமுள்ளது. அம்பரமே என்ற பாசுரத்தில், 'உறங்கேலோ ரெம்பாவாய்' என்றவிடத்தில் உறங்கேல் என்று பிரித்துச் சொல்வது ஸ்வரஸமாகையாலே அங்கே ஒரெம்பாவாய் எனவே யுள்ளதாகக் கொள்ளல் வேண்டும். 'ஏலோர் என்பதற்குப் பொருளில்லை யென்றும் எம்பாவாய் என்பதற்கு எமது பாவை = எமது வ்ரத மெனப் பொரு ளென்றும் சிலருரைப்பர். ஏல் என்பதை மட்டும் 'உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது' என்றவிடத்திற் போல் பொருளில்லாததாக்கி ஓர் ஒப்பற்ற எம்பாவை யெனச் சிலருரைப்பர். பாவையென்பதை விளிச் சொல்லாக்கி எமது பாவையே! நீ ஓர்=அறி யென வுரைப்பர் சிலர். அப்போது பாவை யென்பது ரதி தேவியை சொல்லுமென்றும் மேலே நாச்சியார் திருமொழியிலே தையொரு திங்களிலே காமதேவனை யிவள் ஆராதித்திருப்பதால் அதற்கு முன் அவனது மனைவியான ரதியை யாராதிப்பதற்குப் பொருத்த முண்டென்றும் கொள்வர் சிலர்.

'நாராயணனே நமக்கே பறைதருவான்', 'உனக்கே நாமாட் செய்வோம்' என்ற விருப்பிலுள்ள ஆண்டாள் தேவதாந்தரத்தைக் குறித்து நோன்பு நோற்க விசையாமல் ஸ்ரீ பாகவதத்திற் கூறியபடி காத்யாயனியைக் கோப கன்னிகைள் ஆராதித்ததாகக் கொள்ளாமல் மழைக்காகச் செய்த நோன்பாக மாற்றியருளினவள், ரதியைக் குறித்துச் செய்ததாக மட்டும் இசைந்திருக்கக் கூடுமோ? பாவை யென்பதற்குப் பதுமை யென்று பொருளாய், பெண் எனப் பொதுவிலே பொருளிருக்க ர்தி யென்று விசேஷித்துக் கொள்வதாகில் ஸ்ரீ பாகவத்தைப் பின் பற்றிப் பார்வதியையே கொள்ளலாமே. ஆகையால் தையொரு திங்களிலே காமனை யர்ச்சித்ததாகக் கொண்டாலும் இங்கே ரதியை யாராதித்த தாகக் கொள்ளவேண்டிய அவசியமொன்றுமில்லை. உண்மையில் அவ் வர்ச்சனமும் தேவ தாந்தர விஷயமன்று. 'ச்ருங்கார ஸாமாத்ய்நு குண க்ருஷ்ண ரூபாந்தர' விஷயமென ஸ்ரீதேசிகன் பரமத பங்கத்திலே அருளிச் செய்தார். ஸந்தானகோபாலனு மிருப்பது போல் கண்ணன் ச்ருங்காரத்திற் கேற்றபடி இங்ஙனமொரு ரூபமெடுத்திருப்பதை ப்ரமாணங்களை யாராய்ந்து தெளிய வேண்டும். பரமை காந்தி நிலையிலுள்ளவர் திருப்பாவையில் பர்ஜந்ய தேவதையைப் ப்ரார்த்திக்கலாகாதென்று நியமித்ததாகச் சொல்லுமவர் இதற்குப் பின் உள்ள திருமொழியில் காமதேவனை ப்ராத்திப்பதாகச் சொல்வதும் கூடாததே. 'பலாந்தர மாகில்; கூடாது; பகவத் ஸம்பந்தத்தையே யாசிப்பதாகில் கூடு' மென வொரு கூறு பாடிட ப்ரமாணம் யாதுமில்லை. ஆக அங்கு, காமனென்றும் அனங்கனென்றும் சொல்லப் படுமவனுக்கும் தேவனும், மன்மதமன்மதனான கண்ணனே காமதேவனாவான். இதன் விரிவு அங்கே ஆகுக. ஆகையால் அதைக் கொண்டு முந்திய திருப்பாவைக்கு ரதி விஷய மான யோஜனைக்கு அவகாசமில்லை யென்றதாயிற்று.

ஸ்ரீபரகாலஸ்வாமியுரையிலே பாவையென்பது பொதுப் பதமாகையாலே ஐகாந்த்யத்திற்கு விரோதமில்லாதபடியையும், பெருமாளைப் போல் பிராட்டியை யாராதிப்பது ஸ்பஷ்டமாவதையும், பிராட்டியின் விபூதிகளான கன்னிகள் பிராட்டிக்கு நோன்புநோற்பது ந்யாயமான தென்றதையும் கொண்டு எம்பாவாய்- எமது பிராட்டியே மஹாலக்ஷ்மி! உன்னைக் குறித்த விதை நீ அறிவாயாக என வுரைக்கப்பட்டுள்ளது. முதலிலும் கோப கன்னிகளைக் குறித்தும், பிறகு மேகதேவதையைக் குறித்தும், பிறகு எழுப்பப்படு மொவ்வொரு கன்னியைக் குறித்தும், கோயில் காப்பான், நந்தகோபர், அசோதை பலதேவன் நப்பின்னை, கண்ணன் இவர்களை குறித்தும் பிறந்த விப் பாசுரங்களிலே ஒவ்வொன்றிலும் பாவை யென்றொரு தேவதையைப் பற்றிகடைப்பாகம் சேர்க்கப்பட்டதாக கொண்டு வாக்யத்திற்குப் பொருள் கூறுவது அவ்வளவு ஸ்வரஸமாகத் தோன்றவில்லை. பாவாய் என்பதை விளிச்சொல்லாகக் கொள்ளாமல். இது எமது பாவை அதாவது நோன்பு எனப்பொருள் கூறுவதும் இலக்கண மிசைந்ததாகாது போலும். இப்பிரபந்தத்தின் பலனைக் கூறுவதற்காக வுள்ள கடைபாசுரத்திலே எம்பாவாய். என்றதற்கு எமது நோன்பெனவோ, எமது ரதியே! இலக்ஷ்மியே? என்றவாறு பொருள் கூறுவதிலும் க்லேசமிருக்கிறது. மேகம் அல்லது பெருமான் ஆராத்யன் என்னுமே பிராட்டிக்கு ஆராதன மென்பதற்கும் வேறு வ்யக்தமான ஆதாரமுண்டாகில்,பாவாயென்பதற்கு அப்பொருளைக் கொள்ளாமலே கூட அதை யிசையலாம். ஆக எங்குமொன்றுக அமையும் பொருளை கொள்ள வேண்டும்.

மேலும் கடைப்பாசுரத்தில் எம்பாவாய் என்பது கோபிகளின் வார்த்தையாக இருக்கமுடியாது. ஆண்டாள் தன்னிலையில் சொன்னதாதல் வேண்டும். அதையும் கொண்டு எங்கும் பொருந்துமாறு இதன் பொருளை யாராய்ந்த போது இங்ஙனம் கூறக் கூடுமென்ன

வேண்டியிருக்கிறது. ஆண்டாள் கோபகன்னிகள் முன் அனுஷ்டித்த நோன்பை நாட்டாருக்கு வெளியிடும்போது தன்னை யண்டின தனது தோழியை விளித்து, 'எனது தோழியே ஒவ்வோரம்சமாகக் கூறுகிறேன். இதை ஏல் = எற்றுக்கொள். ஓர் = அதன் பொருளையும் தெளிந்துகொள் என ஒவ்வொரு பாசுரத்திலும் தானே ஏலோரெம்பாவாய் என்று சொல்லுகிருள். ஆக, ஆயச்சிறுமிகள் நாராயணனே பறைதருவானென்றார்கள். இதை 'ஏலோரெம்பாவாய்' என்றவாறு கொள்க. ஆக ஏலோரெம்பாவா யென்பது ஆண்டாள் தனது தோழியை வ்யாஜமாக வைத்து, ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனை வ்யாஜமாக விளித்து ஸ்ரீ கீதையை யுபதேசித்தது போல், நம்மை யெல்லோரையும் குறித்துபதேசித்ததாம். கடைப் பாசுரம் முழுமையும் ஆண்டாள் தோழியை விளித்தருளினதே. அதில் கோபிகளின் பேச்சுக்குக் கலப்பில்லை. தோழியை விளித்துச் சொல்வதை வாரணமாயிரம் முதலானவற்றிலும் காண்க.

இவ்விதம் செய்த வாராய்ச்சியில் அவரவர் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றின படியைக் கொள்க. சைவசமயத்தைச் சார்ந்த மாணிக்கவாசகர் இத்திருப்பாவையைப் பின்பற்றி யெழுதின திருவெம்பாவை யென்ற நூலில் ஒவ்வொரு பாசுரத்தின் கடைசியில் எம்பாவாயென்றிருப்பதைக் கொண்டு திருவெம்பாவை யெனப் பெயரிட்டாற் போல் இங்கும் பாசுர முடிவுகளிலுள்ள பாவாய் என்பதைக் கருதியே திருப்பாவை யெனப் பெயராம். அப்பதத்திற்கு அங்கே பெண் எனப் பொருளாகில் திருப்பாவை யென்ற விடத்திலு மங்ஙன மாகுக. பாவையைக் குறித்துச் சொன்னது திருப்பாவை யென்னலுமாம்.

இந்த ப்ரபந்தத்தை இயற்றும்போது ஆண்டாளுக்கு தான் ஒரு கோபகன்னி யென்றும், கூடவிருக்கும் தோழிக ளெல்லாம் திருவாய்ப் பாடியிலுள்ள கோபகன்னிகளென்றும் ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப் பாடி யென்றும் அங்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலிலையானே கண்ணனென்றும் திடமான பாவனை நடமாடிற்றென்பர். முன்னோர் காவ்யமெழுதும் கவிகளுக்கு அவ்விதமாக மனத்திற்கு நிலையிருக்கவேண்டியது அவசியமே. இப்படிச் சொல்வதற்கு இங்கே ஒரு பொருத்தமு முண்டு. உண்மையில் கண்ணன் கோகுலத்தி லெழுந்தருளியிருந்த காலத்தில் கோபஸ்த்ரீகள் அவனை ப்ரார்த்திக்கும் போது எவ்விதம் அவனை வர்ணித்து நோன்பை முடித்தார்களோ, அவ்விதமே அம்மொழிகளையே ஆண்டாள் அனுவதித்தாளல்லள். ஏனெனில் அவர்கள் வ்ரதம் அனுஷ்டித்த பிறகு நடந்த சில செயல்கள் இங்குரைக்கப்பட்டிருக்கின்றன. 'மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதி தேவனை', 'வல்லானை கொன்றானை' 'மாற்றாருனக்கு வலி தொலைந்துன் வாசற் கண் ஆற்றாது வந்துன்னடி பணியுமாபோலே அங்கண்மா ஞாலத்தரசரபிமான பங்கமாய் வந்து நின் பள்ளிகட்டிற் கீழே சங்கமிருப்பார்போல், 'கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே' என்றவாறு காண்க. இவற்றில் சிலவற்றிற்கு ஏதேனும் நிர்வாஹம் உண்டாகிலும்; சில அப்போது கோபகன்னிகள் அனுஸந்திக்க முடியாதவை. ஆகவே அந்த கோபஸ்த்ரீகளே மறுபடி இக்காலத்திலே தானாகவும், தன் தோழிகளாகவும் தோன்றி நோன்பு நோற்றால் எங்ஙனம் சொல்லவியலுமோ, அங்ஙனம் அருளக் கருதிஆண்டாள் பின்னால்நடந்த வ்ருத்தாந்தங்களையும் சேர்த்தருளினாள் என்னவேண்டும். இவ்வாறு அருளிச்செய்வதைப் பெரியாழ்வார் திருமொழியிலு முரையில் விவரித்துள்ளோம். ஆகத் திருப்பாவையிலுள்ள வார்த்தைகள் அக்காலத்திய கோபிகளுடையவைகளுமல்ல. ஆண்டாள் தன் நிலைமையிற் சொன்னவையு மல்ல. தானும் தன் தோழிகளுமான இக்காலத்திய பெண்களாகக் கோபகன்னிகளே வந்து தோன்றிக் கோபிகளாயிருந்து சொல்லும் வார்த்தைகள் என ஆண்டாள் கருதின ளென்க.

இத் திருப்பாவையிலுள்ள பாசுரங்கள் முப்பது. இவற்றை ஸ்ரீதேசிகன் பிரபந்த சாரத்தில், 'திருப்பாவைப் பாட்டாறைந்து, என்று ஆறைந்தாக வருளினர். ஆனதால் ஐந்தைந்து பாசுரங்களாகப் பிரித்து விஷயவிபாகம் செய்து கொள்ளவேண்டு மென்றபடியு மாயிற்று. அவற்றில் முதலைந்தில் நோன்பு விஷயமான விவர முரைக்கப்படுகிறது, இரண்டாம் ஐந்தில் கண்ணனிடம் புதிதாகக் காதல் கொண்ட இளங்கன்னிகளை எழுப்பு வதும், மூன்றும் ஐநதில் கண்ணனிடம் பேரன்பு கொண்ட பெருங்குலத்திற் பிறந்து பூர்வமே காதலுற்ற பெருங்கன்னிகளை யழைப்பதும், நான்காம் ஐந்தில் கண்ணன் திரு மாளிகையில் கோயில் காப்பான் முதலாக நப்பின்னைப் பிராட்டி வரையிலுள்ளாரை எழுப்பு வதும், ஐந்தாம் ஐந்தில் கண்ணனை யெழுப்பித் தங்கள் கோரிக்கையைக் கேட்கும் நிலையில் அவனை நிறுத்திக்கொள்வதும், ஆறும் ஐந்தில் தங்கள் கோரிக்கை இன்னின்னவை யென் பதும் முறையே மொழியப் பெற்றன வென்க. இது மேலே நன்கு விரித்துரைக்கப்படும். ஜீயரும், 'கோதைத் தமிழ் ஐயைந்துமைந்தும்' என்றது நோக்கதக்கது.

இத் திருப்பாவைப் பாசுரங்களுக்குப் பெரும்பாலும் உட்பொருளும் வேறு இருப்பது விளங்குகிறது. ஸ்ரீமத்ராமாயணமானது உண்மையில் முன் நடந்த ஸ்ரீராம விருத்தாந் தத்தைச் சொல்வதே. ஆகிலும் வேதாந்தோபப்ருஹ்மணமென்பதற்கேற்ப ஆத்யாத் மிகமான பொருளையும் கருத்திற் கொண்டுள்ளதென்று.

दशेन्द्रियाननं घोरं यो मनो रजनी चरम् । विवेकशरजालेन समं नयति योगिनाम् ॥

தசேந்த்ரியாநநம் கோரம் யோ மநோரஜநீசரம் ।
விவேகசரஜாலேந சமம் நயதி யோகிநாம் ॥

இத்யாதி வசனங்களாலே மஹர்ஷிகளும்,

दर्पोदग्रदशेन्द्रिया नन मनो नक्तञ्चराधिष्ठिते, देहेऽस्मिन् भवसिन्धुना परिगते दीनां दशामास्थितः ।
अद्यत्वे हनुमत्समेन गुरुणा प्रख्यापितार्थः पुमान्, लङ्कारुद्ध विदेहराज तनयान्यायेन लालप्यते ॥

தர்ப்போதக்ரதசேந்த்ரியாநந மநோ நக்தஞ்சராதிஷ்டிதே,
தேஹேऽஸ்மிந் பவஸிந்துநா பரிகதே தீநாம் தசா மாஸ்தித: ।
அத்யத்வே ஹனுமத்ஸமேந குருணா ப்ரக்யாபிதார்த்த: புமாந்
லங்காருத்த விதேஹராஜதநயாந்யாயேந லாலப்யதே ॥

(ஸங்கல்பஸூர் யோதம் ....) இத்யாதிகளாலே பூர்வாசார்யர்களும் விசதமாக்கியுள்ளனர். அப்படிப்பட்ட ஸ்ரீமத்ராமாயணத்திற்கு ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கும் மேற்பட்டவையாக கோதாஸ்துதியிலே கொண்டாடப்பெற்ற பிராட்டியின் இனிய வமுதமொழிகளான பாசுரங்களுக்கு ஆத்யாத்மிகமாக உட்பொருள் உண்மையில் இருப்பது யுக்தமே. இவ்வாத்யாத்மிகப் பொருளையே ஸ்வாபதேசமென்றும், முதலிற் ரேன்றும் பொருளை அந்யாபதேசம் என்றும் பெயரிட்டு வழங்குகின்றனர்.

இப்பொருளைப் பூர்வரும் ஆங்காங்கு ஒரு விதம் குறித்திருக்கின்றனர். இங்கு எல்லாப் பாசுரங்களுக்கும் உட்பொருளும் விரிவாகக் கூறப்படும். அவரவர் இதை யொரு திக்ப்ரதர்சனம் அதாவது வழிகாட்டியாக நினைத்து ஸம்ப்ரதாயத்திற்கும், ப்ரபந்த மியற் றிய ஆண்டாளின் தன்மைக்கும், ஸநாதன தர்ம நெறிக்கும், தத்வ நிலைக்கும் விரோத மிராதபடி வேண்டுமான வகையிலே விஸ்தரித்துக் கொள்வது. இத்திருப்பாவைக்குப் பலர் உரை யியற்றி யுள்ளனர். அவற்றிலுள்ளவை யாவும் இங்குக் கூறப்படுவது கூடாத தாம். புதிய பொருள்களோடு அவற்றையும் சேர்க்கில் வெகு விஸ்தாரமாய்விடும். ஆகவே சில வர்த்தங்களே சுருக்கமாக வரையப்படும்.

மார்கழி நீராட்டமென்ற நோன்பை நோற்கவேண்டுமென்று திருவாய்ப்பாடியில் துர்பிக்ஷத்தைத் தீர்க்க ஆவல்கொண்ட இடையர்களால் தூண்டப்பட்ட ஆயச்சிறுமிகளைப் பார்த்து, தங்கள் மனோரதத்திற்கு இசைந்து இடையர்கள் வந்திருப்பதைக் கண்டுவந்து இடையூ றொன்றுமில்லையென விளக்கி அச்சிறுமிகளுக்கு (ஆண்டாளைப் போல்) தலைவி யாயுள்ள வொருத்தி பின்வருமாறு நியமிக்கிறாள் —

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

மார்கழிதிங்கள்—மார்கழி யென்னும் மாதத்திலே
மதிநிறைந்த—பூர்ண சந்திரனைப் பெற்றுள்ள
நல் நாளால்—வ்ரதாநுஷ்டானத்திற்கு உரித்தாய் நல்லதான் நாளென்ற காரணமாக
நீராட போதுவீர்—வ்ரதத்தைச் சேர்ந்த நீராட்டத்தைச் செய்ய வருமவர்களே!
நேர் இழையீர்—நேர்த்தியான ஆபரணங் களை அணிந்தவர்களே!
சீர் மல்கும்—குண ஸம்பத்துக்கள் மிகுந்துள்ள
ஆய்ப்பாடி—திருவாய்ப்பாடியிலிருக்கும்
செல்வம்-கைங்கர்ய ஸம்பத்து பொருந்திய
சிறுமீர்காள் -சிறுவயதிலுள்ள பெண்காள்
போதுமின்—(நீராட) வாருங்கள்.
கூர் வேல்—கூர்மை பொருந்திய வேலா யுதத்தை யுடையவனும்
கொடு தொழிலன் -கொடுமைத் தொழிலை யுடையனும்
நந்தகோபன்—நந்தனென்பவனு மான கோபராஜனுக்கு (அடங்கின)
குமரன்—பிள்ளையாயும்,
ஏர் ஆர்ந்த—அழகு நிறைந்த
கண்ணி—கண்களையுடையவளான
யசோதை—யசோதைப் பிராட்டிக்கு
இள சிங்கம்—சிங்கக்குட்டி போன்றவனும்,
கார்—நீர் கொண்ட மேகத்திற் கொத்த
மேனி—திருமேனியுடையனும்,
செம் கண்—(செந்தாமரைப் பூப்போல்) சிவந்த திருக்கண்கள் உடையனும்,
கதிர் மதியம் போல்—சூரியன் போலும் சந்திரன் போலும்
முகத்தான்—திருமுகமுடையவனும்,
நாராயணன் ஏ—நாராயணனுமான கண்ணனே
நமக்கே—அவனையே பற்றின நமக்கே (வ்ரதத்திற்கு வேண்டும்)
பறை—ஒரு வகை வாத்யத்தை
பாரோர்—பூமியிலுள்ளார் எல்லோரும்
புகழ—புகழும்படி
படிந்து—பவ்யப்பட்டு
தருவான்—அளிக்கப் போகிறான்.
எம் பாவாய்—எமது தோழிப் பெண்ணே!
ஏல்—இதை ஏற்றுக் கொள்.
ஓர்-அறிந்து கொள்.

மார்கழித்திங்கள் — திங்கள் என்று சந்திரனுக்குப் பெயர். சந்திரன் தன்னுடைய விருத்தியிநலே சுக்லபக்ஷ மென்ற பதினைந்து நாட்களையும், தன் குறைவாலே க்ருஷ்ண

பக்ஷமென்ற பதினைந்து நாட்களையுமாக்கி ஒவ்வொரு மாதத்தையு மேற்படுத்துவதால் திங்களென்பது மாதத்திற்கு ஆகுபெயர். ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமியில் ஒவ்வொரு நக்ஷத்திரம் சேரும். சித்திரை நக்ஷத்திரம் சேருவதால் சைத்ரம், விசாகை நக்ஷத்திரம் சேருவதால் வைசாகம் என்றாற்போல் காண்க. அங்ஙனம் மிருகசீரிட நக்ஷத்திரத்தின் சேர்த்தியால் இது மார்கழியென்னப்படுகிறது. நமக்கு இராப்பகல் சேர்ந்து ஒரு நாள் ஆகிறாப்போலே தேவதைகளுக்கு உத்தராயணம் பகலாகவும். தக்ஷிணாயநம் இரவாகவு மாவதால் நம் ஸம்வத்ஸரம் ஒன்று அவர்களுக்கு ஒரே நாளாகிறது, ஆக தக்ஷிணாயநமென்ற இரவின் முடிவான மார்கழி மாதம் அவர்களுக்கு நமக்கு ப்ராம்மமுகூர்த்தம் எனப்படும் விடியற்காலம் போல வாம். விடியற்காலத்திலே புத்திக்குதெளிவு பிறக்கிறதென்பதை பச்சிமாத்யாமி நீ யாமாத் ப்ரஸாதமிவ சேதநா' என்று மஹாகவியும் சொன்னான் பகலில் பலவிதமாக உழைத்து இந்த்ரியங்களெல்லாம் மிக்க ஆயாஸ முறவே நித்திரையில் நாம் விழுந்தபோது நம் ஆத்மா ஹ்ருதயகமலத்திலுள்ள எம்பெருமானோடு சேர்ந்து ஸுகித்திருக்கிறது. அகிலஹேயப்ரத்யநீகனென்னபடியாலே ஆயாஸமற்ற எம்பெருமானின் சேர்த்தியாலே இவன் ஆயாஸமின்றியிருப்பதோடு இவனுடைய இந்திரியங்களெல்லாம் இரவு முழுமையும் வேலை யற்றியிருப்பதாலே முதலில் சுறுசுறுப்பாக வேலை செய்யத் துவங்கும். மனதும் நிர்மலமாய் எதையும் நன்ருக ஆராயும் சக்தியைப் பெறும். ஆகவே அப்போது இதற்கு முன் நாம் செய்தவற்றிலுள்ள தவறுதல்களையும், இனி நாம் இருக்கவேண்டிய நிலைமையையும் பற்றி விசாரித்து எம்பெருமானின் கைங்கர்யத்திலே நாள்முழுதும் போகுமாறு நாளைக் கூறுக்கிச் செய்யவேண்டுவனவற்றைத் தெளிவாக வகுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆன்னிக க்ரந்தங்களிலே ஆன்றோர் அருளிச்செய்துள்ளனர். இந்த ந்யாயத்தாலே தேவதைகளுக்கும் தெளிவு பெறுவிக்கும் காலம் மார்கழிமாதம், அதனால் அவர்கள் நமக்கு நற்புத்தி யளிக்கும் மாதம் இம்மாதம். ஆகவே தினத்திற்கு விடியற்காலம் போலவே இது வருஷத்தின் முதற்காலமாக எண்ணப்படுகிறது. அதனால் கேசவாதி வ்யூஹாந்தரங்களான பன்னிரண்டு எம்பெருமான் மூர்த்திகள் பன்னிரண்டு மாதங்களுக்கு அபிமானி தேவதைகளாயிருக்க அம்மூர்த்திகளில் முதன் மூர்த்தியான கேசவன் மார்கழிக்கு அபிமானியானான். இப்படி புத்திக்குத் தெளிவு பிறக்கும் காலமானதாலே இதிலே செய்யப் பெறும் வ்ரதங்களெல்லாம் பலனைப் பெறுவிக்கின்றன வென இதற்கேற்றமுண்டென்பதைத் தாத்பர்ய சந்த்ரிகையிலே தேசிகன் அருளிச்செய்தார். இத்தைக் கணிசித்துக் கண்ணனும் ''மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்'' என்று தன்னை மார்கழி மாதமாகச் சொல்லிக் கொண்டார். ஸ்ரீமத்ராமாயணத்திலே இளைய பெருமாளும் (3—16—4) விடியற் காலத்திற்கு முன்னே ஸ்ரீராமனோடு கோதாவரிக்கு நீராட்டத்திற்கு எழுந்தருளும் போது ஹேமந்தருது வந்திருப்பதைக் கண்டு, 'அயம் ஸ கால: ஸம்ப்ராப்த: ப்ரியோ யஸ்தே ப்ரியம் வத। அலங்க்ருத இவாபாதி யேந ஸம்வத்ஸர: சுப:'' என்று இது ஸ்ரீராமனுக்கு மிக இஷ்டமானதென்றும் ஸம்வத்ஸரத்திற்கு அலங்காரமானதென்றும் ச்லாகித்து, இது புதிய தான்யத்தைக் கொண்டு நவாக்ரயண பூஜையைப் பெரியோர் செய்யும் காலமென்றும், பித்துருக்களும் தேவதைகளும் ப்ரீதி பெறும் காலமென்றும், ஸத்ருக்களும் பாபங்களைக் கழிக்கும் காலமென்றுப், தேசமுழுமையும் காமஸம்ருத்தி பெறும் காலமென்றும், கறவைகள் விசேஷமாகப் பால் கறக்கத் தயிர் நெய் மிகும் காலமென்றும், மஹாராஜர்கள் திக்விஜயத்திற்குப் புறப்படும் காலமென்றும், பயிர்களெல்லாம் பலிக்கும் காலமென்றும் பலவாறு புகழ்ந்தார். ஸூர்யன் தென்திக்கில் வெகுதூரம் வந்துவிட்டதால் வடதிக்கில் பனி யதிகமென்றும், இதே சமயத்தில் ப்ரஜைகளோடு பரதரும் ஸரயூ நதியில் ஸ்நானத்திற்கு எழுந்தருளுவாரென்றும், 'அத்யந்த ஸுகஸம்வ்ருத்த: ஸுகுமார: ஸுகோசித: । கதம் ந்வபரராத்ரேஷு ஸரயூ மவகாஹதே' என்று

'இங்கே நாம் ஸ்நானத்திற்குப் போவதில் ஆச்சரியமில்லை. பரதர் ஸரயூவில் இவ்வேளை யில் ஸ்நானம் செய்வதை நினைத்தபோது, மிகவும் ச்ரமமதெனத் தோன்றுகிறதெனவும் க்லேசத்துடன் கூறினர். ஆக எங்கும் யாவரும் வ்ரதம் செய்யும் காலமிது. பெரியோர் சிறியோர் ஒருவர் தப்பாமே எல்லோரும் தங்களால் செய்யக் கூடிய வ்ரதங்களைச் செய்யும் காலமுமிது. கன்னிகள் கோமயத்தையும் புஷ்பங்களையும் கொண்டு வீட்டுக்கு முன்னே கோலமிட்டு அலங்கரிக்கும் காலமுமிது. தனுர்மாஸ பூஜை எல்லோரும் நடத்தும் காலமு மிது. இராபத்து பகற்பத்து உத்ஸவம் தொடங்கும் காலமுமிது. இப்படியெல்லாமுள்ள பெருமையைக் கருதி இதில் வ்ரதம் அநுஷ்டிக்க நாம் முன்வருவது நலமெனத் தெரிவிக்க மார்கழித் திங்கள் என்றதாம்.

மதி நிறைந்த நன்னாளால் — பூர்ணசந்திரன் விளங்கும் நாள் பூர்ணிமை. இப் பூர்ணிமையிலே இவ்ரதம் முடிக்கும் விதம் மார்கசீர்ஷ மாஹாத்ம்யத்திலே சொல்லப் பெற்றது. பூர்ணிமையிலிருந்து மற்றொரு பூர்ணிமை வரை ஒரு மாதமாகும் பார்ஹஸ் பத்யமானத்தைக் கொண்டு வடதேசத்தில் நடத்தும் அநுஷ்டானமுறைக்கு அது இணங்கி யதாம். கோபிகள் நடத்திய வண்ணமிது. இதனால், நம்தேசத்தில் ஸௌரமா நாதிகளைக் கொண்டு இம்மாத பூஜை முதலானவற்றையும் நடத்துவதில், ஒரு குற்றமு மில்லை. நன்னாள்-வ்ரதாநுஷ்டானத்துக்குரிய நாள். அன்றி, மதி நிறைந்த நாளொன்றில் அவன் வானத்தில் வேணுகானம் செய்து நம்மைக் கூப்பிட்டு ராஸக்ரீடை செய்யும் நாளைப் போலே அவனோடு கூடியிருக்க நாம் பாக்யம் பெற்ற நாளிது. கோபர்கள் தாங்களே நம்மையு மவனையு மொன்று சேர்க்கும் நாளிது. இந்த நாளை நாம் விட்டோமாகில் நம்மு டைய மனோரதத்தை நாம் நிறைவேற்றிக் கொள்ள வழி கிடையாதென்றதாம். ஆல் என்பது அசை; அல்லது ஆச்சரியமென அதன் பொருள். நன்னாளென்பதற்கு நன்னா ளிலெனப் பொருள். அன்றி, ஆல் என்பது வேற்றுமையுருபாய் நன்னாளால்—நல்ல நாள் காரணமாக வென்க. ஆல் என்பதற்கு ஆகையால் எனவும் பொருளாம்.

நீராடப்போதுமின் என்னுமே போதுவீர் போதுமின் என்று நீராட வரவிருக்கும் நீங்கள் வாருங்கள் என்றதாலே, 'இந்த நோன்புக்கு நீராட ஏற்கெனவே அவர்கள் ஆவ லுடன் இருந்தனர். 'ஆயினும் ஆயர்கள் கண்ணனை அனுப்பமாட்டார்களென்று அதில் உத்ஸாஹ மற்றுமிருந்தனர். அப்போது கண்ணன் கூடுவது தெரிந்துகொண்டு தலைவியா யிருப்பவள் அவர்களை உத்ஸாஹப்படுத்துகிறாள்' என்பது விளங்கும். போதுமினோ நேரிழையீர் சீர்மல்கு மித்யாதி—பெரியோர்களின் புண்யத்தினாலே சீருற்றுக் கண்ணனின் கடாக்ஷத்தினால் மேன்மேல் சீர்மல்கின திருவாய்ப்பாடியிலே கண்ணனது காலத்திற்கு முன்னும் பின்னும் பிறந்தாரைப் போலன்றி அவன் அவதரித்த காலத்திலே அவனோடு கலந்து குதூஹலித்திருத்தற்குரிய பெரிய பாக்யத்தினாலே பிறந்து, அவனுக்கேற்ற சிறு வயதிலுள்ளநீங்கள் அவனுக்கெதிரில் நோன்புகாலத்திலே போலஎப்போதும் நேர்த்தியான ஆபரணங்களை யணிந்து அவனை யுவப்பிக்க நினைவுடையவராகையாலே, அவனே ஸஹாய மாய் வருவதால், அசுரர்கள் திரியுமிடமான திருவாய்ப்பாடியிலே ஆபரணங்களுடன் வெளிக் கிளம்புவதெங்ஙனமென்று அச்சமின்றி வெளி வாருங்கள் என்றதாம்.

கூர்வேற்கொடுந்தொழிலன்—இது குமரனுக்கு அடைமொழியாகில் 'வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி' என மேலே யருளிச் செய்கிறபடி. நம் ஸஹாயத் திற்கு அவன் கூர்வேலுடன் கொடுந்தொழில் செய்ய வருவானனென்றதாம். ஏரார்ந்த

கன்னியென்பது அசோதைககு அடைமொழி யாவது போல் இது நந்தகோபனுக்கு அடைமொழி யென்னில், இப்படி வேலைத் தரித்து வேலைகளில் காக்குமவனின் குமரனுனபடியாலே, 'பிதாவுக்குப் பிள்ளை நூறு மடங்கு அதிகம்' என்றபடி இங்ஙனமாவானென்றதாம். அன்றி நந்தகோபன் தன் மகனிடமுள்ள அன்பின் மிகுதியாலே அவனை அண்டும் எறும்பொன்றைக் கண்டால் கூட வேலெடுத்து அதன் கூர்மையினுல் குத்தி யெறிவான். என்றதாம். ஒரே பிள்ளையென்றருமையோடு பிள்ளையை வளர்த்து வந்த ஸோமக மஹாராஜனின் மனைவிகள் நூறுபேரும் அப்பிள்ளையை ஒரு தரம் ஓர் எறும்பு கடித்ததற்காக அழுது அமர்க்களம் செய்ததை மஹாபாரதத்திலே வனபர்வத்திலே (128-ல்) காண்க. இவ்வெறும்பு வ்ருத்தாந்தத்தை மனதிற் கொண்டு போலும் எறும்பு ஊர்ந்தபோதும் கூர்வேலெடுத்துக் கொல்வான் நந்தனென்று ஊஹித்தனர் பெரியோர். எறும்பிலும் அஸுரன் புகுந்திருப்பானென நினைத்து மங்ஙனமாம். இப்படிப் பாராட்டும் நந்தகோபன் தன் குமரன் இஷ்டப்படி நடந்துகொள்வா னென்றபடியாம். இனி, கூர்வேற் கொடுந்தொழிலரான நந்தகோபர் என் சொல்வரோவென்று பயந்து அவனுக்கு பவ்யனு யடங்கி நடக்குமவன்குமரனே நமக்குப் பறை தருவான். ஏனெனில், அந் நந்தன் இத்தனை நாள் கோபர் வார்த்தையைக் கேட்டுக் கோபித்திருந்தாலும் 'இனிக் கோபர்களே கண்ணனை யனுப்ப முடிவு செய்த பிறகு அனுகூலனுய்விட்டபடியா லென்க. இங்ஙனம் நம் பெரியோரிசைந்து கோகுலம் முழுவதும் ஒன்றுப்பட்டிருப்பதைக் கண்டு அசோதைக்கு தன் பிள்ளைமேல் பழி சொல்வாரொருவருமில்லையென்ற களிப்பாலே கண்கள் மிக அழகுற்றிருந்தன தெனக் கருதி. 'ஏரார்ந்தகண்ணி' என்றதாம். இனித் தந்தை ஏதாவது கடூரமாகப் பேசி சிக்ஷித்த போது அவரிடம் குமரனுய் பவ்யப்பட்டிருந்து, அன்னையிடம் வந்து நான் ஒரு பாவமு மறியாமலிருக்க வீணே வெய்கிருரே என்று சிங்கம்போல் இவன் சீற்றம் கொண்டாலும் அருமையாலே ஏரார்ந்தகண்ணியாகவே அவள் இருக்கிருளென்றதாம். அதற்காக நந்தரிடமும் மனம் மாருத மகாபதி வ்ரதை யென்றதுமாம்.

இவன் நாராயணனே என்பதைத் தெளிவிக்க இலக்கணங்களைக் குறிக்கவும், தங்களுடைய தாபத்தைப் போக்கும் வகைகளுள்ளவனென விளக்கவும் கார்மேனி இத்யாதி நீர்கொண்ட மேக நிறத்தைக் கண்டபோதே நாராயணனென்று நிஷ்கர்ஷிக்கலாமே. இந் நிறம் வேறு தேவதைக்கும் மனிதனுக்கும் கிடையாதன்ருே. நீலதோயதமத்யஸ்தையான மின்னல் போலே ஹ்ருதயத்தில் அக்னி சிகை யிருப்பதாக நாராயணுநுவாகத்திலே யோதப் பட்டதாலே கார்மேனியன் நாராயணனே. முழுத்திருமேனியைக் காண வேண்டியதேன்? திருக்கண்களை கண்டாலும் நாராயணனே என்று நிர்ணயிக்கலாம். செந்தாமரைக் கண்ணணுவா னிவனே என்று கப்யாஸ ச்ருதியிலே கண்டோமே. இவன் ஸ்ரீவராஹாவதாரம் போன்ற அவதாரம் எடுத்தாற் கூடத் தன் கண் அமைப்பை மாற்றுவதில்லை போலும். மஹாவராஹ: ஸ்புடபத்மலோசந: | என்றதன்ருே? அத் திருகண்களை ஸேவித்த போதே இவன் இருவிபூதிகளுக்கு மீச்வரன்என்றும், எதைக் கேட்டாலும் குளிரகடாக்ஷித்து நல்வரவு கூறி உதாரனுமிருக்கிருனென்றும் தெளியலாம். கதிர்மதியம்போல் முகத்தான். கூடார்ரை யழிக்கக் கதிர் போலும், கூடுமவரைக் களிக்கவைக்க மதி போலும் விளங்கும் முகமுடையவனிவன், நாராயணனே. கார்மேனி முதலானவற்றைக் கண்ட போதே நாராயணனென்றே நிர்ணயிக்கப்படு மசோதை நந்தர்களின் குமரன் என்ற ந்வயமாம். அன்றி, நாம் நோன்பு நோற்க விறங்கினுலும் கண்ணனைக் காண முடியாது; வேறு யாராகிலும் பறை கொடுக்க அனுப்பப்படுவாரென்று நினைத்து நிற்க வேண்டா. நாராயணுன இவனே

பறை தருவான். இவன் இதுவரை கோகுலத்திற்கு நேர்ந்த பேராபத்துக்களை யெல்லாம் போக்கினனே. வேறு யாராலாவது செய்ய முடிந்ததா? ஆக இக்கார்மேனி நாராயணன் மஹிமையைக் கண்டு அவனைத் துணையாக அனுப்பினால்தான் நோன்பு நோற்க முடியு மென்ற நம் கோரிக்கையைக் கோபுர் இசைந்தனர். ஆய்ப்பாடிக்கு நேர்ந்த ஆபத்துக்களை நீக்கின விவன் நாராயணனே யாகாது வேறொருவனாகக் கூடுமோவென்று நாம் சொன்ன தையெல்லாம் கேட்டு கோபாலர்களும், 'தம் மந்யே ராகவம் வீரம் நாராயணநமநாமயம் என ராவணன் நினைத்தபடி நினைத்துத் தெளிந்தனர். அவனும் தன்னை யெல்லோரும் ஏசு கிறார்களென்று முதலில் மறுத்தாலும் கடைசியில் இசைந்திருக்கிறான். ஆகையால் அவனே பறை தருவான். நமக்கே, கண்ணனே காக்கவல்லா னென வறிந்தும் அவனோடு நாம் சேரக்கூடாதென்று நம்மைவிட்டு அண்டையூர்களிலுள்ள பெண்களை அழைத்து அவனைத் துணையாக்கி நோன்பு நோற்பரென' நினைக்கவேண்டா, பஞ்சலக்ஷம் குடியான இவ்வாய்ப் பாடியில் போலே பக்கங்களிலுள்ள பெண்களும் அவன்மேல் பெருங் காதல் கொண்டவரா கையாலே வேறு தகுந்த கன்னிகைகள் கிடைப்பதரிது. ஆக நம்மைக் கொண்டே நோன்பு நோற்பது நிச்சயம். அவனும் பெரியோர் சொன்னதைக் கேட்டுப் பறை தருவதாக வாக் களித்திருக்கிறானாகையாலே, அவன் நம்மோடு சேரமாட்டே னென்பா னென்றும் நினைக்க வேண்டாமென்றபடி, இங்கே, 'மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்' என மேலே சொல்வதைச் சேர்த்துக் கொள்க. 'பாரோர் புகழப் படிந்து'. கோபரே இசைந்து புகழும்போது லோகமெல்லாம் புகழ்வதில் ஐயமென் என்றபடி. பாரோர் புகழ்ந்ததால் படிந்து, அல்லது பாரோர் புகழும்படி படிந்து நமக்கே பறைதருவானென அந்வயம். பாரோர் புகழப்படிந்து போதுமினோ என இரண்டாமடியிலுள்ள வினையோடு சேர்த்து முறைப்பர். ஏலோரெம்பாவா யென்பதற்கு முன்னுள்ள பதம் (செப்பேலோ ரெம்பாவாய்', 'பாடேலோ ரெம்பாவாய்' என்றவாறு சிலவிடங்களிலே வினைமுற்றாகிலும்), பெரும்பாலும் வினையெச்சமாகவே காணப்படுகிறது. அது, 'எங்கள் மேற் சாபமிழந்து', 'கூடியிருந்து குளிர்ந்து' என்ற விடங்களிற் போலே எங்கும் அந்வயம் பெற முடியாதபோது, 'ஆவா வென்றாராய்ந்து அருள்' எனவுள்ளதைப் போன்ற வினைச்சொல்லொன்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். கூடியவரையில் உள்ள வினைச்சொல்லோடு சேர்ப்பது யுக்தமான படி யாலே அருகில் வினைச்சொல் கிடைக்கில் அத்துடன், இல்லையேல் தூரத்திலுள்ள வினையோ டாகிலும் சேர்த்துரைத்துக் கொள்வது யுக்தமாம்.

ஏலோரெம்பாவா யென்பதின் பொருளை ப்ரவேசத்திலேயே விசாரித்துள்ளோம். அங்கே காண்க.

இவ்வாறு, நிலவறையில் அடைக்கப்பட்டோ, வேறுவிதமாகவோ, கண்ணனோடு கலந்திராதபடிக்குக் கன்னிகைகளைக் கோபர்கள் அடக்கியிருக்க அதனால் கன்னிகள் நோன்புக்கு இசையா மலிருந்ததும், பிறகு தங்கள் இஷ்டத்திற்கு அவகாசமிருப்பதைக் கண்டு அவர்களுக்குத் தலைவியாயிருப்பவள் அவர்களை ப்ரேரிப்பதும் விசதமாய் முதற் பாசுரத்திலே கிடைக்கும் வகையில் இதற்குக் கருத்துரைத்தனம். இனி உண்மையில் இவர்கள் நோன்பை ப்ரதானமாக நினைக்காமல் எம்பெருமானுக்கு என்றைக்கு மாட் செய்வதை ப்ரதானமாக நினைத்துப் புறப்படுவது சிற்றஞ்சிறு காலில் வெளியாகப் போவ தால் அதற்குத் தகுந்தபடி யொரு பொருளையும் கருத்திற் கொண்டு தலைவியானவள் மறை முகமாக அவர்களுக்குச் சொல்லுகிறா ளென்றும் கொள்ளக் கூடுமாகையால் இவ்வாறும் பொருள் கொள்க —

மார்கழித்திங்களில் நமக்கிப்போழ்து மதி நிறைந்த நன்னாள் வாய்ந்துள்ளது. மதியாவது புத்தி கண்ணனோடு நாம் சேருவதைத் தடுக்கக் கூடாதென்று கோபர்களுக்கு நற்புத்தி நிறைந்த நாள் வந்துள்ளது. நாமும் நம் மதியை நன்கு உபயோகித்துக் கொள்ள வேண்டும். நீராடப் போதுவீர் போதுமினோ. நீராடலாவது சுனையாடலெனத் தமிழர் சொல்லுமது. கணவனோடு பெறும் கலவி. 'க்ரீஷ்மே சீதமிவ ஹ்ரதம்', 'மம தீர் பவந்தம் க்ரீஷ்மே தடாகமிவ சீத மநு ப்ரவிஷ்டா' என்ற ப்ரமாண ஸம்ப்ரதாயப்படி கண்ணனின் அனுபவமாகிற பேரானந்தக் கடலிலே அமிழ்ந்தாட ஆர்வம் கொண்ட நீங்கள் குதூஹலித்து வரலாம். நேரிழையீர். அநுபவத்திற்கு வேண்டிய ஆத்மகுணங்கள் அனைத்தும் நேர்த்தியாகப் பெற்றீரல்லீரோ நீங்கள். சீர்மல்கு மித்யாதி கண்ணனை யாராதிப்பதற்காக வேண்டுவனவற்றை யவனே இத் திருவாய்ப்பாடியிலளித்து உங்களுக்கு அந்தக் கைங்கர்ய செல்வத்தையு மனுக்ரஹித்துள்ளானே.

நாராயணனே. பரதத்துவமான ஸ்ரீமத் நாராயணனைத் தவிர்த்து மற்றொரு புதுத் தெய்வம் கொண்டாடுவாரைப் போலன்றி அவனையே ஆச்ரயித்துள்ள நமக்கு அவனே வேண்டுவதைத் தருவான். ஏதேனும் அற்ப பலன் நமக்கு வேண்டியதா யிருந்தாலும் ஏகாந்தியின் நிலையில் இருந்து அவனையே நாம் கேட்க வேண்டும். அவன் மோக்ஷமளிப்பதையே முக்கியமாக வாதரித்தாலும் நமக்கு வேண்டிய வேறு பலனையு மளிப்பான். நாம் கேட்காமலிருந்தாலும் அவசியமாயுள்ளதை யவனே யளிப்பான், 'சரீராரோக்யமர்த்தாம்ச்ச போகாம்ச்சைவாநுஷங்கிகாந். ததாதி த்யாயிநாம் பும்ஸாம் அபவர்கப்ரதோ ஹரி.' என்றன்றோ ப்ரமாணமிருப்பது.

நமக்கே. 'அற்ப பலனை மட்டு மபேக்ஷிக்கிறவர் விஷயத்திலே அவர்கள் வேறு பலனைத் தன்னிடம் பெருமலிருப்பதாலே அதை யாவது அவர்களுக்குத் கொடுத்து அவர்களைத் தன் வச மாக்கவேண்டு மென நினைப்பான். மோக்ஷத்தை விரும்புவார்க்கு மஹா புருஷார்த்தத்தையே தருகிறோமே; இதெதற்கு என உபேக்ஷை பண்ணுவா' னென வேண்டா, மோக்ஷத்தை யபேக்ஷித்த நமக்கே மற்றவற்றையுமளிப்பான். அன்றி, மற்றவர்க்குக் கொடுப்பதில் தான் ஸம்சயம். நமக்குக் கொடுப்பது நிச்சயமா யுண்டு. இவர்கள் கேட்பதற்கு முன்னே கொடுக்க வேண்டியிருக்கக் கேட்கும் வரையில் தாமதித்தோமே யென்று கூட தவித்துத் தத்க்ஷணமே கொடுப்பான். அப்படி யவன் அளிக்காவிடில் அது நமக்குத் தகாதென விலக்கினனென்று நாம் ஸந்தோஷிக்க வேண்டும். வேறொருவரை யண்டாமலுள்ள நமக்கே அவன் தனது கைங்கர்ய புருஷார்த்தத்தைக் கொடுப்பதென்று மாராய்க. புருஷருக்குப் பதிவ்ரதைகளான பெண்டிரிடத்திலே தானே பரிவுண்டு.

பறைதருவான். பறை = கைங்கரியத்திற்கும் உபாயாநுஷ்டானத்திற்கும் வேண்டும் கருவிகளும் ஜ்ஞானம் சீலம் முதலிய கல்யாண குணங்கள் முதலானவைகளும். அவற்றை யவனே தருவான் ஆகையால் பிறர் நம்மைத் தூண்டுவதால் அவசியம் கேட்க வேண்டுமாகில், தெளிவு பெற்றுத் தகுந்த முறையில் கேட்போம்; வேண்டாமாகில் விட்டு விடுவோம். அவனுக்கு நம்மைக் காக்கும் பாரம் இயற்கையாகவே இருக்கிறதென்றபடி.

'நாராயணனே நமக்கே பறைதருவான்' என்றதாலே திருவஷ்டாக்ஷரத்தின் பொருளான நாராயணன் மகாரார்த்தமான சேதநர்களுக்கு அதன் ஜபம் முதலியவற்றால் மகிழ்ந்து உபாயத்தை அனுஷ்டித்து வைப்பானென்றதாயிற்று. நமக்கே. 'மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேபி ஸ்யு: பாபயோநய: ஸ்திரியோ வைச்யா: ததா சூத்ரா: தேபியாந்தி பராம் கதிம், என்று அதிநீசரான நம்மையும் காப்பதாகச் சொன்னானல்லனோ

அவன். இங்கே திருமந்த்ரத்தைக் குறித்த ஆண்டாள் அடுத்த பாசுரத்திலே த்வயத்தையும் குறிப்பதும் காண்க.

ஏலோரெம்பாவாய் = இவ்வாறு பலவகையில் எமது பாவின் வாயிலாக உட்பொருளையு மாராய்ந்து அறிந்துகொள் என்றபடி. (1)

பஞ்சலட்சம் குடி யென்றாற் போலே பெரியதான திருவாய்ப்பாடியிலுள்ள ஆயச்சிறுமிகளின் பெருந்திரளைத் தலைவியா யிருப்பாள் இங்ஙனம் தூண்டி, இனி நோற்க வேண்டும் நோன்பை நடத்தும் முறையையும் விளக்குகிறாள் —

2. வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி,
மையிட் டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்,
செய்யாதன செய்யோந் தீக்குறளை(ச்)சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமாறெண்ணி யுகந்லோ ரெம்பாவாய்.

வையத்து—பூவுலகில்
வாழ்வீர்காள்—வாழ்க்கை பெறுமவர்களே
நாமும் –நோன்பு நோற்க விசைந்த நாமும்
நம்பாவைக்கு—நாம் செய்வேண்டும் நோன்புக்கு
செய்யும் –அநுஷ்டிக்க வேண்டிய
கிரிசைகள்—சடங்குகளை
கேளீர் ஓ—செவியுற்றுக் கேளுங்கோள் (சொல்லுகிறேன்)
பாற்கடலுள்—(நாம்) க்ஷீரஸமுத்ரத்தில்
பைய—மெதுவாக
துயின்ற –நித்திரை செய்தருளும்
பரமன்—ஸ்ரீமந் நாராயணனுடைய
அடி—திருவடியை
நாம் பாடி— நாம் கானம் செய்து,
நெய் உண்ணோம்—நெய்யை உண்ணாதவர்களாயும்
நாட்கால் ஏ —விடியற்காலத்திலேயே
நீர் ஆடி –ஸ்நாநம் செய்து விட்டு
மை இட்டு எழுதோம்—கண்களில் மையை வைத்துத்தடவாதவர்களாயும்
மலர் இட்டு முடியோம்—கூந்தலைப் புஷ்பங்களை வைத்து முடியாதவர்களாயும்,
செய்யாதன—முன்னோர் செய்யாமலிருப்பவற்றை
செய்யோம்—செய்யாதவர்களாயும்
தீ—தீய
குறளை(யை) —கோட்சொல்லை
சென்று—அதைச் சொல்லுமவரிடம் போய்
ஓதோம்—கேட்டு அநுவாதமாகக் கூடச் சொல்லாதவராயும்,
ஐயம் உம்—கொடையையும்
பிச்சை உம்—யாசிக்கும் பொருளையும்
ஆம் தனை உம்—ஆகும் வரையிலும்
கை காட்டி –நம் கையாலளித்து
உய்யும் ஆறு— உஜ்ஜீவிக்கும் வகையை
எண்ணி— நன்கு சிந்தித்து
உகந்து—களித்து (இருப்போம்) ஏல் ஓர் எம் பாவாய்'

செய்யும் கிரிசைகள் இரு வகை யாகும், வேண்டா வென்றவற்றை விடுவதும், வேண்டுமென்றவற்றைச் செய்வதும், அவை வாசிகம், காயிகம், மானஸமென மூன்றுவகையாம். பாடி யென்பது வாசிகமான கார்யம். நீராடி கை காட்டி

யென்பன காயிகங்கள், எண்ணி என்பது மாநஸம். செய்யக்கூடாத வற்றிலே நெய் யுண்ணோ மித்யாதியாலே காயிகத்திற்கு நிஷேதம், ஆகவே 'செய்யாதன செய்யோ' மென மாநஸத்தின் நிஷேதமாகக்கடவது. அன்றி, செய்யத்தகுமவற்றிலேயே நெய்யுண்பது போன்றவற்றை இப்போது செய்யகூடாதென்று கூறி, எப்போதும் செய்யத் தகாத வற்றைச் செய்வதும் கூடாதென்ன, செய்யாதன இத்யாதியாம். இது, பொய் சொல்லத் தகாதென எப்போது முள்ளதையே மறுபடியும், தர்சாதி யாக காலத்தில் வேண்டாவென்று போலவாம். அப்போது சென்று மனத்தைச் செலுத்தி, மனத்தினால் நினைத்து என வுரைத்து நெய்யுண்ணோ மித்யாதிகளிலே அந்வயித்தால் சென்று என்பதால் மாநஸ நிஷேதம் செய்ததாம். மேலே பல பாசுரங்களிற் போலே இங்கும் உகந்து என்பதற்கு மேல் ஒரு வினையைப் பாசுரத்தின் போக்குக்கிணங்கி சேர்த்துக் கொள்வது. உண்ணோம் இத்யாதிகளை வினைமுற்றாகவே கொண்டு வேறு வினையைச் சேர்க்காமல் உகந்து நெய் யுண்ணோ மென்று அந்வயம் கொள்ளலா மாகிலும் கொள்க. உகந்து செய்யும் கிரிசைகள் என அந்வயம் கூறுவது யுக்தமன்று. ஏனெனில் செய்யும் கிரிசைகள் என்று பொதுவிலே கூறி அவற்றை யுத்தேசித்துப் பிறகு அவற்றை விவரித்து விதேயமாகப் பல செயல்களைச் சொல்ல மேற்பாகம்- ஆக விதேயங்களை உத்தேச்ய கோடியில் இணைப்பது பொருந்தா தாதலின். கூடும் வகையைக் கொள்க.

வையத்து — வையம் வையகம்: பூமி. தர்மானுஷ்டானத்திற்காக நம்மை வைக்க வேண்டுமிடம். இந்த நோன்பை நாம் நோற்காத போது துர்பிக்ஷம் பலப்படுவதால் வையத்தில் பிழைத்திருப்பதே கூடாது போம். நோன்பினால் வாழ்க்கை நிலைத்த தென்ற படி. மேலும் வாழ்க்கையாவது ஸ்த்ரீகளுக்கு ஸுகவாழ்க்கை. கணவனோடு கூடி யிருத்தல். அதிலும் மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லாத நமக்குக் கண்ண னோடு கூடி யிருந்தலே ஸுகவாழ்க்கையாம். இதற்கே நாம் பிறந்ததும், இப்போது நமக்குக் கிடைக்கும் தருண மேற்பட்டதென வறிவிக்க வையத்து வாழ்வீர்காளென்ற தாம். இது கிடையாத போது சிந்தயந்தியின் கதி யன்றோ இவர்களுக்கும் ஆய்விடும். நாமும், உம்மையால் நாராயணனே கண்ணன் செய்யப்போவதை முன் சொன்னேன்; அதன் பிறகு நாமும் செய்யவேண்டுவன சிலவுண்டு என வறிவிக்கிறேனென்றபடி. அன்றி, நாம் பரமைகாந்தி குலத்திற் புகுந்தவராயினும் ஒருபடி ஸத்ஸம்ருத்தியையும் கண்ண னின் திருவாராதனத்தைச் சிறப்பாக நடத்துவதையும் கருதி இதனை யனுஷ்டிக்கவேண்டு மென வறிவித்ததாம். பரமனடி பாடுவது முதலாக வெல்லாம் பகவத் ஸம்பந்தம் நிறைந்த கிரிசைகளேயாமென்ற கருத்தாலே ஸர்வதானமாய்க் கேட்கச் சொல்லுகிறாள்.

பாற்கடலுள் — 'ஏஷ நாராயண ச்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:' என்றபடி பாற் கடலிற் பள்ளிகொண்டவனே கண்ணனா யவதரித்திருப்பதாலே கண்ணனைக் கருதியே யிங்ஙனம் கூறினதாம். அன்றி கோபர்களுக்குத் தெரியாதபடி தாங்கள் ஸங்கேதமாக நந்தகோபன் திருமாளிகைக்குப் பாற்கடலெனப் பெயர் வைத்திருந்தனர் இவ் வாய்ச் சிறுமிகள். அது கண்ணனிருப்பிடமாகையாலே என்க. ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள் ஆற்றப்படைத்த இடமாகை யாலும் அது பாற்கடலாம். ஆக அவ்வித வழக்கைக் கொண்டு இப்போது நந்தகோபன் குமரன் நாராயணன் என்று ஸ்பஷ்டமாய் சொல்லும் போதும் அங்ஙனமே கூறினரென்க. பைய — ஒருவித சிந்தையு மின்றி தூங்குவோரின் தூக்கமானது பெருந் தூக்கமாய் எவ் வளவு கூக்குரலிட்டாலும் எழுந்திருக்க விடம் கொடாதபடி யிருக்கும். சிந்தையுள்ளவன்

தூக்கம் அங்ஙனமிராது. ஜகத்வ்யாபார சிந்தையிலே மூழ்கிக் கிடக்கும் திருமாலின் தூக்கம் தேவதைகள் வந்து கதறும்போதெல்லாம் கிளம்பும்படிக்கு அமைந்ததாலே வெகு மந்தமாகவே யிருக்கும். நப்பின்னையோடு பள்ளிகொண்ட கண்ணனும் நோன்புக்கு வருமிவர்களையே நினைத்துப் படுத்திருப்பதால் இவனும் பையத் துயின்றவனே. பரமன் தனக்கு மேல் பரமொன்றில்லை யென்றபடியுள்ள அவன்தானே நமக்கு மூன்று கரணங்களாலே ஆராதிக்கத் தகுந்தவன். அன்றி, பரையான மா எனப்படும் லக்ஷ்மியை யுடையவன் பரமன். ஸ்ரீமான் க்ஷீரார்ணவநிகேதந: என்றதாயிற்று. பாற்கடலில் அவளோடு கூட வன்றோ அவன் பள்ளிகொண்டது. அவளுக்குப் பரத்துவமாவது எம்பெருமானுக்கும் மேலான தன்மை யுடைமை. எம்பெருமானுக்கு உள்ள ஜகத்காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், முக்தபோக்யத்வமெல்லாம் ஸமமா யிருக்கச்செய்தே, அனுக்ரஹ மயமாய் புருஷகாரமாயுமிருப்பது இவளுக்கேற்றம். இதனை, 'ஸ்வசேஷா சேஷார்த்தோ நிரவதிக நிர்பாத மஹிமா பலாநாம் தாதா ய: பலமபி ச சாரீரகமித:, ச்ரியம் தத்ஸத்ரீசீம் தது பஸதநத்ராஸசமநீம்' என ஸ்ரீதேசிகன் ஆளவந்தார் திருவுள்ளத்தைக் கொண்டு விளக்கியருளினர். பரமனடிபாடி — அவனைப் பரமனென்றுணர்ந்த போதே நம்முடைய நைச்யமும் நினைவிலிருப்பதால், 'நீசோச்சயோ:' ஸ்வபாவோऽயம் நந்த்ரு நந்த்வ்யதாத்மக:' என்றபடி திருவடி பணிந்து பல்லாண்டு பாடிப் போற்றுவதே நம் பணி யென்றபடி.

நெய்யுண்ணோம் பாலுண்ணோம் — இடைச்சேரியில் அன்னத்துக்கு மேலாகக் கிடைப்பவை நெய் பால் முதலியன ; ஆகவே அவற்றை முந்துற நிஷேதிக்கிறார்கள். இடைப்பெண்கள் தூங்கி யெழுந்தவுடன் நீராடுவதற்கு முன்னமே தயிர் கடையப்புறப்படுவாராகையால் நெய்யும் பாலும் போன்றவற்றை அவர்கள் அப்போதுண்பார்களென்று நீராடுவதைச் சொல்வதற்கு முன்னமே அவற்றை நிஷேதிக்கிறாள். ஏகாதசி முதலான வ்ரத தினங்களிலே அசக்தர்கள் நெய் பால் தயிர் உண்டாலும் உபவாஸலோபம் (கேடு) இல்லை யென ஸ்ம்ருதிவசனமுண்டு. அங்ஙனமே இங்குமென நினைக்க வேண்டா வென்ற கருத்தாலும் அவற்றை நிஷேதிக்கிறாள். நெய் பருகோம் பால் பருகோம் என்னாமே உண்ணோம் என்பது நெய் பால் குடிப்பதும் அன்னத்தை உண்பதற்கு ஸமாநமாகையாலே செய்யக்கூடாதென விளக்கவாம். கண்ணபிரான் பிறந்த பிறகுண்டானவர்க்கு நெய்யும் பாலும் காண்பதே யரிதாய் விட்டதால் அவற்றைக் குடிப்பதா, உண்பதா என்பது கூட அவர்களுக்குத் தெரியாதென்றவாறு கருத்துரைத்து விநோதிப்பது முண்டு நாட்கால் — நாள் = நன் முஹூர்த்தம்; கால் = காலம். நீராட வேற்பட்ட ப்ராம்ம முஹூர்த்த காலத்திலே யென்றபடி. அன்றி, கால் ஏழனுருபாய் நாளிலே = நன் முஹூர்த்தத்திலே யென்றதாம். காலாவது அடிபாகம்; கீழ்பாகம்; நாளின் முதற்பாகமான விடியற்கால மென்னலுமாம். நீராடி காக்கை முழுகுமாபோலே முழுகாமல் சாஸ்த்ர முறைப்படி ஸ்நானம் செய்யவேண்டுமென வறிக்க, குளித்து, முழுக என்னாமே நீராடி என்றது. நீராடின பிறகே மையிடுவது முதலியன செய்யப்படுமவை: ஆக அதன் பிறகே அவற்றை நிஷேதிக்கிறாள் மையித்யாதியால். மலரிட்டு முடியோம் - யாருமறியாதபடி முடியினுள் மலரிடுவது கூட கூடாததாம். நாம் முடியோம் - ஒரு நொடி கூட அலங்கரித்துக் கொள்ளாமலிருக்க விசையாத நாமே அலங்காரத்தை இப்போது விட்டிருக்கவேண்டும். இல்லையேல் நோன்பு நிறைவேறாது. நோன்பு நோற்றபிறகு நமக்கு எல்லா அலங்காரங்களையும் கண்ணனே செய்வனாகையாலே நாம் முடியோமென்றதுமாம். செய்யாதன செய்யோம் — இந்நோன்பு நோற்கும் காலத்திலே மேலையார் எதைதை வேண்டாமென்று விட்டார்களோ அதனை

நாமும் விட வேண்டும். சிலவை நமக்குச் செய்யத் தகுமவையாகத் தோன்றினும், 'அஸ்வர் க்யம் லோகவித்விஷ்டம் தர்ம்யமப்யாசரேத் ந து' (अस्वर्ग्यं लोकविद्विष्टं धर्म्यमप्याचरेन्न तु) என்றபடி தர்மத்திற் கிணங்கியவையும் பூர்வாசாரமிராதபோது விட வேண்டுமவையே. எல்லோருக்கும் பொதுவாகவுள்ளது வேதம். அதில் அவரவர்கள் அனுஷ்டானத்திற்குக் கூடியவற்றை விளக்குவது பூர்வாசாரம். தீக்குறளை, குறளையாவது கோட்சொல். பின்புறணி = எதிரிலே புகழ்ந்து மறைவிலே இகழ்வது. இது நோன்பைக் கெடுக்குமாபோலே சொல்பவனையும் பாபத்துக் கிலக்காக்குமாகையாலே தீக்குறளையாம். தீக்குறளை சென்றோதோமென்று வலித்து ஓதுவதில்லை. அவ்வாறுகில் குறளையென்ற பெயர்ச் சொல்லை விட்டு குறள் என்ற பெயர்ச் சொல்லின் இரண்டாம் வேற்றுமையுருபெனக் கொள்ள வேண்டும். குறளாவது சொல் அல்லது சிறுமை, சிறு மையைச் சென்று ஓதுவதாவது மறைவிற்சென்று இகழ்ந்து கூறுவதென்க. இங்ஙனம் தீக்குறளை வேண்டாமென்ற இவர் பின்னே. 'பேய்ப்பெண்ணே', 'கும்பகரணனும் தோற்று முனக்கே பெருந்துயில் தான் தந்தானோ' என்றவாறு தூஷித்துப்பேசுவது கூடுமோ வென்னில், இவை நேசம் மிகுந்து மிகப்பரிவினால் வரும் பரிஹாஸப் பேச்சே யன்றி தோஷ புத்தியாலே செய்யும் தூஷணமல்ல வாகையாலும், இத்தகைய பேச்சுக்கு உத்ஸாஹ மூட்டுவதே பலனாகையாலும் குற்றமில்லை யென்க. சென்றோதோம் யாரேனும் தீக்குறளை சொல்வதை யங்கே சென்று கேளோம். காதில் விழுந்தாலும் அனுவாதமாகக் கூட சொல்லோம். ஒருவர் சொல்வதை யனுஸரித்துச் சொல்வதே யன்றோ ஓதுவது. அனுவாதம் கூட செய்யோ மென்றதாலே முதலில் நாமே சொல்வதுமில்லை யென்பது தன்கடையே ஸித்திக்கும். 'சென்றோதோம். நாம் ஒருத்திக் கொருத்திஏதேனும் தூஷணமாகச் சொல்லிக் கொண்டாலும், கண்ணனிடம் சென்று, இவள் இப்படி வைதாள் அவள் அப்படி வைதாளென்று சொல்லிக்கொள்ளக் கூடா' தெனவுமுரைப்பர் சிலர். பொதுவிலே விரதமுறையைக் கூறுவதற்கிணங்க உரைக்க.

ஐயமென்பதற்கு இடுகை யெனப் பொதுவிலே பொருளாகிலும் இங்கே பிச்சை யென்ற பதத்தாலே கேட்பவருக்குக் கொடுப்பதைச் சொன்னதாலே கேட்காதவர்களுக்குக் கொடுப்பது ஐய மென்பதாம். அயாசிதமாய்க் கிடைப்பதையே கொள்வதென விருப்பாரே பெரியோராகையாலே அவர்களுக்கு நம் இஷ்டப்படி நிரம்ப அளித்து ஆராதனம் செய்வது முதல் தர்மம். இதனால் தேவஸ்தகளுக்கும் அன்னை, தந்தை, ஆசார்யன் முதலானோர்க்கும் அளிப்பது சொல்லிற்று. ஆந்தனையும்—ஆமளவும். எத்தனைபேர் வந்தாலுமளிக்க வேண்டும். எவ்வளவு சக்தியோ அவ்வளவு அளிக்கவேண்டும். கையில் வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கக் கூடாது. ஆகவே கைகாட்டி என்கிருள் போலும் கைகாட்டி—யாரையாவது கொடுக்க ஏவி விடாமல் தாமே நேரில் கையால் கொடுத்து, உய்யுமாறு எண்ணி—பரமனடி என்று கீழே யுள்ளதை இங்கும் சேர்க்க, அவன் திருவடியின் த்யானமே முக்யமான உபாயம். மற்றவை யெல்லாம் அதற்கு உண்மையில் அங்கங்களெனக் கருதி உய்யுமாறென்பதை இங்கே சேர்த்தது ஆறு = வழி—இங்கே ஆறு எண்ணி என்றது ஆறென்ற எண்ணிக்கையையும் கருத்தில் வைத்துப்போலும், நெய்யுண்ணோ மித்யாதி நிஷேதங்கள் ஆறு, பாடி, நீராடி, ஐயம், பிச்சை, எண்ணி உகந்து என விதிகளும் ஆறும். உகந்து (अग्न सुवस्सुवरगन्म) 'அகந்ம ஸுவஸ் ஸுவரகந்ம' என்றாற்போலே இச்செயல் பலனை யளிக்குமென்ற விச்வாஸமும் வேண்டும். அன்றி, அவனைப்பாடி யெண்ணுவது ப்ரீதிரூபமாயிருத்தலால் நாமுகந்திருக்கவேண்டு மென்றபடி.

உட்பொருள்: வையத்து வாழ்வீர்காள், (तत् ज्ञानमज्ञान मतोऽन्यदुक्तं) 'தத் ஜ்ஞாநமஜ்ஞாந மதோऽந்ய துக்தம்' என்றபடி எம்பெருமானை யறிவதே யறிவு மற்ற தெருள் மருளே. அது போல், 'வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்' என்றபடி பாரமைகாந்த்ய வாழ்க்கையே வையத்து வாழ்க்கை மற்றது துக்க ஜீவனம் என்றபடி. நம்பாவை = நமது பாதிவ்ரத்ய தர்மம். பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடி = த்வயம் என்கிற மந்த்ர ரத்னத்தின் பொருளாகவுள்ளவன் க்ஷீரஸமுத்ரத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமந் நாராயணன் (क्षीराम्बोनिधि) ''க்ஷீராம்போநிதி'' என்ற த்யாநச்லோகம் நோக்குக. அவனடி பாடுவதாவது. (द्वयमर्थानुसन्धानेन सह सदैवं वक्ता) 'த்வய மர்த்தாநு ஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா' என்றபடி அம் மந்த்ரத்தையும் அதன் பொருளைப் பரக்கவுரைக்கும் ப்ரபந்தங்களையு மநுஸந்தித்திருப்பது. நெய்யுண்ணோ மித்யாதியாலே நிஷித்தங்களை விலக்கி நித்ய கர்மங்களிலே நிலைத்திருப்பது சொல்லிற்று. இதனால் ப்ராதிகூல்ய வர்ஜனமும் ஆநுகூல்ய ஸங்கல்பமும் சொன்னபடி. மையாவது ஜ்ஞானேந்த்ரியத்தைச் செம்மைப்படுத்தும் வஸ்து. ஆக மையிட்டெழுதோமென்று ஜ்ஞாநயோகத்தி லிழியாமையைச் சொன்னதாம். மலரிட்டு நாம் முடியோம் என்று மத்கர்மபரமோ பவ என்ற பக்தியோகாங்கமான பகவத் கர்மத்தோடு சேர்ந்த பக்தி யோகத்தை விடுக்கையைச் சொல்லிற்று. செய்யாதன செய்யோம். பூர்வர்கள் அநுஷ்டியாத சில ப்ரபத்தி ப்ரகாரங்களும் மந்த்ரங்களுமான லகுவான உபாயங்களை ஆதரியோம். தீக்குறளை சென்றோதோம். 'காவ்யாலாபாம்ச்ச வர்ஜயேத்' (काव्यालापांश्च वर्जयेत्) என்றாற் போலுள்ள நிஷேதங்களைக் கண்டு பகவத்ஸம்பந்த மற்ற பேச்சுக்களைப் பணியோம் ஐயமும் பிச்சையு மாந்தனையும் கை காட்டி — ஐயம் = கோழைத்தனம். ஆகிஞ்சந்ய கோப்த்ருத்வவரணங்களை நன்கு செய்து, உய்யுமாறெண்ணி முக்யமாய் தன்னைக் காக்கும் பரத்தை யவனதாக பாவிப்பதைச் செய்து. உகந்து—மஹா விச்வாசத்துடன் இருக்க வேண்டு மென்றதாம். உய்யுமாறெண்ணி — ப்ரபத்தியானது ஆறு அங்கங்களுள்ள தானபடியாலே அவ்வாறு அம்சங்களையு மெண்ணி, அல்லது, த்வயமானது ஆறு பதங்களை யுடையதானதால் அவ்வாறு பதங்களையு மெண்ணி எனவும் கொள்க. இது ப்ரபத்திபரமான யோஜனை.

இனி, உபாயாபாயஸந்த்யாகீ மத்யமாம் வ்ருத்திமாஸ்தித:' (उपायापाय सन्त्यागी मध्यमां वृत्तिमास्थितः) என்றபடி ப்ரபந்நாதிகாரி இருக்க வேண்டும் நிலை சொல்லிற்றெனலாம். மையிட்டெழுதோம் இத்யாதியாலே உபாய த்யாகமும், செய்யாதன செய்யோ மித்யாதியாலே அபாயத்யாகமும் சொல்லப் பெற்றன ஐயமும்என்று உபாதாந காலத்திய வித்யாதானம் முதலியனவும், பிச்சையும் என்று இஜ்யாகாலத்திய யதி ப்ரம்மச்சாரி, அதிதி முதலானோரின் ஆராதனமும். உய்யுமாறெண்ணி யுகந்தென்று ஸ்வாத்யாய யோக கால கார்யங்களும் சொல்லப் படுவதால் மத்யம் வ்ருத்தியான பஞ்சகால ப்ரக்ரியை பணிக்கப் பெற்றதாம். ஆக இப் பாசுரம் மேற் பாசுரங்களின் உட்பொருளின் சுருக்க மென்க. இது 29-ம் பாசுரத்திலே விளங்கும். (2)

இப்படி ஆயச்சிறுமிகளுக்குச் செய்யு முபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் கோபர்களைப் பார்த்து நாங்கள் பரமனடி பாடி நீராடி உங்கள் மனோரதத்தைப் பூர்த்தி செய்வது திண்ணமாகையால் நீங்கள் நிர்விசாரராயிருக்கலாம் என விச்வஸிப்பிக்கின்றாள்—

8. ஓங்கியுலகளந்த வுத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினல்
தீங்கின்றி நாடெல்லாந் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடு கயலுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள்
நீங்காதசெல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

ஓங்கி—அண்டகடாஹம் வரை வளர்த்து
உலகு—உலகங்களை
அளந்த—இரண்டடிகளால் அளந்து கொண்ட
உத்தமன்—புருஷோத்தமனுடைய
பேர்—கீர்த்தியை
பாடி—இசையுடன் கீர்த்தனை செய்து
நாங்கள்—உங்கள் மனோரதபூர்த்திக்கு நின்ற நாங்கள்
நம் பாவைக்கு—நம்முடைய வ்ரதத்திற்கென்று
சாற்றி—ஸங்கல்பித்து (அல்லது) பஹிரங்கப் படுத்தி
நீர் ஆடினல்—நீராட்டமென்ற சடங்கை நடத்தினல்
நாடு எல்லாம்—தேசம் எங்கும்
தீங்கு இன்றி—கேடொன்று மில்லாமல்
திங்கள்—ஒவ்வொரு மாதத்திலும்
மும்மாரி—மூன்று மழைகள்
பெய்து—பெய்ய (அதனல்)
ஓங்கு—உயர்ந்து வளர்ந்தும்
பெரு—பருத்துமுள்ள
செம் நெல்—செந்நெற்பயிர்களின்
ஊடு—நடுவே
கயல்—மீன்கள்
உகள—துள்ளி விளையாட
பூ—மலர்ந்துள்ள
குவளை போதில்—நெய்தல்மலர்களில்
பொறி வண்டு—ஒளியுள்ள வண்டுகள்
கண்படுப்ப—நித்திரைகொள்ள
நீங்காத—எவ்வளவளித்தாலுமழியாத
செல்வம்—தனஸம்ருத்தியும்
நிறைந்த—நிறைய
வள்ளல்—உதாரங்களான
பெரு பசுக்கள்—பருத்த பசுக்கள்
தேங்காதே—(கறப்பவர்) அஞ்சாமல்
புக்கு இருந்து—பசுக்களின் கீழ்புகுந்து நிலைத்திருந்து
சீர்த்த—பருத்த
முலை—மடிக்காம்புகளை
பற்றி—பிடித்து
வாங்க—அமுந்த (கையை எடுக்க)
குடம் நிறைக்கும்—குடங்கள் நிறையும்படி பாலைப் பெருக்கும்
ஏல் ஓர் எம் பாவாய்.

ஓங்கி, செந்நெற்பயிர் முதலியன ஓங்கி வளர்வது ஓங்கி வளர்ந்த உத்தமன் பேரைப் பாடுவதாலென்க. உலகளந்த — உலகளந்தவன் பேரைப் பாடினல் உலகமெல்லாம் செல்வம் நிறைந்திடும். வேண்டியவன் வேண்டாதவனென்ற பாகுபாடின்றி ஸர்வசேதனர் களையும் தன் திருவடியால் தொட்டு அனுக்ரஹித்தவன் த்ரிவிக்ரமன். அவனைப் போல் நாங்களும் ஸர்வபூதானுகூலர்களாயிருந்து ஸர்வ க்ஷேமார்த்தமாக இந்நோன்பு நோற்கிறோமென்றபடி. உத்தமன் பாபங்கள் தன்னை யண்டாதபடி மேலே நிற்பவனுகையாலே எம்பெருமானுக்கு உத் என்ற பெயரை உபநிஷத்து (சாந்தோக்யம்) சொல்லிற்று. பத்த சேதனர்களும் அவன் அனுக்ரஹத்தாலே பிறகு உத் ஆவர்கள். அனுக்ரஹத்தாலே எப்போழ்தும் உத்தாய் உத்தர என்றுசொல்லும் படியாயுள்ள அநந்த கருட விஷ்வக்ஸேநாதி

ஸான நித்ய முக்தர்களும் பலர் உளர். இவ்விருவகைப் புருஷர்களுக்கும் மேலாயுள்ள எம்பெருமான் புருஷோத்தமன். அன்றி, சைதன்ய மென்ற சிறந்த குண முள்ளதாலே சேதநன் தேஹாதி ப்ரக்ருதி வஸ்துவுக்கு மேலாய் உத் ஆகிறான். அச் சைதந்யத்திற்குப் பூரண விகாஸம் பெற்ற முக்தன் அவனுக்கும் மேற்பட்டவன். இவ் விருவருக்கும் மேலான வன் புருஷோத்தமன். 'த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்சாக்ஷர ஏவ ச' 'உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மே த்யுதாஹ்ருத:' ("द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च " उत्तम पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः) என கீதை கூறிற்று. ஜ்ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என்ற ஆறு குணங்கள் நிறைந்ததா லவன் புருஷோத்தமனென்பதும் 'யோ லோகத்ரய மாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர:' (यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः) எனவங்கே கூறப்பட்டுள்ளது. இதைவிட அவதாரத்திலே வேறு வகையான ஷாட்குண்யம் இருப்பதைக் கருதி அது நிறைந்துள்ளது ஸ்ரீராமாவதாரத்திலென்று. 'ஆந்ருசம்ஸ்ய மனுக்ரோச: க்ஷமா ஸத்யம் தம: சம:, ராகவம் சோபயந்த்யேதே ஷட் குணா: புருஷோத்தமம்' (आनृशंस्यमनुक्रोशः क्षमा सत्यं दमः शमः । राघवं शोभयन्त्येते षड्गुणा पुरुषोत्तमम्) என்ற ச்லோகத்தால் வால்மீகிபகவான் அருளிச் செய்தார்.

'வல்மீகத: ச்ரவணத:' (वल्मीकत श्रवणत) என்ற கோதாஸ்துதி ச்லோகத்தின் படியிலே 'வால்மீகிக்கும் மேலான கருத்துக்கள் குடிகொண்ட ஸூக்திகளைப் பொழியும் ஆண்டாள் திருவுள்ளத்திலே த்ரிவிக்ரமனே உத்தமனெனத் தோன்றிற்று. ஆழ்வார்களும் வாமனனிடத்திலே விசேஷித்து ஈடுபடுவது இதனாலே யாம். இவ் வவதாரத்திற்குள்ள சிறப்பென் எனில், மற்றையவதாரங்களிலே, 'பரித்ராணாய ஸாதூநாம்' (परित्राणाय साधूनां) என்பதற்குச் சேஷமாக, 'விநாசாய ச துஷ்க்ருதாம்' (विनाशाय च दुष्कृतां) என்ற அம்சம் விஞ்சியிருக்கும். பல வகையில் பகைவரைச் சித்ரவதம் செய்து துன்பத்திற்கு ஆளாக்கி ஸாது பரித்ராணம் செய்வதென்பது வாமனாவதாரத்திலே யில்லை. 'ஸுராணா மஸுராணாம் ச ஸாமாந்ய மதிதைவதம்' (सुराणामसुराणां च सामान्यमधिदैवतं) என்ற தன் பேர் கெடாதபடியும், உயிரழிக்காதபடியும், உத்தமமான வழியில் எல்லோரும் உய்யும்படியும் நடந்து கொண்டது இவ்வவதாரத்திலே யாம். ஆக உத் எனப்படு மெம்பெருமான் சிலரை அனுக்ரஹிக்கவே யெடுத்த ஹம்ஸாத்ய வதாரங்களிலே உத்தரனானான். த்ரிவிக்மனானபோது உத்தமனானான் ஓங்கியுலகளந்த உத்தமன்—துர்பிக்ஷம் நீங்க மழை பெய்ய வேண்டுமென்று ப்ரார்த்திக்கும் நமக்கு உலகளந்தவனைப் பாடுவதே பொருந்து மெனவும் கருத்தாம். எனெனில், அவனே தடையின்றி ஜலம் ப்ரவஹிக்கக் காரணமானான். திருக்கையிலே மாவலியின் கிண்டியினின்று தீர்த்தம் வாங்கி, திருவடியினின்று கங்கா தீர்த்தத்தை எல்லா வுலகிலும் தீங்கின்றி செல்வம் நிறையும்படி பெருக்கினான். கிண்டியினுட் புகுந்து தடுத்த சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளரிய சக்கரக்கையனிவன். அதனால் கிண்டியினின்று தடையின்றி தீர்த்தம் பெருகிற்று. மற்ற விவரத்தை 'அம்பர மூடறுத்தோங்கியுலகளந்த' என்றவிடத்திலே காண்க.

நாங்கள் -- முன் பாசுரங்களிலே 'நமக்கு', 'நாமும்' எனக் கூறி, இங்கே நாங்கள் என்றதால் அவைகள் போல் இது ஆய்ச்சிறுமிகளைப் பார்த்துச் சொன்னதன்று. இடையர்களைப் பார்த்துச் சொன்னதென விளங்கும். நம் பாவைக்கு — நோன்பில் இவர்களுக்குப் போலே இடையர்களுக்கும் ஒருவித ஸம்பந்த மிருப்பதாலே எங்கள் என்னுமே நம் என்ற நாம். திங்கள் மும்மாரி பெய்து — நீர்வளமுள்ள விடங்களிலும் மேல் மழை யில்லாதபோது

பயிர்கள் செழிந்தோங்கா. ஒன்பது நாள் வெய்யிலும் ஒரு நாள் மழையுமாக விருப்பத்தில் விசேஷ பலனுண்டாம். ஊடுகயலு கள - நீர் நிரம்பி யிருப்பதாலே மீன்கள் வயல்களில் வளர்கின்றன. பருத்த பயிர்தண்டுகள் நடுவே நுழைந்து போகமுடியாமே ஒருகணித்துத் துள்ளி விழுகின்றன. அதனால் நெய்தல் பூக்களின் தண்டுகள் அசைவுற, அம்மலர்களிலே மதுவைக் குடித்துக் கொண்டிருக்கும் வண்டுகள், ஸுக நித்ரை செய்கின்றன என்கிறது மேலடி. தேங்காதே—பெரும் பசுக்களைக் கிட்டுவதற்கோ, இவற்றின் பாலைப் பூர்த்தியாக நாம். கறக்கில்லோ மென்றே பயப்படாமல். புக்கு—பர்வதாகாரமான பசுக்களின் கீழே குகையிற் புகுகிறது போல்காணும் கோபர் புகுவது. இருந்து—பால் கறந்து முடியும்வரை கால் கை நோவற்றுக் கறக்க முயன்று. சீர்த்த முலைபற்றிவாங்க—இயற்கையாலும் கன்றுகள் ஊட்டினதாலும் காம்புகளில் பால் நிரம்ப இறங்க முலை பருத்துப் பிடிபடாம லிருக்கச் செய்தேயும் வலித்துக் கறக்க முயலுவர். அங்ஙனம் ஒரு தரம் இழுத்து வாங்கின போதே குடம் நிறைந்து விடும். அன்றி, அவர்கள் சீர்த்த முலைபற்ற, குடத்தை வாங்கி வேறு குடம் வைக்கும்படி நிறைக்கும். முலையைப் பற்றாத போதே மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்களாயவை யிருந்தபோதிலும் கோபர்கள் பசுவின் பால் கீழே பெருகிப் போகாதபடி புக்கிருந்து சீர்த்த முலை பற்றுகிறார்களென்க. வள்ளல்—இவர் தாம் கறக்கலாம்; இவரால் கூடாதன வொண்ணாதபடி ஸ்த்ரீகள் புருஷர், பிள்ளைகள், புதியவர் எல்லோருக்கும் அனுகூலமானவை யென்றபடி. சில பசுக்கள் உள்ளே பாலை அடக்கிக் கொள்வதுண்டு. இவை தாமதமாகவே சுரக்கின்றன வென்னலுமாம். 'உகளக் கண்படுப்ப' என்பன போலாம். 'பெய்து நிறைந்து' என்றவையும். எச்சத்திருபு. பெய்ய' நிறைய எனப் பொருள். குடம் நிறைக்க வள்ளல் பெரும் பசுக்கள் என்னுமே நிறைக்கும் என்றதால் அது வினைமுற்றென விளங்குகிறது. செல்வம் நிறைந்து என்றவிடத்தில் செல்வம் நிறைந்திருக்குமெனச் சேர்த்துக் கொள்வது மாம்.

இப்படி யிடையர்களைப் பார்த்து நோன்புக்குச் சாற்றி நீராடுவதாக இவர்கள் சொன்ன இச்சொல்லிலே வேறொரு கருத்தும் புகுந்திருக்கிறது. நம் பாவைக்கென்று வெளிப்படையாகச் சாற்றினாலும் உண்மையில் எங்களுடைய நீரோட்டம் அப்பலனையே பெரிதாக நினைத்துச் செய்வதென்று. உத்தமன்பேர் பாடுவதும், உத்தமனோடு கூடி நீராடுவது மெங்களுக்கு ஸ்வயம் புருஷார்த்தமான வ்யாபாரங்கள். ஆகில் உங்கள் பலன் ஸித்தியாதென நீங்கள் நினைக்கவேண்டா; யுக்தாயுக்தங்களைத் தெரிந்த எம்பெருமான் தானே எல்லாம் அளிப்பன். 'சரீரா ரோக்யமர்த்தாம்ச்ச போகாஞ்ச்சைவாநுஷங்கிகாந் । ததாதி த்யாயினும் பும்ஸாம் அபவர்கப்ரதோ ஹரி:' (शरीरारोग्य मर्थाश्चभोगांश्चैवानुषङ्गिकान् । ददाति ध्यायिनां पुंसां नपवर्गप्रदो हरिः) என்றபடி வேண்டுமாகில் அவனே யளிப் பனல்லனோ பக்தியும் கைங்கர்யமும் பாங்காக இருக்கும்படி யவனே பார்த்துக்கொள்ளு கிறவனுமிற்றே யென்றபடி.

உட்பொருள்—உலகத்தைப் புகழ்வதும் உலக நடவடிக்கையிலிழிவதுமின்றி ஸர்வ லோகஸுஹ்ருத்தான பிரானின் அடி பாடுவதே புருஷார்த்த மென்று அவனது கைங்கர் யமாகத் தாங்கள் செய்ய வேண்டும். நித்யநைமித்திககர்மங்களைத் தாங்கள் உகந்து செய் தால் அவ்வளவாலே உலகத்திற்கு எல்லா க்ஷேம முண்டு. அப்படிப்பட்ட மஹான் இருக்கு மிடத்திலே தானே பலன் கைக்கூடும். 'யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே । ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷ தஸ்கரா:' (यत्राष्टक्षरसंसिद्धो महाभागो महीयते । न तत्र संचरिष्यन्ति व्याधिदुर्भिक्षतस्कराः) மஹீயதே—அஷ்டாக்ஷரஸித்தி பெற்று

மேன்மேல் மஹிமை பொருந்தி விளங்க அந்த இடம் அனுகூலமாக அமைந்தால் போதும். ஊரிலிருப்பவன் அம் மஹானைப் புரஸ்கரித்துப் போற்றி வந்தால் அவர்களுக்கும் பலன் ஸித்திப்பதில் ஸம்சயமேது? அவனுள்ள விடத்திலே துர்பிக்ஷ மில்லை. துர்பிக்ஷமானது கேட்போருக்கு க்ருபை செய்துபதேசிக்க ஒருவர் கிடைக்காதபோது நேரும். எல்லாம் உபதேசிக்க இவனிருக்கும் போது துர்பிக்ஷமேது? ஆகையாலே அங்கே திருடனிருக்க மாட்டான். 'அந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே। கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா' (अन्यथा सन्तमात्मानं अन्यथा प्रतिपद्यते । किं तेन नकृतं पापं चोरेणात्मापहारिणा) என்றபடி பரமாத்மாவின் சொத்தான தன் ஆத்மஸ்வரூபத்தை அவனுக் கில்லாதபடி தனக்காக கொள்ளுமவன் திருடன். இந்த ஸ்வதந்த்ராத்ம ப்ரமமே உலகில் ஸகல பாபங்களுக்கும் காரணமாகையால் இவன் செய்யாத பாபம் கிடையாது. உபதேசம் செய்து துர்பிக்ஷம் நீக்க இவன் நின்றபோதே இவ்வஜ்ஞானம் அழியு மாகையால் திருடன் இருக்க முடியாது. துர்பிக்ஷமுள்ளவிடத்தில் தான் திருடு மிருக்கும். வேண்டியவை கிடைத்துள்ள போது யார் திருட நினைப்பர். இங்ஙனம் ஜ்ஞானம் பெற்றவர் தங்களுக்குள்ள ஸகல வியாதிகளையும் போக்க விரகு செய்வாராகையாலே வ்யாதிகளும் விலகும். ஜ்ஞானத்தைப் பெறாத போது வ்யாதிகள் நிறைந்து பசியின்றி பரிதவிக்கிறேனென்குன் உபகோஸலனென்ற சிஷ்யனென்றது சாந்தோக்யம்.

மும்மாரி பெய்து — திருவஷ்டாக்ஷரத்திற் சொன்ன அநந்ய சேஷத்வம், அநந்ய சரணத்வம், அநந்யப்ராப்யத்வ மென்ற மூன்றும் சேர்ந்து. அன்றி, ப்ரபந்நனா யிருப்பான் தனது காலத்திற் செய்ய வேண்டுவனவற்றில் முக்கியங்களாய், 'அத்யாத்ம க்ரந்த நிர்மாணம் அந்யேஷாஞ்சாவபோதநம் । அர்ச்சாவதாரஸேவா ச' (अध्यात्मग्रन्थनिर्माणं अन्येषां चावबोधनम् । अर्चावतार । सेवा च) என்று சொல்லப்பட்ட மூன்றும் சேர்வதாம். ப்ரபந்நன் இருந்த காலத்தில் அர்ச்சையில் தானீடுபடுவதும், வேதாந்த க்ரந்தங்களைப் பிறர்க்கு உபதேசிப்பதும், பின்னுள்ளார் தெளியும்படி பல வேதாந்த நூல்களை யியற்றுவதும் செய்து வர வேண்டு மென்றபடி. ஓங்குபெருஞ்செந்நெலூடு 'ஸமயோபநதை ஸ்தவ ப்ரவாஹை ரநுகம்பே க்ருதஸம்ப்லவா தரித்ரீ । சரணாகதஸஸ்ய மாலிநீயம் வ்ருஷசைலேச க்ருஷீவலம் திநோதி' (समयोपनतैस्तव प्रवाहैरनुकम्पे कृतसंप्लवा धरित्री । शरणागत सस्यमालिनीयं वृषशैलेशकृषीवलं धिनोति ।) என்றபடி சரணாகதர்களென்னும் பயிர்களின் அபிவிருத்தியைக் குறிப்பது. கயலுகள—'பசுர் மனுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ச்ரயா: (पशुर्मनुष्य: पक्षी वा ये च वैष्णवसंश्रया:) என்றபடி திர்யக்குகளும் பகவத் ஸம்பந்தம் பெற்று வாழ. பூங்குவளை - இத்யாதி அந்தந்த ப்ராணியின் ஹ்ருதயத்திலே அந்தர்யாமியிருக்கும் திருமால் தன் க்ருஷி பலித்து விட்டதென்று விசாரமற்று புகழுடன் நித்ரை கொண்டிருக்கும். இப்படி ஊரில் பெரியோர்கள் வஸிக்க ஸத்ஸஹவாஸத்தாலே நற்குணம் நிரம்பி அன்றீன்ற கன்றுகளுக்குச் சுரக்கும் பசுக்களைப் போலுள்ள பெரியோர்களிடத்தில், அவர்களுடைய வாத்ஸல்ய ஸௌலப்பயங்களைக் கண்டு அவ நள்ளவிடம் அஞ்சாதே புகுந்து நிலைத்திருத்தது அவர்கள் திருவடியைப் பற்றி அவர் உபதேசிக்கும் அர்த்தங்களைப் பற்றுதலோடு வாங்கிக் கொள்வதனால், அப் பிள்ளைகளை அப்பெரியார் போர அனுக்ரஹித்துப் பூர்ண கும்பங்களாக்கி, 'பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்' (पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेत्) என்ற பர்வாவில் கொண்டு திருத்துவர். இப்படி உபதேசிக்க இவ்வர்த்தம் மனத்தில் திடமாய் மறக்கப் படாமல் பதிந்திருப்பதோடு மேன்மேல் வளர்ந்து வருவதாலே மற்ற செல்வத்தைப் போலன்றி இந்த ஜ்ஞானச் செல்வம் நீங்காது நிறைந்து நிற்குமெனக் கடையடிகளில் கூறப்பெற்றது. ஆக மஹான்கள் இருக்குமிடம் மிக்க ஸுபிக்ஷம் பெறுமென்றபடி. (3)

எந்த கர்மாவும் பலனைக் கோராத போது கொடாது, அனேக பலன்கள் உள்ள கர்மாவை யனுஷ்டித்தால் பலனைக் கோராவிடில் எப்பலன் கிடைக்குமென்று சொல்வது? பலனைக் கோராத போது பகவத் ப்ரீதியே பலனாய் நிற்கும். ஆகவே இரண்டாம் பாசுரத்திலே நோன்பின் அங்கங்களைச் சொல்லி மூன்றாம் பாசுரத்திலே நம்பிக்கை யூட்டி நான்காம் பாசுரத்திலே நோன்பு நோற்கும் காலத்திலே பலனை ப்ரார்த்திக்கும் முறையை பணிக்கிறாள்.—

4. ஆழிமழைக்கண்ணா வொன்று நீ கைகரவேல்
ஆழியுட் புக்கு முகந்துகொடார்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம் போல்மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழவுலகினிற் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஆழி மழை—மண்டல வர்ஷத்திற்கு
கண்ணா—நிர்வாஹகனானவனே!
நீ ஒன்றும் | நீ சிறிதும் செய்கையில்
கைகரவேல் | வஞ்சனை செய்யாமலிருக்க வேண்டும்
நாங்களும்—இந்நிலையில் உள்ளநாங்களும்
மார்கழி நீராட—மார்கழி நீராட்டமென்ற நோன்பைச் செய்தபிறகு
மகிழ்ந்து—[நீ] மிகவும் களித்து
ஆழியுள்—கடலினுள்
புக்கு—புகுந்து
முகந்து கொடு—நீரை மொண்டுகொண்டு
ஆர்த்து—முழங்கி
ஏறி—நடுவானத்தில் ஏறி
ஊழி—கல்பகாலங்களுக்கு
முதல்வன்—முன்னேயிருந்து, காரணமான பகவானுடைய
உருவம் போல்—திருமேனியிற்போல்
மெய் கறுத்து—உனது உடலில் கருமை கொண்டவனாய்
பாழி—பருத்தும்
அம்—அழகாயுமுள்ள
தோள் உடை—திருத்தோள்களையுடைய
பற்பநாபன்—பத்மத்தை நாபியிலுடைய பெருமானது
கையில்—திருக்கைகளிருக்கும்
ஆழி போல்—திருச்சக்கரம் போல்
மின்னி—மின்னலிட்டு
வலம்புரி | பாஞ்சசன்னியத்தைப்
போல்—போலே
நின்று அதிர்ந்து—நிலைத்து கர்ஜித்து
தாழாதே—தாமதமின்றி (துளித் துளியாகப் பெய்யாமல்)
வாழ—நாடெல்லாம் வாழும்படி
சார்ங்கம் உதைத்த—சார்ங்கத்தாலே வேகமாய் விடப்பட்ட
சரம் மழை போல்—பாணவர்ஷம்போல்
உலகினில்—உலகம் அடங்கலும்
பெய்திடாய்—மழை பெய்து கொடுக்க வேணும்
ஏல் ஓர் எம்பாவாய்

நோன்பு நோற்பது ஒருவாறு இருக்கட்டும். பரமைகாந்திகள் பர்ஜன்ய தேவதையை ப்ரார்த்தித்தல் கூடுமோ வென வாராய்ந்து. 'அவர்கள் ப்ரார்த்தனை செய்யவில்லை மஹா பாகவதர்களான இவர்கள் மனத்தில் நினைத்தபோதே, "த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா: தஸ்மை தேவா பலிமாவஹந்தி' [द्रवन्ति दैत्याः प्रणमन्ति देवताः तस्मै देवा

बलिमावहन्ति] என்றபடி தேவாஸுரர்களெல்லோரும் பாகவதரிடம் பயந்திருப்பதாலே, பர்ஜந்ய தேவதையானவன் ஓடிவந்து இவர்கள் திருவடியில் தெண்டனிட்டு வாய் பொத்தி நின்று விநயத்துடன் வினவினன், 'என்ன நான் ஏவற்றெழில் செய்ய வேணு' மென்று, மேகமானது மழையைத் தவிர்த்து வேறென்றையு மளிக்க வியலாதாகையாலே கருத்தை யுணர்ந்த மேகம் கேட்காமலே செய்யலா மாகிலும், கிங்கரனென்ற பெயரைப் பெறுவதற் காகக் கேட்ட தென்ன வேண்டும். ஆகையால் அவனை நியமிக்கிறார்கள் என்பர் பலர். ஆகவே ரகுமஹாராஜன் கௌத்ஸ மஹர்ஷிக்குப் பணமளிக்கப் புறப்பட்ட போதே குபேரன் வர்ஷித்து விட்டாப்போலே இவர்கள் நோன்புக்குப் பேசிக் கொண்டிருக்கும் போதே பெய்துவிட்ட படியாலே நாங்களும் 'மார்கழி நீராட மகிழ்ந்து என்பதற்கு நாங்கள் மழையைக் கண்டு மகிழ்ந்து நீராடும் படியாக முன்னமே பெய்திடாய் எனவு முரை கொள் வர். அவன் வந்து கேட்டாலும், 'நாம் ஏன் தேவதாந்தரத்தை ஏவுவது? அவன் தானே செய்கிற' னென்று இருக்கக்கூடாதோ வென்னில்—பணிந்து கேட்ட போது பராங்முகரா யிருக்க விரும்பாமல் ஏவினதத்தனை. இப்படியாகில் நோன்பை நிறுத்திவிடலாமே; இடை யர்களும் கண்ணனோடு இவர்கள் கலக்காதபடி நோன்பை நிறுத்திவிடுவார்களே; ஆகை யால் நோன்புக்கு முன்னே மழைபெய்வது இவர்களுக்கு அநிஷ்டமாயிற்றே யென்னில், தேவதைகளே இவர்களிடம் அஞ்சி நடக்கும் போது இடையர் இடையூறு செய்ய விசைய வில்லை யென்ன வேண்டும். நோன்புக்கு முன்னரே மழை பெய்ந்தது, 'பனித்தலைவீழ' என மேலே கூறப்பட்ட தெனவும் கொள்வர்.

இவ் வர்த்தத்தை யிசையாமல், பாசுரத்தின் போக்கை மாற்றாமல் நோன்பைக் கண்டு மகிழ்ந்து பெய்யும்படி ப்ரார்த்தித்ததாகவே சில வாசார்யர்கள் பொருள் உரைப்பர். நோன்பை நோற்க விசைந்த போது ப்ரார்த்தனையும் செய்ய விசைய வேண்டுவதே. மேலும் இங்கே பர்ஜந்ய தேவதையே யென்றோ, மேகமே யென்றோ விளிக்காமல் ஆழி மழைக் கண்ணா என்று விலக்ஷணமான விளிச்சொல்லை ப்ரயோகித்ததின் பலனையும் பரா மரிக்க வேண்டும். மழை யாவன கண்ட வர்ஷம், மண்டல வர்ஷ மெனப் பலவாறுள்ளன அவற்றில் நாடெல்லாம் தீங்கின்றி செல்வம் நிறைவதற்கே மண்டல வர்ஷத்தைக் கூற ஆழிமழை யென்றது. அதற்கு நிர்வாஹகனே என்ற பொருளிலே கண்ணா என்கிறாள். கண்ணன் என்பது அத்யக்ஷன் என்கிற வடசொல்லின் பொருளை யுரைப்பது.

மழைக்கு நிர்வாஹகன் யார் என விசாரித்தபோது மேக வாஹனனென்று சொல்லப் படும் இந்த்ரன் நிர்வாஹகனென்பது முண்டு. கோவர்த்தநோத்தாரணத்திற்கு முன்னே மேகங்களை யேவி மழையா லழிக்க முயன்றவனவன் தானே, ஆனால் அங்கே கோவர்த்தன பூஜையிலே இடையரை ஏவும் போது கண்ணன் அருளிச்செய்தது வேறு. 'ரஜஸோத் பாதிதா: மேகா: வர்ஷந்த்யம்பூநி ஸர்வத: । ப்ரஜாஸ் தைரேவ ஸித்யந்தி மஹேந்த்ர: கிம் கரிஷ்யதி' (रजसोत्पादिता मेघाः वर्षन्त्यंबूनि सर्वतः । प्रजास्तैरेव सिध्यन्ति महेन्द्रः किं करिष्यति) என்று இந்திரனை விட்டு மேகத்தைப் பிரித்து இவ்வசேதநமான மேகம் மழை பெய்ய, மலை யும் காடும் புல்லும் நீரும் கொடுத்து நம்மைக் காப்பதாலே மலைக்கே பூஜை செய்ய வேண்டுமென்றார். அங்கே இந்த்ர பூஜையிலிருந்து விலக்கிக் கோவர்த்தன பூஜையிலே மிழிய வைத்த எம்பெருமானின் நோக்கென்ன வென்று பார்த்தபோது, 'நம்மையே பர தேவதையாகத் தெரிந்துள்ள டலரையும் சேர்த்துக் கொண்டு இவ்வாய்ப்பாடியிலுள்ளா ரெல்லோரும் ஒருப்பட்டு இப்படி தேவதாந்தர யஜநம் செய்வதை நாம் விலக்க வேண்டும். சேதநனான தேவேந்திரனைப் பூஜிக்காமல் அசேதனமான மலையைப் பூஜிக்க வேணுமென்று

நாம் சொன்னல் அவர்கள் அசேதனத்தை ஆராதிப்பதெங்ஙன மென்று ஆலோசித்து அம் மலைக்கு அந்தர்யாமியான எம்பெருமானை யாராதிக்கச் சொன்னதாகத் தெளிந்து கொள்வர்' என்றதே. இல்லையேல், கோவர்த்தன பூஜையும் தேவதாந்தரயஜநமாய் விடும். அது போல் இங்கும் மேகத்தை விளித்த இவர்களுக்கு மேகமான அசேதநத்திற்கு அந்தர்யாமியானவனை விளிப்பதிலேயே நோக்கு. அவ் வந்தர்யாமி தானும் நம் கண்ணனே என்ற கருத்தினலேயே வேறு பதத்தை விட்டுக் கண்ணு வென்னும் பதத்தையே ப்ரயோகித்தது. கீதையிலும், 'தபாம்யஹமஹம் வர்ஷம் நிக்ருஹ்ணும்யுத்ஸ்ருஜாமி ச' (तपाम्यहमहं वर्षं निगृह्णाम्युत्सृजामि च) எனத் தன்னை மழைக்கு நிர்வாஹகனக அருளினன். எம்பெருமானுக்கு திவ்யமங்கள விக்ரஹம் சரீரமானற் போலே மேகமு மொரு சரீர மென்பதையே, 'உருவம் போல் மெய்கறுத்து' இத்யாதியாலே வெளியிடுகிருள். மேகம் மழை பெய்வதென்ருல் எம்பெருமான் மழைபெய்கிரு னென்பதே இவர்களின் அத்யவஸாயம். மேகத்தின் மின்னல், முழக்கம், பெய்தல் எல்லாம் எம்பெருமான் மேனியிலிருந்து பெற்ற பல செயல்களே யென்றும் மேலே கொண்டார்கள்.

இப்படி மேகமே யென்ருே எம்பெருமானே என்ருே சொல்லாமல் ஆழி மழைக் கண்ணு வென்று பொதுவாகச் சொன்னதும், 'கோபர்கள் பர்ஜன்ய தேவதையை ப்ரார்த்தித்ததாக நினைத்துக் கொள்ளட்டும். நாம் நம் தேவதையையே கருத்திலே கொள்ளலா' மென்ற நோக்கத்தாலென்றதாயிற்று. ஆக இவர்களுக்கு ஐகாந்த்யத்திற்குக் குறையில்லை. உண்மையில், 'நாங்கள் எங்களுக்கு நாதர்களான பெரியோர்களுக்குப் படிந்து நிற்கும் ப்ராயத்திலே யுள்ளவர்களாய், அவர்களுக்கு ஏவல் தேவை செய்பவர்களாய் அவர்கள் மனேரதத்தை விண்ணப்பம் செய்வன மாத்திரமே யன்றி, நாங்கள் இதை ப்ரதானமாக நினைக்கவில்லை. ஆக எங்களுக்கு வேண்டியதில் ஒன்றும் நீ கைகரவேல். உன்னுடைய திருவுள்ளப்படி நீ வாழ வுலகினில் பெய்திடாய், அதையும் நாங்கள் உன் திருவுள்ளம் தெரிந்து இசைகிருே' மென்று பரமைகாந்தி நிலையில் இருந்து சொல்வதே அவர்கள் கருத்தில் உள்ளது. ஆக இந்த நோன்பு கோபர்களின் கருத்தைப் பின்பற்றின, கண்ணனின் திருவுள்ளத்திற்கிணங்கி இவர்கள் ஒருவகையாகச் செய்யப்படுவதெனல் வேண்டும்.

ஆழியுட்புக்கு—கடலோரத்தில் நிற்காமே நடுக்கடலில் புகுந்து நிரம்ப நீர் கொள்ள வேண்டும். முகந்து—முகத்தல் மொள்ளல். பஞ்சு போலுள்ள வெண்மேகம் கடலிற் சேர்ந்தவாறே நீர் அதில் அநாயாஸமாய் புகுந்து நிற்கும். ஆர்த்தேறி—முழக்கத்தையும், மண்டலவர்ஷ முண்டாம்படி நடுவானத்தில் ஏறினதையும் கண்டபோதே கோபர்கள் எங்களைக் கொண்டாடும்படியாக வேண்டும். ஊழி முதல்வன்—பிர்மன் கல்பந்தோறும் வெவ்வேறு ஜீவன். எல்லாக் கல்பங்களுக்கும் முதல் தனிவித்து ஸ்ரீமந்நாராயணனே. ஆக முதல்வன் உருவம் கருநிறமுள்ளதே. பிரமனுக்கும் நாராயணன் காரணமானபடியாலே பிரமன் ஊழி முதல்வனுகானென்பதை விளக்கப் பற்பநாப னென்ற பதத்தை ப்ரயோகித்தது. 'பத்மே திவ்யேர்க்கஸங்காசே நாப்யாமுத்பாத்ய மாமபி। ப்ராஜாபத்யம் த்வயா கர்ம ஸர்வம் மயி நிவேசிதம்' (पद्मे दिव्येर्कसंकाशे नाभ्या मुत्पाद्य मामपि । प्राजापत्यं त्वया कर्म सर्वं मयि निवेशितं) என்று பிரமன் சொன்னதை வால்மீகி மஹர்ஷி யனுவதித்தார். திருத்தோள்களின் ஸமீபத்திலே திருவாழி திருச்சங்குகள் திகழ்வதாலும், ஆயுதங்களின் வேகத்திற்குத் தோள்களின் வலியே மூலகாரண மாகையாலும் பாழியந்தோளுடை என்றது தங்கள் மனத்தைக் கவர்ந்துள்ளவை யிவை யெனத் தோற்ற அம் என்ருர்கள்.

கையில் என்பது கைகளிலென்றபடி. ஒவ்வோர் ஆயுதத்திலு மிதற்கு அந்வயமுண்டு. நாலு திருக்கைகளுக்கு நாலு ஆயுதங்களைக் கூறிவிட்டபடியாலே நாந்தகமென்ற வாளை விட்டுவிட்டதாம். வாழ—அல்பவ்ருஷ்டி போலே அதிவ்ருஷ்டியுமாகாதபடி வாழ்வதற்கு அனுகூலமாக, அந்தந்த நாட்டிற்குத் தக்கபடி. நாங்களும் இத்யாதியைத் தனி வாக்ய மாகப் பிரிப்பதும் பொருந்தும். நீ மழை பெய்திடாய்; நாங்களும் அங்ஙனம் நீ பெய்யும் படி மார்கழி நீராட மகிழ்ந்து முன் வந்தோ மென்றவாறு.

உட்பொருள்—கீழ்ப் பாசுரத்திலே, 'பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்' என்று சிறு பிள்ளைகள் பசுக்களைப் போன்ற பேராசிரியர்களைப் பற்றினால் பலனுண்டு என்றாள், இப்பாசுரத்திலே, 'ப்ரத்யக்ஷே குரவ: ஸ்துத்யா:' (प्रत्यक्षे गुरवः स्तुत्याः) என்றபடி ஆசார்யனைத் துதித்து ப்ரார்த்திப்பதை யருளுகிறாள். ஆழி ஸமுத்திரமே! ஜ்ஞான வைராக்ய காருண்ய கல்யாண குணக்கடலே! மழைக்கண்ணா— வாங்மய வர்ஷ நிர்வாஹகனே! ஸர்வ தந்த்ரஸ்வ தந்த்ரனே! ஒன்றும் நீ கைகரவேல்-ஒவ்வொரு விஷயத்திற்கும் தனித்தனியே சிஷ்ய ப்ரார்த்தனையை ப்ரதீக்ஷிக்காமல் 'க்ருபயா நிஸ்ஸ்ப்ருஹோ வதேத்' (कृपया निस्पृहो वदेत्) என்றபடி யருளவேணும், ச்வேதகேதுவுக்கு அவனது ஆசார்யன் வேதாந்தோப தேசத்தை விட்டது போல் விட வேண்டாம். ஆழியுள் உபநிஷத்-துக்த்தாப்தி என்ற பெரும்பாற்கடலிலே, புக்கு- அப்திர் லங்கித ஏவ வாநர படை: (अब्धिः लंघित एव वानरभटैः) என்றபடி யின்றி மந்தரமலை போலே தலஸ்ப்ருக்காகி முகந்து அதி சீக்கிரமாக விஷயத்தை க்ரஹிக்கும் விஜ்ஞான சக்தியாலே க்ரஹித்து கொடு' கொடுக்க வேணும் அல்லது, 'சிக்ஷாஸௌகர்ய துஷ்டிப்ரசித குருஜநாநுக்ரஹேத்தம், (शिक्षासौकर्य तुष्टि प्रचित गुरुजनानुग्रहेत्थं) என்றபடி எல்லாம் கொண்டு, ஆர்த்து 'ஆசா மதங்கஜகணாந்—கவிதார்க்கிகஸிம்ஹநாத:' (आशामतङ्गजगणान्-कवितार्किकसिंहनादः) என்ற படி கர்ஜித்து. ஏறி ஆசார்ய பீடத்திலே வீற்றிருந்து. ஊழி முதல்வன் இத்யாதி—அசித விசிஷ்டாந்'. 'க்ருபா காப்யுபஜாயதே' (अचिदविशिष्टान् कृपा काप्युपजायते) என்றபடி மஹா காருணிகனை எம்பெருமான் போலே, அநுக்ரஹிக்கப் பெற்றோமே என்று பூரித்த மேனி யாய் ஆழிபோல் மின்னி ஜ்ஞானஜ்யோதிஸ்ஸைப் பரப்பி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து - காதுக்கினியவையும் அசைக்க முடியாதவையுமான மொழிகளை பொழிந்து, சரமழை போல் பெய்திடாய், 'கோ வா சக்ஷுருதஞ்சயேத்'' (को वा चक्षुरुदञ्चयेत्) என்றபடிவாத வர்ஷம் செய்வீராக. நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்து-தேவரீர் உபதேசித்தப்படி ஆன்னிக க்ரந்தத்தை ஸேவித்து (தநுர் மாஸாராதனம் வரையிலாக) 'ஸ்நாநமூலா: க்ரியா: ஸர்வா: (स्नानमूलाः क्रियाः सर्वाः) என்றபடி ஸகல நித்யகர்மாநுஷ்டானம் செய்து உபாதாந காலத்தி லே உபாஸனம் பண்ணுமெங்களைப் பார்த்து மகிழ்ந்து என்றவாறு காண்க. (4)

நோன்பு நோற்பவர், 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' என்றெல்லாம் சொன்னபடி செய்வதும் பர்ஜன்ய தேவதையை ப்ரார்த்தித்தல் செய்வதும் ந்யாயமாகும்; பரமனடிபாடி, 'உய்யுமாறெண்ணி', உத்தமன் பேர்பாடி, என்று பரமனைப் பாடுவது போன்றன எதற்காக வென்று இடையர் முணுமுணுப்பதாக ஒருத்தி மிடைந்து சொல்ல, அதற்கு விடையளிக் கிறாள் மேற்பாசுரத்தில். எக்கார்யம் செய்யும்போதும் எம்பெருமானுடைய த்யாந கீர்த்தந ப்ரணாமங்கள் இல்லையாகில் எத்தனையோ இடையூறு தலைப்பட்டுக் கார்ய பூர்த்தியுமாகாது; பூர்த்தியானாலும் பலன் வருவது தாமதிக்கும். இவை யுண்டாகில் கடுக எல்லாம் கைகூடும்'

மோக்ஷ பர்யந்தமாயுள்ள எல்லாப் பலனும் சித்திக்கும்படி ஸகல பாபங்களையும் போக்கும் வல்லமை பொருந்தியவை யல்லவோ அவை யென்று விடையளிக்கிருளென்றபடி. அன்றி, கோபர்களெதிரே மேகத்தை மழைக்கு யாசித்து நீராட்டம் செய்து நோன்பு நடத்துவதைக் கீழே சொல்லி கூட்டம் கலைந்த பிறகு ஆயச்சிறுமிகள் கலந்து தனியே பேசும்போது அவர்களுக்கு முக்கிய நோக்கு இருக்கவேண்டும் வகையை விவரிக்கிருள். அதாவது பாற்கடலுள் பையத் துயின்ற பரமனென்றும் ஓங்கியுலகளந்த உத்தமனென்றும் எவனையோ சொன்னதாக நினைக்க வேண்டா. நாம் எவனோடு கட்டி யணைந்து களிக்க மனம் கொண்டிருக்கிறோமோ, அந்த மாயன் மணிவண்ணன் தாமோதரனையே. அவனை முக்கரணங்களால் ஆராதிப்பது இந்நோன்புக்காகவும் மழைக்காகவுமே யன்று; ஸம்ஸாரமூலங்களான ஸகல பாபங்களையும் போக்கி மோக்ஷம்பெற்று அழிவிலா ஆட்செய்கையைப் பெறுவதற்கே என்கிருளென்றபடி. அன்றி, இடையர்களெதிரே பகிரங்கமான இந்த இரஹஸ்யத்தைச் சொல்ல வியலாமல் ஒருத்தியை யழைத்து மெதுவாகச் சொல்லி இதை எல்லாரு மறியும்படி பிறகு ஏகாந்தத்தில் செப்பு என்கிரு ளெனவு மாம்.

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர்குலத்தினில் தோன்று மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கஞ் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவா நின்றனவும்
தீயினிற் றூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

மாயனை—மாயையுள்ளவனும்,
மன்னு—எம்பெருமான் நிலைத்திருக்கும்
வடமதுரை—வடதிக்கிலுள்ள மதுரை நகருக்கு
மைந்தனை—தலைவனும்
தூய—பரிசுத்தமாய்
பெரு—மிகவதிகமான
நீர்—தீர்த்தமுள்ள
யமுனை—யமுநாநதியின்
துறைவனை—துறையைச் சேர்ந்தவனும்,
ஆயர் குலத்தினில்—இடையர்களின் குலத்திலே
தோன்றும்—ஆவிர்பவித்த
அணி விளக்கை—அழகிய விளக்கும்
தாயை-வளர்க்கும் தாயான அசோதையையும்

குடல் விளக்கம் செய்த தாமோதரனை	மணிவயிறு வாய்த்த வளாகப்புகழ் பெறச் செய்ததாமோதரனென்ற பேர் கொண்டவனுமான கண்ணனை

நாம் வந்து—நாம் வந்து
தூயோமாய்—பரிசுத்தர்களாய்
தூமலர்—பரிசுத்தங்களான புஷ்பங்களை (நம் கைகளால்)
தூவி—ஸமர்ப்பித்து
தொழுது—வணங்கி
வாயினுல் பாடி—வாக்கைக் கொண்டு கானம் செய்து
மனத்தினுல் சிந்திக்க—மனத்தைக் கொண்டு த்யாநம் செய்தால்
போய் பிழை உம்—(இப்படி செய்யத் தொடங்குவதற்கு முன் நாம்) செய்துள்ள பாபங்களும்

புகுதருவான் நின்றன பிழை உம்	இனி நம்மை யண்டுவதற்காக நிற்கும் பாபங்களும்

தீயினில் தூசு ஆகும்—நெருப்பில் பஞ்சு போலாய் விடும்

எம் பாவாய் செப்பு ஏல் ஓர்	எமது தோழியே! எல்லோர்க்கும் இதைச் சொல்; ஏற்றுக் கொள்; அறி.

மாயனை—மாயையாவது மூலப்ரக்ருதியு மாம்; ஸங்கல்பாதி ஜ்ஞானமுமாம். 'மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் மாயிநம் து மஹேச்வரம்', 'ஸம்பவாம்யாத்மமாயயா' ("मायां तु प्रकृतिं विद्यात् मायिनं तु महेश्वरं,'' संभवाम्यात्ममायया) என்றவாறு காண்க. மூலப்ரக்ருதிக்கு நியாமகனை நாராயணன் ஸங்கல்பவிசேஷத்தாலே ஸகலதேவதைகளையும் அநுக்ரஹிக்கப் பாற்கடலில் அவதரித்துப் பிறகு வாமநனாய்த் தோன்றி ஓங்கியுலகளந்து தன் மாயையை யுணர்த்தினவன். இப்போது கண்ணனுயவதரிப்பதற்கு முன்னரும் மாயையை, தேவகியின் வயிற்றினின்று உரோஹிணியின் வயிற்றினுள் கர்ப்பத்தைச் சேர்த்து அசோதையின் பெண்ணாகப் பிறக்க ஏவினனென்றபடி. மாயையாவது ஆச்சரியத்தை விளைவிக்கும் கருவி. மாயனை இத்யாதிகளான அடைமொழிகள் கண்ணனின் அவதார வரலாற்றை அடைவாகச் சொல்லுகிறன வென நோக்குக.

மன்னு — எம்பெருமானுக்கு வெகு காலமாகவே வாஸஸ்த்தானமாயிருப்பதாலே அவன் மன்னுமிடம் அது. வாமனனாய் மாவலியிடம் சொல்வதற்கு முன் ஸித்தாச்ரமத்தில் அவன் தவம்புரிந்திருந்தானே, அதுவும் இவ்வடமதுரையிலென்கிறனர். சத்ருக்னன் லவணாசுரனைத் தொலைத்து மதுரையை மாநகராக்கி மன்னியிருந்தது ஸ்பஷ்டமானதே ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் த்ருவோபாக்யானத்திலே — "மதுஸம்ஜ்ஞம் மஹாபுண்யம் ஜகாம யமுநாதடம் । புநச்ச மதுஸம்ஜ்ஞேந தைத்யேநாதிஷ்டிதம் யத: ॥ ததோ மதுவநம் நாம்நா க்யாதமத்ர மஹீதலே । ஹத்வா ச லவணம் ரக்ஷோ மதுபுத்ரம் மஹாபலம் ॥ சத்ருக்நோ மதுராந்நாம புரீம் யத்ர சகார வை । யத்ர வை தேவதேவஸ்ய ஸாந்நித்யம் ஹரிமேதஸா: । ஸர்வ பாபஹரே தஸ்மிந் தபஸ்தீர்த்தே சகார ஸ:"

मधुसंज्ञं महापुण्यं जगाम यमुनातटम् । पुनश्च मधुसंज्ञेन दैत्येनाधिष्ठितं यतः ।।

ततो मधुवनं नाम्ना ख्यातमत्र महीतले । हत्वा च लवणं रक्षो मधुपुत्रं महाबलम् ।।

शत्रुघ्नो मधुरान्नाम पुरीं यत्र चकार वै । यत्र वै देवदेवस्य सान्निध्यं हरिमेधसाः ।

सर्वपापहरे तस्मिन् तपस्तीर्थे चकार सः ।

என்று சத்ருக்னன் மதுரா நகரத்தை யமைத்ததும், அங்கு பகவத்ஸாந்நித்யம் எப்போதும் உண்டென்பதும் உரைக்கப்பட்டன.

ஆண்டாள் தென்திசையி லவதரித்தவள் தென்மதுரையைத் தள்ளி அம் மதுரையை யறிவிக்க வடமதுரை யென்னலாம். வடதேசத்திலுள்ள ஆய்ச்சிகள் வடமதுரை யெனக் கூடுமோ வென்னில், இரு மதுரைகள் இருப்பதை எல்லாவுலகு மறியுமாகில் தென் மதுரையை நீக்கி வடமதுரையைக் கொள்ள அங்ஙனம் கூறுவதில் குற்றமென் என்க. தென்மதுரையிலே எம்பெருமான் ஸேவை யளிப்பது சில காலத்திலுண்டு. ஆண்டாளின் தகப்பனாரான பெரியாழ்வார் பரதத்துவ நிர்ணயம் செய்தது தென்மதுரையிலே. அப்போழ்து பாண்டியராசனால் கொண்டாடப்பெற்று யானை மேல் அவர் ஊர்வல மெழுந்தருளும்போது எம்பெருமான் (கண்ணன்) கருடாருடனாய் ஸேவை யளித்தான். ஆழ்வாரும் திருப்பல்லாண்டு பாடி இனிதனுபவித்தருளினார். இவ் வரலாற்றை ஸ்ரீதேசிகன் தாமும் பிரபந்த சாரத்திலே யருளிச் செய்துள்ளார்—

பேரணிந்த வில்லிபுத்தூ ரானிதன்னில்
பெருஞ்சோதிதனித்தோன்றும் பெருமானே முன்
சீரணிந்த பாண்டியன் தன் னெஞ்சுதன்னில்
தியக்கற மால் பரத்துவத்தைத் திறமாய்ச்செப்பி
வாரணமேன் மதுரைவலம் வரவே வானின்
மால்கருடவாஹனனாய்த் தோன்ற வாழ்த்தும்' என்றவாறு.

இது ஆண்டாள் திருவுள்ளத்திலே மதுரை யென்னும்போதே நடமாடுவதொன்று. இங்ஙனமன்றி எப்பொழுதும் எம்பெருமானுடைய ஸாந்நித்யம் பெற்றதது என விளக்க மன்னு வடமதுரையென வருளினது. மைந்தனை மைந்தனுவான் தலைவன் அல்லது குமாரன் வட மதுரையில் தேவகீ வஸுதேவர்களுக்குக் குமரனாயவரித்தமை இங்கே கூறப்படுகிறது. இம்மல்லாண்டதிண்டோள் மணிவண்ணனே தென்மதுரையில் ஆழ்வாருக்கும் தோன்றி அவர் மைந்தனானான். பிறந்த போதே பெற்றோர் விலங்கை முறித்த மிடுக்குடையவனென்னவுமாம்.

தூய—யமுனைக்குப் பரிசுத்தியாவது, ஆழமாயிருப்பதாலே சலங்காதபடி தெளிந்திருத்தலும், இராமாவதாரத்திலே பராக்ரமத்தையும் காண்பித்துப் பரமதயாமூர்த்தியுமாயிருந்த எம்பெருமானுக்கு நடந்து செல்வதற்கு அனுகூலமாம்படி யமையாதே அணைகட்டிச் செல்லக் கேட்டுக் கொண்ட தன் கணவனான கடல் போலவும், ஸீதையை இராவணன் அபஹரித்துச் சென்றான் என்று இராமனிடம் சொல்லாமலே யிருந்த கோதாவரி நதியைப் போலவும் இராதே மதுரையினின்று வஸுதேவரால் கொண்டு வரப்படும் குழந்தையான கண்ணனுக்கு கடந்துபோக வியலும்படி கேட்காமலே வழிவிட்டதாலே தெரியவான மனசுத்தியுமாம். இது காளிந்தியான படியாலும் பாபத்தைப் போக்கும் சுத்தி இதற்குள்ள தென்க. களிந்தமலையின் பெண் காளிந்தி, கலியைக் கண்டிப்பதால் அம் மலை களிந்தனும். கண்ணன் வளர்ந்தேறி கோபிகளோடு தன்னிடம் ஜலக்ரீடை முதலியன செய்ய நினைக்கும்படி மஹாபாக்யம் பெற்றிருத்தலுமாம். பெருநீர்-யமுநாஞ்சாதிகம்பீராம் நாநாவர் தஜ்ஜஷர்குலாம்' (यमुनां चातिगंभीरां नानावर्तझषाकुलां) என்றபடி கங்கைக்கும் மேலாக ஆழமுள்ளது இது. யமுனைத் துறைவனை-கண்ணன் வளரும் காலத்திலே யமுனையில் பஞ்சலட்சம் குடியிலுள்ள கன்னிகளெல்லாம் சேர்ந்திறங்கும்படி பல துறைகள் ஏற்பட்டன. கண்ணன் வஸுதேவரால் கொண்டுபோகப் பட்டபோது யமுனை இக் கரையிலிருந்து அக்கரை வரையில் துறையாகவேயிருந்தது' துறையென்று வழிக்கும் பெயர். யமுனையாகிற வழியை யுடையவன்; யமுனை வழியாகச் சென்றவனென்றபடி.

ஆயர்குலத்தினில் தோன்றும்—அரசகுலத்திலே பிறந்து ஆயர் குலத்திலே தோன்றினான். மதுரையிலே இவன் பிறந்தது யாருக்கும் தெரியாதபடியாயிற்று. தோன்றல் ஜநித்தல், ப்ராதுர்பவித்தல், பிறத்தல் எல்லாம் ஒன்றாகிலும் தோன்றும் என்றபோது பிற சேதநர்கள் பிறக்கும் வண்ணமின்றி அகர்மவச்யனாய் அவதரித்தமை தோற்றும். ஆகவே ஆயர்குலத்தினில் தோன்றினது பெருமைக்கிடமாயிற்று. யசோதையில்லத்திற்போலே ஒவ்வோரிடையர் வீட்டிலும்தோன்றினவன். அணி விளக்கை, இவன் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்த குலத்தினில் தோன்றுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு ப்ரகாசம் இவனுக்கேற்படுகிறது. விளக்குள்ள இடமடங்கலும் அதனால் ஒளியுற்றியிருப்பது போல் இவனால் அக்

குலத்திற்கு அழகும் ஏற்றமும். அணிவிளக்கை யெனப் பிரித்தல் மோனையின்பத்திற்கு இசைந்ததாம். இதற்கே மணி விளக்கே யென்ற பொருள் கூடுமாகை யாலே அங்ஙனம் சிலர் உரைத்ததத்தனை.

இப்படி ஆயர்குலத்தினில் தோன்றினவன் அங்கே தாமோதரனானமை சொல்லப் படுகிறது தாயை இத்யாதியால். ஆயர்குலத்தை உய்விக்கக் கருதி அவர்களில்லங்களிலே புகுந்து நெய், பால், தயிர், வெண்ணெய் முதலியன திருடித்திரிவது போன்ற இவன் செயல்களை அக்ரமமானவைகளாக நினைத்து அன்னையானவள் வயிற்றில் தழும்பேறும்படி கட்ட அங்ஙன் தாமோதரனாய் மூன்று வயிற்றுரேகைகளோடு இத்தழும்பும் ஒரு ரேகையாக வமைய, அதனைக் கண்டாரெல்லோரும் இவனையும் கட்டிவைக்கும்படி ஈச்வரத்தன்மையும், பாக்யமும் பெற்றுளேயென்று யசோதையும் புகழும்படியிருந்தது. தாய்க்கு அடங்கின பிள்ளையென்று, 'என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்'' என்றால் உண்மையில் இவனைப் பெற்ற தேவகியையும் புகழ்ந்ததாகும்; இது, அது தெரியாதாரின் பேச்சானதாலே யசோதையையும் புகழ்ந்ததாகும். இனி இங்ஙனமு முரையாம். தாயைக்குடல் விளக்கம் செய்கையாவது தாயைக் குறித்துக் தன் குடலை விளக்கினமை. அதாவது வயிற்றிலே கயிற்றைக் கட்டி, மண்ணையும், வெண்ணெயையும் தின்றாயா வென்றபோது, இல்லையென, வாயைக் காண்பியென, வாயை திறந்து வயிற்றினுள்ளே விச்வத்தை விளக்கினமை. விளக்கமாவது விளங்குதல்.

தூயோமாய் — ஸ்நானாதி நித்யகர்மங்களிலே காலாநுகுணமாகச் செய்ய வேண்டுவனவற்றை விடாமற் செய்தவர்களாய், நிஷித்தங்களைச் செய்ய நினையாதவராய், ப்ரஹ்மவித்துக்களினிடம் அபசாரப்படாதவர்களாய். அன்றி, ஸர்வேச்ரவனே ஸகலபல ப்ரதன்: மற்ற வுபாயங்களெல்லாம் அவனது அனுக்ரஹம் பெற விரகானதத்தனை யென்ற தெளிவுடையராய். உண்மையில் வேறு பலனில் நசை யற்றவராய், அவனே ப்ராபகனும் ப்ராப்யனும் என்ற புத்தியுடையராய். வந்து—எம்பெருமானுள்ள விடம் போய் என்றுமே வந்து என்றது அவனுள்ள விடமே தங்களுக்கு மிருக்கவேண்டிய இடமாகையாலாம். அன்றி, இங்கே பேசிக்கொண்டிருக்கும் நாம் இன்றிரவு வீட்டிற்குச் சென்று தூங்கி யெழுந்து விடியற்காலத்திலே சேரவேண்டு மிடத்தில் திரும்பவும் ஒன்றுசேர்ந்து என அதன் பொருளாம் நாம் — நாங்கள் என்றுமே நாம் என்றது இச்சிறுமிகள் தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ளுமது இப்பாசுரத்திற் கூறப்படுவதாலென்க. இனி இடையரைப் பார்த்துச் சொல்வதானாலும், ''நோன்பு நோற்பது நாங்கள் மட்டுமே யானாலும், அதிற் சேர்ந்துள்ள, 'பரமனடிபாடி; உய்யுமாறெண்ணி' என்றவை போன்ற செயல்கள் நாமெல்லோரும் செய்யத்தக்கவை'' எனச் சொன்னதாகும்.

'தூமலர்தூவி' என்றதே ஓதப்படும் பாடம். 'தூமலர்கள் தூய்' என்ற பாடமும் இருப்பதாகச் சிலர் கூறுவர். தூ=சுத்தமான. சுத்தியாவது — 'இவை ஆலயங்களில் அர்ச்சனைக்கு ஆமவை; இவை இல்லங்களில், நன்மணமுள்ளவையே தக்கவை; உக்ர கந்தமுள்ளவையும் மணமற்றவையும் தகாதவை. நாற்சந்தி, ச்மசானம் முதலானவிடங்களிலே விளைந்தவை யாகா. தன் தோட்டத்தில் உண்டாகத் தன் கையால். ஸ்நானாதிகளுக்குப் பிறகு உபாதான காலத்திலே பறிக்கப்பட வேண்டும்' என்றவாறுள்ள விதிநிஷேதங்களைக் கண்டு சாஸ்திரப்படி சேகரிக்கப்படுகை. மலர்—மலரும் தருவாயிலில்லாதவை மலர்ந்து

விழுந்தவை போலேவே உபயோகம் பெரு. தூவுதல்=ஸமர்ப்பித்தல். அன்றி, திருமேனி யடங்கலும் புஷ்பத்தால் அலங்கரித்துப் புஷ்பாஞ்சலி ஸமர்ப்பிப்பதும், சோபாநாஷ தையைப் போல் புஷ்பங்களை யவன்மேல் எங்கும் தெளித்தலுமாம். வாயினால் பாடி — பாடுவது வாயினாலேயென்பது வ்யக்தமாயிருக்க, வாயினாலென்றது வாய் படைத்ததற்குப் பலன் இதுவே யென்கைக்காக. தாறுமாறின்றி பாடுவதைக் குறிக்கவுமாம். இவ்வாறு மேலேயும் காண்க. இனி ஏதேனும் வாத்யத்தையும். யந்திரத்தையும் கொண்டு பாடிவிட்டு வாய்க்கு வேறு வேலையைக் கொள்ளலாகாதென்னவுமாம்-- பாடி ஸங்கீர்த்தனமே யமையு மாகிலும் இசையோடு சேரில் இறைவன் விரைவில் வசமாகிறுனென்க. 'வேதாநாம் ஸாமவேதோஸ்மி' (वेदानां सामवेदोऽस्मि) என்றவனுக்கு இசையில் இழிவது இயல்பு. குழலூதும் கண்ணன் இதனால் அதிகம் களிப்பதாம்—சிந்திக்க, சிந்தனையாவது ப்ரபத்தி யுமாம். பக்தியுமாம். தூவி தொழுவதும் பாடுவதும் பக்திக்கு ஸாதனமாயுமிருக்கும்; பக்தியின் பெருக்குமாம். அவற்றில் பெருக்கு (பரிவாஹம்) சிந்தனைக்குப் பின்பட்ட தாகிலும் ஸாதனமாயுள்ளது. முன்னுள்ளதாலே சிந்தனைக்கு முன்னரே மெய்யின் செய லும் வாக்கின் செயலும் சொல்லப் பெற்றன. இங்கு சிந்திக்க என்பதற்கு, 'நான் தூவித் தொழவேண்டுமென்று சிந்திக்க எனப் பொருளன்று. அதுவாகில் தூவித் தொழுவதற்கு முன் பட்டதேயாம். பின் எதென்னில், சிந்திக்க=த்யானம் முதலியன செய்ய எனவாம். ஆகையால் மநோவாக் காயங்கள் என்ற அடைவிலே இவற்றைச்சொல்லவேண்டு மென்ற நிபந்தனை யில்லை யாகையாலே முறை மறந்து கூறினதாகக் கொள்ள வேண்டியதில்லை, மேலும் அறியாதாரும் சிறிது காலம் தூவித்தொழுதால் (ஸேவை செய்து வந்தால்) பெரியோரின் உபதேசம் முதலிய வீரகுளாலே ஸங்கீர்த்தநாதிகளிலே ஸாமர்த்தியம் ஸித்திக்கும். பிறகு வித்யையைப் பெற்றுச் சிந்தனையில் இழிந்திருப்பர் எனவும் தோன்ற இங்ஙன் ஒரு முறையை யாதரித்ததாம்.

மாயனை — சிந்திக்க. மம மாயா துரத்யயா (मम माया दुरत्यया) என்று தன்னை 'மாயிநம் து மஹேச்வரம்' (मायिनं तु महेश्वरं) என்னப்பட்ட மாயனைச் சொல்லி, 'மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே' (मामेव ये प्रपद्यन्तेमायामेतां तरन्ति ते) என்று தன்னை யாச்ரயித்தாலன்றி மாயையைக் கடக்கமுடியாதென்றான் கண்ணன். ஆக மாயி யைச் சொல்லும் ச்வேதாச்வதரோபநிஷத்து முழுமையும் கண்ணன் விஷயமேயாம், தாமோதரனை சிந்திக்க—தீயினில் தூசாகும். அவன் கட்டுப்பட்டதை நாம் சிந்திக்க நம் கட்டு விலகுகிறது. இதனை ஸ்ரீதேசிகன் யாதவாப்யுதயத்திலே யநுஸந்தித்தருளினர்—

''பத்தம் ததா பாவயதாம் முகுந்தம் அயத்நவிச்சேதிநி கர்மபந்தே ।
தபஸ்விநீ தத்க்ரதுநீதி ராத்யா ஸவ்ரீளமாரண்யகதாஸு தஸ்த்தௌ ।।''

(बद्धं तदा भावयतां मुकुन्दं अयत्नविच्छेदिनि कर्मबन्धे ।
तपस्विनी तत्क्रतुनीतिराद्या सव्रीलमारण्य कथासु तस्थौ ।।)

கட்ட வியன்று தோற்றுவித்த அவனது ஸௌலப்யாதி குணங்களை யனுபவிப்பார்க்கு அவன் ஸுலபனென இதன் கருத்தை யாராய்ந்தபோது உயர்ந்த 'தத்க்ரதுந்யாயம்' உபநிஷத்திலே அழியாது நிலைபெறுமென்று இதன் உட்கருத்தாம். இத் தாமோதரன் திருமேனியிலெங்கும் கட்டுண்டு நம் கட்டை நீக்குவது அர்ச்சாவதாரத்திலே, ஆக விப வத்தை விடச் சிறந்தது அர்ச்சை.

போயபிழையும் இத்யாதியான வாக்யமானது, 'தத்யதைஷீகாதூலம் அக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே' (तद्यथेषीकातूलं अग्नौ प्रोतं प्रदूयेत एवं हास्य सर्वे पाप्मानः प्रदूयन्ते) என்ற உபநிஷத் வாக்யத்திற்கு மொழிபெயர்ப்பு எனவறிக. இங்கே உபாயாநுஷ்டாநத்திற்கு முன் க்ஷணம் வரையில் அநாதி காலமாக இவன் செய்து வைத்த பாபங்களெல்லாம் பெருந்தீயில் பூர்ணமாக விழுந்த பஞ்சு போல் போய்விடுமென்றது உபநிஷத்து. இங்ஙனம் பின்னர் நேரும் பாபங்களும் இவனிடம் அண்டுவதில்லை யென்று வேறோர் உபநிஷத் வாக்யத்திலே ஓதப்பட்டுள்ளது. 'தத் யதா புஷ்கர பலாச ஆபோ ந ச்லிஷ்யந்தே ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே' (तद् यथा पुष्करपलाश आपो न श्लिष्यन्ते एवमेवंविदि पापं कर्म न श्लिष्यते) என்றது அது. முந்திய பாபங்கள் ஏற்கெனவே அண்டியவையாகையாலே அவைகளை அண்டாவெனச் சொல்லவியலாதாகை யாலே அவற்றின் விஷயத்திலே அச்லேஷம் என்னாமே விநாசம் சொன்னதாம். பின் புக விருப்பவைக்கு அச்லேஷமாம். இங்கே ஆண்டாள் இவ்விருவகைப் பாபங்களையும் சேர்த்துத் தீயினில் தூசாகும் என்றது குறிக்கத்தக்கது. தீயினிற் பட்ட பஞ்சு போல் சாம்பலாகு மென்றால், இது முன்னம் செய்த பாபங்களுக்கு மாத்திரமே பொருந்தும். ஆகவே அங்ஙனம் விவரிக்காமல் தீயினில் தூசாகும் என்றது. அதாவது—தீயும் தூசும் சேர்ந்திருக்கத் தகாதவை. ஆகவே இருக்கும் தூசு தீ பிறந்தவுடனே பஸ்மாய் விடுகிறது. முன்னமே தீயுள்ளவிடத்தில் தூசு உண்டாவதுமில்லை என்றபடியாம். மேலும் விநாச மாவது செய்து முடித்த பாபங்களின் சக்திக்கு அழிவு. அச்லேஷமாவது பின்னே நேரும் பாபங்களுக்கு அத்தகைய சக்தியே பிறக்காமை. தூசு என்ற சொல் வெறும் பஞ்சுக்குப் பெயராகமே சீலைக்குப் பெயராம். அப்போது வரும் பிழைகள் தக்த படம் போலாம். அதாவது மடித்து வைக்கப்பட்ட வஸ்திரம் தீக்கிரையானால் பார்வைக்கு மடிப்பு மடிப்பா கவே தோன்றினாலும் கார்யத்திற்கு உதவாது. அது போல் செய்யும் பாவச்செயல்கள் செயல்களாகத் தோன்றினாலும் பலனளிக்கும் சக்தியுள்ள செயல்கள் ஆகா என்றதாம்.

புகுதருவான் நின்றனவும் — தரு என்பது துணைவினை. அதற்குத் தனிப் பொருள் இல்லை. புகுவான் = புகுவதற்காக, வரப்போகும் பாபங்களை நின்றன வென்று இறந்த காலத்தாலே குறிப்பது எங்ஙனமெனில், பாபமாகப் பரிணமிக்கப்போமவை காரணரூபத் தாலே முன்னு மிருப்பதாலென்க. புகுவன என்னாவே புகுதருவானின்றன என்றதாலே வந்தே தீரும் பாபங்களென்றதாயிற்று. புத்தி பூர்வக பாபங்களாகில், கூடுமான வரையில் புத்தியை மாற்ற முயல்வதாலே பிறவாமற் போம். அபுத்தி பூர்வக மென்ற ப்ரமாதிக பாபம் வருவது தெரியாதபடி வந்தே தீருமென வருவித்து அவ்வித பாபங்களை மட்டும் கொள்ள இங்ஙனமருளினதாம். உடையவர் ஸ்ரீசரணாகதிகத்யத்திலே, 'செய்யப்பெற்றவை செய்யப்படப் போகின்றவை' என இரண்டு வகையாகவே பிரிக்காமே செய்யப்படு கின்றவை சில வென்று மருளிச் செய்தார். வீண் கற்பனைகளைக் கட்டி விரிக்காமல் உள்ள வற்றை உள்ளபடி யருள வடமொழியில் திருப்பாவையை மொழி பெயர்த்தருளின உப நிஷத் பாஷ்யகார ஸ்ரீரங்கராமாநுஜ முனிவரும், 'ப்ராசீநாநி பாபாநி க்ரியமாணாநி ச (प्राचीनानि पापानि क्रियमाणानि च) என உடையவரைப் பின்பற்றி யருளினார். இது நேர் மொழி பெயர்ப்பன்றென்பதை, பாசுரத்தில் இவர் வாக்யத்திலுள்ளபடி க்ருஞ்தாதுவின் பொருளைக் குறிக்கும் பதமில்லாமையைக் கொண்டே எளிதில் செய்யலாம். செய்யப்படு கின்றனவும் செய்யப்பட போமவை யுமான க்ரியைகளினின்று பிறக்கும் பிழைகள் புகு தருவான் என்றவையே யாகையாலே அங்ஙன் மொழி பெயர்த்ததாம். இங்கே பிழையும்

என்ற உம்மையானது உடையவர் பிரித்தருளின மற்றொரு வகையையும் குறிக்க வந்த தெனக் கொள்வதும் தகும். மேலும், 'முன்பின் பாபங்களிரண்டையும் குறிக்க, போய பிழையும் புகப்போகின்றனவும் என்னவேண்டி யிருக்க, 'புகுதருவானின்றனவும்' என வருளினதில் ஒரு விசேஷமிருக்கிறது. புகுதருவான் என்பது எதிர்கால ஸம்பந்தத்தைக் காண்பிக்கிறது. நின்றன வென்பது இறந்தகால ஸம்பந்தத்தைக் கூறுவதாம். ஆக ஓரம் சத்தாலே வரப்போவனவாயும் ஓரம்சத்தாலே இறந்தனவாயுமிருக்கும் பிழைகள் என்ற தாயிற்று. அவையாவன செய்யப்படும் பாபங்கள். நெடுநாள் நீடித்துச் செய்யப்படும் கஷாய பாகங்கள், கட்டடம் கட்டுதல் முதலியன போல் வெகுகாலம் நீடித்துச் செய்யும் பாபங்களு முள. அவற்றை தொடங்கின பிறகு முடிப்பதற்கு முன்னே நடுவே மோக்ஷோ பாய நிஷ்பத்தி யுண்டாகில் அப் பாபங்களை க்ரியமாண பாபங்கள் என்பர். இவற்றை கரிஷ்யமாண பாபங்களிற் சேர்க்கக் கூடுமாகிலும் இவ் வாசியை நமக்கு விளக்கவே ஆண்டாள் இங்ஙனம் அருளினதாம். இந்த விசேஷத்தைக் கருதியே திருப்பாவை ஜீயரென்று புகழப்படும் நம் உடையவர் வேதமோதின மட்டிலே நிற்காமல் கத்யத்திலே, 'க்ருதாந் க்ரியமாணாந், கரிஷ்யமாணாந்' (कृतान्, क्रियमाणान्, करिष्यमाणान्) எனப் பிரித்தருளினர் எனவும் வாதிக்கலாம். ஆகவே மொழி பெயர்ப்பைத் தூஷித்தது வீண் ஆக்ரஹத்தினாலும் வழியறியாமையாலு மென வறிக.

தூசாகும்—'சிந்திக்க' என்னப்பட்ட ப்ரம்மவித்யையால் இப் பாபங்களெல்லாம் தீயினில் தூசாகுமென்றது உண்மையா, அல்லது வித்யையை வெறுமனே ஸ்தோத்திரம் செய்தது மாத்திரமா? ஆகச் செய்த பாபங்களை அனுபவித்தே யாகவேண்டுமா என்ற விசாரம் சாரீரகமீமாம்ஸையிலே (4—1) செய்யப்பெற்றுள்ளது. வித்யைக்கு எல்லாப் பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாயிருக்குமான்மிய முண்டென்று நிர்ணயித்துள்ளது. ஆகிலும் அநாதிகாலமாய் ஜீவன் செய்துள்ள புண்யங்களை யனுபவித்தே தீர்க்க வேண்டுகையால் வித்யையினாலே மோக்ஷம் ஸித்திக்க வழியில்லை யென்னவேண்டாம். பாபம் போல் புண்யமும் போய்விடும். மோக்ஷத்தை யபேக்ஷிக்கும் அதிகாரிக்கு ஸ்வர்க்கமும் நரகத்திற் கொப்பானதாகையாலே புண்யமும் பாபம்போல் அநிஷ்டபலனை யளிப்பதாலே பாபமே யாம். ஆக இரு வினைகளும் தீரும். ஆகில் உபாய நிஷ்பத்தி பிறந்த அடுத்த க்ஷணத்திலே முமுக்ஷுவானவன் உயிர்விட வேண்டியிருக்குமே, புண்யங்களும் பாபங்களும் கழிந்துவிட்டனவே என வேண்டா. வினைகள் ஸஞ்சிதமென்னும், ப்ராரப்தமென்னும் இரு வகையாம். அவற்றின் ஸஞ்சிதம் மட்டுமே வித்யையாலே விலகும். ப்ராரப்தத்தை இவன் யநுபவித்தே தீரவேண்டும். இவையெல்லாம் வேதாந்த சாஸ்திரத்திலே விவரிக்கப் பட்டுள்ளன. ப்ராரப்தமும் கழிந்து பேரானந்தத்தைப் பெற விரைகின்றவன் ப்ரபத்தி வித்யையைத் தன் இஷ்டத்தைத் தெரிவித்து அனுஷ்டிக்க வேண்டுமென்பதும் ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளிலே தெளியலாகும்.

செப்பு—'தூவித்தொழுது, பாடி, சிந்திக்க' என்று முக்கரணங்களின் செயல்களைச் சொல்லியிருப்பதாலே மூன்றிலும் ஏவவேண்டி யிருக்க, 'செப்பு' என்றொன்றை மட்டும் சொன்னதென் என்னில், அர்ச்சனைக்கும் த்யானத்திற்கும் மந்த்ரம் முக்கியமாக வேண்டியிருத்தலால் அதை முன்னம் தெரிந்து கொள்ளவேண்டுமென்று அதில் ஆதரம் தோற்ற இங்ஙனமருளினதாம். அன்றி, பலரைப் பார்த்துச் சொல்லும்போது, செப்புங்கோள்' என்ன வேண்டியிருக்க, செப்பு என்றதாலே இது கீழ்ச்சொன்ன செயல்களிலொன்றைச்

சொன்னதன்று. பின் என் எனில், தோழிகளிலே ஒருத்தி, 'எதற்காக இந் நோன்பிலே எம்பெருமானைப் பற்றின பாடல் முதலியன, என வினவின போது அவற்றிற்குப் பலனைக் கூறி. இதை எல்லோருக்கும் செப்பு என்கிறுளென்னலும் தகும். இனி இப்பாட்டு ஒருத்தியைப் பார்த்துப் பணிக்கப்பெற்ற தென்பதைவிட எல்லோரையும் பார்த்து என்பதே அழகாமென்னில், அப்போது தூசாகும் என்றளவால் எல்லோரையும் பார்த்துச்சொன்னது முடிவுற்றதாம்; ஒவ்வொரு பாசுரத்திலும், 'ஏலேரெம்பாவாய்' என்று எந்தப் பாவையைப் பார்த்துச் சொன்னதோ, அந்த பாவையைக் குறித்தே இங்கே செப்பேலோரெம்பாவாய் என்றதென்க. அம்பரமே என்னும் பாசுரத்தில் ஏல் என்பதைவிட்டு ஓரெம்பாவாய் என்றும், கடைப்பாட்டில் எம்பாவாய் என்றிவ்வளவு மட்டும் சொன்னதுபோல் இங்கே செப்பு என்று மூன்றும் ஏவல் வினையை யதிகமாகச் சேர்த்துச் சொன்னதாகக் கொள்க.

உட்பொருள் — முதல் நாலடிகளில் தத்துவமும், மேலீரடிகளில் ஹிதமும், கடையீரடிகளில் புருஷார்த்தமும் கூறப்பட்டுள்ளன. இப்படித் தத்துவ ஹித புருஷார்த்தங்களையே கூறுவதால் இப்பாசுரத்திற்கு வெளிப் பொருளைவிட உட்பொருள் வேறில்லை. முதற்பாசுரத்திலே திருவஷ்டாக்ஷரமும், இரண்டாம் பாசுரத்திலே த்வயமும், இப் பாசுரத்திலே, 'மாமேகம் சரணம் வ்ரஜ', 'அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' (मामेकं शरणं व्रज, अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि) என்ற சரம ரஹஸ்யமும் கருதப் பட்டுள்ளன வென்னலுமாம். கீழ் ஆழிமழைக்கண்ணு வென்னும் பாசுரத்திலே ஆசார்யனை சிஷ்யன் ஆச்ரயித்துத் துதித்து ப்ரார்த்திப்பது பணிக்கப் பெற்றதால் ஆசார்யன் சிஷ்யனுக்குச் செய்யும் உபதேசமுறை இங்கு விளக்கப்படுகிறது. இவ்வாறு பரதத்துவ பரமஹித பரமபுருஷார்த்தங்களை யுபதேசித்து விட்டு, இனி, 'நீயும் நல்ல பாத்ரம் நேர்ந்தபோது உலகத்தை உய்விப்பது பெரிதென நினைத்து உபதேசித்துவா' என்று செப்பு என்பதாலே ஆசார்யன் சிஷ்யனுக்கு உத்தரவிடுகிருரென்க. (5)

இப்படி ஐந்து பாசுரங்களாலே எல்லோரும் நோன்பு நோற்கப் புறப்பட வேண்டுமென்றும், நோன்பை இன்னபடி நோற்க வேண்டுமென்றும், நோற்ருல் மழைபெய்து சுபிக்ஷம் ஸித்திப்பது திண்ணமென்றும், அதற்காக நோற்கும் காலத்தில் இங்ஙனம் ப்ரார்த்தனை செய்யவேண்டும் என்றும், இதிலே எம்பெருமானை முக்காரணங்களாலும் விஷயீகரிப்பதால் நமக்குள்ள பாவமனைத்தும் போமென்றும் சொல்லி முடித்துக் கொண்டனர். பிறகு விடியற் காலத்திலே எல்லோரும் பாவைக்களம் புகுந்து கண்ணனிடம் பறை முதலியன பெற்று நீராடப் போகவேண்டுமென்றும், அப்போழ்து எல்லாக் கன்னிகளுமொன்று சேரவேண்டியிருப்பதால் அவரவர் வரும் வழியே யுள்ள வீடுகளில் கன்னிகள், கூடிக் கை கோத்துக் கண்ணனைப் பாடிவரும் தங்களோடு வந்து கலந்து கொள்ளாமற் போனுல் உட்புகுந்து எழுப்பி யழைத்து வரவேண்டுமென்றும் ஏற்படுத்திக்கொண்டனர். எல்லோரும் ஏன் சேர வேண்டுமென்னில், 'காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்' என்கிற கணக்கிலே அவனை யனுபவிக்கும்போதும் நினைக்கும்போதும் சோர்வும் மயக்கமும் மூர்ச்சையுமானுல் தெளிவிக்க ஸஹாயம் வேண்டுமே. மேலும், 'ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத', 'கச்சித் ஸ்வாதுக்ருதம் போஜ்யம் ஏகோ நாச்நாஸி ராகவ' (ரா. 2—100, 75) (एकः स्वादु न भुञ्जीत, कच्चित् स्वादुकृतं भोज्यं एको नाश्नासि राघव) என்றபடியும், 'கூடியிருந்து குளிர்ந்து' என்றபடியும் கருதி ஒன்று சேர வாசைப்பட்டனர். சேர்ந்து நோற்போமாகவென்று சொல்லிவிட்டு ஸமயத்தில் சிலரை விட்டால் தோழமையை யிழந்ததாமாகையாலும் விடாமலழைக்க வேண்டுமென்றனரென்றவாறு கூறுக.

6. புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும யோகிகளும்
மெள்ள வெழுந்த ரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

பிள்ளாய்—சிறு பெண்ணே!
புள்ளும்—பக்ஷிகளும்
சிலம்பின்—சப்தியா நின்றன
புள்—பக்ஷிகளுக்கு
அரையன்—அரசனான கருடனின்
கோயிலில்—ஆலயத்திலே
வெள்ளை—வெண்மையாயும்
விளி—அழைப்பதுமான
சங்கின்—சங்கத்தினுடைய
பேர் அரவம்—பெரும் சப்தத்தை (க்கூட)
கேட்டிலையோ—நீ கேட்க வில்லையோ
எழுந்திராய்—தூக்கம் விட்டெழுந்திருக்க வேணும்
பேய்—பேய்ச்சியான பூதனையின்
முலை—ஸ்தநத்திலிருந்த
நஞ்சு—விஷத்தை
உண்டு—அமுது செய்து
கள்ளம் சகடம்—கபடமாய் சகடமாக வந்த அசுரனின்
கலக்கு—அமைப்பு
அழிய—குலையும்படி
கால்—திருவடியை
ஓச்சி—உயரச் செலுத்தி
வெள்ளத்து—பாற்கடலின் நடுவில்
அரவில்—பாம்பின் (ஆதிசேஷனின்) மேல்
துயில்—நித்திரையிலே
அமர்ந்த—பொருந்தின
வித்தினை—காரண வஸ்துவை
முனிவர்களும்—மனனம் செய்பவரும்
யோகிகளும்—யோகம் செய்பவரும்
உள்ளத்து—ஹ்ருதயத்திலே
கொண்டு—த்யானித்து அசையாமல் அமர்த்தி
மெள்ள—மெதுவாக
எழுந்து—நித்ரையை விட்டுக் கிளம்பி
அரி என்ற—ஹரிர் ஹரிர் ஹரி: என்று சொன்ன
பேர் அரவம்—திருநாமத்தின் கோஷமானது
உள்ளம்—(எங்களது) மனத்திலே
புகுந்து—புக (அதனால்)
குளிர்ந்து—குளிர்ச்சி பெற்றுளோம்
ஏல் ஓர் எம் பாவாய்

புள்ளும்சிலம்பினகாண் — பக்ஷிகளை விட மனிதர்கள் பல வகைகளில் விவேகமுள்ளவர்களாயினும் காலத்தை யுணரும் தன்மை பக்ஷிகளுக்கே இயற்கையி லமைந்தது. அதுவின்றி, மனிதர் ஆஹாராதிகளிலே, இது கூடும் இது கூடாது என்று தாம், உபயோகித்த பிறகோ அல்லது பிறர் உபதேசிக்கக் கேட்டோ தெளியவேண்டுமே யல்லது கண்டமாத்திரத்திலே பரீக்ஷித்துக் கொள்ள இயலார். பக்ஷிகளும், பசுக்களும் புல் முதலியவற்றை முகந்து பார்த்தே கூடும் கூடாதெனக் கண்டுபிடித்துப் பெறுவதோ விடுவதோ செய்யும். சப்தங்களைச் சொல்லவும் கேட்கவும் சக்தியை அவற்றிற்கு அதிக மளிக்காத எம்பெருமான் அவற்றிற்கு இயற்கையி லமைந்துள்ள அத்புதமான விவேகம் அனேக முண்டு. ஆகவே அவை இப்பொழுது இன்னகாலம் வந்த தென்பதை நக்ஷத்திர ப்ரகாசத்தையும் பாராதபடி

பெரும் மாரிகாலத்திலும் கண்டு கொள்ளும். அதனால் புள் சிலம்பினதை ப்ரதானமாக எடுத்துரைத்தனர். புள்ளும் என்ற உம்மையானது நாங்கள் சப்திப்பது மாத்திர மில்லை; விவேகமுள்ள புட்களும் சப்தித்தன வென விளங்குகிறது. அன்றி, புள்ளும் சிலம்பின காண். உதயமான பிறகு பறக்க நினைக்கும் பக்ஷிகளே இவ்வளவு முன்னம் விழித்தெழுந் திருக்கும் போது, விவேகிகளான நாம் விடியற் காலத்திலே செய்ய வேண்டும் செயலுக்குக் கூட விழிக்காமலிருப்பதோ? இணையிணையாக வுள்ள பக்ஷிகளே பிரிவைப் பொறுத்து வெளி யிலே போகப் புறப்படும்போது, கண்ணனை விட்டுப் பிரிந்த நாம் அவனுடன் இணைவதற்குக் கூடப் புறப்படாமல் படுத்திருப்பதோ என்றபடி.

இன்னம் சில வடையாளங்கள் விடிந்ததற்குக் கூறப்படுகின்றன. ஏனெனில், உங்கள் சப்தத்தைக் கேட்டுப் பக்ஷிகளும் நித்திரை யின்றி சப்திக்கக்கூடும். இதனால் காலத்தைக் குறித்துக் கொள்ள வியலுமோ வென்றாள் அக் கன்னிகை. இப்படிக் கீழ்ச் சொன்னதை யவள் இசையாத போது வேறு குறி குறிப்பிட வேண்டியதா யிற்றென்பர். உண்மையில் அக் கன்னிகை யப்படிச் சொன்னாளா? சொன்னாளாகில் தூங்குவதாக வைத் தெழுப்பவது சேருமாவென்னில், நேரிற் சொன்னாளல்லள். ஒருக்கால் அங்ஙனம் நினைப் பாளோ என்று இவர்கள் நினைத்தனர். அல்லது இவர் தாமே முன் அடையாளம் அடை யாளமாகாதெனக் கருதித் தங்கள் மனதுக்குத் திருடமாகத் தோன்றின அடையாளத்தை ஆராய்ந்து மேலே கூறினரென்றவாறு கொள்க. முதலில் ஏற்பட்ட அடையாளத்தை முதலிற் கூறி, பின்னே ஏற்பட்ட பிற வடையாளங்களையும் பின்னே கூடினமட்டில் கூறின ரென்னலு மாம். அப்போது நன்கு விடிந்துவிட்ட தென நினைக்க வியலும்.

புள்ளரையன் கோயிலில் — புள்ளின் சப்தத்தைக் கீழே கூறினபோது புள்ளரையன் நினைவுக்கு வருவது ஸங்க மாகையாலே அத்த விஷயத்தை யெடுத்தறவிக்கின்றனர். நாம் கண்ணனை யெழுப்புகிற வண்ணம் புட்கள் சிலம்பி புள்ளரையனை யெழுப்பின. புள்ளரையன் தன் கோவான எம்பெருமானை யெழுப்ப நினைத்ததால் சங்கு ஊதப் பெற்றதென்னலாம் போலும். சங்கு ஊதுவது புள்ளரையன் எம்பெருமானை யெழுப்பும் பாவனையா லென்க. இங்கே புள்ளரையனின் கோ = ஸ்வாமி பகவான் அவனுடைய இல் = ஆலயம் அதில் என வுரைப்பர். கோயில் என்றதை ஒரே பதமாகக் கொள்ளாமே கோ இல் எனப் பிரித்தால் கோயில் என்ற யகரத்தை யெவ்வகையிலாவது நிர்வஹித்தாலும் கோயில்லில் என லகரம் இரட்டித்திருக்க வேண்டுமே யென்னில், பாவின் அமைப்புக்கிணங்க அது குறைந்திருக்கிற தென்க. கோயில் என்பது ஒரே பதமாகில் அதன் மேல் ஏழனுருபு சேர, 'கோயிலில்' என்றே நிற்கும். (கோயில் = தேவாலயம், அவனுடைய கோயிலென்றால் அவனாகிற தேவனின் ஆலய மென்றபடி. இதை, 'சிவபாகவதவத் ஸமரஸ:, என வடமொழியிலே சொல்வர் என்பதுமுண்டு.) ஆகில் கருடனுடைய ஆலய மென்றே தேற மென்னில், ஆகிலென்? அவனுக்கு ஆலயம்கூடாதா? கிடையாதா? அவனது ஆலயத்திலேயே எம் பெருமான் கோயிலுக்கு வருமவர்களையுங் கூட விளிக்க அந்தக் கருடனே அழைக்கும் வண்ணம் விளிச்சங்கு ஊதக்கூடும். புள்ளரையனுக்கும் பூஜிக்கத் தக்க கோயில் என்னவு மாம். இங்கே கோயிலில் என்னுமே கோயில் என்றே ஓதுவதுமுண்டு. அப்போது கோயி லினுடைய சங்கம் என அந்வயமாம். கோயிலில் என்ற பாடத்தில் கோயிலில் உண்டான பேரரவம் என்க. வெள்ளை—சங்கு வெண்மையாகவே எங்கு மிருப்பது மேலும் அதன் பேரரவமே இப்போது கூறப்படவேண்டும். ஆக வெண்மையைச் சொல்வது வீண் எனில்

காலத்தைக் குறிக்க வுண்டாம் ஏதேனும் பேரரவத்தை இக்காலத்திலே போல முக்காலத்திலும் (சங்கவேளே) சங்கோசை என்பதுண்டு. அங்ஙன்மின்றி உண்மை சங்கிது என விளக்கவாம். மேலும் அதன் வெண்மையிலுள்ள ஏற்றத்தாழ்வுக்கேற்ப அதன் சந்திலும் ஓசையிலும் பல வேறுபாடு இருக்கவும் கூடும். சங்கு தங்களுக்கு போக்யமா யிருந்தபடியாலே அதன் வெண்மையையும் ப்ரீதியால் அனுபவிக்கிருர்க ளென்னலுமாம். விளிசங்கு — சங்குகளில் அதிக சத்தமுண்டாம் சங்கைப் பொறுக்கி விளிப்பதற்கு அமைப்பர்கள். அப்படிப் பட்ட சங்கென்றதாலே பேரரவமிதெனத் தெளிவித்ததாம்.

பிள்ளாய்-பகவதநுபவத்திற்கு நீ புதியவளாகையாலே உனக்கு இப்படி நித்திரை நேர்ந்தது. இனிப் பிள்ளைத்தனத்தை விட்டுப் பழையவளாக ப்ரயத்னம் செய் என்றபடி.

எழுந்திருக்கத் தாமதித்தாயாகில் நீ ஒரு பெரும் பலனையிழந்த வளாவாய். எங்கள் மனம் குளிர்ந்த வண்ணம் உன் மனமும் குளிர வேண்டாமோ? தாமதித்தால் ஹரிர்ஹரிர் ஹரி: என்ற மதுரமான சொற்களைக்கேட்கலாகுமோ என்கிருர்கள் பேய்முலை யித்யாதியால். தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தபோது பேய்ச்சியெழுப்பினுள்; சகடாசுரனும் நலிய நினைத்தான். ஆக இவ்விரண்டையுமிங்கே சொன்னதாம். முலைநஞ்சு-முலையின் மேல் விஷத்தைத் தடவினது மட்டுமின்றி அதனுள்ளே பாலுக்குப் பதிலாக விஷத்தையே வைத்திருந்தனள். அல்லது பாலை விஷத்துடன் கலந்து வைத்தனள். உண்டு — 'ஸ்தந்யம் தத் விஷஸம்மிச்ரம் ரஸ்ய மாஸீத் ஜகத்குரோ:' (स्तन्यं तत् विषसंमिश्रं रस्यमासीत् जगद्गुरोः) என்றபடி அதனைப் பரம போக்யமாக உண்டானிவன். அதற்கு அவள் ப்ராணனைப் பாலுக்குச் சக்கரையைப்போல் துணையாக்கி யுண்டான். ஆகவே ப்ராணனைப் போக்கினதை ப்ரதானமாக கூறவில்லை. பால் ப்ரதானமே யன்றி சக்கரை ப்ரதான்மன்று. உண்கை ப்ரதானமே யன்றி உயிரழிக்கை ப்ரதானமன்று. அழியக்காலோச்சி — இவன் பசியால் அழுகிருப்போலே காலைத் தூக்கி உதைத்தழ, அக் கால் பட்ட மாத்திரத்திலே சகடக் கட்டுக்கோப்பு அழிந்தது.

வெள்ளத்து அரவில் துயிலமர்ந்த—இங்கே படுத்தவிடத்திலே பகைவர் புகுவதால் பாற்கடல் துர்க்கமாய் பாம்பரையன் பாதுகாப்பில் துயிலமர்ந்தான். பூதநா சகட ஸம்ஹாரம் செய்தபிறகு இவன் பாற்கடல்போய் பள்ளி கொள்ளவில்லையே; ஆக, 'உண்டு, ஓச்சி, வெள்ளத்தரவில் துயிலமர்ந்த' என்றது எங்ஙன் எனில், உண்டவனும் ஓச்சினவனுமான கண்ணனும் அங்கே பள்ளிகொண்டவனும் ஒருவனுகையாலும், இவை செய்த பிறகும் அங்கே பள்ளிகொண்டிருப்பதாலும் இங்ஙனம் கூற குறையில்லை. அன்றி, இங்கு உண்டு ஓச்சினவன் அக் களைப்புத் தீர அங்கே பள்ளிக்கொண்டான் போலுமென முனிவர்களின் பாவனையாம். பரமாத்மா ஒருவனுகிலும் மூர்த்தி வெவ்வேருனபடியாலே இந்த மூர்த்தியிலேற்பட்ட களைப்புக்கு அந்த மூர்த்தியிலே பரிஹாரம் கொள்ளக் கூடுமாவென்னில், உண்மையில் களைப்பில்லாதவன் களைப்பை யேறிட்டுக் கொண்டபடியிலே ஒரு மூர்த்தியிலே வந்ததற்கு மற்றெரு மூர்த்தியிலே பரிஹாரமும் கொள்வானென்க. ஆத்மாவொன்ருகையாலே இங்குள்ள ச்ரமம் அங்கும் தோற்றும். அங்குள்ள ஸுகம் இங்கும் தோற்றும். ஓச்சியென்பதை வினையெச்சமாக்காமே கருத்தாப் பொருளில் வரும் 'இ' விகுதி பெற்றதாகக் கொண்டு ஓச்சி = உயரச் செலுத்தினவனை எனவு முரைக்கலாம். ப்ரஜைகள் படும் துயரத்தைக் கண்ட பரமனுக்குண்டான தாபம் பாற்கடலில் நடுவெள்ளத்திலே நிரமப

குளிர்ந்த அரவணையிற் பள்ளிகொண்டபோதும் நன்கு நீங்காதிருக்கவே முழு நித்ரையற்றிருந்தான் போலும் பாற்கடலன்றுமே வெள்ளமென்றது கரையோரமின்றி கடல் நடுவே பள்ளிகொண்டதை யுணர்த்தவாம். இனி, வெள்ளத்தரவில் என்பதற்கு முன்பு வெள்ளத்திலே இருந்த அரவு இப்பொழுது 'அரவணையாய் ஆயரேறே' என்றபடி தொட்டிலிற் சேர்ந்துள்ளதெனவும் கருத்தாம். வெள்ளவென்றும் பாற்கடலென்றும் நந்தர் திருமாளிகையை நினைத்ததுமாம். அன்றி, ஒவ்வொருவரும் படுக்கப் போம்போது 'க்ஷீரஸாகரதரங்க சீகராஸார தாரகித சாருமூர்த்தயே, போகி போக சயநீய சாயிநே மாதவாய மதுவித்விஷே நம:' (क्षीरसागरतरङ्गशीकरासार तारकितचारुमूर्तये। भोगि भोग शयनीयशायिने माधवाय मधुविद्विषे नमः) என்றவாறு அநுஸந்திப்பதைக் குறிப்பதாமிது. ஆகப் பாற்கடல் பெருமானை] நினைத்து அவனே கண்ணனாக வந்ததையும் நினைத்தபோது கண்ணன் படுத்திருந்தே செய்த பூதநாஸம்ஹாராதிகளும் சேர்த்தனுஸந்திக்கப் பெற்றன வென்க.

கண்ணனுள்ள இடமெல்லாம் முனிவர்களும் யோகிகளும் குழாமாகக் கூடியிருப்பர். கோபர்களிலே பலரும் இந்த யோக்யதை பெற்றுத் தெரு தோறும் பல இல்லங்களில் இருப்பர். அவர்கள் உள்ளத்துக்கொண்டு—படுக்கையில் நித்ரை கொள்வதற்கு முன்னர் நன்கு த்யானித்தும், எழுந்திருக்கும் போது முன் த்யானித்தவனை மறுபடியும் சிந்தித்துமென்றபடி. இவ்விரு தசையைச் சொல்வதாம் முனிவர்களும், யோகிகளுமென்றது. யோகாப்யாஸம் செய்பவரும் மனனம் செய்பவருமாயிருந்து உள்ளத்துக்கொண்டு என்றபடி. 'முநீநாமப்யஹம் வ்யாஸ:' (मुनीनामप्यहं व्यासः) என்றவிடத்திலே கீதாபாஷ்யத்திலருளிச்செய்தபடி மனனம் செய்து பரமாத்மதத்துவத்தை இன்னபடியிருக்குமென்று நிஷ்கர்ஷித்துள்ளவர் முனிவரென்னலுமாம், முனிவர்களென்று த்யானம் பண்ணுமவரைச் சொல்லி யோகிகளென்று கர்மயோகாதி நிஷ்டரைச் சொல்வதுமாம். 'வைகுந்தத்தமரும் முனிவரும்' என்றது போல் நித்யர்களையும் முக்தர்களையும் பிரித்துச் சொன்னதுமாம். மெள்ள வெழுந்து—ப்ரஹ்லாதாழ்வானைப் பிதாவான இரணியன் பல துன்பங்களுக்கு ஆளாக்கிய போது மலையினின்று விழும் அவர் 'ஹ்ருதயேநோத்வஹந் ஹரிம்' (हृदयेनोद्वहन्हरिं) என்றபடி பகவானை ஹ்ருதயத்திலே வஹித்தது. தம் நினைவை யவனிடமே செலுத்தித் தம் உடலில் மனம் செல்லாதபடி செய்வதற்குமட்டுமன்றி, நம் உடல் படும் பாட்டில் உள்ளிருக்கும் அந்தர்யாமி மூர்த்திக்கு என்ன அவத்யமோ என அஞ்சி அவ்வெம்பெருமானை யசையாதபடி பாதுகாக்கவுமென்றாற் போலே, இவர்களும் விரைவிலெழுந்தால் வெள்ளத்தில் அவன் ததும்பும்படியாமென பயந்து உள்ளத்துக்கொண்டு மெள்ள வெழுந்தார்களென்றவாறு கொள்க. அரியென்ற—ஹரி என்ற திருநாமத்தோடு அவதரித்த எம்பெருமான் முதலையின் வாயிலகப்பட்ட மஹாபக்தனான கஜேந்த்ராழ்வானைக் காத்தருளினானென்பது (விஷ்ணு புராண) ஸ்ரீபாகவதாதிகளிலே விளக்கப்பட்டுள்ளது. அத் திருநாமம் கேட்டமாத்திரத்திலே உள்ள பாபங்களும் போம்; உள்ளமும் குளிரும். இவன் நித்ரையை யளித்து உடல் புலன்களின் ஆயாஸத்தை நீக்கி உடனே தானே நித்ரையையும் அபஹரித்தருளினவன் என்றும் நினைப்பர். பேரரவம் பெருங்கோஷமுமாம்; பேர், பெயராய் திருநாம ஸங்கீர்த்தன கோஷமுமாம். 'விளிசங்கின் பேரரவ' மென்று பெருங்கோஷத்தைச் சொன்னதாலே இங்கு இரண்டாவது பொருள் கொண்டது.

முதற் பாசுரத்திலே நாராயணனைக் கூறி, பிறகு அவன் பாற்கடலுள் பிரம்மாதிகளுக்கு அனுகூலமாகப் பள்ளிக்கொண்டதையும், அனைவரையும் அடியால் தொட்டு

அனுக்ரஹித்த அதிதிபுத்ராவதாரத்தையும், இந்த தேவலோகாவதாரத்திற்கு மேல் அந்த ரிஷிலோகத்திலே மேகத்திற்கு அந்தர்யாமியான வகையையும், பூவுலகில் மனிதர்க்கு மிகவும் வசமான விபவ விசேஷத்தையும் சொல்லி இப்பாசுரத்திலே ஹார்தனுள்பட பரவ்யூஹாதிகளான பஞ்சமூர்த்திகளையும் சேர்த்தனுஸந்தித்த அழகையும் அனுபவிக்க புள்ளரையின் கோயிலென அர்ச்சையும், காலோச்சியென விபவமும், வெள்ளத்தரவிலென வ்யூஹமும், வித்தினையென்று பரமும், உள்ளத்துக்கொண்டென்று ஹார்தனும், கூறப் பட்டது காண்க, பரரூபத்தினின்றே மற்ற ரூபங்களெல்லாம் பிறக்கின்றன வென்பது விஷ்ணுபுராணத்திலே வ்யக்தமானபடியாலும் அது வித்தாயிற்று.

உட்பொருள்—தூங்கும் தோழிகளை யெழுப்புவதற்கான இப்பத்துப் பாசுரங்களாலே திருமாலின் தொண்டிலீடுபட்ட ஆண்டாள், தன்னோடொத்த ஆழ்வார்கள் பதின்மருக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுவதாகச் சிலர் சொல்வர். ஸ்வாபதேசார்த்தம் சொல்லப் புறப் பட்ட பெரியவாச்சான்பிள்ளை இங்ஙன முரைக்காவிடிலும் இது சிலருக்கு அபிமதமாயிற்று ஆழ்வார்களை நித்ரையுற்றவராக நினைப்பதும், தனக்குப்பின் அவதரிக்கப் போகும் சில ஆழ்வார்களை அவர்களுக்கு முன்னே அவதரித்த ஆண்டாள் எழுப்புவதும் கூடுமோ வென் னில், ஆழ்வார்களைக் காட்டில் ஆண்டாளுக்கு பகவத் ப்ரேமரஸம் அதிகமானபடியாலும், இவள் ஸர்வ ஜ்ஞையாய் ஸாக்ஷாத் பூமிப்பிராட்டியின் அவதாரமாகையாலும் கூடுமென்ன வேண்டும். வானமாமலை ஜீயர் ஆழ்வார்களின் திருப்பள்ளியெழுச்சியை விவரித்து ஸ்வா பதேச வ்யாக்யான மிவற்றிற்கு இட்டிருக்கிறார். எம்பெருமான் முதல் எம்பெருமானார் வரையிலான பத்து ஆசார்யர்களை எழுப்புவதாகவும் கொள்வர். சிலர் பத்து இந்திரியங் களைப் பத்துப்பாசுரங்களாலே எழுப்புவதாகக் கொள்ளலாமென்பர். இது தகும், உட் பொருள் சொல்லும்போது ஒவ்வொரு பதத்திற்கும் அதில் ஸமந்வயம் செய்ய வேண்டு மென்பதில்லை, முடிந்தமட்டில் கொள்வது. இப்படி ஒரு பாசுரத்தோடு மற்றொரு பாசு ரத்தையும் ஸம்பந்தப்படுத்தாமல் ஆங்காங்கு தனித்தனியே தோன்றும் பல உட்பொருள் களையும் அவரவர் புத்திக்குப் புலப்படுமாறு பாரித்துக் கொள்வது. ஆகிலும் சாஸ்திரத் திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் சேராத ஏதேனும் பொருளை உட்பொருளாகக் கொள்ளல் கூடாது. ப்ரபந்தமியற்றியவரின் நிலையையும் நினைவையும் நிரூபித்தன்றோ உட்பொருள் உரைப்பது உசிதமாகும். இப்படிப் பல கருத்துக்கள் கூடுமாகிலும் முதலிலிருந்து கடைசி வரையில் கூடிய மட்டில் ஒட்டி வரும் ஒருபொருள் நெறியிலே நிற்பது நலமென வைத்தும் பெரும்பாலாகப் பாசுரங்களின் பதங்களின் பொருத்தத்தைப் பார்த்தும் நாமிங்கே முத லின்றே வேறு வகையில் உட்பொருள் வரைந்து வருகின்றனம்

(1) பரப்ரஹ்மாநுபவ மென்ற நீராட்டத்திலிழிந்தவர்க்கு நாராயண மந்த்ரமான திருவஷ்டாக்ஷரம் ப்ரதானம், (2) வையத்தில் வாழுமவர் பரமனடியைச் சொல்லும் த்வயத்தைப் பாடிப் பரமைகாந்திகளாய் உபாயாபாயங்களை விட்டு நடுநிலையில் நிற்பர். (3) மஹான்களை யாச்ரயிப்பார்க்கு மண்ணுலகில் குறை யேது, (4) ஆசிரியர்களைத் தொழுதேத்தி அர்த்தித்து அறிவு பெறவேண்டும். (5) அவர் தத்துவ ஹித புருஷார்த் தங்களை யுபதேசித்துத் திருத்தியருள்வர் எனக் கீழே கூறி,

'ஸந்தோஷார்த்தம் விப்ருசதி முஹு: ஸத்ப்ரத்யாத்மவித்யாம்
நித்யம் ப்ருதே நிசமயதி ச ஸ்வாது ஸுவ்யாஹ்ருதாநி ।
அங்கீகுர்வந் அநகலளிதாம் வ்ருத்திமா தேஹபாதாத்.'

(मन्तोवार्थं विमृशति मुहुः सद्भिः रथ्यात्मविद्यां नित्यं ब्रूते निशमयति च स्वादु सुव्याहृतानि ।
अङ्गीकुर्वन् अनघललितां वृत्तिमादेहपातात्)

என்று ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தபடி. வேதாந்த வித்யா விமர்சம் செய்து கொண்டு பஞ்சகால ப்ரக்ரியையான அனுஷ்டானத்தி லிழிந்து ப்ரபத்தி செய்து முடித்து அங்குப் போல் இங்கும் அவனனுபவமாகிற பேரின்பம் பெற்று வாழ வேணுமென்கிருள் இத் திருப்பாவையில். அதில் கீழில் ஆசார்யன் சிஷ்யனுக்குத் தத்துவ ஹித புருஷார்த்தங்களை யுபதேசித்து, 'நீயும் பிறர்க்கு இங்ஙனம் செப்பு; 'மச்சித்தா மத்கத ப்ராணு: போதயந்த; பரஸ்பரம். (मच्चित्ता मद्गत प्राणाः बोधयन्तः परस्परम्) கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச' (कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च) என்றபடி பிறர்க்குப் புதியன பழையன வெல்லாம் சொல்லியும் கேட்டும் களித்து வா' என நல் வார்த்தைகளையும் அருளினதாகக் குறிக்கப்பட்டதன்ரோ? அங்ஙனம் உபதேசம் பெற்ற சிஷ்யர்கள், 'தம் சிஷ்ய குரு ஸப்ரஹ்மசாரி சிஷ்டச்ரேயோர்த்திபி: அநஸூயுபி: அப்ப்யுபேயாத்' (तं शिष्यगुरु सब्रह्मचारिविशिष्ट श्रेयोर्थिभिः अनसूयुभिः अभ्युपेयात्) (ந்யாயதர்சனம். 4-2-48) என்றபடி சேர்ந்து மனனம் செய்ய வேண்டு மென நினைத்து வந்து சேராத சிலரை விரைந்தெழுப்புகிருர்கள். அதில் முதற்பாசுரம் அவரில் சிலரோ அல்லது பெரியோரோ பிள்ளையை யெழுப்புவதைப் பற்றிய தாகும் —

பிள்ளாய்! புள்ளும் சிலம்பின. சிறியவரும் தாழ்ந்த வகுப்பினரும் கூட ஒது கின்றனர். இங்ஙனம் தூண்டிவரும் மஹானின் மனையிலே அவர்களை யழைப்பவரின் சத்தம் அதற்கு முன் உண்டானது உன் காதிற் படவில்லையோ என்று புள்ளரையன் இத் யாதியின் பொருள். அல்லது. புள்ளரையன் கோயிலாவது பகவான் நித்யவாஸம் பண்ணும் திருமந்த்ரம். அதில் சங்கு ப்ரணவம். இன் = இனிய பேர் = நாராயணபதம். வெள்ளை = ஸத்துவகுணம். ஸாத்துவிகமான அம் மந்திரத்தின் பதங்களின் பொருளை விவரிக்கும் ரஹஸ்ய விசாரங்கள் காதிற்படவில்லையா என்றதாம். பேய் = மூல ப்ரகர்தி. அதன் முலை — புத்தியும் அஹங்காரமும். நஞ்சு = அவற்றினுல் வரும் தோஷங்கள். அவற்றைப் போக்கி, சகடம் = மனோரதம். 'ஸ்தேநம் மந: அந்ர்தவாதிநீ வாக்' (स्तेन मन. अनृतवादिनो वाक्) என்ற வேதத்தின்படி மனம் கள்ளத்தன முடையது. அதன் கலக்கழிப்பதாவது வைராக்ய வளர்ச்சி பெற்றிருத்தல். வெள்ளத்தரவு = ஸம்ஸார போக ப்ரவாஹத்தில் நேரும் பல பாடு கள். அவற்றில் துயிலமர்தலாவது அவ் விஷயத்திலே புத்தியின் போக்கின்மை. 'யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே:' (यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः) என்றபடி விஷயங்களை நினையாமலிருக்கை. அப்படியுள்ள வித்தினை = கூட ஸ்தனை ஆசார்யனை, உள்ளத்துக் கொண்டு = ப்ரீதியோடு அநுஸந்தித்து, சிஷ்யர்களான முனிவர் களும் யோகிகளும் மெள்ள வெழுந்து = ஸாவதாநமாக மெதுவாக ப்ரணமங்களைச் செய் தெழுந்து அரி = எங்களுடைய அஜ்ஞாநத்தை யப்புறப்படுத்தவேணு மென்று செய்யும் பேராவம் = தனியனைச் சொல்லும்போது பிறந்த கோஷம் உள்ளத்தைக் குளிரச் செய்கிறது என்றவாறும். (6)

அநுபவரஸ மறியாத பிள்ளையை யெழுப்பி மறுபடி வீதியிலே பாடப் போகின்றவர் களாய், அநுபவித்து ரஸிக்க அதிகாரம் பெற்றும் அவ்வநுபவத்தில் பட்டும் படாமலிருக் கும் பெண் ஒருத்தி வராமலிருக்க அவளை யறிவுடன் வரும்படி யழைக்கிருர்கள்: திருவாய்ப் பாடியில் பல வீதிகளிலுள்ள பெண்பிள்ளைகள் அங்கங்கே தனித்தனியாகத் திரளாகப் புறப்

பட்டுத் தங்கள் தங்கள் வழியில் வராத பெண்ணை யழைத்தார்களென்றும், ஒவ்வொரு திரள் ஒவ்வொரு தெருவிலே அழைத்த வகையை ஒவ்வொரு பாசுரத்தாலே உதாஹரித் தருளின ளென்றும் சில பாசுரங்களிலே கொள்ளலாமாகிற் கொள்க.

7. கீசுகீ சென்றெங்கு மானைச்சாத்தம் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர், மத்தினால்
ஓசை படுத்த தயிரரவங் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

பேய் பெண்ணே—மதிகெட்ட பெண்ணே!
எங்கும்—எல்லாவிடங்களிலும்
ஆனைச்சாத்தம்—வலியன்கள்
கலந்து—ஒன்றோடொன்று சேர்ந்து
கீசுகீசு என்று—கீச்சு, கீச்சு என்றே
பேசின பேச்சு அரவம் | பேசிக்கொண்ட பல பேச்சுக்களின் இரைச்சலை
கேட்டிலை ஓ—நீ கேட்கிரு யல்லையோ?
வாசம்—வாசனை திரவ்யங்களாலே
நறும்—நன் மணம் பெற்ற
குழல்—கூந்தல்களையுடைய
ஆய்ச்சியர்—கோபஸ்த்ரீகளால்,
காசும்—காசுமாலையும்
பிறப்பும்—பிறந்ததுமுதல் தரிக்கும் பல அணிகளும்
கலகலப்ப—கலகலவென்று ஒலிக்கும்படி
கை பேர்த்து—தம் கைகளை முன்னும் பின்னும் மேலும் கீழுமாக அசைத்து
மத்தினால் ஓசைபடுத்த | மத்தைக் கொண்டு ஓசையெழும்படி கடையப் பெற்ற
தயிர்—தயிரிலுண்டான
அரவம்—சத்தத்தை
கேட்டிலை ஓ—நீ கேட்கிறாயல்லையோ?
நாயகப் பெண் பிள்ளாய் | தலைமை வஹிக்கத் தகும் பெண்ணே!
நாராயணன்—நாராயணனது
மூர்த்தி—அவதாரமான
கேசவனை—கேசியைக் கொன்ற கண்ணனை
பாடவும்—பாடியுமிருந்ததாலே
நீ கேட்டே கிடத்தி ஓ | நீ அதை கேட்டுக் கொண்டே படுத்திருக்கிறாயோ?
தேசம் உடையாய்—உடல் பூரித்து ஒளி பெற்றவளே!
திற—திறப்பாயாக.
ஏல் ஓர் எம் பாவாய்.

படிப்படியாக விடிந்துவருவதால் அதற்குத் தகுந்தபடி அடையாளம் வெவ்வேறு கிறது. முன்னே புட்கள் தூக்கத்தை விட்டுச் சிலம்பினது மாத்திரம். இப்போது ஒன்றோடொன்று கலந்தாரவாரிக்கின்றன. கீசுகீசு — இன்னது சொல்லுகின்றனவென்று தெரியவில்லை. அவ்யக்தமதுரமாய் இயற்கையான ஒலியைச் செய்கின்றன ஆனைச்சாத்தங்கள். ஆனைச்சாத்தமென்று வலியனுக்கு பெயராம். செம்போத் தென்பாருமுண்டு. இது மலையாளத்தில் வழங்கிவரும் சொல்லென்பர். இவைகள் கீசுகீசென்றாலும் பொருளில்லா அரவமல்ல. பேசின பேச்சேயாகும்மிவை. எனெனில், கலந்து கூவுகின்றன. ஒன்று ஒன்றைச் சொல்வதும், மற்றொன்று அதற்கு மறுமொழி கூறுவதுமாகவுள்ளது.

ஸ்ரீமத்ராமாயணத்திலே கைகேசியின் தகப்பனுன கேகயராஜன் ப்ராணிகளின் சத்தத்திற்குப் பொருள் அறியுமாறு வரம் பெற்றுப் பள்ளியறையிலே ஒரு சமயம் ஒரு ஜந்துவின் சிறு சத்தத்தைச் செவியாலுணர்ந்து சுவடறிந்து சிரித்தானெனவுள்ளது. ஆகையால் இவற்றின் கீசு என்ற அரவமும் பொருள் உள்ளதே. ஒன்ருேடொன்று. 'விடிந்துவிட்டது. எழுந்திருங்கள். இரைக்குப் போவோம்' என்றன. கூட்டிலே விட்டுப் போகவேண்டும் குட்டிகளோடு குலாவுகின்றன. ஆணும் பெண்ணும் விட்டுப் பிரியவேண்டுமேயென்று விரஹம் ஸஹியாமே கட்டியணைந்து கலந்து பேசுகின்றன. 'எங்கே போகலாம், எப்போழ்து வரலாம். குட்டிகளுக்கு இரைக் கொடுக்க இடையில் வருவது யார்' என்றெல்லாம் பேசிக் கொள்ளுகின்றன. இது ஒன்றிரண்டு சத்தமாகில் காதிற்படாமலிருக்கலாம். எங்கும் கலந்து பேசுவதாலே பேராரவமாயிருக்கிறதே. ஓரிடத்தில்மட்டும் சத்தமாகில் வேறேதேனும் காரணமிருக்கலாம். 'வைதேஹி ரமஸே கச்சித் சித்ரகூடே மயா ஸஹ'(वैदेहि रमसे कच्चित्चित्रकूटे मया सह) என இராமன் ஸீதையோடு பேசினதுபோல் ஆணும் பெண்ணும் வேறு ஸமயத்திலும் பேசலாம். நடு நிசியிலும் பேசலாம். அங்ஙனம் ஓரிடத்திலுண்டாகாமே எங்குமுண்டான அரவமான போது விடியற்கால வரவமென்பது வெளிப்படை யாயிற்றே. இவற்றை நீ கேட்கவில்லையாகில் தூக்கம் அதிக மென்னல் வேண்டும். இவ்வளவு மதிகெட்டது பேய்தானுகும். 'எனக்கென்ன பக்ஷிகளின் பாஷை தெரியுமோ' என்னவேண்டா. ஸந்தர்ப்பத்தைக் கொண்டு பொருள் காணலாமே. கண்ணனேடு நாம் கலப்பதெப்போதெனக் கலவர மிருக்குமாகில் ஏதேனு மாண்பெண் சத்தமானுலும் அதற்குப் பொருள் புலப்படுமே. ஆக நீ அவனனுபவத்தில் ஊக்கமற்ற வொரு பேய்ப்பெண்தான். அரவம் கேட்டிலேயோ—பொருள் கிடக்கட்டும். சத்தம் கூட காதிற் படவில்லேயோ? இது பேய்த்தனம்—முரட்டுத் தூக்கமே யென்றபடி. ஸாத்துவிகப்ரக்ருதிகளல்லாதார்க்கு உதயகாலத்திலே உறக்கமுண்டாம். அசோகவனத்தில் ஸீதையைப் பயமுறுத்திக்கொண்டிருந்த ராக்ஷஸிகள் விடியற்காலத்திலே உறங்கிக் கிடந்தது காண்க. அதுபோல் நீ உறங்குவதால் உன்னையும் ஸாத்துவிக ப்ரக்ருதி யில்லையென்ன வேண்டும். அவர்கள். 'நித்ராவச முபாகதா:' (निद्रावशमुपागताः) என்னப்பட்டிருந்தாலும் ஹநுமான் ஸீதையோடு பேசினதைச் சிறிதாவது தெரிந்துகொண்டிருந்ததாக அங்கே ஏற்படுவதால் முரட்டுத் தூக்க மவர்களுக்கில்லை. ஆகவே 'யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா:' (यक्षरक्षांसि राजसाः) என்றபடி ராஜஸர்தன அரக்கரவர், 'ப்ரேதாந் பூதகணும்ச்சாந்யே' (प्रेतान् भूतगणांश्चान्ये) என்றபடி பூத ப்ரேத பிசாசர்களின் வகுப்பினிற் சேர்ந்த தாமஸ ப்ரக்ருதி நீ யாகையாலே உன்னை பேய்ப் பெண்ணே என்கிறன மென்றதாம்.

வீட்டிற்கு வெளியே எங்கோ பக்ஷிகள் சப்திப்பது ஒருக்கால் செவியிற் படாதொழியலாம். வீட்டிற்குள் உண்டாமது செவியிற்படாதோ. ஹரிர் ஹரி: என்ற சப்தம் கேட்டு ஆயர்பெண்டுகள் அழகாகத் தலைவாரிப் பின்னிப் பூ வணிந்து பல வணிகளும் பூண்டு, 'கண்ணன் வருவான், அவனை உவப்பிக்க வேண்டும்' என பேரவாவுடன் தயிரைக் கடையத் தொடங்கி. தயிர் கற்பாறை போலிருப்பதாலே அதில் மிக்க சத்தமுண்டாம்படி உளிவெட்டாக வெட்டி உள்ளே மத்தைப் பொதுத்துப் பொருத்திக் கயிற்றை இருகைகளாலும் மாறி மாறி வலித்திழுப்பதும் விடுவதுமாகக் கடையும்போது காசு முதலான கலன்களெல்லாம் கலகலவென்றுலிக்கின்றனவே. உன் காதில் விழவில்லேயோ யென்கிருள் காசும் இத்யாதியால். காசும் பிறப்பு மென்றவை கழுத்திலணியும் ஆபரணங்கள் அச்சுத்

தாலியும் ஆமைத்தாலியு மென்பர் பலர். சிற்ரெளி பெற்ற வளைகளும் பேரொளி பெற்ற வளைகளுமெனவமுரைப்பர் சிலர். பிறந்தது முதல் அணியுமினத்தில் சேர்ந்தது பிறப்பு; மற்றது காசு என்பதுமாம். வாச நறுங்குழல்—தூங்கியெழுந்து தயிர்கடையப் போகுமவர் கடையும் தயிரிலே கூந்தல் கலந்து விழாதபடி செவ்வனே வாரிப்பின்னி, இரவில் எடுத்துச் சேமித்துவைத்த பூங்கண்ணியு மணிந்து கொள்வது வழக்கம். இவர்கள் கண்ணனுக்குக் கண்ணேட்டமுண்டாம்படி யிருக்க நினைத்தும் இங்ஙனம் செய்வர்.

நாயகப்பெண்பிள்ளாய் — பல இடையர்களுக்கு நாயகனுனவனின் பெண்ணுனபடி யாலே உன் இல்லத்திலேயே பல மாதர் தயிர் கடைகின்றனரே யென்ற கருத்தா லிப்படி விளித்தது. அன்றி பாவைக்குப் புறப்படும் பெண்களிலே நீ நாயகமாயிருக்க வேண்டிய வளல்லையோ? முன்னே பேய்ப்பெண்ணே யென்றழைத்ததுகூட உன்னை வைய நினைத்த தன்று; உனக்கு உச்சாக முட்டுவதற்காகவே என்றதாம்.

தயிரரவம் ஓர் உள்ளே உண்டாவது கிடக்கட்டும். நாங்கள் உன்னைக் கிட்டிப் பாடி வருகிரேமே. இப்பொழுதாவது எழுந்திருக்கலாமே என்ரூர்கள் நாராயணன் இத்யாதி யால். இனி இதற்கு வேறு கருத்தும் கூடும். ஆயர்மாதர் கடையும்போது மௌனமாகக் கடைகிருரல்லர். கண்ணனை வாயாறப்பாடி வாழ்த்திக் கடைகின்றனரே. இவர்கள் கண்ணனை நினைக்காமற் கூட இருப்பதுண்டோ

விக்ரேதுகாமா கில கோபகன்யா முராரிபாதார்ப்பிதசித்தவ்ருத்தி: ।
தத்யாதிகம் மோஹவசா தவோசத் கோவிந்த தாமோதர மாதவேதி ॥

विक्रेतुकामा किल गोपकन्या मुरारिपादार्पितचित्तवृत्तिः ।
दध्यादिकं मोहवशादवोचत् गोविन्द दामोदर माधवेति ॥

என்றபடி தயிர் பால் நெய் விற்கும்போது நடுத்தெருவில் கூட நெய் பால் தயிர் என்பதற்குப் பதிலாக, 'கோவிந்தன் வேண்டுமோ, கோவிந்தன்', 'தாமோதரன் வாங்கவில்லையோ, தாமோதரன்', 'மாதவன் அன்னைமீர்! மாதவன்' என்று பிதற்றுவரே பெண்கள். கோவிந்தன் என்ன விலை? எந்தப் படியில் கொடுப்பா யென்பர் வாங்குவோர். உம் படியிலேயே கொள்ளலா மென்பர் விற்போர். இப்படித் தடுமாறும் குலத்திலுள்ள மாதர் கண்ணனைப் பாடி கடைவதே யெப்போது மிருக்க இதனை விட்டு நாம் காசு முதலிய வற்றின் கலகலத்தலும், தயிரரவமும், கேசவனைப் பாடுவது மான மூன்றில் இரண்டை மட்டும் சொன்னேமே. பாடுவதன்ரே அவற்றில் முக்கியமானது. ஏனெனில்,

'உத்காயதீநாமரவிந்தலோசநம் வ்ரஜாங்கநாநாம் திவமஸ்ப்ருசத் த்வநி: ।
தத்நச்ச நிர்மந்தன சப்தமிச்ரிதோ நிரஸ்யதே யேந திசாமமங்களம்''

उद्गायतीनामरविन्दलोचनं व्रजाङ्गनानां दिवमस्पृशत् ध्वनिः ।
दध्नश्च निर्मन्थनशब्दमिश्रितो निरस्यते येन दिशाममङ्गलम् ॥

என்றபடி வானுலகம் வரைக்கும் பரவும் பாட்டொலியை யல்லவோ நாம் பகர்ந்திருக்கத் வேணுமென்று நினைத்தார்கள். அவ்வளவு பெரும் சத்தத்தை இவள் கேட்காமலிருக்க முடியாது. விழிக்காமலு மிவள் இருக்க முடியாது. ஆக இவள் அதனைக் கேட்டு கேசவனிடத்தில் ஈடுபட்டு எழுந்திருக்க மாட்டாமே படுத்திருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார்கள். அப்போது தயிர் கடையும் மாதர்கள், 'நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ' என்றனரென்க. பாடவும்—என்ற உம்மையானது பாடிக் கொண்டிருக்கச் செய்தேயும் என்று விரோதமென்ற பொருளையிப்போது உணர்த்துவதன்று. கலகலத்தல், தயிரரவம் என்றவற்றோடு பாட்டுக்கு ஸமுச்சயத்தைச் சொல்லுவதாம். கேட்டே என்றதால் விழித்துக் கேட்டு அவ்வனுபவத்தில் விழுந்து எழுந்திருக்க மாட்டாமலிருப்பது விளக்கப்பெற்றது. கிடத்தியோ—பேய்ப் பெண்ணுன நீ, கேசிஸம்ஹாரம் செய்தான். அவ்வழகிய கேசங்கள் உடைய கண்ணன் என்று கேட்ட மாத்திரத்திலே,

'தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணும் ஸுகாவஹம் |
பபூவ ஹ்ர்ஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே' |

तं दृष्ट्वा शत्रुहन्तारं महर्षीणां सुखावहं । बभूव हृष्टा वैदेही भर्तारं परिषस्वजे ॥

என்ற கணக்கிலே பரமானந்தத்துடன் பலாத்கரித்துக் கட்டி யணைய புறப்படவேண்டிப்பிருக்க, கிடக்கிருயே! இதுவென்ன என்றதுமாம். கிடந்தாலும் உன் அனுபவம் அளவிட முடியாததென மகிழ்ந்து அவ்வநுபவத்தால் வந்த வெளிச் சிறப்பை வர்ணித்தனர் தேசமுடையாய் என்று. அன்றி, பேயைப் போல் உழைத்துப் பெண்களுக்கு நாயகமானவனென்று பேர் பெறத்தக்க தேசுடையவளே! உன்னுல் தானே நோன்பு நன்கு நடந்தாக வேண்டுமென்று விளிகளின் கருத்தாம்.

உட்பொருள்:— உபய வேதாந்த விமர்சத்திலிழிந்திருப்பாரை வர்ணித்து இதர சாஸ்திரங்களிலே சிறந்த ஜ்ஞான முள்ளவனை அங்ஙனமிருக்கத் தூண்டுவது இப் பாசுரம். பேசின பேச்சரவம்=திவ்யப்ரபந்தங்கள் போன்ற பாஷா ப்ரபந்தங்களைப் பலர்சேர்ந்து ஓதி வருகிருர்களே, கேட்டிலேயோ, அன்றி, பேச்சு, கதா, (कथा) அதாவது வாதம். கதையானது வாதம், ஜல்பம் விதண்டையென மூன்று விதமாம். அவற்றில் வாதமொன்றையே தத்துவம் தெளிய விரும்புவோர் இசைவர். மற்ற இரண்டும் பிறரை ஜெயிப்பதில் நோக்கமுள்ளாருக்கு வேண்டியவை. தர்ம சாஸ்திரங்களிலே, 'விப்ரம் நிர்ஜித்ய வாதத:' (विप्रं निर्जित्य वादतः) என்று அவை மறுக்கப்பட்டனவாகையாலே, வாதமொன்றே ஸந்தோஷமாய்க் கலந்து செய்யும் சர்ச்சையைச் சார்ந்ததாம். அதனை விளக்க இங்கே கலந்து என்னும் பதமாம். காசு=பணம், அந்தணர் மாடு, வேதம். பிறப்பு=அதனை மூலமாகக் கொண்டு பிறந்த ஸ்ம்ருதி இதிஹாஸ புராணதிகள். கைபேர்த்தல்=பூர்வபக்ஷம் ஸித்தாந்தமென்ற அந்தந்த பக்ஷங்களுக்குத் தகுந்தவாறு அவற்றை நிர்வகிப்பது. வாசநறுங்குழல்=ஆசார்யன் மூலமாகப்பெற்ற ஞானம். மத்தினலோசைபடுத்தல்=ப்ரவசநபர்யந்தமான மநநம், தர்க்கத்தாலே ஸ்தாபித்தல். தயிரரவம்=மீமாம்ஸாதி விமர்சம், இப்படி உபயவேதாந்த விமர்சம் செய்தாலேற்படும் நிஷ்கர்ஷம் என்னவெனில், நாராயணன் மூர்த்தி கேசவன் என்பதேயாம். க. ஈச என்ற பதங்களாலே சொல்லப்படும். பிரமன் ருத்ரன் என்றவர்க்கும் காரணமாய் த்ரிமூர்த்திகளிலே ப்ரதான மூர்த்தியாய் ஸர்வஸ்வாமியானவன் நாராயணனே என்றபடி.

ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்ய ச புந:புந: |
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா,
आलोड्य सर्वशास्त्राणि विचार्य च पुन:पुन: । इदमेकं सुनिष्पन्नं ध्येयो नारायणस्सदा ॥

'நாராயணனே நான்முகனைப் படைத்தான், நான்முகனும் தான்முகனுய்ச் சங்கரனைத் தான் படைத்தான்' என்றவற்றைக் காண்க. நாயகப்பெண்பிள்ளாய். தேசமுடையாய் பேய்ப்பெண்ணே என்ற விளிகளால் சிறந்த குலத்திற் பிறந்தும், ஸகல ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் கற்றுப் பிரஸித்தியும் பெற்றும் ப்ரதானமான வேதாந்த வித்யையிலே சிறந்த பரிசயம் பெருமலிருப்பாரோ. பயின்று மறந்தாலும் பேயென்பார்கள் என்றறிவித்து உத்ஸாஹ மூட்டுகின்றனரென்றவாருகுக. (7)

அறியாத பிள்ளையையும், அறிந்து மதி கெட்ட பெண்ணையும் எழுப்பி, ஆவல் இருந்தும் அசையாத பெண்ணை யழைக்கின்ருர்கள்—

8. கீழ்வானம் வெள்ளென்றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்ருரைப் போகாமற் காத்து, உன்னைக்
கூவுவான் வந்து நின்ருேம், கோது கலமுடைய
பாவாயெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவா வென்ருராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

கீழ்வானம்—கிழக்கிலுள்ள ஆகாசம்
வெள்ளென்று = வெளுத்து
எருமை—கறக்கும் எருமைகள்
சிறுவீடு—சிறுக விடப்பட்டதால்
மேய்வான்—(பனிப்புல்) மேய
பரந்தனகாண்—ஓடிப்போயின
போவான்—நீராடப்போவதற்காக
போகின்ருர்—கண்ணன் திருமாளிகை செல்லும்
மிக்கு உள்ள பிள்ளைகள் ஐ ஓம் | எங்களை யொழிய மற்ற பெண்களையும்
போகாமல் காத்து | நம்மை விட்டுப் போகாதபடி தடுத்து (நடுவே நிற்கவைத்து)
உன்னை கூவுவான்—உன்னை யழைப்பதற்காக
வந்து நின்ருேம்—உன் வாசலில் சேர்ந்து நின்றிருக்கிருேம்
கோதுகலம் உடைய பாவாய் | பேரவா பெற்றிருந்தும் பதுமை போன்றிருப்பவளே!

எழுந்திராய்—எழுந்திரு
நாம் பாடி—நாம் எம்பெருமானை வழியிற் பாடிக்கொண்டு
பறை கொண்டு—பறையை மேற்கொண்டு (பறை காரணமாக)
மாவாய் பிளந்தானை | குதிரையாகி வந்த கேசியினுடைய வாயைப் பிளந்தவனும்
மல்லரை—சாணூராதி மல்லர்களை
மாட்டிய—மாளச் செய்தவனுமான
தேவாதி தேவனை—ஸர்வதேவேச்வரனை
சென்று சேவித்தல் | அவன் உள்ள இடமணுகி வணங்கினுல்
ஆ ஆ—ஹா ஹா
என்று—எனக் கதறி
ஆராய்ந்து—தீர விசாரித்து
அருள்—அருள் செய்வான் அவன்
ஏல் ஓர் எம் பாவாய்

வெள்ளென்று—வெளுத்த வானம் சிவப்பதற்குள் ஸ்நானம் செய்ய வேண்டாமோ என்றபடி, எருமை இத்யாதியால் வேறு அடையாளமும் கூறப்படுகிறது. எதற்காக வென்னில், 'உங்கள் முகங்கள் திங்கள் போல் திகழ்வதால் நீங்கள் கிழக்கில் கண்ணோட்ட மாயிருந்தபோது முகநிலா அங்கே பட்டு அது வெளுத்தது என்று அவள் சொல்வதாக வைத்துக் கீழ்வானம் வெளுத்ததை விட்டு வேறு ஒன்று சொன்னார்களென்பர். முகநிலா கிழக்கில் பட்டு உங்கள் முகத்திலே ப்ரதிபலித்ததாலே கீழ்வானம் வெளுத்ததாக உங்களுக்குத் தோன்றுமெனச் சொன்னதாகச் சொல்வர் சிலர். ஏதேனுமொருபடி முன் சொன்னது நிலைக்காதபோது தான் மேலே மற்றோரடையாளம் சொல்லவேண்டு மென்கிற நிபந்தனையில்லை. வேண்டுமாகில் ஏதேனும் கொள்க. கீழ் திக்கைத் தவிர்த்து மற்ற இடங்களிலே மேகம் பரவிக் கீழ் திசையில் அதில்லையாகில் உண்மையான திங்களின் நிலாவே கீழ்வானம் வெளுக்கக் காரணமாகலாம்: கிழக்கே நோன்பு நோற்குமிடமாய் இருந்து அதற்காக அங்கே அமைத்த பலவகை விளக்குகளின் பேரொளியாலும் அத்திசை வெளுக்கக் கூடும். வெள்ளியைப் போன்றதேதேனும் வேறு நட்சத்திரம் எழுவதற்குச் சிறிது முன்னம் உண்டான ஒளியுமாகலாம். இனி கீழ் வானம் வெளுத்தது மட்டுமில்லை. அதற்கு மேலும் நாழிகையாய் விட்டதென்கிறார்கள் என்றும் சொல்லலாம். வெள்ளென்று—என்று = என்றது எனவுரைப்பர். இது வினைமுற்றாகாது; வினையெச்சமாம். வெள்ளெனல் = வெண்மையாதல். வெண்மையாகி என விதன் பொருள். இங்கே எச்சத்திரிபாய் வெண் மையாகவே என்ற பொருள் பெறும். ஆகையால், 'வெள்ளென்று' என்ற இடத்தில் வாக்யம் முடிவுபெறவில்லை. கீழ்வானம் வெளுத்து எருமைகள் பரந்தன என்று ஒரே வாக்யமாய் ஓரடையாளமாகவே உள்ளது. எருமைகள் விடப்பட்டபடியால் கீழ்வான வெண்மையிது விடியற்கால வெண்மையே யாமென்றதுமாம்.

எருமை சிறுவீடு—சிறுவிடு என்றவிடத்தில் சிறைவீடு என்ற பாடம் கொண்டு சிறையிலிருந்து விடுபட்டு எனவுரைப்பதுமுண்டு' சிறுவீடு = சிறு தோட்டங்களி லென்பர் சிலர். வீடு என்பதற்கு இல் என்னும் பொருள் இங்கே பொருந்தாது. ஆகையால் வீடு = விடுதல் சிறு வீடு = சிறிது விடுதல். அதாவது மாலைவரையில் வெளியில் வெகு தூரம் போய் மேய்வதற்காக விடுதல்போலன்றி, பால் கறப்பதற்கு முன் பனிப்புல் மேய்ந்து வந்தால் நன்றாகப் பால் தருமென்று பக்கங்களிலே சிறிது காலம் மேயவிடுதல். அங்ஙனம் விடப் பட்டதால் மேய்வான் பரந்தன வென்க. பசுக்கள் பனியுள்ளபோது புல்லை மேய்வது அரிது. எருமைகளுக்கு அது இஷ்டமாகையாலே எருமையைச் சொன்னதாம்.

போகின்றாரை என்றவிடத்திலுள்ள ஐ விகுதியைப் பிள்ளைகள் என்றதோடு சேர்க்க. போவான் போகின்றாறென்பதற்கு, நோன்புக்காக நதிக்கரை போவதற்க்காக அதற்கு முன் பாவைக்களம் போகின்றாரென வுரைத்தல் தகும். போவதையே பரமப்ரயோஜனமாக நினைத்துப் போகின்றவரெனவு முரைப்பர். காத்து—காத்தல் = தடுத்தல். கூவுவான்—இங்ஙனமாகில் எதுகைத் தொடைக்கு ஏற்காதென்று கூவான்' என ஓதுவர் சிலர். 'போதருகின்றேன்' என்றவிடத்தில் 'போதர்கின்றேன்' எனக் குறைத்துக் கொண்டது போல், 'கூவ்வான்' என விங்கே கொள்ளலு மாம்.

கோதுகல முடைய—இவளுக்கு நோன்பிலும், கண்ணனைக் காண் பதிலுமுள்ள அவாவைச் சொன்னபடி. பாவா யென்றது அவாவுக்குத் தக்க செயலின்றி பதுமை போல் படுத்திருக்கிறாயே என்று பரிஹஸிக்கவாம். விடியற்காலம் வந்த தென்ற போதே,

'பிள்ளைகளெல்லோரும் போய்ச் சேர்ந்துவிட்டார்களோ. நானில்லாமலே எல்லாம் பெற்ருய் விட்டதோ' என்று கோதுகல முடையளாய் பிரமித்துப் மோஹித்துப் பதுமை போலாய் விட்டாயே. அதற்காகவே மிக்குள்ள பிள்ளைகளும் காத்திருக்கிருர்களென்று உண்மை யுரைத்தோம். எழுந்திரு என்னவுமாம். அன்றி, பாவாய் என்றபோதே பதுமை போல் அழகான உன்னிடம் கண்ணனும் கோதுகலமுடையனு யிருக்கிருனென்பதைக் குறித்ததாம். ஆக இவருடைய கோதுகலம் கூறப்பெற்றது. கோதுகலமுடைய என்ப தற்கே கண்ணனின் கோதுகலத்திற்குக் கோசரமாயுள்ள என உரை செய்வது முண்டு.

பறை கொண்டு—சென்று சேவித்துப் பறை கொள்ளவேண்டுமாயிருக்க, 'பறை கொண்டு சென்று சேவித்து' என்பது சேராது. பறை கொள்வதற்கு முன்புபோல் பின்பும் சேவித்தல் உண்டானது பற்றி அங்ஙனம் கூறின தென்பதும் ஸ்ரவஸமாகாது. சென்று சேவித்த லென்பது முன்புள்ளதே யன்ருே வாகும் என்னில், தேவாதிதேவனைச் சென்று பறை கொண்டு சேவித்தால் என அந்வயம் கூறலாம். பறை கொண்டு—பறையைக் காரணமாகக் கொண்டு. பறைக்காக என்னலுமாம். பறைகொண்டு அவ்வளவோடு நிற்காமல் அவனதருகிற் பிறகும் சென்று நன்கீடுபட்டு சேவித்து என்னலுமாம். சென்று அவனையே ப்ராப்யமாக நினைத்து என்னவுமாம்.

மாவாய் பிளந்தானை—கேசி யென்ற அசுரன் குதிரை வடிவெடுத்துக் கண்ணனைக் கொல்ல கடைசியாக வந்தவன். அவன் நெருங்கினதும் கண்ணன் அக் குதிரையின் வாயில் தனது கையை வைத்து அவனது உடலில் தமது புஜம் முழுமையும் புகுவித்து புஜத்தைப் பருக்கவைத்து அதனுல் குதிரையின் வாய்முதல் முழு உடலும் பிளந்து போம்படி செய்து அவனை அழித்தா னென்றபடி. மல்லரை மாட்டிய —இரு மலை போலெதிர்ந்து வந்த இரு வரங்க மெரிசெய்தாய்' என்றபடி கம்ஸனு லழைக்கப்பெற்று மதுரை சென்று அங்கே பெரிய ரங்க ஸ்த்தலத்திலே பெரும் பர்வதாகாரர்களாய் வந்த சாணூர முஷ்டிகாதிகளான மல்லர்களை மாளவைத்தா னென்றபடி. முன் பேய்முலை நஞ்சுண்டதையும் சகடத்தைச் சாடினதையும் ஆய்ச்சிகள் அனுபவித்துச் சொன்னது பொருந்தும். மாவாய் பிளந்தது முதலான வ்ருத்தாந்தங்கள் இவர்கள் நோன்பு நோற்ருன பிறகு வெகுகாலம் கழித்து, கண்ணன் கோகுலத்தை விடும் ஸமயம் வந்தபோது நடந்தவை யாகையாலே, எங்ஙன மவர்களால் முன்னமே அனுஸந்திக்கப்படும்? ஆண்டாள் தனது நிலையிலே நின்று சொல் லுகிரு ளென்பதும் இந்த ப்ரபந்தத்தின் போக்குக்குப் பொருந்தாதே யென்னவேண்டா. எம்பெருமானை யாராதிக்கப் போகின்றவன்' 'தேவோ பூத்வா தேவம் யஜேத' (देवो भूत्वा देवं यजेत) என்றபடி தன்னைத் தேவனுகப் பாவிப்பதுண்டு. ஏனெனில், அங்ஙனம் தேவ ஸாம்யம் பெருதபோது அவனை யணுகத் தகுதி யற்றவனுனதால். பிரபுவினிடம் அணுகும் ஊழியர்கள் தகுந்த உயர்ந்த வேஷத்துடனிருந்தே அணுகுவது ப்ராப்தமானது. அது போல் தன்னைத் தனக்கு மேம்பட்ட மஹநீயர்களைப் போல் பாவித்துக்கொண்டு. தான் செய்யும் பூஜையை அம்மஹநீயர்களே செய்யும் பூஜையாக நினைத்தானுனல் எம்பெரு மான். அம்மஹநீயர்களிடம் வைக்கும் அபிமானத்தை இவனிடம் வைப்பான். ஆக ஆண்டாள் கண்ணனுடைய கடாக்ஷத்தைக் கடுகவும் சிறப்பாகவும் பெற நினைத்துத் தன்னை, முன் அவனது அன்புக்கு மிகவும் பாத்திரமா யிருந்த கோபஸ்திரீயாகவும் தன் தோழி களையும் அக்காலத்திய கோப ஸ்திரீகளாகவும் நினைத்து இப்ரபந்த மருளிச் செய்கிருளா கையாலே. முன்ன மிருந்த கோபஸ்திரீகள் இப்போது தானுகவும் தன் தோழிகளாகவு

மறு பிறவியாகப் பிறந்து கண்ணனை யிப்போது ஆராதிப்பதாக நினைத்திருப்பதால் இந்தக் காலத்திற்கு முன் நடந்த எல்லாச் செயல்களையும் சொல்வது தகும். இங்ஙனமே மேலே சில விடங்களிலும் கொள்க. இதனை முன்னமும் விவரித்துள்ளோம்.

தேவாதிதேவனை-'ஸஹஸ்ரஸ்தூணே த்ருட உக்ரே' (सहस्रस्थूणे दृढ उग्रे) என்று தொடங்கி' 'யத்ர தேவாநாமதிதேவ ஆஸ்தே' (यत्र देवाना मधिदेव आस्ते) என்ற தலவகார ச்ருதியை ச்ருதப்ரகாசிகையி லருளிச் செய்தார். தேவர்களாவார் பரமபதத்தில் பேரானந்தம் பெற்று விளங்கும் நித்யஸூரிகள். அவர்களுக்கு அதிதேவ னென்றபடி. 'மல்லரை மாட்டிய தேவாதிதேவனை' யென்றதாலே, ஸ்ரீபாகவதத்தில்' 'மல்லாநாமசநி' (मल्लानाम-शनिः) என்று தொடங்கி, 'தத்த்வம் பரம் யோகிநாம்' (तत्त्वं परं योगिनां) என்றதளவாகக் கூறினபடி அவரவர்களுக்குத் தக்கவாறு அவனளித்த காட்சியைக் குறித்ததாம். சென்று இவ்வளவு ஸமீபம் அவன் வந்த பிறகுகூட நமது கால் வீணாகாதபடி நாமும் அவனிடம் செல்லவேண்டாவோ வென்றபடி.

ஆ ஆ. ஹாஹா—இருதரம் கூறினது, வருத்தமும் தயையும் மிக வாயிருத்தலைக் குறிக்கவாம். அன்றி, நடுநிசியிலே புறப்பட்டு இத்தனை பனியிலே இப்பெண்கள் ஒன்று கூடி வரும்படி அந்தோ! அளவிலாத் துர்பிக்ஷ மென்றது தோற்ற முதலில் ஹா என்றது. இவர்கள் சென்று சேவிக்க நினைக்கிறார்கள். அவனோ, ஆ! இவர்கள் வரும் வரையில் தாமதித்தேனே என நினைக்கிறான். நம்மோடு இடைவிடாமற் சேர்ந்து ஸுகிக்கப் பெண்களாகப் பிறந்த இம் மஹாநுபாவிகள் இத்தனை நாள் நம்மோடு சேராதபடியாயிற்றே. இனி இவர்கள் நிச்சலும் நமக்கே யாட்செய்யும்படி யாகவேண்டு மென்றதையே தோற்ற மறுதரம் ஹா என்றதென்க. சிறிது காலம் பிரிந்திருந்தால் கூட, 'வயோ஽ஸ்யா ஹ்யதிவர்ததே' (वयोऽस्या ह्यतिवर्तते) என்கிறவ னல்லனோ அவன். அருள்—ஏலோரென்பதற்கு முன்னுள்ள பதத்தில் வாக்யம் முடியாதபோது தகுந்த பதத்தைச் சேர்த்துக் கொள்வதுண்டாகையாலே இங்கும். செய்வன் என்று சேர்த்துப் பொருள் கொள்க.

உட்பொருள் -இப்பாசுரத்திலே தன்னோடு கூட காலக்ஷேபம் செய்யும் அதிகாரியை ஆசாரியனிடம் வந்து சேரத் தூண்டுகிறபடி. கீழ்வானம் வெள்ளென்று — 'ஸ்வாபோத்பேத வ்யதிகரநிபே', ... 'ப்ரபாத ஸமயாஸத்திம் ப்ரஸத்திம் முஹு:' (स्वापोद्बोधव्यतिकरनिभ ......प्रभातसमयासत्ति प्रसत्ति मुहु) என்றபடி ஆசார்யன் பரிக்ரஹித்த க்ஷணம் தொடங்கி மோக்ஷம் வருமளவான காலம் முமுக்ஷுக்களுக்கு விடியற்காலமாம். அதற்கு முன் இருந்த அநாதிகாலம் முழுதும் இராப் பொழுது. மேல்வரும் காலமெல்லாம் ஒரு பகலாயுணர்த்தியே யாம். அது வந்துவிட்ட தென்றபடி.

எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்—பசுக்களை விட எருமைகளுக்கு நடை மந்தம். அவைகளுக்குப் போமிடம் போய்ச் சேருவதற்குத் தாமதமுண்டு. நடுநடுவே குளம் குட்டைகளிலே மூழ்கிக் கிடக்கும். ஆனது பற்றித் தாமதித்து வீடுபெறும் பக்தியோக நிஷ்டர் எம்பெருமானின் அநுபவமாகிற பெரும் நீராட்டத்திலே பிடிப்புள்ளவர் எருமை யெனப்படுகின்றனர். பசுக்களாவார் ப்ரபந்நர்கள். சிறுவீடு—வீடு = மோக்ஷம். சிறுவீடு 'விமுக்தச்ச விமுச்யதே', 'அத்ர ப்ரஹ்ம ஸமச்நுதே', 'அம்ருதத்வஞ்சாநுபோஷ்ய'

(विमुक्तश्च विमुच्यते, अत्र ब्रह्म समश्नुते, अमृतत्वञ्चानुपोष्य) என்ற ச்ருதி ஸூத்ரங்களிற் சொன்ன ஜீவந்முக்தி யுற்று ராகத்வேஷாதிகள் அற்று பஜந ஸுகம் பெற்றிருக்கை. அதிலுள்ள அவாவாலே அதற்கு வேண்டுவனவற்றைப் பெறப் பரந்தனர் அவர். சிறுவீடு = கைவல்ய மென்பர் சிலர்.

மிக்குள்ள பிள்ளைகளும்—பக்தியோகத்தி லிறங்குவதற்குத் தக்க அறிவும் வல்லமையு மில்லாமே பாலப்ராயராய் ப்ரபத்தியோகத்திற்கே அதிகாரிகளான மற்றவரும் போவான் போகின்றார்—விரைவில் அதாவது தேஹாவஸாநத்தில் மோக்ஷஸ்த்தானம் போய்ச்சேர வேண்டுமென்று ஆசார்யரை ஆச்ரயிக்கப் போகின்றனர். பரந்தவர்களோடு சேரமுடியா தாகிலும் போகின்றவரோடு சேருவது ஸுலபமாகையாலே அங்ஙனம் செய்யக் குதூஹல முடைய உன்னைக் கொள்ள வேண்டு மென்றே அவர்களையும் காத்திருக்கச் செய்தோம்.

பாடி = ஆசார்யன் தனியனை யநுஸந்தித்து, பறை கொண்டு = உபஹார மெடுத்துக் கொண்டு (அன்றி, ஆசார்யனை உலகமறியப் புகழ்ந்து கொண்டு). மாவாய் பிளந்தானை மா—மஹத்வம், பெரும் பேச்சுக்காரர்களாய் பண்டிதராக அகங்கரித்தவரை அடக்கினவனும். மல்லரை மாட்டிய = குத்ருஷ்டிகளாய் வேதத்திற்கு விபரீதார்த்தம் சொல்பவரை ஜெயித்த வனும்; தேவாதிதேவனை = பரமாத்மாவைத் தனக்குக் காரணமாக வுடையவனும்—அவனு டைய அவதாரமுமான என்றபடி. அல்லது 'அத்யாஸீநதுரங்கவக்த்ரவிலஸஜ்ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸநாத்' (अध्यासीनतुरङ्गवक्त्रविलसज्जिह्वाग्रसिंहासनात्) என்றபடி ஸ்ரீஹயக்ரீவனைத் தனக்கு அதிஷ்டாதாவாக வுடையவனுமான ஆசார்யனை ஸேவித்தால் அருள் செய்யும். அன்றி, மாவாய் இத்யாதியைப் பரமாத்ம விஷயமாகவே கொள்ளலாம். பாடி-ஆசார்யனைத் துதித்து. பறைகொண்டு—ப்ரபத்தி வித்யையை யறிந்து. ஸ்ரீ க்ருஷ்ணனைப் பணிந்து நின்றால் பகவான் ஆராய்ந்தருள் = பக்தியோக ஸ்தானத்திலே தானே நின்று, 'கேவலம் மதீயயைவ தயயா (केवलं मदीययैव दयया) என்றபடி தயை புரிவனென்றவாறுக. (8)

இம்மை யின்பங்களிலீடுபட்டாரைச் சேர்ந்த ஒருத்தியை எழுப்புகின்றனர்—

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூப(ம)ம் கமழத் துயிலணைமேற் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீ ரவளை யெழுப்பீரோ, உன்மகள்தான்
ஊமையோ வன்றிச் செவிடோ வனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

தூ—நிர்தோஷமான
மணி—ரத்னங்களால் சமைக்கப்பட்ட
மாடத்து—மாளிகையில்
சுற்று உம்—நாற்புறமும்
விளக்கு—தீபங்கள்
எரிய—ஜ்வலித்துக்கொண்டிருக்க
தூபம்—வாசனைப்புகைகள்
கமழ—மணம் வீசாநிற்க
மல்—தூக்கத்திற்குத் தக்க படுக்கையிலே
கண் வளரும்—நித்திரை செய்யும்
மா மான் மகளே—மாமனின் பெண்ணே!
மணி கதவம்—ரத்நமயமான கதவின்
தாள்—தாழ்ப்பாளை
திறவாய்—நீ திற
மாமீர்—அம்மாமிகளே!

அவளை—அப்பெண்ணை
எழுப்பீரோ—எழுப்பமாட்டீரோ?
உன் மகள் தான்—உன்னுடைய பெண்ணான இவள்
ஊமையோ—ஊமையளோ?
அன்றி—அல்லது
செவிடோ—செவிடியோ?
அனந்தலோ—மதித்தவளோ?
ஏமம்—மயக்கமாகிற
பெரு துயில்—பெருந்தூக்கத்தைத்தரும்
மந்திரம்—மந்த்ரப்ரயோகம்
பட்டாளோ—செய்யப்பெற்றாளோ?
மா மாயன்—பெரும் மாயையுடையன்.
மாதவன்—ச்ரிய: பதி
வைகுந்தன்—வைகுண்டாதிபதி
என்றென்று—என்றெல்லாம்
பலநாமம் உம்-அநேகம்திருநாமங்களையும்
நவின்று—சொல்லி வருவோம்
ஏல் ஓர் எம்பாவாய்.

தூமணிமாடத்து — 'துவளில் மாமணி மாடமோங்கு துலைவில்லி மங்கலம்' என்று திருவாய்மொழியிலே எம்பெருமானுக்குச் சொன்னது போலே யாயிற்று இங்கிவளுக்குச் சொன்னதும். அங்கே, 'மாமணி மாடம்' என்று மா என மேன்மையைச் சொன்னதால் இவளது ஐச்வர்யத்தைக் காட்டில் அவனுக்கு அது அதிக மென்றதா மென்னில், ஆகுக. அங்கே துவளில் என்று தோஷத்தை எடுத்துக் கழித்ததால் ஒரு ஸமயம் அதற்கு தோஷ மிருந்ததாகத் தோற்றும். அங்ஙனமின்றி இங்கே தூ என்றதாலே இதற்கு ஏற்றமென்பர் பலர். இங்கே பிறர் வாதிக்க அவகாசமுண்டு. எங்ஙன் எனில், இங்கே சப்தபேதமே யொழிய பொருளில் பேதம் கிடையாது. தூ என்றாலும் பரிசுத்தமானது—துவளில்லாத எனவே பொருளாம். அங்கே துவளைச் சொல்லும் பதமும் அதன் இன்மையைச் சொல்லும் பதமும் வெவ்வேறு; இங்கேஒரு பதத்தினாலேயே எல்லாம் சொல்லப்படும் மோஹம் என்றாலும், அஜ்ஞாநம் என்றாலும் பொருளொன்றேயன்றோ? மேலும் துவளில் என்றபோதும், 'துவள் எதற்கோ உள்ளது. இதற்கில்லை' யெனத் தோற்றுமே யல்லது இதற்கே முன் தோஷ மிருந்ததாகத் தோற்றாது. இல் என்ற போதும், எஞ்ஞான்றி மில்லாத என த்ரைகாலிகமான அத்யந்தாபாவம் தான் ஸ்வரஸமாகத் தோற்றும். அதற்கேதேனும் தடை யுண்டாகில், சில காலம் தோஷமில்லாத எனப் பொருள் கொள்ளும்படி நேரும். நிர்தோஷன், அபஹதபாப்மா என்று எம்பெருமானைச் சொன்னால் அவனுக்கு ஒரு ஸமயம் தோஷமும் பாபமும் சொன்னதாக வாகுமோ? அது போல் துவளில் என்றபோதும் அம் மணிமாடத்திற்கு முன் துவள் இருந்ததாகக் கொள்ள ப்ரஸக்தி யில்லை. ஆகையால் தூ, துவளில் என்ற பதங்களைக்கொண்டு ஏற்றத்தாழ்வு கூறுவது கூடாதென்றவாறு. ஆகிலும், இவளிடத்திலிருக்கும் அன்பினாலே சுத்தமான மணிகளைக் கொண்டு இவளுக்கு மாளிகையை யமைத்து விட்டு துவள் இருக்குமோ வென்று ஐயப்படும்படியிருந்த மற்ற மணிகளைப் பிறகு பரீட்சித்துத் துவளில்லா மணிகளால் அங்கே மாடம் செய்து கொண்டா னென்றால் இது ரஸிகர் உவப்பதேயாம். மேலும் தூ என்பதற்குச் சிறந்த குணங்கள் நிரம்பின எனப்பொருள் கொண்டு. அங்கே தோஷமில்லாமை மட்டுப்; இங்கே குணங்கள் அதிகமென்னலாமெனில், ஆகுக. மேலே கண்ணன் திருமாளிகையில் மணிக்கதவ மென்றது மட்டுமே சொல்லப்பட்டதால் தூமணிமாடத்து என்றவிதற்கு ஏற்றமதிகம் இங்கேயே காண்கிறதெனவும் கொள்க. இது நிற்க.

சீர்மல்கு மாய்ப்பாடியிலும் அவரவர்களுடைய பூர்வஜந்ம புண்யத்திற் கீடாக ஏற்றத்தாழ்வுண்டாகையாலே பெரியோர்களும் பிள்ளைகளும் ப்ரபலமாகப் போகங்களை யனுபவித்துவரும்படி செல்வம் செழித்த குடும்பங்களுமிருந்தன. சிலர் இருந்தும் அனுபவி

யாதொழிவர். இங்கு இவ்வளவு வர்ணனைக்கு நோக்கென்னவெனில். எங்களைப்போல் நித்ரையின்றி நீயும் வெளி வந்திருக்க வேண்டியிருக்க, எழுப்பியும் எழுந்திருக்காதபடி உறக்கமுனக்கமைந்தது. தூ மணிமாடமும், துயிலணையும்; தூபம் முதலிய மற்ற விசேஷ களு மிருப்பதாலாம். இத்தனை யிருந்தபோதும் எம்பெருமானிடம் பற்று மலிந்திருப்ப தால் இவ்வண்ணம் தூங்கிக்கிடக்க மாட்டுமோ. விடியற்காலத்தில் முன்னமே எழுந்திருக்க வேண்டுமென்று சிறிதுகாலம் படுக்கப்போகிறவர்களுக்கு இவ்வளவு ஆடம்பரங்கள் ஏனோ? இவையெல்லாம் இம்மையின்பத்திலுள்ள ஈடுபாட்டின் படியில் வந்தவையே யென்பதாம். இதற்குத் தக்கவாறு மாமான் மகளே என விளித்தனர். ஆண்டாள் தன்னை ஒரு கோப ஸ்திரீயாகவும் தன் தோழிகளைக் கூடவிருக்கும் இடைப்பெண்களாகவும் பாவித்திருப்ப தாலே தன் மாமன் மகளை, எழுப்பும் கோபஸ்த்ரீகளின் மாமன் மகளாக நினைத்தாளென் பதுமுண்டு. மாமானுவான் மாமன். அன்றி, மாமஹான் = மிகப்பெரியோன், மாம்பெரும் செல்வம் படைத்தவனென்னலுமாம். கண்வளரும் என்றது மாமன் என்றதோடு சேரும். இவ்வளவு பெருமை பொருந்தியவிடத்தில் மிக்க மரியாதையுடன் தாங்கள் இருப்பதைத் தோற்றுவிக்க உறங்கும் என்னுமே கண்வளரும் என்றனர்.

உள்ளே விளக்கெரிவதும், தூபம் கமழ்வதும் வெளியிலுள்ள இவர்களுக்கு எங்ஙனம் தெரியுமென்னில், ஜாலகம் வழியாற் கண்டதாலெனலாம். இவர்களுக்கு காணலாம்படி கீழே ஜாலகமு மிராமல் ஒரே மணிமயமாய், கதவு வேறு, சுவர் வேருகவும், இது புகுமிட மெனவும் கூடத்தெரியாம லிருப்பதானுலும், மணிமயமாயிருப்பதாலேயே உள்ளே யிருப் பனவற்றைக் கண்ணுடியுள்ளே போலக் கண்ணுற் காண்பரெனவு முரைப்பர்.

தூமணி இத்யாதிக்கு வேறு கருத்துரைப்பது முண்டு. தனக்குள்ள ஐச்வர்யத்தைக் கண்ணன் அனுபவிக்கும்படி அவனைத் தன்னிடம் வரவழைக்க நினைத்து, அவன் தானே வருவா னென்று முடிவிட்டு அவனோடு கூடி களிப்பதற் கேற்ற தன் துயிலறையில் அலங் காரங்களைச் செய்து படுத்துறங்கி விட்டன ளிவளென்றவாறு.

இங்கு எம்பெருமானர் பெரிய நம்பிகள் இருவரின் ஸம்வாதமொன்றையும் முன்னோர் குறித்துள்ளனர். 'இவள் இப்படி யுறங்குவதும் அவர்கள் உறக்க மற்றிருப்ப தும் கூடினபடி யெங்ஙனே என்று எம்பெருமானர் விண்ணப்பிக்க, பெரிய நம்பிகள், 'பதினெட்டு தரம் திருக்கோட்டியூர் நம்பியை யநுஸரித்த உம்மையே கொண்டு தெளிவீர்' என வருளினராம். பெரும் வள்ளலான நீரும் பிறர்க்கு உபதேசிக்க அடியோடு விரும்பாத அவரும் கூறினபடி எங்ஙனே என்றபடி. இவள் ஏற்கனவே பரந்யாஸம் செய்தவளான படியாலே நிர்பரையாய் நிச்சிந்தையாய் கிடந்துறங்கினுளென்று அதன்கருத்தெனவிளக்கி யுமுள்ளனர். அதனை யொட்டியும் சிறிது வரைகின்ரேம்-கண்வளரும் மாமான் மகளே! இவ் வளவு ஐச்வர்யத்தைக் கண்டோ, அல்லது பரந்யாஸம் செய்திருப்பதாலோ கண்ணன் தானே வருவா னென்று தகுந்தபடி யலங்கரித்துப் படுத்தாயே; அவன் வந்தானே? அவன் வந்திருந்தால் நீ கண்வளர்வதேது? நீ மாமன்மகள். மாதுல புத்ரனென்று பைத்தியக் காரனை வடமொழியிற் சொல்வர். நீயு மங்ஙன மிருப்பவளென வேண்டும். இரவில் அவ னோடு இங்குக் கூடிக் களிக்க வேண்டுமென்று பரந்யாஸம் செய்து அதுபடி யனுபவித்து அந்த ஆயாஸத்திலே உறங்கினுயாகில் ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். நோன்புக்கு உன்னை நேரில்வந்தழைத்துப் போகவேண்டு மென்று பரந்யாஸம் செய்திருப்பாயாகில். அது ந்யாயமோ? நாமெல்லாரும் குழாமாகக் கூடிச்சென்று சேவித்துப் பறை பெறுவதாக

முன் நாம் செய்துள்ள ஏற்பாட்டுக்கு மாறுபாடாக நீ நடப்பாயாகில், இங்ஙனம் எல்லோரும் நடக்க பார்ப்பரே. அப்போது இங்ஙனம் நம் புத்தியை மாற்றின மாமாயன் நம்மை விட்டொழிவான். மாமாயன் மாதவனுவான். அதாவது பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பவனே மாதவனென்பர். இங்கிருந்து அங்குச் சென்றுவிடுவான். நீ இங்கே உறங்குவதுபோல் அவன் அங்கே உறங்கிடுவான். அதற்கு மேல் வைகுந்தனு மாவான். பாற்கடலையும் விட்டு பரமபதத்திற் புகுந்து விடுவான். நெருங்கி வருவானென்று நினைத்த நமக்கு நேரெதிராக நெடுந்தூரம் சென்றுவிடுவான். நேராக நாமே அவனிடம் சேர்ந்து செல்லத் தக்க சக்தி வாய்ந்திருக்கும்போது அதனை எதற்கு பரந்யாஸம் செய்தழைப்பது? நீயும் கூடவே வருவாயாக சக்தியிருக்கும்போது பரந்யாஸம் செய்வதை சாஸ்திரம் இசையுமோ? ஆக வென்றவாறு.

தூபம்கமழ என்ற பாடத்தில் பொருள் விளக்கம் விரைவிலாம். தூமங்கமழ என்ற பாடம் எதுகைக்குச் சிறந்ததாம். துயிலணை—உட்கார்ந்து எங்கள் வரவை எதிர்பார்க்காமை, தூக்கம் தானே வரும் படிக்குள்ள மென்மை, குளிர்த்தி முதலான குணங்கள் மலிந்த மெத்தையிற் படுக்கலாமோ வென்றபடி.

இப்படி மாமான்மகளே என்று விளித்தும் அவள் எழுந்திருக்காமையால் அவள் தாயாரை எழுப்புகின்றனர். கண்வளரு மென்ற வரை மாமீர் என்றதோடும் சேரும். இதைக் கேட்டவுடனே ஒருத்தி எழுந்திருந்து யார் என்றுள். அதனைக் கேட்டு இவர்கள் சொன்னது உன் மகள்தான் இத்யாதி. மாமஹானின் மனைவிகளான மாமிகள் பலர் இருந்ததாலே மாமீரெனப் பன்மையாக விளித்தது. பிறகு எழுந்தவள் மகளின் தாயான மாமி. எனவே உன் என ஒருமை யெனக் கொள்க.

ஊமையோ—நீ யாரென்று கேட்டதுபோல் அவள் ஏன் கேட்டிருக்கக் கூடாது. பேச நாக்கில்லையாகில் ஊமையென்பர். செவிடில்லையாகிலும் பேச மாட்டாமே ஊமையாவது முண்டு. பிறவிச் செவிடாகில் பேச்சறிய வழியற்று ஊமையாவது முண்டு. இப்போது நாம் கூவினது காதிற் பட்டதோ, இல்லையோ, தெரியவில்லை. ஆகச் செவிடென்றே சொல்லலாமாயிருக்க, வீணே ஏன் ஊமை யெனக் கூறவேண்டு மென நினைத்து, 'அன்றி செவிடோ' என்றனர். நேற்று வரையில் நம்மோடு நன்குகப் பேசிக்கொண்டு, பாம்பின் காது இவளுக்கென நாம் நினைக்கலாம்படி யிருந்தவளை ஊமையும் செவிடுமாகச் சொல்வது கூடாதெனக் கருதி, அனந்தலோ என்றனர். துயிலென்று மேலே தூக்கத்தைச் சொல்வதால் இங்கே அனந்தலென்பது மதமாம். தனது ஐச்வர்யத்தையும், தன்னிடம் கண்ணன் வசப்பட்டதாகவும் கொண்டு மதித்து நாம் சொல்வதைக் கேட்டும் பேசாதே படுத்திருக்கிருளோ வென்றபடி. இனி இவ்விடம் குற்றம் கூறுவதை விட்டு, எழுந்திருந்த மாமியும் இவளைச் சடக்கென எழுப்பாததையும் கண்டு, 'உண்மையி லிவளுக்கு உறக்கமே. அதுவும் இயற்கையிலேற்பட்டதைக் காட்டிலும் வேறு வகையாயிருக்கவேண்டும்' என வாராய்ந்துரைக்கின்றனர். ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ—ஏமப்பட்டாளோ, மந்திரப்பட்டாளோ எனப் பிரிப்பதும், நடுவிலுள்ள பெருந்துயில் என்பதை ஏமமென்றதற்கு முன் சேர்ந்துரைப்பதும், துயில் என்பதற்குப் படுக்கை யெனப் பொருள் கொள்வதும் தகா. ஏமமாவது மிக்க களிப்பாலோ மிக்க வருத்தத்தாலோ நேர்படும் மயக்கம். அவ்வித மயக்கமென்னப்படும் பேருறக்கமுண்டாம்படி யாரோ மந்த்ரமிட்டியிருக்கவேண்டு மென்றபடி.

ஸுகமாக இப் பேரைச்வர்யத்தை யனுபவித்துக் கொண்டிராதே கண்ட இடைப் பெண் களோடும் கூடி, தோளாது திரிகிறுளே யென்று பெரியவர்களே மந்த்ரமிட்டார்களென்று நினைத்தனர்.

ஆகில் இம் மாயமந்த்ரம் நீங்க நம் மாமாயன் நாம மந்த்ரத்தை நவில வேண்டு மென்கிறனர் மாமாயு ளித்யாதியால். பாணஸுரனோடு போர் புரியுமளவிலே ருத்ர ஜ்வரத்தை விஷ்ணு ஜ்வரத்தால் வதைத்த நம் கண்ணன் மாமாயன் இம் மாயத்தை மாற்ற வல்லவன். கூட மாதவ னென்று சொன்னோமாகில், நம்மை யெல்லாம் தன்னைப் போலாக்க நினைத்த வேரிமாருத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும். அவன் வைகுண்ட னுயிற்றே. தன்னிடமும், தன்னைச் சார்ந்தவரிடமும் புகாதபடி மாற்றாரை மழுக்குமவ னுகையாலே அவனை விகுண்ட னென்றும், வைகுண்டனென்றும் சொல்வார்களே யென்ற படி.

நவின்று எழுப்பீரோ என்று தூராந்யவயத்தைக் காட்டிலும், நவின்று எழுப்புவோ மென வொரு பதத்தைச் சேர்த்துக் கொண்டுரைப்பதே சிறந்தது.

உட்பொருள்:— இங்கே ஸர்வகுண ஸம்பந்நனும், எம்பெருமானிடத்தில் ஆழ்ந் திருக்கிறவனும், ஆசார்யனுடைய பிள்ளையோ அல்லது பிள்ளைபோல் அபிமானிக்கப்பெற்ற சிஷ்யனோ என்னப்படவனுமான ஒருவனை வேதாந்த விமர்சம் செய்து கொடுக்க வழைக்கிற படி.

தூமணிமாடமாவது நித்யமாய், நிர்தோஷமாய், எல்லாப் பொருளையும் விளக்கும் நிகமஸௌத மென்னப்படும் வேதம். சுற்று மென்று அதன் அங்கங்களைச் சொல்லிற்று. அல்லது வேதத்தில் ஏதேனுமொரு பாகமின்றி எல்லா பாகங்களிலு மென்றதாம். விளக் காவது ஜ்ஞானம்; அல்லது 'நிகமஸௌததீபச்ரியா விபச்சிதவிகீதயா ஜகதி கீதயா' (निगमसौधदीपश्रिया विपश्चिदविगीतया) என ஸ்ரீ தேசிகனருளிச் செய்த கணக்கிலே வேதத்தின் உபப்ரும்ஹணங்களெல்லாம் விளக்காம். விளக்கெரிய—அவற்றின் அர்த்த மெல்லாம் நன்கு விளங்க. தூமம் கமழ — அக்னிஹோத்ரம் முதலிய நித்ய கர்மங்களை யனுஷ்டிப் பதாலே எங்கும் ஹோமப்புகையின் பரிமளம் வீச. இவ்வளவால் ஜ்ஞானமும், அநுஷ்டான மும் சொல்லப் பெற்றன. துயிலணைமேல் கண்வளரும் என்று வைராக்யத்தைச் சொன்ன தாம். துயில்=அஜ்ஞானம். அதை நம்மை யணையச் செய்வதற்காக நம்மையணையும் பாஹ்ய விஷயங்களிலே நித்திரை யுற்று 'யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே: (यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः) என்றபடி யிருக்கை. இவ்வளவால் ஜ்ஞா நாநுஷ்டாந வைராக்யங்கள் அடைவாகச் சொல்லப் பெற்றன. மாமான் மான் = மஹாந். மாமான்-தந்தை, தாய், ஆசார்யன் இவரெல்லோரிலும் முக்யனுயுள்ள ஆசார்யன். மாமான் மகளே என்று அந்தரங்க சிஷ்யனைச்சொன்னபடி. மணிக்கதவம்தாள் திறவாய், எங்களுக்கு உபதேசிக்கப்பட்ட அர்த்தங்களெல்லாம் எங்கள் மனத்தில் நிற்காதபடிக்கு எங் களுக்குள்ள ஸந்தேஹங்களுக்குக் காரணங்களான அம்சங்களைக் களைந்தெடுப்பாய். அப் போது அவ்வர்த்தங்கள் எங்கள் மனதில் நிலைநாட்டப்பட்டு விளங்குமென்றபடி. மகளே என்ற பெண்பால் ஆழ்வார்களைப் போலே இப்பிள்ளானும் பெண்பிள்ளைப் பாவனையிலே பெருமானிடத்தி லீடுபட்டிருக்கின்றமையைக் குறிக்கும்.

ச்ரமபரிஹாரத்திற்காகப் படுத்திருப்பவனை எழுப்புவதோ என்று அவர் தாய் நினைக்கக் கூடுமென்று அவளையே எழுப்ப ஏவுகின்றனர் மாமீரவளையெழுப்பீரோ. பிள்ளை

யின் பெருமையைப் பலவாறு பகர்கின்றனர். ஊமையோ இத்யாதியால். இங்கே,

'பாரந்த்ரேஷு ஜாத்யந்தா: பரதாரேஷ்வபும்ஸகா: । பரிவாதேஷு யே மூகா: தேடதீவ தயிதா மம' 'பதிராந்தவதேவாத்ர வர்த்திதவ்யம் ஹிதைஷிணா'

(परन्ध्रेषु जात्यन्धाः परदारेष्वपुंसकाः। परिवादेषु ये मूकाः तेऽतीव दयिता मम,
'बधिरान्धवदेवात्र वर्तितव्यं हितैषिणा)

என்றாற் போலுள்ள வசனங்களை யநுஸந்திக்கவேண்டும். பிறரைப் பழிப்பதில் ஊமையனாகவும், பிறர் பழிப்பதைக் கேட்பதில் செவிடனாயுமிருக்க வேண்டும். பிற ஸ்த்ரீகளிடத்திலே தான் புருஷனாகாதபடி நடந்துகொள்ள வேண்டும். இப்படி ஸ்திரீக்கு ஸ்திரீயாக விருப்பது கூட மகளே விடத்தில் கருத்திலுள்ளதாம். இப்படி எப்பெருமான் உகந்துவரும் சில குருடர். செவிடர், ஊமையர்களிலே சேர்ந்தவரிவரென்றபடி. அனந்தல் = மதம். அனன்யகதிகனான தன்னை எம்பெருமான் ஒருப்படியும் விடானென்ற மஹாவிச்வாஸத்திற் குறுப்பான தன்மை.

இவர் எப்போழ்தும் மாமாயன் மாதவன் வைகுந்தனென்றென்று நாமம் பலவும் நவின்று பேரானந்தம் பெற்று அதனால் அந்த நாம மந்த்ரங்களாலேயே மோஹித்துப் பெருந்துயிலுற்றதாகத் தோன்கிறது. இல்லையேல், மாமிகள் எழுப்பியும் எழுந்திருக்காம லிருக்கக் காரணம் யாதென வியந்தனர். (9)

இம்மையிலிழிந்த குலத்துப் பெண்ணையெழுப்பி இப்போது மறுமையில் மனம் வைத்துச் சுவர்க்கத்திற்கு நோற்குமவரின் குலத்துப் பெண் ஒருத்தியை எழுப்புகின்றனர்-

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்
மாற்றமுந் தாராரோ வாசல் திற வாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம் மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின்வாய் வீழ்ந்த கும்பகரணனும்
தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற வனந்த லுடையா யருங்கலமே
தேற்ற மாய்வந்து திறவேலோ ரெம்பாவாய்.

நோற்று—நோன்பை நடத்தி
சுவர்க்கம்—இந்திராதி லோகத்தில்
புகுகின்ற—புக முயன்றுவரும்
அம்மனாய்—அம்மே! தாயே! (என்று பெண்ணின் அன்னை போன்ற பெரியோரைப் பார்த்துக் கூப்பிட்டும், 'யாரும் வந்து திறக்காததாலே முகத்தை திருப்பிக் கொண்டு தன்திரனை நோக்கி)
வாசல் திறவாதார்—வாசற்கதவைத் திறக்க வராத இவர்
மாற்றம் உம்—ஒரு மறுமொழியையாவது
தாராரோ—அளிக்கமாட்டாரோ (இஃதென்ன மௌனம்? என்னே நோன்பிலுள்ள நோக்கம் என்று இகழ்ந்து விட்டு, பெண்ணையே நேராகக் கூவக் கருதி)
ஆற்ற—மிக்க
அனந்தல்—உறக்கத்தை
உடையாய்—உடைய பெண்ணே!
நாற்றம்—நன்மணம் (கமழும்)
துழாய் = திருத்துழாய்மாலையணிந்த
முடி—திருமுடியையுடைய

நாராயணன்—நாராயணனு யிருப்பவனும்
நம் மால்—(நமது திருமாலும் அல்லது)
நம்மிடம் மோஹமுள்ளவனும்,
போற்ற—நாம் துதித்துவர (அதனுல்)
பறை தரும்—பறை முதலியன வளிக்க
இருப்பவனும்,
புண்ணியனுல்—பாக்யத்தின் பலனுமான
கண்ணன் காரணமாய்
பண்டு—முன்னே (ராமாவதாரத்திலே)
ஒரு நாள்—ஒருநாளில்
கூற்றத்தின்—யமனின்
வாய் வீழ்ந்த—வாயில் (இரையாக)
விழுந்துவிட்ட
கும்பகரணனும்—கும்பகர்ணன் என்ற
பெருந்துயிலனும்
தோற்றம்—தோல்வியடைந்தும்,
(அல்லது) பாத்ரமாகக் காணப்பட்ட
உனக்கே—உன்னிடமே
பெரு துயில் தான்—தன் பேருறக்க
மெல்லாம்
தந்தானே—கொடுத்துவிட்டனே?
அரு கலமே—அருமையான ஆபரணம்
போன்றவளே!
தேற்றம் ஆய்—தெளிவாக
வந்து திற—வந்து திறப்பாயாக.
ஏல் ஓர் எம்பாவாய்.

பெருந்துயிலிலே கிடக்கும் பெண்ணேயெழுப்பும் இப்பாசுரத்தை மற்ற பெண்களை விட மஹாபாக்யம் பெற்ற பெண்ணுக'வைத்துக் கருத்துரைப்பர். அப்போது, அம்மனுய் என்று அப் பெண்ணேயே, தாயே என விளித்ததாகவும் கொள்வர். விசேஷ பகவதநுபவம் பெற்ற தாலே அவள் பெரியாள், ஸ்வாமிநியாம். ஸுவர்க்கம் என்ற பதம் நோன்புக்குப் பலனுக நினைக்கப்பட்டது எதோ, அதையே குறிக்கிறது. இப்போதும் தேவலோகத்தையே சொல்லுமென்பர் சிலர். உண்மையில் இவர்கள் நோன்புக்கு மோக்ஷமே பலன் கோரு கின்ருரென்று பரம பத்தையே இப் பதம் சொல்லுமென்பது முண்டு. ஸ்வர்க்கபதத்திற்கு மோக்ஷம் பொருளென்பதைக் கேநப், கடம் முதலிய பல உபநிஷத்துக்களைக் கொண்டு நிருபிக்கலாம். 'யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ்த்வயா விநா' (यस्त्वया सह स स्वर्गो निरयो यस्त्वया विना) என்றபடி எம்பெருமானை விட்டிருத்தல் நரகத்தி லிருப்பதாய், அவனேடு சேர்ந்திருப்பதே ஸ்வர்க்கமாகையாலே இங்குற்ற பகவத னுபவத்தைச் சொன்னதுமாம். ஆக இதன் கருத்தாவது—

நீ எங்களோடு சேர்ந்து நோன்பு நோற்பதாக நேற்று சொல்லி விட்டு, இப்போது தனியே முன் பிறவியிற் செய்த நோன்பின் பலனுகவோ, இப்போதே தனியாகச் செய்த நிகரற்றதொரு நோன்பினலோ கண்ணனேடு கலந்து பரிமாறிக்கொண்டு, வாசலில் வந்து நிற்கும் எங்களுக்கு. கண்ணனுக்கு அர்ப்பணம் செய்த அழகிய மேனியைத் தராவிடிலும், மாற்றமாவது தரக்கூடாதோ? வாசல் திறவாதபோது கண்ணன் எப்படி யுள்ளே வரக் கூடுமென்ன வேண்டா. உன் இல்லத்திற்கும் அவன் மணிமாடத்திற்கும் இடையிலே வேறொரு வீடு இல்லாததால் உள்வழியே யவன் வரக்கூடுமே, உங்கள் கண்ணிற் காணுத போது கண்ணன் இங்கே இருப்பதாகச் சொல்லி இப் பாடு படலாமோ வென்னவேண்டா. அவன் முடியிலுள்ள திருத்துழாயின் நறுமணம் எங்கள் மூக்கைப் பறிக்கின்றதே என்றைக் கோ அவனேடு கலந்ததால் கூடின மணம் என்னில், அது, எங்களுக்கு முண்டே. அதற் கும் இதற்கும் நெடுவாசி காண்கிறதே என்றவாருகும்.

இப்படி இவள் க்ருஷ்ணனை அப்போது அனுபவித்து வருகிருளாகில், இவளுக்கு உறக்கத்தை மேலே கூறுவது கூடுமோவென்னில், இதற்கு முறையாளர் உரைத்துள்ளனர். இங்ஙனம் இவர்கள் அவளது நிலையை அறிந்துவிட்டதாலே அவள் வெட்கமுற்று விடை

யளிக்க மாட்டாது' குறட்டைவிட்டுறங்குபவள் போலவே இருந்துவிட்டாள். ஆகவே உறக்கத்தைக் கூறினது என்றதது.

இங்கே, அம்மனார் என்ற பாடம் சில ஆசார்யர்கள் கொண்டிருப்பதைக் கண்டு இது அவர்கள் தாமாகச் செய்த கற்பனையென்றும், அம்மனாயென்ற பாடமே ப்ராசீனமென்றும் சிலர் தூஷிக்கின்றனர். தங்களுக்கு இஷ்டமாகாத பாடமென்றதை மட்டும் கொண்டு, பெரியோர்கள் கையாண்ட பாடத்தைக் கற்பனை செய்த பாடமெனக் கூடுமோ இங்கே வீழ்ந்த என்ற விடத்தில் விழுந்த என்றும், தூபம் என்ற விடத்தில் தூமம் என்றும் இவ்வண்ணம் பல பாசுரங்களிலே பல பாடங்கள் கையாளப்படுகின்றனவே, எல்லோரும் இடைவிடா தோதிவரும் ப்ரபந்தத்திலே அப்பாடபேதங்கள் மட்டும் எங்ஙனே புகக்கூடும்? அப் பாடங்களை முதலிற் குறித்தவர்களும் இங்ஙனம் அவற்றைக் கற்பித்தவராக ஏன் நினைப்பது தகாது? ஆக இல்லாத பாடத்தை ஏறிட்டுப் பெரியோர் உரை செய்வார். அப்படி ஏதேனும் கற்பிக்கத் தோன்றில், 'இங்ஙனம் பாடமிருக்கலாம்' என்று தங்கள் ஊஹத்தையும் தாங்களே வெளியிடுவர். ஆகையால் அவர்கள் ஆதரித்த பாடம் அதற்கு முன்பே ப்ரஸித்தமானதெனவே கொள்க. இதற்கு மேல், 'அம்மனார் எனத்திருத்தியும் பயனில்லையே. ஆரு மடியில், 'உனக்கே' யென முன்னிலையாகக் கூறப்பட்டுள்ளதே என்கின்றனர். அதனாலென்ன? முதலிலிருந்து, 'வாசல்திறவாதார்' என்ற வரையில் ஒரு வாக்யம். அதற்குமேல் வேறு வாக்யம். மேல்வாக்யத்திலேயே ஆற்ற அனந்தலுடையாய் என்ற விளிக்குத்தக்கவாறு 'உனக்கே' என்றது பொருத்தம் பெறும். முதல்வாக்யத்திலே அம்மனாயென்றழைத்து விட்டு அவளைப் பார்த்தே, 'மாற்றமும் தாராரோ' வெனப் படர்க்கையாகவும் பணிப்பது பொருந்துமோ? எனவே, 'அம்மனார்' என்ற பாடமே அழகாக அமைந்துள்ளது.

அம்மனாயென்ற பாடத்தில் பதவுரையில் நாம் உரைத்தபடி பொருள் கொள்ள வேண்டும். அம்மனாயென்று அழைத்தார்கள். பிறகு மாற்றம் தராததால் அவளிடமிருந்து முகத்தை திருப்பித் தங்களுக்குள்ளே, மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார், என்றனர் என்றவாறு. இப்போது படர்க்கைக்குப் பொருத்தமுண்டு. சிற்சிலவிடங்களில் வேறு கதியிராதபோது வாக்கியங்களை யொருபடி சரியானவைகளாகப் பாவித்துக் கொள்வதற்கு சில நீதிகள் இலக்கண நூலில் வரையப்பட்டாலும் அவைகளை ஸரஸமாய் நன் முறையில மையுமிடங்களிலும் புகவிடுவது தகாது. ஒரு வாக்கியத்திற்குள்ளே ஒரு பதத்தோடுமற்றொரு பதம் முரண்படாதபடி ப்ரயோகம் செய்வதே சிறந்ததாகும், ஆகையால் 'ஒரிடம் பிறவிடந் தழுவலுமுளவே' என்று நன்னூலுக்கிங்கிடம் வேண்டுமென்பதில்லை. கண்ணனோடு ஸம்போகானுபவம் பண்ணுகிறவளாக வைத்து முதலில் மரியாதையாய் பன்மையாக கூறி, பிறகு உறக்க முற்றவளாக நினைத்தபோது பன்மையை விட்டு ஒருமையையே கொண்டு உனக்கே என்றனர் என்றால். இது சாலவும் ச்லாக்யமாம். அம்மனாயென்ற பாடத்தில் எழுப்பப்படும் பெண்ணையோ, அவள் தாயைப் போன்ற வேறொருத்தியையோ அதன் பொருளாகக் கொள்ளலாம். உபநிஷத் பாஷ்யகாரர் அருளிச் செய்த உரை, வேறு ஸ்த்ரீ என்ற பொருளிலே ஸ்வரஸமாகும். பெண்ணைவிட்டுப் பெரியாளையே அம்மனை யெனச் சொல்வது தகும். அம்மனாரென்ற பாடத்தில், இங்ஙனம் பொருள் கொள்க—எழுப்ப வந்த நாங்கள் இவ்வளவு சத்தமிட்டும் நோன்பு நோக்கும் பெரியார் பேசாமலேயிருக்கிறார்கள். நீயோ அதிகமாகவுறங்கிக் கிடக்கிறாயென்றவாறு.

இங்ஙனம் சுவர்க்கம் என்பதற்கு எம்பெருமானை யநுபவித்தல் என்ற பொருளைக் கொண்டு உரைத்தனம். உலக ப்ரஸித்தமான தேவலோகமென்ற பொருளையே கொண்டு முரைத்தல் கூடுமென்று அதற்குத் தக்கது பதவுரையில் கூறப்பெற்றது. அப்போது அம்மனையென வேறெருத்தியையே கொள்வது. பெண் இயற்கையில் கண்ணனையே காமுற்றவள். அவள் பெரியார் பல வகையாயிருப்பர் என்பது யுக்தமாமே யொழிய, பெண்ணையே வேறு பலனை விரும்பி நோற்பவளாகச் சொல்வது சேராது.

எழுப்பப் போமவர்களுக்குத் தங்களோடு விரைவில் வந்து சேராதவர்களெல்லோரை யுமே ஏதோ கண்ணனோடு கலவியுண்டு வராதவர்களாகவே நினைப்பது இயல்பானபடி யாலே பெரும்பான்மை அதற்குற்றவாறே எல்லாப் பாசுரங்களிலும் பெரியோர் கருத்து ரைப்பர். இப்பாசுரத்திலே சுவர்க்கமென்ற பதமிருப்பதால், எம்பெருமானோடு சேர்ந் திருப்பதே சுவர்க்கமெனப் பிரமாணமும் கிடைப்பதால் இங்கே அக் கருத்தை அதிகமாக ஆதரித்தனர். ஆகவே இவள் இல்லத்திற்கும் கண்ணன் திருமாளிகைக்கும் இடையில் வீடு இராததால் இங்கே கண்ணன் வருவது ஸுலபமாயிருந்ததென்றும் சிலர் கற்பித்தனர். இனி கண்ணன் திருமாளிகைக்கருகே வந்துவிட்டாராகில் மேலே சில பெண்களின் வீடு களுக்கு நடுவில் போவது எங்ஙனம் என வினை பிறக்கும். அதற்கு வேறேதேனும் பரி ஹாரமும் தேட வேண்டும். அனுபவத்திலே யிழிந்திருப்பவளைக் கும்பகர்ணனுக்கு மேற் பட்ட உறக்க முற்றவளாக வர்ணித்ததும், உடனே அவள் உறங்குமாறு எண்பித்ததா லே என்பர், இவ்வாறு கூறுவதெல்லாம் ஓர் இனிய அனுபவத்தின் போக்கு என்க.

ஆகிலும் விசேஷ கற்பனை யின்றியே வேறு வகையில் பொருள் கூறக்கூடு மென்று நாம் பதவுரையில் வேறு விதமாகவே உரைத்தனம். அங்குள்ள பெரியோர் ஆமுஷ்மிக மான தேவலோகஸுகம் பெறப்படும் பாட்டையும், அதிலுள்ள சிரத்தையாலே பிறரோடு பேசவுமிசையா திருப்பதையும் பார்த்து சிறிது பரிஹாஸமாக முதலிரண்டடிகளிலே அவர் களைப் பற்றி பேசி, பிறகு நாற்றத்துழாய் என்றதிலிருந்து தமக்கு இஷ்டமான பெண்ணை யே விளித்துப் பேசினர் என்றதது. இப்போது இப் பெண்ணை உண்மையில் உறங்கின வளாகவே கொள்க.

நாற்றத் துழாய்முடி—பாற்கடலைக் கடைந்தபோது தோன்றித் திருமாலுக்கு ப்ரி யையாய் விளங்கும் துளசியை யாதொருபடி அவன் முடியிலே வைத்து ச்லாகிக்கிறான். அதன்படி நம்மையுமபிமானிக்கும் புண்ணியனல்லனோ அவன் என்றபடி. நம்மால் என்ற விடத்தில் ஆல் என்பது மூன்றனுருபாகில் போற்ற என்பதற்கு போற்றப்பட எனப் பொருளாம். 'நன்றாளால்' இத்யாதிகளிற் போல் ஆலென்பதைத் தனியாகப் பிரித்து விட்டு நம்புண்ணியனால் எனச் சேர்ப்பதுமாம். இவற்றையெல்லாம் காட்டிலும் நம்மால் நமது மால் எனப் பிரித்துரைத்த ரஸிகரின் சொல் சாலப் பொருந்தும். இப்போது தரும் என்பது புண்ணியனால் என்பதற்கு அடைமொழி. நம்மால் எனவொரு பதமான போது தருமென்பதை வினைமுற்றாக்கி அத்தோடே வாக்கியத்தை முடித்து, புண்ணியனால் இத் யாதியை வேறு வாக்கியமாகச் சொல்வதுமாம்.

நாராயணன் போற்றப் பறை தரும் என்றதற்கு நோற்றுச் சுவர்க்கம் புக விரும்பி விட்டு மாற்றமும் தாராதிருந்தால் என்னவாகும். நாமெல்லோரும் சேர்ந்து போற்றி னால் தானே பறை தருவான். பிறகு தானே நோன்பு நோற்கலாம். எழுந்து வந்து போற்ற வேண்டியிருக்க மாற்றமும் தாராதிருப்பது நியாயமோவெனக் கருத்தாம். இப் போது புண்ணியனால் என்பது, 'ராமோ விக்ரஹவாந் தர்ம:' (रामो विग्रहवान् धर्मः) என்ற

படி ஸநாதந தர்மமான ஸ்ரீராமனை யெனப் பொருள்படும். ஸ்ரீராமனைப் புண்ணிய னென்றது. அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நாற்பாலுக்குய்த்த அவனே புண்ணியன். கண்ணன் உனக்கிவ்வளவு அநுபவம் கொடுத்துக் கொண்டு எங்களை விட்டானே; இவன் எங்கள் புண்ணிய னென்று நினைத்தென்க. அன்றி, ஜாபாலியையும் சிக்ஷித்த மஹா புண்யன்; வர்ணாச்ரம தர்மங்களை ச்ரத்தையோடு ஸ்தாபித்தவன் என்ற வாறு கொள்க.

நம் புண்ணியனென்றவாறு உரைக்கும்போது, 'புண்யாநாமபி புண்யோऽஸௌ' (புண்யாநாமபி புண்யோऽஸௌ) என்றபடி யுள்ள கண்ணனைக் கூறினதாம். அவன் புண்யங்களுக் கெல்லாம் புண்ணியனென்றால், ப்ராணனுக்கு ப்ராணன், கண்ணுக்குக் கண் என்றாற் போலே புண்யம் புண்யமாவதும், பலனளிப்பதும் இவனாலென்றதாம். ஆக இவன் ஸித்தோபாயமாயிருப்பவனென்றதாயிற்று.

இந்தக் கண்ணன் கும்பகர்ணனை வதைத்தது முன் அவதாரத்தில் என்பதைத் தெரிவிக்கப் பிறகு, பண்டு என்றது. ஒரு நாள்—ஒன்பது நாள்களுக்கு முன்னமே படுத் துறங்கிக் கொண்டிருந்தவனை எவ்வளவோ ப்ரயாஸப்பட்டு ஒரு நாள் எழுப்பி யனுப்பினார்கள். அவ்வொரு நாளிலேயே அவன் உயிரிழந்தான். ராவணாதிகளைப் போலே பல நாள் போர் செய்ய அவனாலாகவில்லை யென்றதாம். கும்பகரணனும்—அரக்கருக்குக் காது ஆப்புப்போலே யிருக்குமென்று விராதனை சங்குகர்ணனென வர்ணித்ததால் தோற்று கிறது. இவன் காது குடம் போலிருக்கும். உம் என்றது உறக்கத்தில் பேர் பெற்ற அவனும் தோற்கும்படி யிருக்கும் உன் ப்ரபாவத்தை என்னென்று சொல்லுவோ மென்ன வாம். அன்றி, நோன்பு நோற்று நீ பெற்ற உறக்கத்தோடு, அவனும் உறக்கத்தைக் கொடுத்ததாலே பல உறக்க மொன்றுசேர்ந்து ஆற்ற அனந்தலாயிற்றென்றதாம்.

தோற்றும்—ராமனிடம் தோல்வியுற்று ராமனைச் சீதையினிடமிருந்து பிரிக்க மாட்டாமே மாண்ட கும்பகர்ணன் ராமனிடமோ அவனது அவதாரமான கண்ணனிடமோ நேரிலொன்றும் செய்ய வியலாதவனாய் அதற்குப் பதிலாக உன்னைக் கண்ணனோடு சேராமற் கிடந்துறங்கச் செய்தாவது தான் த்ருப்தியடைய நினைத்துச் சீதையைப் போல அவனையே நினைத்திருக்கும் உனக்குத் தன் உறக்கத்தை யிட்டிருக்கிறான் போலும். அல்லது, உன்னோடு உறக்கத்திற் போட்டியிட்டு, உனக்கே தோற்று, சூதாடுபவன் பணய மாக வைத்ததைப் பறி கொடுத்து நிற்பது போல் உறக்கத்தில் அபிமானமுள்ள உனக்குத் தன் உறக்கத்தையே கொடுப்பதாகப் பணயம் வைத்துத் தோற்று உனக்கே தந்தான் போலும். தோற்ற அவனுக்கு உறக்கம் தவிர வேறு உபஹாரந்தான் என்ன வுண்டு அளிப்பதற்கு? தனக்கெது பெரிதோ, அதை யளிக்க வேண்டும். பெருந்துயிலே அவன் வேண்டி வரமாகக்கொண்ட விலையற்ற ஐச்வர்யம். அளவில்லா ஆஹாரங்களை யுட்கொள் ளும் அவனுக்கு அவ்வளவும் எளிதில் ஜீர்ணமாவதற்கே, தூக்கமும் தக்கவாறிருந்தால் நலமென்ற நினைவும், அவன் தவசு புரிந்து பிரமனை வரம் கேட்கும் தருணத்தில் நட மாடிற்று. ஸமயம் பார்த்துப் பொல்லா வரக்கனின் நாக்கில் வாக்கும் இந் நினைவுக்குத் தகுமாறு வரும்படி ஸரஸ்வதி செய்தாள். அதனால் தவத்தின் பலனாக நிர்தேவத்வத்தைக் கேட்க நினைத்திருந்த இவனுக்குநித்ராத்துவத்தைக் கேட்கும்படி நேர்ந்தது. நிர்தேவத்வ மாவது—உலகில் தேவர்களே யிராத்பிராதபடி. நித்ராவத்வமாவது மி கச்சிறந்த உறக்கம் கொள்வது. (அதிசயே நே மதுப்பிங்கு.) இங்ஙனம் செய்வித்துப் பிரமதேவன் தானும் மற்ற தேவர்களும் பிழைத்திருக்க பாக்யம் பெற்று இவனுக்குத் தூங்க வரம் தந்தானெனக் கொள்க.

தோற்றும் என்ற விடத்தில் உம் என்பது, நம் சொத்து நல்ல பாத்ரத்திலே போய்ச் சேர வேண்டு மென்றபிமானித்துத் தந்தது மட்டு மன்றியே தோல்வியுற்றும் தந்தானென் கிறது. இனி, தோற்று மென்பது தோற்றல் = தோல்வியுறல் என்ற வினையாலாகாது. தோற்றுதல் என்ற வினையாலானதாய் உனக்கே யென்றதற்கு அடைமொழியுமாம். தோற்றும் = அபூர்வமாய் உண்டானவளும் பாத்திரமாய் காணப்படுபவளுமான உனக்கே என்றபடி.

ஆற்ற அனந்தலுடையாய்—ஐந்தாறு ஏழெட்டு மாதங்கள் சேர ஒன்றுமே தெரியா துறங்கும் கும்பகர்ணன் ஒன்பது நாளுக்கு முன்னமே உறங்கத் தொடங்கியிருந்தும் ஏதோ இலங்கையர் செய்த ப்ரபல ப்ரயத்னத்தாலே, என்றபடி பல பறைகளை அறையப் பல வாயுதங்களை யெறியப் பலர் காதுகளைக் கடிக்கப் பலர் குடநீர்களைக் காதுகளில் கொட்டப் பல யானைகள் ஏறு மிதித்தோட எழுந்தான். உனக்கு உன் உடலின் மெலிவுக்குத் தக்கபடி நாங்கள் என்ன செய்தும் உன் மஹா நித்ரை மாள்வில்லையே.

இவ்வளவு கத்தினபிறகுக் கண் விழித்தாளவள். அதனால் ஆனந்த முற்று அருங் கலமே என வர்ணிக்கின்றனர். ஒவ்வொரு கன்னியும் கலம் போலிருப்பவளே. இப் பேருறக்கம் விட்டிவள் வந்து சேருவது ஸுலபமாய்க் கிடைக்கக் கூடிய தன்றுகையாலே இவள் அருங்கலம். அற்புதமான அழகும் குணமும் கூடியிருப்பதாலும் அருங்கலமாம். தேற்றமாய்—கண்ணனோடு கலவி கொண்டபடியே கிடந்துறங்கினையாகில் அனைவர்கண் ணிலும் படுவதற்குக் தக்கவாறு ஆடைய யரையிலிட்டு அலங்கோலத்தை விலக்கித் தேசுடன் வா என்றதாம். நடுத்தூக்கத்திலே திடுக்கிட்டெழுந்ததால் தடுமாற்றம் அதிக மிருக்கும். தெளிவுடன் வா என்றதுமாய். வந்து திற—மாற்றமும் தாராரோ என்றதை மனத்தில் துமிலணைமேலிருந்தபடி யேதேனும் பேசாதே. உன் வாயழகை வைத்துத் நாங்கள் காணுமாறு எழுந்து எங்களிடம் வந்து வாயைத் திற, இங்ஙனம் கருதி கதவைத் திற என்றபடி.

உட்பொருள்—ராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என்ற மூவரும் முறையே ரஜஸ்ஸு, தமஸ்ஸு, ஸத்துவம் என்ற குணங்களின் தோற்றமாவர். ஸ்ரீராமபிரான் ராவண கும்பகர்ணர்களை வதம் செய்து விபீஷணனைப் பிரித்து நிறுத்திக் கொண்டதானது ரஜஸ்ஸுதமஸ்ஸுக்களை விலக்கி ஸத்துவமென்கிற குணத்தைத் தனிப்படுத்திச் சுத்த மான அதனைக் கொண்டு நல்லறிவைப் பெறவேண்டுமென்பதைக் குறிக்கிறது. இங்கே முதலிரடிகளில் ராஜஸப்ரகிருதிகளை நிந்தித்து, திருத்துழாய் முதலான பத்ர புஷ்பாதிகளைக் கொண்டே எளிதில் வசப்படுத்திக்கொள்ளக் கூடியவனும், ஸ்துதிப்ரியனுமான நாராயண னுடைய ஸௌலப்யத்தையும் ஸர்வஜநங்களையும் ரக்ஷிப்பதிலவனுக்குள்ள பொறுப்பையும் மேலே கூறி, கும்பகர்ணனைப்போலே தமோகுணம் சூழ்ந்த சிஷ்யனொருவனையும் சேரும் படி சிரமப்பட்டழைக்கின்றனர். நோற்றுச்சுவர்க்கம்புகுகின்ற 'த்ரைவித்யா மாம் ஸோம பா: பூதபாபா: யஜ்ஞைரிஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே:' (त्रैविद्या मां सोमपाः पूतपापा: यज्ञैरिष्ट्वा स्वर्गतिं प्रार्थयन्ते) என்றபடி ஸுவர்க்கம் புக நோற்கும் அம்மன் ஆய் எஜமானர்களாகி, மாற்றமும் தாராரோ, 'யாஜ்ஞே கர்மணி நியம: அந்யத்ராநியம: (याज्ञे कर्मणि नियम:, अन्यत्रानियम:) என்றபடி காம்யகர்மங்கள் காலத்திற் பலிக்க வேண்டுமே யென்று வடமொழி தவிர வேறு பாஷைச் சொற்களை நோன்பு நடுவிலே சொல்லலாகா தென்று பிறரோடு பேசாமே மௌனமாயுமிருக்கின்றரே, இவர்களாவர் பகவதனுபவ

உள்ளே புகுப்படி மனத்தைத் திறக்காதவர். இவர்கள் அவனுடைய அருமையை அறியாதவராயினும், அந்த நாராயணன் நம்மைப் போன்ற நீசர் போற்றினாலும் பல னெல்லாமளிப்பவன்.

மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேऽபி ஸ்யு: பாபயோநய: ।
ஸ்த்ரியோ வைச்யா: ததா சூத்ரா: தேऽபி யாந்தி பராம் கதிம் ॥

(मां हि पार्थ व्य:पाश्रित्य येऽपिस्यु: पापयोनय: । स्त्रियो वैश्या: तथाशूद्रा: तेऽपियान्ति परां गतिं ।।)

எனவருளினவனுயிற்றே. அவ்வளவு புண்ணியன்அவன். ஆல்–ஆச்சரியம், அவன்கல்யாண குணங்களை நினைக்கும்போது மயிர் சிலிர்க்கின்றதே. நீ கும்பகர்ணனுக்குமேல் தமோகுண முள்ளவனாகிலும் துயரம்பட வேண்டாம். அருங்கலமாய் தேற்றமாய் இரு. ஆசார்ய கடாக்ஷம் பெறுவதற்கு பாக்யமுள்ள உனக்கு ஏன் வருத்தம்? 'தர்சநாதேவ ஸாதவ:' (दर्शनादेव साधव:) என்றபடி பெரியோர்களின் கடாக்ஷம் பெற்றால் புனிதனாவாய். 'இவ்வளவு தமோகுணமுள்ள வனாகையாலே ருத்திரன்தான் பிறந்தபோது பார்த்திருப்பான். பகவானுடைய ஜாயமாந கடாக்ஷம் பெற்றிருக்க முடியாது. ஆக மோக்ஷம் ஏது' என்று மயங்கவேண்டாம். எப்படிப்பட்டவனும், 'அந்தே சேத் வயஸி ஸாதுவ்ருத்த: (अन्तेचेत्-वयसि साधुवृत्त:) என்றபடி வயது முதிர்ந்த பிறகுக் கடைசி காலத்தில் நல்லபடியாயிருந்தாற் கூட நற்கதியுண்டே. அதற்கு முன் எவ்வளவு தாமஸனாயிருந்தாலும் தேற வழியுண்டு. அவ்வண்ணமிருப்பவனுக்கு ஜாயமாந கடாக்ஷம் திண்ணமாக உண்டென்க. ஆகையாலே தேற்றமாய் வந்து கூடியிருந்து ஸ்ரீகோசத்தைத் திற; வாயையும் திற—மூடியுள்ள மனத்தையும் திற. ஹ்ருதய கமலத்தையும் திறவென்றவாறாகும்.

தோழிகளை யெழுப்புவதற்கான பாட்டுக்களில் முதலைந்து பாட்டுக்கள் ஆயின. இவ்வைந்துக்கும் மேலைந்துக்கும் ஒரு பாகுபாடு உண்டென்று, 'திருப்பாவைப் பாட்டாறைந்து' என்ற ஸ்ரீதேசிகனருளிச் செயலால் கருதப்பெற்றுள்ளதென முன்பே கூறினம். மணவாளமாமுனிகளும், 'கோதைத் தமிழ் ஐந்துமைந்துமறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு' என்று ஐந்தைந்தாகப் பாசுரங்களைப் பிரிப்பதையிசைந்து ச்லாகித்திருக்கிறார். ஆக இவ் விபாகத்திற்குக் காரணம் யாதென வாராய்ந்தபோது, முதல் ஐந்து பாசுரங்கள் விசேஷமாகக் கண்ணனோடு கலவியில்லாத புதியப் பெண்களைப் பற்றியவையென்றும், மேலைந்து பாசுரங்கள் கண்ணனிடம் சிறந்த அபிமானம் கொண்ட பெருங்குலத்திற் பிறந்த, அதற்குத் தக்க அவாவும், அழகும் நாவீறு முள்ள நல்ல பெண்களைப் பற்றியவை யென்றும் கூறலாம். முதலைந்தில், 'பிள்ளாய், பேய்பெண்ணே', கோதுகலமுடைய பாவாய்' என்றவிடங்களிலே இதனை விவரித்துள்ளோம். நாலாம் பாசுரத்துப் பெண் ஐஹிகபோகங்களிவிடுபட்ட குலத்தைச் சேர்ந்தவள். ஐந்தாம் பாசுரத்தில் சுவர்க்கமென்ற ஆமுஷ்மிக போகத்திலிழிந்த குலத்தைச் சேர்ந்த பெண் சொல்லப்பட்டாள். ஆக இவர் கண்ணனோடு ஸம்பந்தம் மேலுள்ளாரைப் போற் சிறந்த வகையிலில்லையாம். 'குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே' 'நற்செல்வன் தங்காய்', 'கள்ளந்தவிர்ந்து கலந்து', 'நாவுடையாய்', 'நானே தானுயிடுக' என்றவற்றை உன்னினால், நற்குலத்திற் றோன்றி நல்ல அநுபவமுள்ளவர் மேலைந்து பாசுரப்பெண்கள் என விளங்கும். மேலும், முன் பாசுரங்களிலே, 'வாசல் திறவாதார்', 'மணிக்கதவம் தாள் திறவாய்', 'தேசமுடையாய் திற' என்றதாலும், 'உன்னைக் கூவுவான்' என்று வெகு தூரத்தில் இருந்து அழைப்

பது தோற்றுவதாலும் வாசக் கதவையே தாளிட்டு வைத்தவர்கள் அவர்களெனத் தெரிகிறது. இப்படியிருக்க, 'பிள்ளாய்' என்றபடி மிகப் புதியவளாகக் கருதப்பட்டவள் கதவைத் திறந்து வைத்திருந்தவ ளல்லளெனத் தன்கடையே தெரியலாகும். 11-ம் பாசுரத்திலோ, 'நின்முற்றம் புகுந்து' என்று உள் முற்றத்திற் புகும்படி வாசல் திறந்திருப்பது விளக்கப் பெற்றது. 12-ம் பாசுரத்துப் பெண்வீட்டிலும் பால் சோர இல்லம் சேறானதால் உள்ளே நிற்கமாட்டாமே வெளியே நின்றார்களே யல்லது கதவு திறக்கப்படாததாலல்ல. மேலுள்ள மூன்று பெண்களும் விழித்துக்காத்துக் கொண்டிருந்வர்களாகையாலே கதவைத் திறந்து வைத்தவர்களே யென்று தெளியலாம். இது பிறகு உரையிலும் விவரிக்கப்படும். இவ் அமைப்பு உதயகாலம் மேன்மேல் நெருங்குவதற்கு இணங்கியதுமாம். ஆக இவ்வண்ணமும் இவ்வைந்து பெண்களுக்கு வாசி காண்பது. (10)

இவர்களில் பல இல்லத்தாரின் ப்ரேமைக்கிடமான ஒரு பொற்கொடியை யழைப்பது பதினொன்றாம் பாசுரத்திலுள்ளது—

11. கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்து, நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டிநீ
எற்றுக்குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

கன்று—கன்றுகளோடு கூடிய
கறவை—கறக்கும் மாடுகளின்
பல கணங்கள்—அனேக கூட்டங்களை
கறந்து—கறந்து கொண்டு
சென்று—ஊருக்குள் சத்ருக்கள் நுழைவதற்கு முன்னமே அவர்களிடம் போய்
செற்றார்—சத்ருக்களினுடைய
திறன்—வலிவெல்லாம்
அழிய—அழியும்படி
செரு செய்யும்—போர் புரிபவர்களும்
குற்றம் ஒன்று இல்லாத | ஒரு தோஷமுமில்லாதவர்களுமான
கோவலர் தம்—கோபாலரைச் சேர்ந்த
பொன் கொடியே | பொன்னாலான கொடி போன்ற பெண்ணே!
புற்று—புற்றின் மேல் தெரியும்
அரவு—பாம்பு போன்ற
அல்குல்—அரையின் முன்பாக முள்ளவளும்

புனம் மயில் | காட்டிலுள்ள மயில் போன்றவளுமானவளே!
போதராய்—வருவாயாக.
சுற்றத்து | உறவினரான
தோழிமார் | தோழிகள்
எல்லாரும் யாவரும்
வந்து நின் முற்றம் புகுந்து | வந்து உனது இல்லத்தினுள்ளே முற்றத்திலே புகுந்திருந்து
முகில் வண்ணன் | மேக வர்ணனான எம்பெருமானின்
பேர் பாட | திருநாமங்களைக் கீர்த்தனம் செய்யும் போது
செல்வம் பெண் டாட்டி நீ | அதை யனுபவிக்க பாக்யம் பெற்ற பெண்மணியான நீ
சிற்றாதே—அசையாதே
பேசாதே—பேசவும் செய்யாதே
உறங்கும் பொருள் ஏற்றுக்கு | எதற்காக உறங்குவதோ?
ஏல் ஓர் எம் பாவாய்.

கற்றுக்கறவை — கன்றில்லாத போது கறத்தல் கூடாதாகையாலே கறவைகள் கன்றுகளோடு கூடியே யுள்ளனவென்றது. கண்ணனின் கடாக்ஷத்தாலே ஒரு கறவைக் காவது கன்றில்லாமலிருந்ததில்லை. ஒரு ஸமயம் அகாஸுரனென்பவன் மலைப்பாம்பாகி மலையின் பெருங்குகை போலத் தன் வாயைத் திறந்துவைத்திருந்து அவ் வாயில் வீழ்ந்த கன்றுகளையும் அவற்றை மேய்க்கும் பிள்ளைகளையும் விழுங்கினான். அப்போழ்து கண்ணன் அதன் கழுத்திற் புகுந்து வளர்ந்து அதன் தலையைப் பிளந்து பிராணனைப் போக்கிக் கன்று களையுமவர்களையும் காத்தருளினான். அதனால் கறவைகள் கன்றுகளுள்ளனவே யாயின. மற்றொரு ஸமயம் பிரம்மதேவனே கண்ணனின் லீலையைக் கண்டு களிக்க விசைந்து, பிள்ளைகளோடு அவன் நதியின் நடுவிலே தயிரன்னம் புசித்திருந்தபோது தெரியாது வந்து கன்றுகளனைவற்றையும் கொண்டுபோய் ஒரிடத்தில் ஒளித்துவிட்டான். பிறகு பிள்ளைகளையும் கண்ணன் கன்றுகளைத் தேடும் ஸமயத்திலே அபஹரித்துப் போனான். அப்போது ஸர்வசக்தனான கண்ணன் தானே எல்லாக் கன்றுகளாகவும் எள்ளளவும் ஏற்றத் தாழ்வின்றி உருவமெடுத்து விளங்கி, கறவைகளும் தம் கன்றுகளென்றே நினைக்கும்படி நடந்துகொண்டானாகையாலும், இதனைக் கண்டு வியந்து தனது ஸத்யலோகம் சென்ற பிரமனை அவனது ஆஸனத்திலே அவன் போன்ற உருவமெடுத்து வீற்றிருந்து கொண்டு வாசற்காப்பாரை விட்டு விரட்டிப் பரிபவிக்க, அவனும் கண்ணனைத் தண்டனிட்டுத் தான் அபஹரித்துப்போன கன்றுகளையும்பாலர்களையும் திரும்பஸமர்ப்பித்ததாலும் அங்கெல்லாக் கறவைகளும் கற்றுக் கறவைகளே யென்றபடி. இங்ஙனம், 'இளங்கற்றெருமை' என்ற விடத்திற் போலே இங்கும் கன்றுகளை யுடைய கறவை யெனப் பொருள் கூறியாயிற்று. இனி, கன்றுகளாகிய கறவைகள் கற்று கறவைகள் என வுரைப்பதுமுண்டு. வயது முதிர்ந்த கறவைகளும் கண்ணனின் கடாக்ஷத்தாலே கன்றுகளாகவே இளம்பருவ முள்ளன வாகவே யிருந்தன வென்றபடி. நந்தகோபர் வ்ருத்தரான பிறகு பிறந்த கண்ணன் தன் தாயான யசோதையைத் தன்னைப் பால் முதலியன அளித்துப் போஷிக்கப் பாங்காம் படி இளவாய்ச்சியாகவே யிருக்க அருளியதுபோல் கறவைகளுக்கும் அத் தன்மையை யருளினானென்க. கணங்கள் பல—திரள்களையும் பலவாகச் சொன்னதாலே சாதி, நிறம் முதலான பாகுபாடுகளைக் கொண்டு திரள் திரளாகப் பிரித்திருப்பதும், திரள்கள் கூட எண்ணவரியன வென்பதும் விளங்கும். கறந்து — கறந்தபிறகே போர் புரியவேண்டு மென்ற வ்யவஸ்தை யிராவிடினும் கறப்பது போர் புரிவதற்கு முன் நடத்தக்கூடியதாகை யால் கறந்து என்னலாம். ஸ்வதர்மத்தை விடாது செய்துகொண்டு அதிகப்படியான கார்யங்களையும் செய்துவந்தன ரென்றதுமாம். கற்றுக் கறவைகளான படியாலே கறக்கா மல் கன்றுகளை விட்டாலும் கன்றுகளுக்குப் பால் போதுமானதற்கு மேற்பட்டு அஜீரண மாம். கன்றுகளைக் கட்டி வைத்தாலும் கேடாம். ஆகையால் அவற்றைக் காப்பதைத் தங்களைக் காப்பதற்கு மேற்பட முக்கியமெனக் கருதி முன்னம் அதை நடத்துவரென்னலு மாம். முன்னே எருமைகள் பரந்தன வென்றார். இப்போது கறவைகளைக் கறக்கும் காலமும் கடந்துவிட்டதெனக் குறித்தனர் போலும். சென்று--கறவைகளை மேய்க்கக் கானம் சென்று அங்கே என்றபடி. இது கறந்தபிறகே யாமாகையாலே கறந்து என வினை யெச்சமும் பொருந்திற்று. இனி, செற்றாரைச் சேரிக்குள் புகவிட்டால் ஸ்த்ரீபாலவ்ருத்தர் களுக்கெல்லாம் வதையா மென்று, கௌரவர்கள் குருக்ஷேத்ர மென்ற விடம் சென்று செருச் செய்தாற் போலே சேரிக்கு வெளியிலேயே அவர்களைத் தகைத்துப் போர் புரிவ ரென்றதுமாம். செற்றார்—தாங்கள் ஹிம்ஸிக்க முன் போவதில்லை. அவர்கள் பீடிக்க வந்ததாலே போரைச் செய்தனரென்றதாம். திறலழிய—அவர்களின் உயிர்மாய்த்தலில் இவர்கள் முயல்வதில்லை. அவர்களை யழிக்காமல் திறலை மட்டு மழிப்பர்.

ஆகில் வைச்யரான இவர் க்ஷத்ரியதர்மத்தைப் பற்றலாமோ? ஆபத் காலத்திலும், 'ஆபத்ஸு அநந்தரா வ்ருத்தி:' (आपत्सु अनन्तरा वृत्तिः) என்று மேல்வர்ணத்தார்க்குக் கீழ் வர்ணத்தாரின் வ்ருத்தியே கொள்ளத்தக்கதா மெனில், இது தநுர்வேதாதிகளில் க்ஷத்ரியருக்குச் சொன்னமுறைபடி நடத்தும் போரன்று; எதிரிகள் வந்து மேலே விழும்போது 'ஸர்வதா ஏவாத்மாநம் கோபாயேத்' (सर्वदा एवात्मानं गोपायेत्) என்றபடி தங்களுக்கு வந்த விபத்தைத் தாங்களே தத்காலோசிதமாக நீக்கத் தங்கள் தேஹபலம் முதலானவற்றை உபயோகிப்பது மாத்திரம். ஆகவே இவர்கள் கூர்வேல் தரிப்பதும், குத்துச் சண்டை பழகுவதும், அதனால் குற்ற மில்லை யென வருள. குற்றமொன்றில்லாத என்றது. நித்யநைமித்திகங்களைச் செய்வது மட்டுமின்றி நிஷித்தங்களினின்று விலகினவர், பகவத் பாகவதாபசாரம், அஸஹ்யாபசாரம் முதலியன இல்லாதவ ரென்னலுமாம். இங்ஙனம் தயையும் தீரத்தன்மையும், தோஷமற்றமையும் சொல்லப்பெற்றன. இவ்வளவால் ஸாது பரித்ராணமும், துஷ்டரைத் தமிப்பதும் செய்யும் அகிலஹேயப்ரத்யநீகனான கண்ணனுக் கொத்த கோவல ரிவரென்றதாயிற்று. கோவலர்தம்—பல குடும்பத்தாரின் ப்ரேமைக்குப் பாத்திரமான அருமைப்பெண் ஒருத்தி இவள்.

ஐச்வரியமும். அபிஜாதகுலமும் போல் அழகும் சேர்ந்ததென்ன பொற்கொடியே இத்யாதி ஸமுதாய சோபையைச் சொல்லி முக்கியமான அங்கத்தின் அழகும் மேலே குறிக்கப்படுகிறது. புற்றரவு—படமெடுத்த பாம்புபோல் என்பதற்காக புற்றரவென்பதாம். புற்றில் முழு அங்கத்தையும் மறைத்துக் கொண்டு தலையை மட்டும் நீட்டிப் பாம்பு படமெடுத்தால் அதற்கு ஒக்குமிதென்றதாம். அகன்ற அல்குல் உற்றவளென்றபடி. அரவுக்குச் சமமென்றதாலே அன்யர் அணுக முடியாதப்டியுள்ள பாதிவ்ரத்யம் தோற்றும். அல்குலாவது அரையின் கீழ் பெண் குறிக்கு மேலுள்ள மடியென்ற பாகம். இங்கே ரோமாவளியை அரவு போன்றதாக முதலிற் கூறி. பிறகு அரவின் படம் போலொளிபெற்று ஸங்கோசவிகாஸங்களைப் பெறும் நிதம்ப ப்ரதேசமென்றார்கள் பரகால ஸ்வாமிகள். அங்கத்தின் அழகுள்ள வகையைக் குறித்துவிட்டு, அங்கத்தோடு சேர்ந்த கூந்தலின் பெருமையைக் குறிக்க. 'புனமயிலே' என்றதாம். பாம்பைச் சொன்னபோது பாம்புக்குப் பகையான புனமயிலும் நினைவுக்கு வரத் தகும். இதனால் சேராச் சேர்த்தியை இவளிடத்திலே சொன்னதாம். இங்கே அல்குலையும் கூந்தலையும் குறித்ததற்குக் காரணமு முண்டு. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் கண்ணனோடு கலவி யுண்டவளாகவே இவர்களுக்குத் தோன்றுவதாயிருக்க இவ்வளவு சிறப்பு வாய்ந்த இவளிடம் அப்படி நினைக்காமலிருக்க முடியுமா? படுக்கையிலுறங்கும்போது ஆடையவிழ்ந்து அல்குல் தெரிந்தது கூந்தலும் கலைந்திருந்தது. ஆகவே அவை யிரண்டையும் சிறப்பாகக் கூறிக் கண்ணனோடு கலவியா லிங்கனமானதாக வைத்துச் செல்வப் பெண்டாட்டி நீ என்றார்கள். அன்றி, இராமபிரான் பம்பா ஸரஸ்ஸுக்குச் சென்றவிடத்தில் அந்தக் காலத்தில் மயில் தோகைகளை விரித்தாடுவதை வர்ணித்து அம்மயிலுடன் கூட ஆடிவரும் பெண்மயிலைப் பற்றி,

'பச்யலக்ஷ்மண ந்ருத்யந்தம் மயூரம் அநுந்ருத்யதி । சிகீநீ மந்மதார்த்தைஷா
பர்த்தாரம் கிரிஸாநுஷு—மயூரஸ்ய வநே நூநம்- ரக்ஷஸா ந ஹ்ருதா ப்ரியா'

(पश्य लक्ष्मण नृत्यन्तं मयूरं अनुनृत्यति । शिखिनी मन्मथार्तैषा भर्तारं गिरिसानुषु ॥
मयूरस्य वने नूनं रक्षसा न हृता प्रिया) என வருளினர். ஆக நீ பெண்மயிலைப் போல் நடந்து கொள்ள வேண்டுமே யென்றதாம். தோகைகளுடன் விளங்கும் பர்த்தாவுடன் பெண்மயில்

கூடிக் களிப்பது போல் மயில் கழுத்து நிறனாய், தோகைகளுடன் விளங்கும் கண்ண பிரானைக் கண்டு கோபிகள் காதல் கொள்ளுகின்றன ரென ஸ்ரீ தேசிகனு மருளிச்செய்தார்.

'ஹ்ருதி முக்தசிகண்ட மண்டநோ லிகித: கேந மமைஷ சில்பிநா ।
மதநாதுர வல்லவாங்கநாவதநாம்போஜதிவாகரோ யுவா'' ॥

हृदि: मुग्धशिखण्डमण्डनो लिखितः केन ममैष शिल्पिना ।
मदनातुर वल्लवाङ्गना वदनांभोज दिवाकरो युवा ॥

என்ற கோபாலவிம்சதி ச்லோகத்தில், வீட்டுமயிலாகில் தன்னிஷ்டப்படி நடந்து கொள்ள முடியாதபடி யிருக்கும். காட்டு மயிலைத் தடுப்பாரில்லை. கோவலரெல்லோரும் கண்ணனிடத்திற் காமுற்ற இவளுக்கு அனுகூலரே. முன் கூறின பெண்களின் குலத்தார்க்கும் இவர்க்கும் வாசி யிது. மேலும் வீட்டில் மயில் மனிதரைக் கண்டு விரிக்கும் தோகை வெகு அழகாயிருக்கும். முகில்வண்ணன் இத்யாதி—பொற்கொடியான நீ கொள்கொம்பைக் கொண்டு தானே வளரவேண்டும். மின்னற் கொடி முகிலோடு சேர்வது போல் சேர வேண்டாவோ? முகிலைக் கண்டால் மயில் கூத்தாடுமே, நாங்கள் பாட நீ ஆட வேண்டுமே. சிற்றாதே யிருக்கிறாயே. விரைவில் அசைய முடியாவிட்டாலும் அங்கிருந்தே பேசலாமே. ஆடவும் பாடவும் உனக்கு யோக்யதை யில்லையா? அச் செல்வத்தால் நீ பேர் பெற்ற பெண்மணி யாயிற்றே யென்றபடி.

எற்றுக்குறங்கும் பொருள்—உறங்குவதற்குப் பலனுண்டு. அங்கங்களுக்கு ஆயாஸம் நீங்குவதாமது. ஆயாஸமின்றி உறங்குவதற்கு ஆலஸ்யம் தான் பலன். அது பொருளாமோ? கண்ணனைக் கேட்டனுபவித்துப் பிற்றேறிக் கூத்தாடவும் பாடவும் செய்வதே பொருளாமென்பதற்காக பொருள் என்ற பதம் மிகுதியாகக் கூறப்பெற்றது. உனக்கு ஒரு குறையுமில்லை. கண்ணனும் பவ்யன். தோழிகளும் சேர்ந்தனம். பரம் பொருளுக்குக்கும் பொருளாகிய நீ எற்றுக் குறங்கு மென அன்வயமு மாம்.

உட்பொருள்;—கற்று—ஸத்ஸம்ப்ரதாயமடியாக கற்கவேண்டிய வற்றைக் கற்று ன்று என்னுமே சற்று என்றது இவ்வுட்பொருளுக்காகத் தான் கறவைக்—கணங்கள் அன்றீன்ற கன்றுக்கிரங்கும் தேனுவைப் போன்று வத்ஸலரான ஆசார்யரே கறவைகள். கற்றுக்கறவைகள் சிஷ்ய ஸம்ருத்தியுள்ள ஆசார்யர்களென்னவுமாம். பலகறந்து—பஹுப்ய: ச்ரோத்வ்யம்' 'பஹுதா ச்ரோத்வ்யம்' (बहुभ्यः श्रोतव्यं, बहुधा श्रोतव्यं) என்றபடி பல பேரிடம் பேட்டு கணங்கள் பல கறந்து—கணங்கள் கணங்களாகப் பல காலம் கேட்டு; பஹுதா (बहुधा) ச்ரோதவ்ய மென்றபடியும் கேட்டு என்றதாம். க்ஷணச: கணசச்சைவ வித்யாமர்த்தஞ்ச ஸாதயேத்' 'ஸர்வத: ஸாரமா தத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத:' (क्षणशः कणशश्चैव विद्यामर्थं च साधयेत्. सर्वतः सारमाददयात् पुष्पेभ्यश्च षट्पदः) என்றபடி பலவகை ரஸக்கணங்களைச் சேர்த்துத்தேனடை கட்டி மிக்க சுவையுடையதும். சிறந்த மருந்துமான தேனைத் தேனீக்கள் ஸ்ருஷ்டிப்பது போலே தம் குரு பரம்பரையி லேற்பட்டிருக்கும் பலவகைக் கிளைவகுப்புகளிலுள்ள எல்லா பெரியோர்களிடமுமணுகி ஸாராம் சங்களைச் சேகரித்து உலகுய்யுமாறு ஓர் உருவம் ஏற்படுத்திக்கொண்டு உபந்யஸிப்பது உயர்ந்த பண்டிதர்களின் கடமையாம். அப்போது ஸர்வ சாஸ்திரங்களிலும் சிதறிக் கிடக்கும் ஸாரமெல்லாம் வேதாந்தார்த்தத்தைச் சேர்ந்து இதனைச் சிறப்பிக்கும். செற்றார் பாஹ்யர்களும்குத்ருஷ்டிகளும். 'யா வேதபாஹ்யா. ஸ்ம்ருதயோ யாச்ச காச்ச குத்ருஷ்டய:

(या वेदवाह्याः स्मृतयो याश्च काश्च कुदृष्टयः) என்றது காண்க. சென்று — திக்விஜயார்த்த மாகக் கூட்டமாகப் புறப்பட்டு, 'திகந்த்வ்யாபிநீ பூயாத் ஸாஹி லோகஹிதைஷிணீ' (दिगन्तव्यापिनी भूयात् साहिलोकहितैषिणी) என்றபடி உலகத்தின் ஹிதத்தை உத்தேசித்து எங்கும் சென்று என்றபடி. இப்படி மதாந்தரத்திலிழிந்தவரை வென்று பீடிப்பது குற்ற மன்றோ? வைராக்யமுற்றவர் பிறரைப் பரிபவிக்கப் புறப்படலமோ என்று கலங்காமைக் காக, குற்ற மொன்றில்லாத என வருளினது. தத்துவம் தெளியாத ப்ரஜைகள் கடைசி யாக ஆசுரப் பிறப்புப் பெறுவார்கள். அப்போது,

'ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி |
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம்' ॥

(आसुरीं योनिमापन्ना मूढा जन्मनि जन्मनि । मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम्)

என்றபடி எம்பெருமானின் சீற்றத்திற்கில்க்காவார். ஆகையால் அவர்கள் அழியாதபடி அவர் துர்ப்புத்தியை யழிப்பது நலமென்று நல்லருளால் ஏவப்பட்டு நாடெங்கும் ஸஞ்சரிக் கும் ஸத்துக்களுக்குக் குற்றமேதென்றபடி. கோவலர்—கோவாவது வாக்கு = வேதம். அதை அங்கங்களோடு காப்பவர் கோவலர் — அவர்களுக்குப் பொற்கொடி = அவர்களைக் கொழுகொம்புகளாகக் கொண்டு வளரும் அழகிய கொடி. தங்கக் கம்பியாய் பவ்யப்பட்டி ருப்பவ னென்னலுமாம். அவர்களாலே அறிவையும் வல்லமையையும் கண்டு சிறந்து அபிமானிக்கப் பெற்றவன். அவர்களின் அனுக்ரஹத்தாலே பழுதற்ற பாரமைகாந்த்யம் பொருந்தி ஷோடசவர்ணத்தோடொக்குமவன். புற்றரவு — புற்றிலுள்ள பாம்பு போல் அடக்கமாகவிருப்பவன். இப்படி, 'பால்யேந திஷ்டாஸேத்' (वाल्येन तिष्टासेत्) என்றவா றிருந்தாலும் உண்மையில் உள்ளே மறைந்துள்ள மிகுந்த சக்தி வாய்ந்தவன். நீர் பூத்த சாம்பலைப் போன்றவன். புனமயில்—பகவானை யனுபவிக்க நேர்பட்டபோது ஆடிப்பாடி ஆனந்திப்பவன். நின்முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட, இப்படிப்பட்ட நீர் அனுபவிப்பவையும் அருளிச் செய்தவையுமான ப்ரபந்தங்களிலே இறங்கி, நீர் கொண்ட மேகம் போலே இருக்கும் உம்முடைய ஔதார்யத்தை யெடுத்துப் பாடி வரும்போது. சிற்றுதே பேசாதே — அடக்கத்தினாலும், அகங்கார மின்மையாலும் அசையாமலும் பேசா மலுமிருந்து கொண்டு எற்றுக் குறங்கும் பொருள்—நீரே எங்களுக்குப் பெரும் நிதி உமது அருளிச்செயலே எமது பொருள். பொருளாகிய நீர் உறங்கலாமோ. எங்களோடு சேர்ந்து எங்கள் அனுபவத்திலுள்ள குணதோஷங்களைக் கூறலாகாதோ என்றவாருகுக (11)

வெகு கோவலருள்ள குலத்திற் பிறந்துள்ள சிறந்த பெண் ஒருத்தியைக் கீழே எழுப்பினர். வீட்டுக்கொருவனாகவே பிருந்து வருமவன் குலத்தி லங்ஙனமே சிறந்து விளங்காநிற்கு மொருத்தியை எழுப்புகின்றனர் மேல் —

12. கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலைவீழ நின்வாசற் கடை பற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாருமறிந்தேலோ ரெம்பாவாய்.

இள கன்று—மிகச் சிறிய கன்றுகளையுடைய
எருமை—எருமைகளானவை
கன்றுக்கு—தம் கன்றுகளைப்பற்றி
நினைத்து—மனத்தில் நினைவு கொண்டு
கனைத்து—கதறிக் கொண்டு
இரங்கி—மிகவுமிரக்க முற்று,
முலைவழி ஏ—(தத்க்ஷணமே) அவற்றின் முலைவாயிலாகவே
பால்—பாலானது
நின்று சோர—இடைவிடாது பெருகிவர, (அதனால்)
இல்லம் | யாவனொருவனுடைய வீட்டை
நினைத்து | நனையவைத்துச் சேறுகவு
சேறு | மாக்குகின்றனவோ,
ஆக்கும் | அந்த
நல் செல்வன்—சிறந்த செல்வத்தை யுடையவனுடைய
தங்காய்—தங்கையானவளே! (நாங்கள்)
நின் வாசல் கடை—உனது இல்லத்தின் புறவாயிலே
பனி—குளிர்காலத்திய பனியானது
தலை—எங்கள் தலை மீது
விழ—விழுந்து கொண்டிருக்க
பற்றி—சேர்ந்து, விட்டுவிடாமல்
தென்—அழகிய
இலங்கை—லங்காநகரத்திற்கு
கோமானை—அரசனான ராவணனை
சினத்தினால்—கோபத்தாலே
செற்ற—கொலை செய்தவனும்
மனத்துக்கு | மனத்துக்கு இன்பமூட்டு
இனியானை | கின்றவனுமான ஸ்ரீராமபிரானைப் பற்றி
பாட உம்—பாடிக்கொண்டிருக்கும் போதும்
நீ வாய் திறவாய்—நீ வாயைத் திறக்கிறு யல்லை.
இனி தான்—இவ்வளவு நாங்கள் சொன்ன பிறகாவது
எழுந்திராய்—எழுந்திருப்பாயாக.
ஈது—இது (நீ உறங்குவதானது)
என்ன பேர் | எவ்வகையான
உறக்கம் | பெருந்தூக்கமோ?
அனைத்து | எல்லா வீடுகளிலிருப்ப
இல்லத்தாரும் | வரும்
அறிந்து—அறிந்து கொண்டார்களே.
ஏல் ஓர் எம் பாவாய்.

இளங்கற்றெருமை — பசுங்கன்றுகளைவிட எருமைக் கன்றுகளுக்கு ஜீர்ண சக்தி குறைவாம். ஆகவே இளங்கன்றுகளை விடாமல் ஜாக்ரதையாகக் கட்டி வைத்திருப்பது. சிறு வீடு மேய்வான் பறந்த எருமைகள் கன்றுகளை நினைத்துக் கனைத்து இல்லம் திரும்பி வந்து சேர்ந்தன. அவை வருவதற்குள்ளாகப் பசுக்களைக் கறப்பது கீழே சொல்லிற்று. கன்னிகள் அழைக்கப் போன நாளிலே கறப்பவன் வேறேதேனும் முக்கியமானதொரு கார்யத்தைக் குறித்து அல்லது கண்ணனின் நியமனப்படி ஏதேனும் கைங்கர்யத்தி லீடு பட்டு வெளியிற் சென்றிருப்பதாலோ, ஒருவனாயிருப்பதாலே ஒவ்வொரு எருமையாகக் கறந்து வருவதாலோ கறக்கும் காலம் கடந்து விட்டதால், எருமைகள் முலைக் கடுப்புற்றதாலும் கன்றுக்கிரங்கினதாலும் பாலை அடக்கக் கூடவில்லை. ஆகவே பால் தானே பெருக ஆரம்பித்தது. அதனால் உள் முற்ற மடங்கலும் நனைந்து விட்டது. அந்த விடத்திலே எருமைகள் இங்குமங்கும் மேன்மேல் பாலைப் பெருக்கிக் கொண்டே அலைந்ததால் இல்லம் சேறாகிவிட்டதென்றபடி. நினைத்து கனைப்பதற்கு முன்னமே கன்றுகளை நினைப்பதைக் கொண்டு நினைத்துக் கனைத்து என அந்வயம் கூறினம். கன்று வந்து ஊட்டுவதாகவே நினைத்து என வுரைக்கில் நனைத்து என்பதோடே சேரும். முலைவழியே—முலையினின்று கறப்பவர் கை வழியாகவோ, பாத்திரத்தின் வாயிலாகவோ வன்றி நேராக முலையினின்றே என்றபடி. நின்று—இடைவிடாமல், பெருகும்போது பார்ப்போர்க்கு அந்தத் தாரை நிற்பதுபோல், கோல், போல், காணப்படும். நற்செல்வன்—முன்னே கோவலருக்கு தங்கள் கிருத்யத்தைச் செய்கை செய்யாதவரைச் சிக்ஷிக்கை, அக்ருத்யம் செய்யாமை. ஐச்வரியம் இவை முதலியவற்றைச் சொல்லி, செல்வப் பெண்டாட்டி என்று அப்பெண்ணைச் சொல்லும்

போது செல்வம் என்று அவற்றை யெல்லாம் குறித்தனர் போலும். இங்கும் நற்செல்வன் என்று அவற்றை யெல்லாம் சொன்னபடி.

இவனுக்கு இவ்வளவு செல்வத்திற்குக் காரணம், இவன் கண்ணனுக்கு அந்தரங்க தாஸனாய், 'லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:' (लक्ष्मणो लक्ष्मिसंपन्नः) என்னப்பட்ட இளையபெருமாள் போலே அவனுடைய கைங்கர்யமே பெரிதாக நினைத்திருந்ததால், பிறந்த விலக்ஷண கடாக்ஷ மாகலாம். செல்வமாவது ஸம்பத்து. ஜ்ஞாநமே நல்ல ஸம்பத்து. அதிலும் ப்ரம்மாநுபவம். அவ் வனுபவ பரிவாஹமான கைங்கர்யம் மிகச் சிறந்த ஸம்பத்து. இந்த நற்செல்வன் என்ற பதம் ச்ரீதாமன் என்ற கண்ணனின் தோழனைச் சொல்கிற தெனப் பூர்வர் உரைத்தனர். ச்ரீயென்பது செல்வத்தைக் குறிப்பதால் அதற்குப் பொருத்தமு முளது. 'கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து' என்றபடி கோவலர் ஸ்வதர்மத்தை விடாமற் செய்யும்போது இந்த நற்செல்வன் மட்டும் எருமை சேருக்கும் வரை வெறுமனே இருப்பது தகுமோ வென்னில், இதற்குப் பரிஹாரம் முன்னமே சொன்னோம். ஆலஸ்யத்தாலே விடுகை கூடாதாகிலும் பெருமாளுடைய கைங்கர்யத்தி லிழிந்திருப்பதாலே, இளைய பெருமாள் பெருமாளைப் பிரியமாட்டாமையாலே அரண்யத்திற்கு உடன் சென்று அக்னிஹோத்ரம் முதலிய செய்யா தொழிந்ததுபோல், விடுகை கூடு மென்பர். இதன் கருத்தாவது --ஆஜ்ஞா கைங்கர்யம், அநுஜ்ஞாகைங்கர்ய மென்ற இரண்டில்,

'ஆஜ்ஞா கைங்கர்ய வ்ருத்திஷ்வநககுருஜநப்ரக்ரியாநேமி வ்ருத்தி:
ஸ்வார்ஹாநுஜ்ஞாதஸேவாவிதிஷு ச சகநே யாவதிஷ்டம் ப்ரவ்ருத்த:'
(आज्ञाकैङ्कर्यवृत्तिष्वनघ गुरुजनप्रक्रिया नेमिवृत्तिः, स्वार्हानुज्ञात सेवा विधिषु च शकने यावदिष्टं प्रवृत्तः)

என ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தபடியும், 'மநீஷீ வைதிகா சாரம் மநஸாऽபி ந லங்க்கயேத்' (मनीषी वैदिकाचारं मनसापि न लंघयेत्) என்றபடியும் ஆஜ்ஞா கைங்கர்யம் ப்ரதானமாகும். ஒழிந்த காலத்திலே அநுஜ்ஞா கைங்கர்யம் கூடுவதாயிருந்து விருப்பமு மிருந்தால் செய்யத்தக்கதாம். ஆகிலும் சிற்சில விசேஷ நிமித்தங்கள் நேர்ந்து தன் இடம் விட்டு வேறிடம் போகப்பட்டவர் பத்னியோடு கூடினவிடத்திலே செய்யவேண்டும். அக்னிஹோத்ரம், ஔபாஸனம் முதலியவைகளை விட்டு ஸந்த்யாதிகளை மட்டும் செய்துவருகிற கணக்கிலே இளைய பெருமாள் இராமனுக்கு ஸஹாயமாய் பேரரண்யத்திலே அவருடைய ப்ராணரக்ஷணத்திற்காகப் புறப்படவேண்டிய தாயிற்றென படியாலே அக்னிகார்யங்களை விட்டொழிந்தார். அக்னிஹோத்ராதி தர்மங்களுக்கு இருவரும் சேர்ந்திருக்கை நிமித்தமாகும். நிமித்தமில்லாத போது செய்யாமலிருப்பது தவறாகாது. அதுபோல் இந்த நற்செல்வனும் கண்ணன் ஏவின கைங்கர்யம் முக்கியமாக இந்நோன்பு நாளிலே செய்யவேண்டி அதற்காக வெளியிலே சென்று வாராதொழிந்ததால் கறவா தொழிந்திருக்க வேண்டுமென்றதாம். அருகில் இருந்து கறக்காத போது குற்றம். ஸந்த்யோபாஸனம் முதலான ஆஜ்ஞா கைங்கர்யங்களிலும் சில காலங்களிலே சிறிது மாறுகையும் சாஸ்திரம் இசைந்ததே யாகும். பகவத் பாகவதாசார்ய கைங்கர்யங்களிலே ஸந்த்யாகாலம் வருவதற்கு முன்னர் இழிந்திருநதால் தொடங்கின கைங்கர்யத்தைப் பூர்த்தி பண்ணுமே நடுவே விட்டு விடுவது கூடாதாகையாலும், அநுஜ்ஞா கைங்கர்யமும் தொடங்கப் பெற்ற பிறகு ஆஜ்ஞா கைங்கர்யம் போலே செய்யப்பட வேண்டிய தாமாகையாலும் அதனை யொருபடி பூர்த்தி செய்து ஸந்தியாதிகளை கௌண காலத்திலே செய்வர். ஆஜ்ஞா கைங்கர்யம் தொடங்கப் பெற்று நடவாநிற்கச் செய்தேயும், ஏதேனும் சாஸ்த்ர ஸம்மதமான

ப்ரபல நிமித்த மேற்பட்டால் 'நித்யத்தைக் காட்டில் நைமித்திகம் ப்ரபலம்' என்கிற நியாயத்தாலே அதனை விட்டு பாகவத கைங்கர்யம் போன்ற நைமித்திகத்தை நடத்திப் பிறகு முன் தொடங்கினதை முடிப்பதும் சில போதுண்டு. இப்படிப்பட்ட விசேஷங்களில்லாத போது, அநுஜ்ஞா கைங்கர்யத்தி லிடுபாடென்கிற காரணத்தைக் கொண்டு விசேஷவிதி இராதபோது இஷ்டப்படி ஆஜ்ஞா கைங்கர்யத்தை விடுகை சாஸ்திர ஸம்மதமாகா தென்றவாறு ஆராய்க. அந்தந்த அநுஷ்டாந ஸந்தர்பத்திற்கேற்ப ஆராய்ந்து அது செய்யப் பட வேண்டும்.

நற்செல்வன்தங்காய்—அவனது தங்கையாய் அவனைப் போன்றவள் கண்ணனின் தாயாரான தேவகியாரை, கஞ்சன் தங்கை யென்று சொல்வது இசையாதிருக்குமா போலே யன்றே நீ ஒருவனுக்குத் தங்கையா யிருப்பது அவன் தங்கையான படியாலே அவனைப் போலே நீயும் கண்ணன் கைங்கர்யத்திலும், கண்ணனைச் சேர்ந்த பாகவதர் திறத்திலும் பெருங் கௌரவம் வைத்து அழைக்காமலே எழுந்துவர வேண்டாவோ வென்றபடி கீழ் பொற் கொடியே யென்றார்கள். இவளும் தங்கக் கம்பி போன்றவளாய் தங்கையானாள்.

'தேசே தேசே களத்ராணி தேசே தேசே ச பாந்தவா: தம் து தேசம் ந பச்யாமி யத்ர ப்ராதா ஸஹோதர:'. 'ந ஸர்வே ப்ராதரஸ் தாத பவந்தி பரதோபமா:'

देशे देशे कलत्राणि देशे देशे च बान्धवाः । तं तु देशं न पश्यामि यत्र भ्राता सहोदरः ॥
न सर्वे भ्रातरस्तात भवन्ति भरतोपमाः

என்று ராமன் ப்ராதாவைக் கொண்டாடின கணக்கிலே நற்செல்வன் உன்னைக் கொண்டாடும்படி யன்றோ நீ யிருப்பதென்றதாம். ராமன் லக்ஷ்மணனை ஸஹோதரப்ராதா என்று எங்ஙன மருளினர். பிந்நோதர ப்ராதா அல்லனோ அவன். பிதா வொருவனாகிலும் தாய்மார் வேறான போது பின்னோதரனென்று தானே சொல்வதென்னில், ஸஹோதர துல்யனெனப் பொருள் கொள்க. அன்றி, ஸஹ: அதர: எனப் பிரித்து, கைங்கரியம் தனியே யிருந்து செய்வதிலுள்ள கஷ்டங்களை யெல்லாம் ஸஹித்து ஸந்தோஷமாய்ப் பணி செய்பவனும், பிறரைக் கண்டு பயப்படாதபடிக்குப் பராக்ரமமும் உறுதியும் கொண்டவனுமாய் ப்ராதாவாயு மிருப்பவன் கிடைக்கமாட்டானென்றதுமாம். ஒரு தாய்க்கு, அல்லது ஒரு தகப்பனுக்காவது பிறந்து ஸஹோதரனாகாத குஹன் போன்றாரையும் ப்ராதாக்களாக ஸ்ரீராமபிரான் திருவுள்ளம் பற்றி யிருப்பதால் அப்படிப்பட்ட ப்ராதா தேசம் தோறும் கிடைக்கக் கூடுமாகையாலே இங்குள்ள சிறப்பைக் கூற லக்ஷ்மணனை ஸஹோதரனென்றதுமாம்.

வாசல் கடைபற்றி — இங்கும் நின்முற்றம் புகுந்து பாடலாய். கதவு திறந்து தானே யிருக்கிற தென்றே நினைத்தோம். ஆகிலும் எருமைகள் பாலைப் பெருக்கி சேருக்கி உள்ளே நுழையவிடாதபடி செய்திருப்பதால் புறவாயில் பற்றி நிற்கவேண்டியதாயிற்றென்றபடி.

முகில்வண்ண னென்றங்கே சொன்னபோது மனத்துக் கினியனான ராமனும் மனத்தில் தோன்றினான். அவனை நேராக இங்கே பாடுகிறோமென்றனர் சினத்தினாலித்யாதியால். அரண்யத்திலே ஸீதையைக் காணாதிருந்தபோது அங்கே யாரும் அவள் போன விடத்தை யறிவிக்கா மலிருக்கக் கடுங்கோபம் கொண்டு அவன் சொன்ன வார்த்தை,

"புரேவ மே சாருததீம் அநிந்திதாம் திசந்தி ஸீதாம் யதி நாத்ய மைதிலீம் |
ஸதேவ-கந்தர்வ-மனுஷ்ய-பந்நகம் ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம்."
पुरेव मे चारुदतीमनिन्दितां दिशन्ति सीतां यदि नाथ मैथिलीं ।
सदेव गन्धर्वमनुष्य पन्नगं जगत् सशैलं परिवर्त्तयाम्यहम् ॥

என்றதாம். அயோநிஜையாகப் பிறந்து ஸீதையென்னும் பெயர் பெற்று, மஹாதர்மிஷ்டராய் மிதிலைக்கு அரசரான ஜநகமஹாராஜரின் புதல்வி யெனப் புகழும் பெற்ற எனது மனைவியை அவள் புன்சிரிப்புடன் பழையபடி இருக்குமாறு ஒருவித குற்றமும் இல்லாதபடி காத்து என்னிடம் இப்போது கொடுக்காத பக்ஷத்தில், உடனே ஈரேழு லோகங்களும் லோகாலோகாதி மலைகளும் மற்றும் பலவுமுள்ள இந்த ப்ரபஞ்சத்தையே புரட்டி யடிக்கிறேன்பார் என்றதாம். அவ்வளவு சினத்தையும், அப்போது ஆபத்காலத்தில் அனுகூலமாய் நடத்திவரும் இளையபெருமாள் தற்சமயம் தணித்துவைத்தார்.

'கிம் தே ஸர்வ விநாசேந க்ருதேந புருஷர்ஷப |
தமேவ ச ரிபும் பாபம் விஜ்ஞாயோத்தர்த்துமர்ஹஸி.'
(किं ते सर्वविनाशेन कृतेन पुरुषर्षभ । तमेव च रिपुं पापं विज्ञायोद्धर्तुमर्हसि ॥)

ஒருவன் பாபம் செய்ய உலகெல்லாம் உயிர்விட்டொழிவதோ? கொண்டு போன பாபியைக் கூடிய சீக்கிரத்திற் கண்டு நீர் உசிதப்படி கண்டிக்கலாமே' என்று விண்ணப்பித்தார். அப்போது தணிந்த அச்சினம், பரிபவப்பட்டும் படியாத அக் கொடிய ராவணனைக் கண்டதும் கிளர்ந்த தென்றபடி.

தென்—தெற்கிலுள்ள; அல்லது அழகிய. அனுமனால் கொளுத்தப்பட்டுச் சாம்பலான இலங்கை மறுபடி புதுப்பிக்கப்பட்டு அழகு பொருந்தினது.

இலங்கை கோமானைச் செற்ற—விச்வாமித்ர மஹர்ஷி இராமனைத் துணையாக அழைத்தபோதே தசரதரிடம் சொன்னார்.

'ச்ரூயதே ஹி மஹாவீர்யோ ராவணோ ராக்ஷஸாதிப:—யதா ஸ்வயம் ந யஜ்ஞஸ்ய விக்நகர்த்தா மஹாபல: மாரீசச்ச ஸுபாஹுச்ச யஜ்ஞவிக்நம் கரிஷ்யத:',
श्रूयते हि महावीर्यो रावणो राक्षसाधिपः । यदा स्वयं न यज्ञस्य विघ्नकर्ता महाबलः ॥
मारीचश्च सुबाहुश्च यज्ञविघ्नं करिष्यतः)

யஜ்ஞத்தைக் கெடுக்க ராவணனே வரலாம்; இல்லையேல் அவனால் அனுப்பப்பட்டு ஸுபாஹு, மாரீசன் போல்வார் சிலர் வரலா மென்றவாறு. அங்கேயே ராவணன் வந்திருந்தால் அப்போழ்தே மாண்டிருப்பான். பிறகு ஜநஸ்த்தானவதம் நடந்தபோது கரதுஷணாதிகளுக்குத் துணையாக வந்திருந்தாலும் அவன் அவர்களோடு கூடவே சென்றிருக்கலாம். அங்கெங்கும் கண்ணுற் காணாதபடி அவன் இருந்தது. இவன் இலங்கைக்கோமானானபடியாலே இலங்கை பாழாளாகியே அழிய வேண்டுமென எம்பெருமானின் ஸங்கற்பத்தினாலே போலும். 'ஸபுத்ர பௌத்ரம் ஸாமாத்யம்' (सपुत्रपौत्रं सामात्यं) என்று ஸர்வ விநாசம் செய்யப்போவதாக முதலில் தேவதைகளிடம் அவன் ப்ரதிஜ்ஞை செய்தருளினனே.

மனத்துக்கினியானை—இது ராமசப்தார்த்தம். ரமயதீதி ராம: மனத்தைக் களிப்பிக்கின்றவன் ராமன். இத்தனை பேராகச் சேர்ந்து நாம் துன்பப் படும்போது தீரனாயிருக்கும் கண்ணனைப் போலன்றி ஒரே பெண்மணியின் துன்பம் தாங்காதே தீராச் சினத்துடன் ஸுக்ரீவனுக்குதவி, ஸேதுவைக் கட்டி ஸமஸ்தசத்ருக்களையும் அழித்த அவனல்லனோ மனத்துக்கினியான். ராவணனை நேரில் போர் புரிந்தபோது அவனுடைய தேர், கொடி,

குடை, கொடிமரம், குதிரை, ஸாரதி, கிரீடம் என்ருற்போலுள்ள எல்லாவற்றையு மழித்து விட்டு அப்போது ஒரே அம்பினல் அவனுயிரை வாங்க முடிந்திருந்தபோதும், 'ரிபூணமபி வத்ஸல:'' (रिपूणामपि वत्सल:) என்றபடி ஒருக்கால் தன் தசையைத் தானே தெளிந்து சரண மடைவானே வென வாசை கொண்டு,

> 'கச்சாநுஜாநாமி ரணர்திதஸ் த்வம் ப்ரவிச்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம் |
> ஆச்வாஸ்ய நிர்யாஹி ரதீ ச தந்வீ, ததா பலம் த்ரக்ஷ்யஸி மே ரதஸ்த: (59)
> गच्छानुजानामि रणार्दितस्त्वं प्रविश्य रात्रिञ्चरराज लङ्काम् ।
> आश्वास्य निर्याहि रथी च धन्वी तदा बलं द्रक्ष्यसि मे रथस्थ: ।।

'இன்று போ, நாளை வா' என்றருளினனென்ருல், அவன் யார்மனதுக்கினியனுகான். அன்றி, அவனே கண்ணனுக அவதரித்துத் தம்மோடு கலந்து பரிமாறப் பேரவா கொண்ட மஹர்ஷிகள் முதலான பலரை நாமாகப் பிறக்கச் செய்தவனல்லனே. ஆகவே நம் மனத்துகினியான். இப்போது நம் மனத்துக்கினியானுயிருக்கும் கண்ணன் தானே முன்னே தென்னிலங்கைக் கோமானைச் செற்றவன், நம் சீதையின் மனத்துக்கினியனுவதற்காக என்னவு மாம். இனி, நம் கண்ணன் இப்போது இங்கெழுந்தருளி யிருப்பதாலே கண்ணுக்கு மினியான், மனத்துக்கு மினியான்; ராமனே மனத்துக்கே இனியானென்ன வுமாம்.

பாடவும் நீ வாய் திறவாய்—நீயே முன்னம் பாடுவா யென்றிருந்தோம். பாடத் தொடங்கினல் எங்கள் பாட்டைப் பின்பாட்டால் நன்கு ஆலாபனை செய்து பூர்த்தி செய்வா யென நினைத்தோம். வாயே திறக்கவில்லையே. உதடு அசைந்தால்தானே வாய் கொஞ்ச மாவது திறந்த தாகுமென்றபடி. வாய்திறத்தலாவது வாக்கு என்ற இந்திரியத்தின் வேலையைத் தொடங்குவது ஈதென்ன பேர் உறக்கம்—நடுவீதியிலே நின்றழைக்கவேண்டும் படி கதவைச் சாத்திவிட்டு உள்ளே உறங்கினவளைப் பார்த்து முன்னே, 'கும்பகர்ணனும் தோற்று முனக்கே பெருந்துயில் தான் தந்தானே' என்ருேம். கதவைத் திறந்திருந்தும், காலை வேளை கிட்டி யிருந்தும், நீ நற்செல்வன் தங்கையாயிருந்தும், இங்ஙன முறங்கினல் இதற்கு எதையும் உவமானமாகக் கூறகில்லோ மென்றபடி. ஆக இவ்வுறக்கத்திற்குத் தனிப் பெயர் என்னவாயிருக்கு மென்றதுமாம். பேர் பெருமை, அல்லது பெயர். அனைத் தில்லத்தாரு மறிந்து — ஒருவர் பாக்கியிராமே எல்லா வீட்டிலும் அறிவுற்ருர்களே. எல் லோரு மெழுந்தது போலாவது எழுந்திருக்கலாமே. இதுவரையில் எழுப்பின வீடுகளில் அண்டை வீட்டுக்காரருக்குத் தெரியாமலே எழுப்பி இத்தனை பேர் இங்ஙனம் வேண்டும்படி இவளுக்கென்ன செல்வமும் சிறப்பு மென்கிருர்கள்.

உட்பொருள் — ப்ரபத்திநிஷ்டரைச் சேர்ந்த ஓர் அதிகாரியை அழைப்பதாம். இப் பாசுரத்தில். இளங்கற்றெருமை—பக்தியோக நிஷ்டரை யெருமை யென்பதென முன்னமே சொன்னேம். அவர்கள் வலிவு மறிவு மில்லாமையாலே இளங்கன்றுகளென்னப்படும் பக்தி யோகாநதிகாரிகளாய் முமுக்ஷுக்களான பல பரிஜநங்களை யுடையராகையாலே இளங் கற்றெருமைகளாவர். அவர்கள் இரக்கமுற்று அப் பரிஜநங்களுக்குத் தத்துவம். அநுஷ் டானம் என்ற இரு விஷயங்களின் உபதேசத்தை சுருதி, ஸ்ம்ருதி என விரண்டையும், அல்லது வடமொழி, தென்மொழி (தேசபாஷை) என்ற இரு மொழிகளையும் கொண்டு, (எருமை யென்று பக்தி நிஷ்டரான மனிதரைக் கொண்டதாலே ஸ்தநங்களிரண்டைச் சொன்னேம். எருமைக்கு நான்கு முலைகள் உள்வென்றில். இங்கும். நாலு வேதங்களை,

அல்லது. ச்ருதி, ஸ்ம்ருதி, பாஞ்சராத்ர, திவ்ய ப்ரபந்தங்களாகிற நான்கு முலைகளைக் கொள்க.) அவ்வழியே திருப்தி யுண்டாம்படி எம்பெருமானின் அநுபவரஸத்தை வர்ஷிப்பதைக் குறிப்பதாம், முலை வழியே நின்று பால் சோர வென்றது. அதனால் யாவ னொரு மஹானின் உள்ளம் நனைந்துருகினதோ. அந்த நற்செல்வனைக் குறிப்பதாம் நனைத்தில்லம் சேருக்கும் நற்செல்வன் என்றது. அந்தந்த உபாயநிஷ்டர்களுக்கு அததே தனம்—செல்வமாகும், பலவகைத் தபோதநர்களுளர். தபஸ்ஸுக்களிலே சிறந்தது ப்ரபத்தியென்பது. 'தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:' (तस्मान् न्यासमेषां तपसामतिरिक्तमाहु:) என்றது உபநிஷத்து. அகிஞ்சநனான அதிகாரி இதனால் நற்செல்வனாகிறான். 'ஸாத்ய பக்திஸ்து ஸா ஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸி' (साध्यभक्तिस्तु सा हन्त्री प्रारब्धस्यापि भूयसी) என்றதால் உபாய பக்தியை விட ஸாத்யபக்தியான ப்ரபத்திக்குச் சடக்கென மோக்ஷம் பெறுவிக்கும் சக்தி யுண்டெனெ விளங்கும். ஸர்வஸாதாரணமாய் ஸுலபமாயுமுள்ளதாலும் இது நற்செல்வம். அதை யுடைய மஹானின் தங்கா யென்றதாலே அவனைப் போன்ற குணங்கள் உள்ளவளாய், பெரியாரை யாச்ரயிக்கத் தகுந்தவளாய், ஸ்திரீயைப் போலே பலமும் ஸ்வாதந்த்ரியமும் இல்லாத அதிகாரியைக் குறித்ததாம். பனி இத்யாதி. பனியானது குளிர்ந்ததாயிருந்தே செடிகளை உலர்த்தும். அதைப்போல் ஸுகங்களை யளிக்கியவண்ண மிருந்து தாபத்ரயத்தை விளைவிக்கும் விஷயங்கள் பனி யென்க. அவை மேலே விழும்படி பாஹ்யங்களான இந்திரியங்களிலும் உடலிலும் பற்றுதலை வாசற்கடைபற்றி எனசொல்லிற்று. இங்ஙனம் விஷயபோகங்களிலே மேன் மேல் ப்ரவர்த்திக்கும்படி கரணகளேபரங்களிலே பற்றுள்ள நீ தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு-தென் நிலமாவது யமனுடைய லோகம். அதைக் கையில் கொண்டு அரசாள்வது அஹங்காரமென்பது. ஆகவே அது கோமானெனப்படுகிறது. அதனை யழித்த பரிசுத்த மனத்துக்கு—இனியானைப் பாடவும் வாய்திறவாய். எவ்வளவு விஷய ப்ராவண்யமிருந்தாலும் நன்மனத்துக்கினியனான எம்பெருமானையும் பாட வாய் திறந்தாற் போதும். ஈதென்னபேருறக்கம்—நற்செல்வன் தங்கை யென்னப்பட்ட பிறகு இவ்வளவு அஜ்ஞானம் தகுமோ? அனைத்தில்லத்தாரு மறிந்து—மனத்தில் அனுபவிப்பது மட்டுமன்றி மொழிந்தருளினால் எல்லோரு மறியலாம். ப்ரபத்தி ஸர்வாதிகாரமாகையாலே ஸ்த்ரீசூத் ராதிகளும் கூட அறியலாம். அருளவேண்டுமென்றவாருகுக. (12)

மூன்றும் பெண்ணை யெழுப்புவதற்கு முன்னமே பாவைகளம் புகப் புறப்பட்ட பெண் களைப் போகாமற் காத்து இதுவரை ஏழு பெண்களை யெழுப்பினார்கள். பிறகு அதிக தாமதமாய் விடுகிறதென்று பெரும்பாலும் பெண்கள் பாவைக்களம் போயினர். சிலரே மற்றும் சிலரை யெழுப்புகின்றனர். மூன் இரண்டு பாசுரங்களிலே கதவைத் திறந்து வைத்தே கண்வளர்ந்த கன்னிகளை யெழுப்பி இனி விழித்துக் கொண்டுமிருக்கும் மூவரை யழைக்கின்றனர்—

13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக்களம் புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளுஞ் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே

பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

போது—அலரும் மலரின்
அரி—அழகு (பொருந்திய)
கண்ணினாய்—கண்களை யுடையவளே!
புள்ளின்—பகாசுரனுடைய (கொக்கின்)
வாய் கீண்டானை—வாயைப் பிளந்த வனும்
பொல்லா—பெருந்தீங்கு விளைவிக்கும்
அரக்கனை—ராக்ஷஸனான ராவணனை
கிள்ளி—தலைகளை யறுத்து
களைந்தானை—மூலஸ்தானத்தைப் பேர்த்துக்கொன்றவனுமான எம்பெருமானைப் பற்றி
கீர்த்திமை—ஸ்தோத்ரமயமான பாட்டுக்களை
பாடி—பாடிக்கொண்டே
போய்—போகாநின்று
பிள்ளைகள் எல்லோரும் — கூடவந்த எல்லாப் பெண்களும்
பாவை களம்—நோன்பிற்காகச் சேருமிடத்தில்
புக்கார்—புகுந்துவிட்டனர்.
வெள்ளி—சுக்கிரன்
எழுந்து—உதயமாயிருக்க
வியாழம்—(வியாழனும்) குருவும்
உறங்கிற்று—அஸ்தமித்தாய்விட்டது.
புள்ளும்—பக்ஷிகளும்
சிலும்பின காண்—ஆரவாரித்து இரைக்குச் சென்றுவிட்டன.
குள்ளக்குளிர—உடல் நன்கு குளிர்ந்திருக்கும்படி
குடைந்து—அங்கங்களால் நீரைத் துளைத்தலப்பி
நீராடாதே—ஸ்நானம் செய்யாமே
பள்ளிக் கிடத்தி ஓ—படுத்திருக்கிறாயோ
பாவாய் நீ—பதுமை போன்றவளே ! நீ
நல் நாளால்—நல்ல நாளிலே
கள்ளம்—வஞ்சகதனை (குற்றத்தை)
தவிர்ந்து—விட்டு
கலந்து—எங்களுடன் சேர்ந்து கொள்.
ஏல் ஓர் எம் பாவாய்.

பாவைக்களம் போகும்போது பிள்ளைகள் பாடிப் போனது பகாஸுர ஸம்ஹார வரலாற்றையும், அரக்கனைக் கிள்ளிக்களைந்தமையைப் பற்றியுமானதாலே புள்ளின் இத்யாதி யருளினது. 'பள்ளத்தில் மேயும்' (பெரியா-தி-254) என்ற பாசுரத்தை யநுஸந்திக்க பொல்லா. 'உமா நந்தீச்வரச்சாபி ரம்பா வருணகந்யகா' (उमा नन्दीश्वरश्चापि रम्भा वरुण कन्यका) என்றபடி பலர் சபித்திருந்தும் மனத்தில் வருத்த மிராது வெகு தீரமாக, வாயாற் சொல்லத் தகாத, தீங்கைச் செய்ய முயன்ற அரக்கனிவன், கிள்ளிக் களைந்தானை-முதலில் பத்துத் தலையனாய் வந்து பத்துக் கிரீடங்களும் விழப் பரிபவமுற்று மறுபடி வரும்போது ஒற்றைத் தலையனாக வந்தானவன். அம்பை எய்தி அவனது தலையை இராமன் அறுத்துத் தள்ளின போது மேன்மேல் தலை முளைக்க ஆரம்பித்தது. செடியில் முளையைக் கிள்ளி யெறியுமா போலே, நூற்றொருதரம் முளைத்த தலையை முன்படி கிள்ளி யெறிந்தார். இது ஒவ்வொரு பதிவ்ரதையினிடம் பட்ட குற்றத்திற்கு ஒவ்வொரு தரமாகத் தனித்தனியே நடத்தின சித்ரவதைத் தண்டனை போலும். 'எத்தனை தரமானாலும் இது முளைத்த வண்ணமே யிருந்தமையால், இதன் வேரைக் களைந்தெறிந்தே இதை நிறுத்த வேண்டுமென நினைத்து, அகத்தியமாமுனிவர் அளித்த அம்பைத் தொடுத்து அவனது ஆகத்திலெறிந்து மூலஸ்தானமான ஹ்ருதயத்தைப் பிளந்தெறிந்தார். கிள்ளி யென்றது முளையைக் கிள்ளுமா போலே அநாயாஸமாக அறுத்தாரென விளக்கவாம். சிலர் இங்கு, கிள்ளுவது நகத்தினாலாவ தொன்றாகையாலே ஹிரண்யகசிபுவின் வதத்தைக் கொள்ளவேண்டு மென்பர். இது உரையாளர் யாரும் கூறுததாம. அதற்குக் காரணம், ஹிரண்யகசிபு ஒருவனன்றி அரக்கனல்லன் தேவர்களுக்கு ஸ்ருதிகளான விரோதிகளின். சாதி

அஸுர ஜாதி. மனிதர்க்கு விரோதிகளாய் இவ் வுலகிலே வஸிப்பவர் அரக்கர் என்ற கருத் தென்க. ராவணஸம்ஹாரமானது இராமனுக்கு உகிராற் கிள்ளி யெறிந்தற் கொப்பான தென்பதை இராமனே யருளியுள்ளார்.

'பிசாசாந் தாநவாந் யக்ஷாந் ப்ருதிவ்யாம் யே ச ராக்ஷஸா: ।
அங்குள்யக்ரேண தாந் ஹந்யாம் இச்சந் ஹரிகணேச்வர'

(पिशाचान् दानवान् यक्षान् पृथिव्यां ये च राक्षसाः । अंगुल्यग्रेण तान्हन्यां इच्छन् हरिगणेश्वर ।।)

என்ருரல்லரோ. அவ்விடத்திலே நாம் முன் லக்ஷ்மீ ந்ருஸிம்மனுய் அவதரித்து அவுணனை யுகிரால் கிள்ளிக் களைந்ததைக் கருத்தில் கொண்டங்ஙன மருளினுர். அதை இங்கே நினைப்பூட்டக் கிள்ளி யென்றதாம். இங்கே 'பொல்லா வரக்கரை' எனவும் பாடம் காண் கிறதென்பர். அதுண்டாகில் கீண்டானை, களைந்தானை, என எம்பெருமானுக்குச் சேருவ வதற்கேற்ப வேறுபாடு தோற்றும்படி அரக்கரை யென்ற பன்மை பொருந்தும். அப்போது விபீஷணுதிகளுள்பட எல்லாவரக்கரையும் கொள்ளாதது தோற்றப் பொல்லா என்ற பதம் ப்ரயோகிக்கப்பட்டதெனலாம்.

வெள்ளியெழுந்து—எழுந்து = எழுந்திருக்க என்றபடி. எச்சத் திரிபு. வெள்ளியெழு வதும், வியாழமுறங்குவதும் ஒரே காலத்தில் ஆவது வருஷம் தோறும் கிடையாதென்றும், இவ்வண்ணம் கூறினதால் அவ்விரண்டும் சேர்ந்திருந்த காலத்திலே ஆண்டாள் அவதரித் தமை விளங்கு மென்றும் சிலர் ஆராய்ச்சி செய்வர். இது இடைப்பெண்களின் பேச்சான படியாலே ஸ்ரீ க்ருஷ்ணன் அவதரித்த காலத்தில் ஒரு சமயம் அவ்விதம் நேர்ந்ததை யாண் டாள் அறிந்து அநுவாதம் செய்ததேயா மாகையாலே இது ஆண்டாளின் காலத்தைக் குறித்தேயாகு மென்பதில்லை யென்னலும் கூடும். இரண்டும் ஒரே ஸமய மாகில் வெள்ளி யெழுந்ததென்பதே போதுமாயிருக்கும். ஆகையால் வெள்ளி எழுவதற்கு முன்னரே நீ எழுந்திருக்கவேண்டும். அஃதில்லை, பிறகு வியாழமுறங்குவதற்கு முன்னமாவது எழுந் திருப்பாயென்ருல் அதுவுமில்லை யென்ற கருத்தையு மாராய்க. வெள்ளி வியாழன் எனக் கிழமைகளையே குறித்ததுமாம்.

முன்னே, 'கீழ்வானம் வெள்ளென்று' என்றபடி அதற்கு முன்னே எழுந்தவர்கள் இவர்கள் பிறகு சுக்ரன் எழுந்து மேலே வரும்வரை பெண்களை யழைத்துவந்தார்கள். சுக்ரோதயமான பிறகும் ஸூர்யோதயத்திற்கு அதிக கால மிருப்பதுண்டு. ஆகையால் எழுந்த வெள்ளி எவ்வளவு தூரம் ஏறியுள்ளானென்று தெரிந்துகொள்ளுமாறு மேலடையா ளம்கூறப்படுகிறது புள்ளும்சிலும்பினகாண்-இதன் விரிவு முன்னமே காண்க.முதற்பெண்ணை யெழுப்ப முதன்முதற் சொன்ன வடையாளத்தையே எட்டாம் பெண்ணையெழுப்பும் போதும் சொல்வதோ என்னில், அங்கே கூடுகளில் ஆரவாரித்தது சொன்னதாம். இங்கே இரைக்குப் போன விடத்திலே ஆரவாரித்ததுசொன்னதாமென்பர். 'சிலம்பின' என்னுமே, 'சிலும்பின' என்றதை பாடமாக கொண்டபோது. ஆரவாரித்திருந்த புட்கள் இரைக்காக வெளியே சென்றன எனச் சொன்னதாக விளங்குவதால் இரண்டும் வெவ்வேருகும். போதரிக் கண்ணினுய் என்ற விளியாலே இவர்கள் வந்த ஸமயத்திலே இவளே விழித்துக் கொள்வது தோற்றுகிறது. போதாவது அலரும் மலர். அரி = அழகு. இனி, போது என்றது வினை யாய் வினைத்தொகை யென வைத்து மலர்ந்துவரா நிற்கும் அரிக்கண் எனலாம். அரி யென்பது மானுய், அல்லது வண்டாய், மானின் கண் போன்ற கண், வண்டு போன்ற கண் என்னவுமாம். இங்கே போதுகின்ற = உலாவுகின்ற மான் கண்ணை யுடையவளே

போது புஷ்பமாய், பூவையும் மான் கண்ணேயு மொத்த கண்ணே யுடையவளே! பூவிலிருக்கும் வண்டு போன்ற கண்களை யுடையவளே, அரியென்பது சத்ருவாய், அழகிலே பூவுக்கு சத்ருவான கண்களை யுடையளே என்றவாறு வேறு பொருளும் கூறுவதுண்டு.

குள்ளக்குளிர—குள்ளக் குளிர நீராடவேண்டும் இந் நன்னுளில் குளிரைக் கண்டு பயந்து படுத்திருக்கிருயே. குளிர்ச்சி உடலுக்கும் உள்ளத்துக்கும் இருக்கவேண்டும். மூழ்கிறோம், எழுந்தோ மென்று முடித்துவிடாமல் குடைந்து நீராடவேண்டும். பள்ளிக் கிடத்தியோ—உறங்குதியோ என்றதால் அவள் விழித்திருப்பதை போதரிக்கண்ணினு யென்றதாலே குறித்தன ரென வறியலாம். இந்த வாக்யம் முடிந்த பிறகு, 'பாவாய் நீ' என்று தொடங்கினதற்கேற்ப மேலுள்ளதைத் தனி வாக்யமாக்கி, கலந்து என்பதற்குமேல், மற்றும் சிலவிடங்களிலே போல, வினைமுற்றென்றைச் சேர்க்க. இல்லையேல், 'போதரிக் கண்ணினுய்! பாவாய்! நீ கள்ளம்தவிர்ந்து கலந்து நீராடாதே' எனமுன் வாக்கியத்திலேயே சேர்ப்பதாம். பாவாய்—உறங்குபவள் அசையாம லிருந்தால் ஏற்கும். விழித்திருந்தும் பதுமை போல் அசையவில்லையே யென்றபடி. நன்னுளால்—நன்னுளில். உருபு மயக்கம். ஆல் = ஆச்சரியமுமாம்; அசையுமாம். வெறும் நாளில் அழைத்தபோது எழுந்திருக்காமல், நாங்கள் மேலே என் செய்கிரே மென்று பரீக்ஷைக்காக உறங்குபவள் போல் படுத்திருக்கலாம். இது நன்னுள். நாழிகை யாய் விட்டது. நீ விழித்திருப்பதும் எங்களுக்குத் தெரிகிறது. ஆகவே கள்ளம் தவிர்ந்து கலந்து கொள்ள வேண்டுமென்றபடி.

உட்பொருள் — காலக்ஷேபம் தொடங்கும் தருணத்திலே குருவின் ஸந்நிதானத்திற்குப் போகலாமென்று பிரிந்து ஓரிடத்தில் இருக்குமொரு வித்யார்த்தியை யழைப்பது இங்காம். புள்ளின்வாய் கீண்டானை-புள் = பக பக்ஷி; கொக்கு. அதன் வழியிலே யிருப்பவராவர் பகவிருத்திகள், பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாயு மவர். கரையிலே பாராது போல் உட்கார்ந்திருந்து இரை கண்டபோது பொதுத்துக் கொள்ளும் கொக்கு போன்றவர். ஆக,

> 'நாஸ்திகாந் பிந்நமர்யாதாந் பைடாலவ்ரதிகாந் சடாந்!
> ஹைதுகாந் பகவ்ருத்தீச்ச வாங்மாத்ரேணுபி நார்ச்சயேத்'

(नास्तिकान् भिन्नमर्यादान् बैडाल व्रतिकान् शठान् । हैतुकान्बकवृत्तीश्च वाङ्मात्रेणापि नार्चयेत् ।।)

என்றபடி பகவ்ருத்திகளை விட்டு விலக்கியுள்ளவர். 'புள்ளின்வாய்கீண்டானை' யென்னப் படுகிறர். பொல்லா வரக்கனைக் கிள்ளிக்களைந்தானை —

> 'தசேந்த்ரியாநநம் கோரம் யோ மநோரஜநீசரம்.
> விவேகசரஜாலேந சமம் நயதி யோகிநாம்'

(दशेन्द्रियाननं घोरं यो मनोरजनीचरं । विवेकशरजालेन शमं नयति योगिनां ।।)

என்றபடி பதினோர் இந்திரியங்களை ஜெயித்தவருமான வென்றபடி. இப்படிப்பட்ட ஆசார்யரைப் புகழ்ந்து கொண்டு, பாவைக்களம் = சிஷ்யர் சேரவேண்டும் கால க்ஷேப கூடத்திற்குப் பிள்ளைகளெல்லோரும் போய்ச் சேர்ந்தனர். ஆசார்யன் விசேஷார்த்தங் களை விரிவாக உபந்யஸிக்கும் போது கேட்டுக் களித்து வியந்து பதுமைகளைப் போலே பிள்ளைகள் அசையாமையிருத்தலால் காலக்ஷேப கூடத்தைப் பாவைக்கள மென்கிறது.

வெள்ளியெழுந்தது=உபாதாந காலம் தொடங்கிற்று. வியாழ முறங்கிற்று=அபிகமந காலம் போயிற்று. இனி. பணம் மேல் எழுவதும் அறிவு குறைவதுமாகிற காலம் இது எனவே என்றபடியுமாம். புள்ளும் சிலும்பின-பறந்து வந்து பேசிக்கொண்டிருந்தவர் எல்லோரும் ஆசார்யரிடம் விடை பெற்று உத்யோகத்திற்குச் சென்றனர். இனி காலக்ஷேபம் தொடங்கலாம். போதரிக்கண்ணினாய். போது=காலம். அரியாவது ஹரணம். காலக்ஷேப மென்றபடி. அதிலே கண்=நோக்கு உடையவனே! ஆசார்யரிடம் யாரோ வந்து பேசிக்கொண்டிருப்பதை யெல்லாம் கேட்டுக் கொண்டிராதபடி க்ரந்தங்களை ஸேவித்துக் கொண்டு காலக்ஷேபத்திலேயே நோக்குள்ளவனே! கள்ளம் தவிர்த்து,

'யோऽந்யதா ஸந்தமாத்மாந மந்யதா ப்ரதிபத்யதே |
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா, 'த்வம் மேऽஹம் மே'

(योऽन्यथा सन्तं आत्मानं अन्यथा प्रतिपद्यते । किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा ।।, त्वं मेऽहं मे)

என்றபடி எம்பெருமானின் உடைமையான ஆத்மாவை அவனதாக நினையாமல் தன் இஷ்டப்படி விநியோகிக்கக்கூடியதாக நினைத்தலே பெருங்களவு. இது நீங்கி யென்றபடி. கலந்து=விவேகிகளோடு சேர்ந்து எம்பெருமானை யறிந்து அவனுடைய ஸ்வரூப ரூப குணசேஷ்டிதங்களைக் கேட்டுகந்து, குள்ளக் குளிரத் குடைந்து நீராடி, தாபங்களையும் போக்கி, 'ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோऽஸ்மி' (एष ब्रह्म प्रविष्टोऽस्मि) என்ற பரமாநந்தாநுபவத்தி லிழிந்து விளங்கி', 'விப்ரோ! விப்ரத்வம் கச்சதே தத்வதர்சீ', 'ஸ ப்ராஹ்மண:' (विप्रो विप्रत्वं गच्छते, तत्त्वदर्शी, स ब्राह्मण:) என்றபடி யிராதே பள்ளிக்கிடத்தியோ—'ஸர்வ வர்ணேஷு தே சூத்ரா: யே ஹ்யபக்தாஜ்ஜநார்தநே' (सर्ववर्णेषु ते शूद्रा ये ह्यभक्ता जनार्दने) என்றபடி சூத்ரனாய் விடுவாயோ? நன்னாளால்—ஸதா சார்ய ஸம்பந்தம் பெற விருக்கும் இந்நாளன்றோ நன்னாள். குள்ளக் குளிரக் குடைந்து நீராடிக் கொண்டு தானிருக்கிறேனென்னில், ஆகிலும் கள்ளம்=கபடம், வஞ்சனை யின்றி ஆசார்யன் உபதேசித்தவைகளில், அல்லது சாஸ்திரங்களினின்று ஆ(ய்)ழ்ந்து கண்டறிய வேண்டியவைகளிலே இவ்வளவு காலம் ஏகாந்தமாய் உட்கார்ந்து செய்த ஆராய்ச்சி ஒன்றையும் விடாதபடி எங்களுக்குச் சொல்ல விசைந்து கலந்திருக்க வேண்டும். அன்றி, நாங்கள் கள்ளம் கபடம் சிறிதுமின்றி உன்னுடன் கலந்து நிற்கிறோமென்று கடையடியின் பொருளாம். (13)

முன் போதரிக்கண்ணினா யென்று மலர்ந்த பூவைப் போன்ற கண்கள் உள்ளவளை விளித்து எழுப்பினதாலே பூ மலர்ந்ததையே அடையாளமாகக் கூறி, இவர்களை முன்ன மெழுப்புவதாகச் சொல்லி யங்ஙனம் செய்யாத மற்றொருத்தியை யெழுப்புகிறார்கள்—

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயிற் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்!
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

முன்னம்—நென்னல்
எங்களை எழுப்புவான் | எங்களை எழுப்புவதாக
வாய் பேசும்—பல பேச்சுக்களை அளந்த
நங்காய்—குணபூர்ணையே!
உங்கள்—உங்களுடைய
புழக்கடை-வீட்டுப் பின் பக்கத்திலுள்ள
தோட்டத்து—தோட்டத்திலிருக்கும்
வாவியுள்—நடைவாவி யுள்ளே
செங்கழுநீர்—செங்கழுநீர்மலர்கள்
வாய் நெகிழ்ந்து—மலர்ந்திருக்க
ஆம்பல்—ஆம்பல் பூக்கள்
வாய் கூம்பின—வாய் மூடினவை யாயின.
செங்கல் பொடி கூறை | காவிப்பொடியின் நிறமேற்றப் பெற்ற வஸ்திரங்களை யுடையரும்
வெண் பல்—வெளுத்த பற்களை யுடையருமான
தவத்தவர்—ஸந்நியாஸிகள்
தங்கள்—தங்களுடைய
திரு கோயில்—ஆலயங்களின்
சங்கு—திறவுகோலை
இடுவான்—இட்டுத்திறப்பதற்காக
போகின்றார்—போகா நிற்கிறார்கள்
நாணாதாய்—வெட்கமில்லாதவளே!
எழுந்திராய்—எழுந்திருப்பாயாக.
நா உடையாய்—பாடுவதற்கு நாவிறு பொருந்தியவளே!
சங்கொடு சக்கரம்—பாஞ்சசன்னியத்தையும் ஸுதர்சனத்தையும்
ஏந்தும்—தரிக்கும்
தட கையன்-அகன்ற திருக்கைகளையுடைய
பங்கயம் கண்ணனை—செந்தாமரைக் கண்ணனைப் பற்றி
பாடு—பாடுவாயாக.
ஏல் ஓர் எம்பாவாய்.

நானே வேளை தெரிந்து எழுப்புவேன். நீங்கள் ஏன் அதற்குள் வரவேண்டுமென்று அவன் பேசுவாளென நினைத்துப் பொழுது விடிந்ததற் கடையாளங்களை இப் பாசுரத்தில் மீண்டும் பரக்க வுரைக்கின்றனர். 'செங்கழுநீர் மலர்ந்தனவாகையாலே இது ஸூர்யோதயகாலம், எழுந்திரு' என இவ்வளவே போதுமாயிருக்க முதலடியெதற்காக? வேறிடத்திலுள்ள மலர்களாகில், நீ ஸந்தேஹிக்கலாம். உன் தோட்டத்து வாவியிலுள்ளவை யாகையாலே நீயே பார்த்துக் கொள்ளலாமென விளக்கவென்க. அது இவர்களுக்கு எங்ஙனம் தெரியும்? உதயகாலம் வந்துவிட்டதாலே எங்கும் மலர்கள் அலர்ந்து விடுவது தெரிந்து கொள்ளக் கூடியதே. அங்ஙனம் ஊஹித்துத் தெரிந்து கொண்டனர். 'இதை இவள் எழுந்து போய் தானே பார்த்துக்கொள்ள வேண்டும். எழுந்தபோது உதயமாய்விட்டது நன்கு புலப்படுவதால் போய்ப் பார்ப்பது எதற்காக?' பர்வத்திலே சந்திர ப்ரகாசத்தாலே நன்கு உதயமாகும் வரை இரவுக்கும் விடியற்காலத்திற்கும் வேறுபாடு ஸுகமாயறிய முடியாது. அதனால், எழுந்தும் ஸந்தேஹப்பட்டால் போய்ப் பார்த்துக் கொள்ளட்டு மென்றிங்ஙனம் கூறினது. அங்குப் புஷ்பங்கள் இருப்பதும் இவர்கள் இதற்கு முன் பார்த்திருப்பதாம். அன்றி, வாசற் கதவடைத்திருந்ததால் புழைக்கடைப்பக்கம் போனார்கள். அங்கே வாவியைக் கண்டு வர்ணித்தனரென்பது முண்டு. முன் பாசுரங்களிலே கதவைத் திறந்தது ஏற்பட்டிருப்பதாலும், முன் பாசுரம் முதல் மூன்று பாசுரங்களிலே விழித்திருக்கும் பெண்களைப் படுக்கையை விட்டெழுந்து வரச் சொல்வதும் யுக்தமாவதாலும், உள்ளேயே புகுந்து முன்பக்கத்தில் பெண்ணைக் காணாமே பின்பக்கத்திலிருப்பாளென நினைத்து அங்கே போக, வாவியையும் கண்டு வர்ணித்தழைக்கிறார்கள் என்னலுமாம். வேறு தோட்டம் போலே யன்றி, விடியற்காலத்திலும் வெளிச்சம் பரவமுடியாத படியுள்ள இவ்விடத்திலுள்ள பூக்களும் மலர்ந்தன வென்று விசேஷித்த அடையாளமிதெனக் கருதினரென்பது மாம்.

உங்கள்—உன் என்னுமே உங்கள் என்றது வழக்குச்சொல்லாகும், அன்றி, இவளுடைய குடும்பத்திலுள்ளாரையும் சேர்த்துச் சொன்னதாம். இவள் முன்னம்

எழுப்புவான் வாய் பேசினபோது, 'நான் முதலில் விழித்து வந்தெழுப்புகிறேன்; நான் உறங்கிவிட்டாலும் எனது இல்லத்திலிருப்பவர் எல்லோரும் என்னைக் கண்ணனோடு கூட்டப்பேராவல் பொருந்தினவராதலால் அவரே என்னை எழுப்பியனுப்புவரென்றெல்லாம் பேசினாயே, யாருமே விழித்துக் கொள்ளவில்லையேயென்று வியங்கியமாகக் குறிக்கக் கருதி 'உன்' என்னாமே 'உங்கள்' என்றதென்க. நெகிழ்ந்து—நெகிழ்ந்திருக்க. எச்சத்திரிபு, இரவு கழியச் சிறிது சிறிதாக மலருவதும் மூடுவதும் அந்தந்தப் புஷ்பங்களுக்கு நேர்ந்தபடியிருக்கும். இதனால் நன்கு உதயகாலத்தை நிச்சயிக்கமாட்டிலோ மென்னுதபடி வேறு அடையாளம் விளக்கப்படுகிறது.

செங்கற்பொடி- செங்கழுநீர், ஆம்பல் என்று சிவப்பு முதலியன சொல்லப்பட செங்கற் பொடியும் வெண்பல்லும் நினைவுக்கு வரக்கூடு மாகையாலே இவ்வடையாளம் கூறப்பட்டது. இவ்வடிகள் சைவசமயத்தை சார்ந்த ஸன்னியாசிகளைச் சொல்லுமென்றனராம் எம்பார். பரமைகாந்திஸ்ரீவைஷ்ணவப் பெண்ணானவள் தாமஸப்ரக்ருதிகளின் செயலை ப்ரமாணமாக்காளென நினைப்பர் சிலர். ஸ்ரீவைஷ்ணவ ஸந்நியாஸிகளைப் பற்றினதாகவே இவ்வடிகளைத் திருமலைநம்பிகள் நிர்வஹித்திருந்ததாம். ஸன்னியாஸிகளுக்கு மூன்று வெளுப்பாயிருக்கும்— பற்களும், பூணூலும், ஜபவஸ்திரமும். அவற்றில் வெண்பல் என ஒன்றைச்சொன்னதாலே மற்ற இரண்டு' மில்லாத ஸந்நியாஸிகளாயிருக்க வேண்டு மென்றும் எம்பாரின் கருத்தாகலாம். திருக்கோயிலென்று சிறப்பித்துச் சொன்னது அப்போது பொருந்துமோ வென்னில், தங்கள் திருக்கோயில் என்றதால் அவர்களின் எண்ணப்படி அது திருக்கோயிலென்க. மற்றொரு நிர்வாஹத்திலே திருக்கோயிலென்றது கிராமப் பொதுவான கோயிலன்று-அவரவர் ஆச்ரமங்களிலே திருக்கோவில் கொண்டு எம்பெருமான் எழுந்தருளியிருப்பதாலே நதியில் ஸ்நானம் செய்துவிட்டு தனுர்மாஸாராதனத்திற்கு அவரவர் தங்கள் திருக்கோயிலுக்குச் செல்லுகிறார்கள் என்றபடியாம். அத்திருக்கோயில்கள் அவர்களுக்கே அதீனங்களாகையால் அவர் கையில் தானே திறவுகோலிருக்கும். செங்கற்பொடிக் கூறையினாலே அவர்கள் தங்களுக்கு உள்ளே இருந்த ராகத்தை வெளிப்படுத்தி நிச்சலும் கழுவுவதும் வெண்பற்களாலே உள்ளே ஸத்வமிருப்பதைக் காண்பித்தலும் செய்வதாம். சங்கு—சங்கமென்னப்பட்டபோது பூஜைக்கு வேண்டும் உபகரணங்களெல்லாம் சங்கென்றதொன்றைச் சொல்லும் இச் சொல்லினாலே குறிக்கப்பட்டனவென்க. (உபலக்ஷணமென்றபடி) சங்குஎன்ற வடமொழியாகில் திறவுகோலாகும். சூத்ரஸன்னியாஸிகளைச் சொல்வன இவ்வடிகளென வருளினர் உபநிஷத்பாஷ்யகாரர். அவர்கள் திருமலைநம்பிகள் அருளினபடி வைஷ்ணவர்களுமாகலாம். இப்போது பற்களின் வெண்மை மட்டும் சொன்னதும் பொருந்தும். சங்கிடுவது சங்கு ஊதுவதாய், அவர்கள் சங்கை ஊதிப்போனார்களென்றும் உரைப்பதுண்டு.

இங்கே செங்கற்பொடிக்கூறை வம்பிற்ற அத்தவர் என்ற பாடமும் பூர்வர்களின் உரைகளிலே காணப்படுகிறது. இது அவர்கள் கற்பித்ததத்தனையென்னில், 'இது திருமலைநம்பி நிர்வாஹம். 'இது எம்பார் நிர்வாஹம்' என்றதும், 'அரக்கனை' என்றவிடத்தில் 'அரக்கரை' என்றாற் போல் ஆங்காங்கு இசைந்தவையு மெல்லாம் கூடக் கற்பிதங்களாகலாம். கற்பித்துச் சாதிக்க வேண்டியதொன்று மில்லையாகையாலே கூடுமான ஆதாரத்தைக் கொண்டே அவர்கள் பாடபேதங்களைக் காண்பிக்கின்றனரென்றே பக்ஷபாதமிராதார் பகர்வது. ஏதேனுமோர் உரை விச்வஸிக்கத் தகுந்ததாய் விட்டால் அதிற்காண்பிக்கப் பெறாத வேறு பாடங்கள் காலக்ரமத்தில் ஓதப் பெறுதொழிந்தாலும் பட்டோலையிலேறிடப் பெற்று எங்கர்வது நிற்றென. இங்ஙனம் சாங்கராதி மதங்களிலில்

லாத பாடபேதங்களை உபநிஷத்துக்களிலும் ப்ரம்மஸூத்ரங்களிலும் நம் ஸம்ப்ரதாயத்திலே காண்கிறோம். விச்வஸிக்க மனமில்லாதார் விச்வஸிக்காமலிருக்கலாம். காரணமின்றி, கற்பிதங்கள் அவை யென்பது மட்டும் ஸாஹஸமாம். அப்பாடத்தில் பொருளாவது—

வம்பு = அசப்பியம் தீச்செயல். வம்பற்ற எனறது ஸம்ஸாரத்தில் உருசியற்ற என்றபடி, அத்தவர் = பெருந்தவத்தில் இருப்போர். சூத்ரர்களுக்கு ஸந்நியாஸாச்ரமம் சாஸ்த்ரோக்தமான முறையிலே யில்லையாகிலும், ஸம்ஸார வைராக்யமும் தங்களுக்கேற்ற தபஸ்ஸில் இருப்பதும் போற்றத்தக்கவையே. ஆகவே அது மஹாதபஸ்ஸு. அவ்வளவால் அவர்கள் ஸந்நியாஸிகளெனப்படுகின்றனர். இந்த வாசியை விளக்கவும், தவத்தோர் என்னுமே அத்தவர் என்றதெனவும் கொள்க. சூத்ரர்கள் ஆராதிக்கும் மூர்த்தியை த்ரைவர்ணிகர்கள் தொழுவது சாஸ்திர விரோதமாகாதொன்றாகையாலே தங்கள் திருக்கோயிலென்றது. அம் மூர்த்திகள் தாமும் எம்பெருமானைச் சேர்ந்தவை யாகையாலே, அவற்றை யாராதிக்கும் சூத்ரர்களிடத்திற் போல அம் மூர்த்திகளிடத்திலும் கூடுமான கௌரவபுத்தி வைப்பது எல்லோருக்கும் கடமையானது பற்றி திரு என வருளினதாம்.

எங்களை இத்யாதி' முன்னமென்பதை பேசுமென்றதோடு சேர்க்கில் நேற்று எனப் பொருளாம். முன்னமெழுப்புவான்—நாங்கள் உன்னையெழுப்புவதற்கு முன் நீயே எழுப்புவதாக என்பதும் பொருந்தும். எழுப்புவான்—எழுப்புவதற்காக. அதற்காகப் பேசுவதாவது அதனைப்பற்றிப் பேசுவதே' பேசும்'என்றதோடு நிற்காமல் வாய்பேசும் என்றது— வாயில் வந்ததெல்லாம் பேசினவள்., அதற்காகத் தானும் தன் குடும்பத்தாரு மிரவில் உறக்கமின்றியே யிருப்பவரென்றாற் போல் பேசினவளென வறிவிக்கவாம். நங்காய்— ஆகிலும் இப்படிப் பூக்கள் மலர்ந்து பூஜை செய்பவரெல்லாம் போகும் வரையில் தூங்கினதற்கு நாண் ஏதுமில்லையோ என்கிறார் நாணாதாய் என்றனர். நாவுடையாய்—இவள் முன்சொன்னதை மறுக்கவில்லை யாகையாலே இரு நாக்கள் கொண்டவளாகாள். ஆக நாவுடையாளே யன்றி செயலுடையாளல்லை நீ யென்றபடி. அதைவிட பாடுவதற்கு அவளை ஏவப்போகின்றாராகையாலே நாவிறுடைமையைப் புகழ்கின்றனரென்பதே பொருத்தமாகும்.

சங்கிடுவான் என்றபோது சங்கும் சக்கரமும் நினைவுக்கு வந்ததால் சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையனென்கிறனர். இவ்வடைமொழி கண்ணனுக்குத் தகும். அவன் சங்கம் தரித்திருப்பது, 'பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேச: (पाञ्चजन्यं हृषीकेशः) இத்யாதிகளில் ப்ரஸித்தம். பாரதயுத்தத்திலே ஆயுத மெடுக்காமலிருப்பதாகச் சொல்லியும் பீஷ்மருக்கெதிரில் சக்கரத்தை ப்ரயோகித்ததும், ஜயத்ரதவதையிலே சக்கிரத்தால் சூர்யனை மறைத்ததும், உத்தரையின் கர்ப்பத்தை அதனால் காத்ததும் சக்கரக்கையனென்பதால் விளக்கப்பெறும். கண்ணன், அவதரிக்கும்போதே. 'சதுர்புஜம் சங்ககதார்யுதாத்யுதம்' (चतुर्भुजं शंखगदार्युदायुधम्) என்றபடி படைகளைத் தரித்துக் கொண்டு நான்கு திருக்கை களோடு அவதரித்தான். பிறகு கம்ஸவதை வரையில் அவற்றை யெல்லாம் மறைத்துவந்தான். பிறகு முன்படி அவற்றுடன் விளக்கினன். விச்வரூபத்தைத் மாற்றி முன்னமிருந்த ஸௌம்ய ரூபத்தோடே ஸேவையளிக்க வேண்டுமென்று வேண்டும் அர்ஜுனன், 'தேநைவ ரூபேண சதுர்புஜேந ஸஹஸ்ரபாஹோ பவ விச்வமூர்த்தே' (तेनैव रूपेण चतुर्भुजेन सहस्रबाहो भव विश्वमूर्ते) என்றதால் அவனுக்கு என்றுமுள்ள ரூபமானது சதுர்புஜரூபமென விளக்கமாகும். பௌண்ட்ரகவாஸுதேவன் நான்கு புஜங்களைக் கட்டி யமைத்து ஆயுதங்களையும் சுமந்துதானே தன்னைக் கண்ணனாக எண்பித்து வந்தான். கம்ஸவதத்திற்கு முன்னும் பக்தர்களுக்குக் கண்ணன் அவசித்த காலத்தில் காண்பித்த அத்புதரூபத்

துடனே ஸேவை யளிப்பதாம். வத்ஸாபஹாரத்தின்போது (கன்றுகளை யபஹரித்திருந்த போது) பிரமனுக்கு இங்ஙனமே இவன் தர்சன மளித்தது. சீமாலிக னென்பானொரு தோழன் சக்ராயுதம் ப்ரயோகிக்க சிக்ஷை பெற முயன்றுள் பெருமாளிடத்தில் (பெரியாழ் திரு: 278) என்பது போன்றவற்றை நோக்குங்கால் சங்கொடு சக்கரமேந்தும் தடக்கை யனாகவே அவன் அங்கும் தோற்றமளித்தது ஸ்பஷ்டமாகும். பங்கயக்கண்ணனை—செங் கழுநீர் வாய்நெகிழ்ந்த இக் காலத்திலே தாமரைப்பூ நன்கலர்ந்திருக்குமே. தாமரைக் கண்ணனும் நம் மேல் கண்ணோட்டமாய் விழித்துக் காத்திருப்பான். கப்யாஸச்ருதியிலே பங்கயக் கண்ணனது பெருமை பரக்கப் பணிக்கப்பெற்றுள்ளதே. அவ்வளவு அன்புள்ள நாவுடைய நீ நன்கு பாடுவாயாக. பாடேலோர் என்றவிடத்தில் செப்பேலோர் என்றது முதலானவற்றிற்போல பாடு என வினைமுற்றாகப் பிரித்தலே பொருந்தும். பாட என வினையெச்சமாகப் பிரித்து. 'பாடவேல்', என்னவேண்டுமாயினும் தொகுத்தல் விகார மாமிது என்று கொள்ள வேண்டிய அவசியமில்லை'

உட்பொருள்—இவ்வளவு பாசுரங்களால் உபாதானகாலத்தில், 'தம் சிஷ்ய குரு ஸப்ரஹ்மசாரி சிஷ்ட ச்ரேயோர்த்திபி ரநஸூயுபி ரப்யுபேயாத்' (तं शिष्य गुरु सब्रह्मचारि शिष्टश्रेयोर्थिभि रनसूयुभिरभ्युपेयात्) என்றபடி தங்கள் அதிகாரத்திற்குத் தகுந்த படியிலே சில ரோடு வேதாந்த விமர்சத்தை ஸந்தோஷமாக நடத்த அவரவர்களை அழைப்பதைச் சொல்லி. இனி உபாதான காலத்திலே உபகரணங்களைச் சேர்த்த பிறகு இஜ்யைக்குப் புறப் பட அவரவர் சொல்லிக் கொள்வதைக் குறித்தருளுகிறதாம். இஜ்யையாவது எம்பெருமா னின் திருவாராதனம். உங்கள் என்று சேதநர்களைச் சொன்னபடி. சேதநர்களுக்கு வீடு மோக்ஷஸ்தானம். புழைக்கடை ஸம்ஸாரம். அதிலுள்ள தோட்டம் சரீரம். சரீரத்தை விருட்சமாகச் சொல்வது வேதாந்தத்திலே ப்ரஸித்தமாம். 'ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்ந:', 'ஸாமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே' (समाने वृक्षे पुरुषो निमग्नः समानं वृक्ष परिषस्वजाते) என்றவாறு. அங்ஙனம் பலவிதமான பலன்களைப் பெறுவிப்பதாலே பலவிருட்சங்கள் கொண்டதொரு தோட்டமாகவும் அதைக் கொள்ளலாம். ஆங்குள்ள வாவி யாவது ஹ்ருதயம். தோட்டத்தின் செழிப்புக்குக் காரணமான தண்ணீர் வாவியி ருக்குமா போலே தேஹம் வளருவதற்கு வேண்டும் ரக்தாசயம் முதலியன ஹ்ருதயத்திலே யுள்ளன. ஆத்மாவும் மனதும் அங்கே இருக்கின்றன. உபாதான காலத்திற் செய்த வித்யாப்யாஸத்தாலே செங்கழுநீர் வாய்நெகிழ்ந்தன- 'ஜ்ஞாநம் புஷ்பம் க்ஷமா புஷ்பம் புஷ்பமிந்திரியநிக்ரஹ:' (ज्ञानं पुष्पं क्षमा पुष्पं पुष्पमिन्द्रियनिग्रहः) என்றவை போன்ற ஆத்ம குணங்களாம் மலர்கள் மலர்ந்தன. ஆம்பல் வாய் கூம்பினகாண்—ஸம்ஸாரமென்ற இரவில் விகாஸம் பெறும் இந்த்ரியாதி தோஷங்களெல்லாம் நீங்கின. இனி மாத்யான்னிக காலமும் வந்தது. செங்கற்பொடிக் கூறை. நீராடி நேர்த்தியான வஸ்திரங்களை யணிந்த வர்களும், வெண் ணூர்த்துவபுண்ட்ரம் தரித்தவர்களுமான பல் பல தவத்தவர் ப்ரபந்நசிகா மணிகள் தங்கள் திருக்கோயில் அவரவரின் க்ருஹார்ச்சைகளின் ஆராதனத்திற்கு எழுந் தருளுகின்றனர். எங்களை இத்யாதி. அன்பரான எங்களுக்கு அறிவை வளர்ப்பதற்காக முன்ன மிருந்து விசேஷார்த்தங்களை உபந்யாஸம் செய்த நம்பீ! கல்யாண குண பூர்ணா! ஸம்ஸாரிகள் எதிரிலே எம்பெருமான்மீது பித்துப் பிடித்தாடுவதற்கு வெட்கமுற்றாரைப் போலின்றி நிர்லஜ்ஜமாயும், நாவீறு பெற்றதற்குத் தக்கவாறும் பகவத் விஷயத்தி லீடு பட்டுச் செய்த உபந்யாஸம் கேட்ட எல்லோரும் உகந்து பாடி வரும்போது பார்த்து வந்து இனி வீற்றிருக்கு மாஸனத்தினின்று இஜ்யைக்கு எழுந்தருளவேணுமென்றவாறு.

முதலடிகளில் அர்ச்சனைக்குப் புஷ்பங்கள் சேகரித்தல் முதலான உபாதாந காலத்திய க்ருத்யங்கள் பூர்த்தியானதாக விண்ணப்பித்துக் கொள்வதுமாம்.

நன்ருக விழித்திருந்தே படுக்கையை விட்டுப் புறப்பட ஏற்பாடு செய்து வரும் கன்னியொருத்தியை யெழுப்புகிருர்கள். இதற்கு மேல் எல்லோரும் அழைக்காமலே வந்து கலந்து கொள்ளலாமானதாலே எழுப்புவது இத்துடன் பூர்த்தியாகிறது. இப் பாட்டு உக்தி ப்ரத்யுக்தி ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. முதலடி அழைப்பவரின் பாசுரம். இரண்டாமடி அழைக்கப்படுகிற ஒருத்தியின் பாசுரம். மறுபடி அழைப்பவரின் பாசுரம் மூன்ருமடி. மறுபடி அழைக்கப் படுகிறவளின் பாசுரம் நான்காமடி. ஐந்தாமடி அழைப்பவருடையது. ஆருமடியில் முதலிரண்டு பதங்கள் அழைக்கப்படுபவள் கூறினவை. மேலே பாட்டு முடியும் வரை அழைப்பவருடையதே. (14)

15. எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தாஞயிடுக
ஒல்லை நீ போதா யுனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்ருனை மாற்ருரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

எல் ஏ (இகழ்ச்சிக்குறிகள்)
இள கிளியே—'இளமை தங்கிய கிளியே!
இன்னம்—இவ்வளவு நேரமாகியும்
உறங்குதியோ—தூங்குகின்ருயோ?'
நங்கைமீர்—'குணபூர்ணைகளே!
சில் என்று—ஆரவாரம் பண்ணி
அழையேன்மின்—அழையாதீர்கள்,
போதருகின்றேன்-(நானே)வருகின்றேன்'
வல்லை—வல்லவளான
உன்—உனது
கட்டுரைகள்-ஸாமர்த்தியமான மொழிகளை
உன்வாய்—உன் வாயினின்று
(உன்னிடமிருந்தே)
பண்டே—முன்னமே
அறிதும்—அறிந்திருக்கிருேம்
நீங்களே—என்னை இங்ஙனிகழ்ந்து
பேசும் நீங்களே.
வல்லீர்கள்—வல்லமையுடையீர்கள்
(அல்லது)
நானே தான் | நானே வல்லமையுடைய
ஆயிடுக | வளென்ற பக்ஷமே வேண்டு
| மானாலுமிருக்கட்டும்

ஒல்லை—சீக்கிரமாக
நீ போதாய்—நீ வருவாயாக.
உனக்கு—உனக்குமட்டுமாக
என்ன வேறு | வேறெதை உடையவளா
உடையை | யிருக்கிருய்
எல்லாரும் | தோழிகளெல்லாரும்
போந்தாரோ | வந்துவிட்டார்களோ
போந்து—(நீயே)வந்து
எண்ணிக்கொள்—கணக்கிட்டுக்கொள்வாயாக.
வல் ஆனை(யை) — வலிய யானையை
கொன்ருனை—கொன்றவனும்,
மாற்ருரை—சத்ருக்களை
மாற்று அழிக்க—விரோதமிராதபடி செய்ய
வல்லானை—ஸமர்த்தனும்,
மாயனை—மாயை பொருந்தியவனுமான கண்ணனை
பாடு—பாடுவாயாக.
ஏல் ஓர் எம் பாவாய்.

பேச்சிலே வல்லையான ஒருத்தியை உள்ளே நுழைவதற்கு முன்னமே அழைத்துப் பரிஹஸிக்கிறார்கள். எல் என்றதும் ஏ என்றதும் இகழ்ச்சிக்குறிகள். இத் தோழி அவர்களுக்கு மிகவும் ஸ்வாதீனமானவள். இனி, எல்லே! தோழியே என விளித்ததுமாம். எல்லே என ஆச்சரியக் குறியாகவும் கூறுவர். இளங்கிளியே! புள்ளெல்லாம் சிலம்பினபோது கிளியும் வெளியே வந்திருக்கவேண்டும். இது இளங்கிளி போலும். கிளிக்குட்டி கூண்டை விட்டகலமாட்டாது உறங்குகிறது போலும். பேசுவதில் வல்லவளான படியாலே, பண்டைக் காலத்து பாகவதக்கிளியான ஸ்ரீசுகரைப் போன்றுள்ள இளங்கிளியல்லளோ நீ நாங்கள் நுழையும்போதே நீ ஏதோ பகவத் விஷயம் பாடிக்கொண்டிருப்பா யென்றிருந்தோமே, இன்ன முறங்குதியோ என்றனர். இங்கே, 'பங்கயக் கண்ணனை முன்னமே இவர்கள் பாட அதனை கிளிபோல் பின்னே பாடியிருந்தனள் அவள் அதனைக் கேட்டு இளங்கிளியே என்றனர்' என உரைப்பர் அப்போது அடுத்த க்ஷணத்திலே இன்னம் உறங்குதியோ வென வினு எழாது. இவர்கள் தன்னை நிந்திப்பதற்காக நினைத்திவள் மறுமாற்றம் தராமற்கிடந்தாலும் இவள் பாடினதை கேட்டுவருமிவர்கள் உறங்குதியோ என்னவொன்னுதே. ஆக இளங்கிளியே என்றதற்கு முன் சென்னது கருத்தாகலாம். அன்றி இப் பச்சைக்கிளி பச்சைமாமலை போன்ற மேனியானுடன் சேராதே உறங்குவதென்? கிளி மொழியாளென்ன வேண்டும்படிக்கிருக்கும் மொழியின் இனிமையையும் கிளி மூக்குப் போன்ற வாயும் வாய்த்தவள் இவள் என நினைத்தும் இளங்கிளியே என்றனர். ஆகவே மேலே 'உன் கட்டுரைகள்', என இரண்டையும் பிரித்துக் கூறினதாம். இப்படி இவர்கள் இவள் விழித்தெழுந்து புறப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணுமே, நுழையும்போது நுட்பமாகச் சொன்னதை ஸஹியாது இவள் சொல்லுமது இரண்டாமடியிற் சொல்லப்படுகிறது. 'எழுப்புவதற்காக ஏற்பட்ட பாட்டுக்களிலே இதற்கு முன்னுள்ள ஒன்பது பாட்டுக்களிலே இங்ஙனம் ஒருவருக்கொருவர் பேசுமாறு இராவிடினும், அங்கும் இருப்பதாகவே கொள்ள வேண்டுமென்றும். ஆகவே தான் அங்கே ஓர் அடையாளம் கூறி மற்றோரடையாளம் கூறுவதற்கு முன் அழைக்கபடுபவளின் வார்த்தையை அவதாரிகையாக முன்னோர் வைத்திருப்பது' என்றும் சிலர் சொல்லுவர். உண்மையில் உறங்குகிறவர்கள் நடுநடுவே பேச முடியாததால், 'பெருந்துயில்தான் தந்தானோ', 'ஈதென்ன பேருறக்கம்', 'சிற்றுதே பேசாதே' என்றவற்றிற்கேற்ப முன் எழுப்பப்பட்டவர்கள் நடுவே பேசினது கிடையாதென்னலாம். முன் அடையாளத்திலே அதிருப்தியாலேயே வேறடையாளம் சொல்லுவதென்றுல், அவ்விதம் எழுப்புமவர் தாமே நினைத்து வேறடையாளம் சொல்லுகிறு ரென்னலாம். பூர்வர்களின் உரைக்கும் இவ்வளவே தான் கருத்துக் கொள்ளவேண்டும்.

சில் என்றழையேன்மின்— உறங்காதவளை உறங்குவதாகச் சொல்வதும், ஆகவே இளங்கிளி யென்று ஏசுவதும் தகாவென்றபடி. கிளியென்றது பழக்கினவர்களின் குண தோஷங்களைக்கொள்ளும் புள் ஒன்று. தாயும் தந்தையும் ஒருவரேயாயிருக்க வேடர் கொண்டு வளர்த்த கிளி, 'வெட்டு, கட்டு' என்றே சொல்லும். முனிவரின் ஸஹவாஸ முள்ளது மரியாதை யளித்துப்பேசும். கௌஸல்யையின் அந்தப்புரத்திலே யிருந்த ஒரு நாணகவாய்ப்புள் (சாரிகை) உடன் இருந்த கிளியைப் பார்த்து, 'கிளியே கெடுநினைவனின் காலைக் கடி' என்று சொல்லாநிற்கு பென்றனர் ஸ்ரீ ராமபிரான் காட்டிற்செழுந்தருளின போது கங்கையின் கரையில் இருக்கும் இலக்குமணனைப் பார்த்து இது க்ஷத்ரியஸஹவாஸதில் வரும் பேச்சு தாய்க்கு த்ரோஹம் செய்பவரைத் தாக்கி, அவளை காக்க வேண்டிய தென் கடமையன்றோ. புள்ளானது சொன்னதை சொல்லியாவது வந்தது. நான் அதுகூட செய்யவில்லை, அச் சொல்லின் சுவை யறிந்து, கைகேயி விரோதமாக

நடக்க ஸந்தர்ப்பம் ஏற்படு மென்பதை நன்காராய்ந்து, எச் சமயம் என்னவாகுமோ வென நினைத்துப் பரதனையும் பக்கத்திலேயே யிருக்க நான் செய்திருந்தால், கைகேயினால் இவ்வளவு தீம்பு செய்ய வியலாது. அன்னைக்கு மிப்படி வருத்தம் நேராது. பல தரம் சொல்லக் கேட்டும் அதன் பொருளை யறியாது வெளிவந்தேனே என்று வருந்தினார்.

'மத்யே ப்ரீதி விசிஷ்டா ஸா மத்தோ லக்ஷ்மண சாரிகா ।
யஸ்யாஸ்தச் ச்ருயதே வாக்யம் சுக பாத மரே தச ॥

(मन्ये प्रीति विशिष्टा सा मत्तो लक्ष्मण शारिका । यस्यास्त च्छ्रूयते वाक्यं शुकपादमरे दश ॥)

என்றவாறு. ஆக நீங்கள் என்னை எவ்வித கிளியாக நினைக்கிறீர்கள் என்றபடி.

சில்—உஷ்ண தேசத்தில் இருப்பார்க்குச் சில் என்பது இஷ்டமாகும். குளிர்ந்த இடத்திலே இருப்பார் சில் என்பதைச் சகியார். அதுபோல் பனிக்காலத்திலே இவளுக்குச் சில் என்பது அஸஹ்யமாயிற்று போலும். ஆகில் அழைப்பது கஷ்டமாயிருந்தால், நாங்கள் போகின்றோமென்பார்களோ வென அஞ்சி நங்கைமீர் என்றனள். இளங்கிளி என்றதால் என்னைப் புகழ்ந்ததாகவும் நினைக்கிறேன் என்பதையும் இவ்விளியால் விளக்கினாள். என்னைப் போலின்றி வெகு நேரம் முன்னமே விழித்து வரும் உங்களுக்குக் கண்ணனிடமுள்ள காதலைக் கண்டு களிக்கிறேனெனவும் இதனால் குறித்ததாம். போதர்கின்றேன்—நீங்கள் பாடிவரும் போது அதனைக் கேட்டுப் பரவசையாய் அசையாமலிருந்துவிட்டேன். நீங்கள் பாடின பாட்டை விட்டு விட்டு அவ்வநுபவம் அழியும்படி சில் என்று ஏன் அழைக்க வேண்டும்? வந்துகொண்டே யிருக்கிறேனென்றபடி. வல்லையித்யாதி பேச்சுக்குப் பொருள் எவ்வளவு வென்பதைப் பேசுகிறவரின் வல்லமைக்குத் தகுந்தபடி ஆராய்தல் தகும். நீ வல்லையானபோது உன் பேச்சு வெறும் பேச்சாகுமோ? உனது கட்டுரைகளைப் பிறர் மூலமும் புத்தகத்தினின்றும் கூட அறிந்தது போக, நேரில் உன் வாயினின்றே யறிந்திருக்கிறோமே யென்றபடி. உனது இந்தக்கட்டுரைகளையும் இதற்கு முன்னமே கூட உன் வாயையும் அறிந்திருக்கிறோ மெனவும் பொருளாம். கட்டு உரை கட்டுரை உறுதியாய் பொருள் நிரம்பப் பொதிந்த உரை. 'சில் என்று அலட்சியமாகச் சொன்னாய். பிறகு நங்கைமீர் என்று புகழ்ந்தாற் போல் கூறினாய். எங்களுக்கு நீ கூட இராததாலேற்பட்ட குறையினால் பூர்ணதையில்லையென நங்கைமீர் என்ற சொல்லாலே பரிஹாஸமாகப் பேசுகிறாய். அன்றி, ஆத்மகுணமில்லை யென்கிறாய். பண்டேயுன் வாயறிதும் — நாங்கள் முழுமையும் பேசி முடிப்பதற்குள்ளே நடுநடுவே வாயை விடுகிறாயே' யென்றனர்.

வல்லீர்கள் நீங்களே— 'எல்லே' என நிந்தை; 'இளங்கிளியே' என ஏளனம்; 'உறங்குதியோ' எனப் பழித்தல்; சொன்னதைச் சொல்லும் கிளி; அது கூட இல்லாத இளங்கிளி நானென்றீர்கள். இப்படிக் (கடுமையான உரைகளான) கட்டுரைகள் —கடுமையான சொற்களை சொல்ல நீங்களே வல்லீர்கள். அர்த்தபுஷ்டியும் உங்கள் பேச்சில் தான் இருக்கிறது. 'வ்யாக்யாதா வேத்தி நோ கவி: (व्याख्याता वेत्ति नो कवि:) என்றபடி என் பேச்சுக்குக்கூட நான் அறியாத பொருளைக்கூட நீங்கள் புகவிடுகிர்கள். எனக்கென்ன வல்லமை என்றனள். அடி! நாங்கள் உன்னை நேராகப் பாராமே, உறங்குதியோ என்றோம். உன் பாட்டைக் கேட்கவேண்டுமென்ற பேரவாவினாலே, இளங்கிளியே என விளித்தோம். இளங்கிளியாவது இளமை-யௌவநம் பொருந்திய கிளி! பேசவும் பாடவும் பாங்கான கிளி. வேறு பொருளும் பெறும்படி யுள்ள பதத்தைச் சொன்னது தவறாகில் அதனைப் பொறுத்துக்கொள் என க்ஷமைகொள்வார்போல அவர்கள் இருப்பதைக் கண்டு. தோழிகள் பலரை எதிர்த்து ஒருத்தி வாதாடுவது தகாதென வாராய்ந்து சிறிய திருவடி ஸுக்ரீவனைப் பார்த்து 'அந்தரேணாஞ்சலிம் பத்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்

(अन्तरेणाञ्जलिं बद्ध्वा लक्ष्मणस्य प्रसादनात्) என்று லக்ஷ்மணனைச் சரணமடைந்து க்ஷமை கொள்ள ப்ராத்திக்க வேண்டுமென்றதையும்,

'யச்ச சோகாபிபூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம் ।
மயாத்வம் பருஷாண்யுக்த: தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி' ॥

(यच्च शोकाभिभूतस्य श्रुत्वा रामस्य भाषितं । मयात्वं परुषाण्युक्तः तच्च त्वं क्षन्तुमर्हसि ॥)

என்று லக்ஷ்மணன் க்ஷமை கொள்ளக் கேட்டதையு மெடுத்தருளி, பரஸ்பரம் பாகவதர்கள், 'ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேப கடிதமானாற் போலே பொருத்திப் போரவும் ப்ராப்தம்' என்று ஸ்ரீதேசிகன் அருளிச் செய்த படியிலே இருக்கும் பாகவத நிலையை யநுஸரித்துக் குற்றத்தை ஏற்றுக்கொண்டு க்ஷமை கொள்ளுகிருள் நானே தானுயிடுக என்றனள். இவ் வளவு சொன்னவள் சடக்கெனத் திரளிலே வந்து புகுந்திருந்தால் அழகாயிருக்கும். அதில்லை. எனவே இவள் தன்னை யலங்கரித்துக் கொள்ளவும், புதிய ஆடை ஆபரணங் களைக் கொள்ளவும் தாமதிக்கிருளோ, அல்லது, நானே குற்றம் செய்தவளாயிருக் கிறேன்; நீங்கள் போய் சேருங்கள்; நான் தனியே வருகிறேன் என்கிருளோ வென்று பார்த்து, ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை என்றனர். ஏற்கெனவே அழகான இளங்கிளி. ஆடையும் ஆபரணமும் அதிகப்படி எதற்கு? எல்லாருக்கும் போலே கண்ணன் உனக்கும் அளிக்கப் போகும் ஆடையாபரணங்கள் போதாவோ? என்ன வேறு டையை— என்ன வேறு அபிப்ராயம் நீ உடையளாயிருக்கிருய். என்ன நீ உரு காண்பிக் காமல் ஏதோ பேசி வருகிருய். எங்களோடு கூடாமலே தனியே கண்ணனோடு கலவி யுற்றிருக்கிருயோ என்னவுமாம். இவ்வாக்கியத்திற்கு உபநிஷத் பாஷ்யகாரர் அருளிச் செய்த மொழி பெயர்ப்பு. 'சீக்கிரமாகச்ச தவ கிமர்த்தம் பார்த்தக்யம்' (शीघ्रमागच्छ । तव किमर्थं पार्थक्यम्) என்றது நோக்கதக்கது. 'வேறுடைமை' என்ற பாடத்தை அவர் அநு வதித்து அருளவில்லை, பெரும்பாலும் அங்ஙனமே பாடம் ஓதும் பக்ஷத்தில் நிஷ்காரணமாக அதை நிராகரிப்பதுதான் கூடுமோ? எல்லோரும் போந்தாரோ — நான் உங்களை விட்டுப் பிரிவனே? கண்ணன் திருமாளிகை கிட்டிவிட்டபடியால் அங்குப் போய் மற்றவர்க்குக் காத்திருப்பதைக் காட்டிலும், இங்கே நாம் ஒன்று சேர்ந்து புறப்படுவது நலமென்றும், மற்றும் சிலர் வரவேண்டியிருக்கு மென்றும், நினைத்துத் தாமதிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டே தன்னை ஒழுங்காக அமைத்துக் கொள்ளுகிருள். தாமதம் பொருமே. போந்தார் என்றனர் அவர். உனக்கு ஐயம் உண்டாகில் உடனே வந்தெண்ணிக்கொள். எண்ண இறங்கி வீணே போது போக்காமல் எங்களை வசீகரிக்க வல்லையான நீ மாற்ருரை மாற்றழிக்க வல்லானைப் பாடுவது நலமெனவும் கூறினர். இங்கே மாயனை யென்றதால் மாயனை யென்ற பாசுரத்திற் சொன்னதை யினி யனுஷ்டிக்க நாம் புறப்படலாம். அதற் காக எழுப்ப வேண்டியவரை எழுப்பியாயிற்று என்று குறித்தபடியாம்.

உட்பொருள்-அம்மாள் காலக்ஷேப கோஷ்டியிலே எழுந்தருளி யிருந்த ச்ருதப்ரகாசிகா சிரியரைப் போலும் ஸ்ரீதேசிகனைப் போலும் அர்த்த ஸ்வாரஸ்யங்களிலே ஆழ்ந்து அசை யாத ஒரு ஸதீர்த்யரைத் தோழன்மார்கள் தாராளமாக ஸ்நேஹத்தை யிட்டுப் பேசும் முறையை இங்கே நோக்குக. சிற்றஞ்சிறுகாலே யென்ற பாசுரத்திலே பகவத்தாஸ்யம் பணிக்கப் பெறும். இங்கே பாகவதர் விஷயத்திலே குற்றமற்ற தாஸ்யம் கொள்ளவேண்டி யது கூறப்படுகிற தென்பதையும் கொள்க.

இளங்கிளி—கிளியைப் பழக்கிவைக்குமா போலே பழக்கி வைத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்களை யுடைய கிளியே! இஜ்யாராதனத்திற்கு எழுந்திருக்கலாமே. இன்னமுறங்குதியோ — 'த்வம் மேஸஹம் மே' (त्वं मेऽहं मे) என்ற கலஹத்திற்கு அடியான

அஜ்ஞானம் இவ்வளவு ஆசார்யோபந்யாஸங்களை ஆழ்ந்து அநுஸந்திக்கும் தேவரீருக்கு இருக்கவே முடியாதாகிலும், வெளி வியாபாரங்களை மறந்து மெய் மறந்து உள் அநுபவத்திலேயே யாழ்ந்து இஜ்யாகாலம் வந்தபிறகும் காலத்தையும் காலத்திற் செய்யவேண்டியதையும் மறந்திருக்கிற படியோ? ஸத்ஸங்கத்தாலே சிறந்த ஜ்ஞாநாநுஷ்டானங்களைப் பெற்று 'ப்ராஜ்ஞா யதோசிதமிதம் சுகவத் படந்த: ப்ரச்சன்னபௌத்த விஜயே பரிதோய தத்வம்' (प्राज्ञा यथोचित मिदं शुकवत्पठन्तः प्रच्छन्नबोद्ध विजये परितोय तत्वं) என்றாற் போலே பழமொழிகளைப் பாதுகாத்துப் பலரின் போக்கை யழிக்கு மிளங்கிளி யல்லீரோ நீர் என்றதுமாம்.

சில் இத்யாதி—எல்லாமறிந்த நம்பிகளே! உபாதான காலத்தில் நடத்தின உபந்யாஸத்தின் சுவையின் அநுபவத்திற்கு இடையூறான பேச்சு எதற்கு? காலம் வந்தது தெரியும் வருகிறேன் என்றார் அந்த ஸதீர்த்யர்.

வல்லையித்யாதி—பல ஆசார்யர்களிடம் கேட்டுப் பழைய உரைகளுக்கும் புதிய உபந்யாஸங்களுக்கும் ப்ரபந்த மியற்றும்படிக்கு வாசியறிந்து ஒன்றோடொன்று இணைந்தமையை எடுத்து உரைக்கும் வல்லமையை உம்மிடம் நாங்கள் முன்னமே நன்கறிவோமென்றனர் மற்றோர். இவர் அவர்களைத் துதித்து, பகவதநுபவ கைங்கர்யத்திலே தமக்கு அவர்கள் இட்ட பங்கைப் பாங்காகக் கொள்ள இயன்று நானே தானாயிடுக என்றார். வல்லீர்கள் நீங்களே நானே தானாயிடுக. நீங்கள் நான் தானாகவே ஆயிடுக. நான்தானும் நீங்களே யாயிடுக. நமக்குள் என்ன பேதமிருக்கிறது. நானாக இருந்து நீங்களே இதை செய்வதாக நினைக்கிறேன் எனவும் பாராட்டினார். அவர்கள்—உனக்கென்ன—உமக்கென்ன குறைவு? வேறுடையை — எங்களை விட எத்தனையோ வைலக்ஷண்யம் பெற்றிருக்கிறீர். ஆகிலும் உமக்காக நீர் என்ன வேறுடையீர். எல்லாம் எங்களதென்றே சொல்லுகிறீர். இதெல்லாம் 'நித்யாபிவாஞ்சித பரஸ்பரநீசபாவை:' (नित्याभिवाञ्छित परस्परनीचभावैः) என்றும், 'க்ரயவிக்ரயார்ஹதசயா ஸமிந்ததே' (क्रयविक्रयार्हं दशया समिन्धते) என்றவாறு மருளப்பட்ட பாகவதர்களின் நிலைக்கு நன்கு பொருந்தியதே. எல்லாரும் போந்தாரோ. இஃதென்ன என்னைப் புகழ்வது? எனக்கு மேல் அழைக்கப்பட வேண்டியவருமிருப்பரே- போந்தார்—உமக்கு மேம்பட்டவர் யாருமில்லை. இனி நம் பேச்சு எதற்கு? உபந்யஸித்த ஆசார்யனோ, ஸப்ரம்மசாரியோ அவரவரின் வல்லமையையும், அவரவர் செய்த வுபந்யாஸத்தையும் பற்றிப் புகழ்ந்து அவரவர் விஷயமாகத் தனியன் புகழ்மாலை பாடி இதை முடித்துக்கொள்ள வேண்டுமென்றனர். அன்றி, மாயனை யென்றபாட்டில் ஆசாரியன் உபதேசித்ததின் பராமரிப்புக்காக நாம் சேர்ந்து நடத்தின விமர்சமெல்லாம் இத்துடன் முற்றிற்றென விளக்க இங்கே மாயனை என்றதாம் என்றவாறு காண்க. (15)

நோன்பு நோற்கும் பெண்களெல்லாம் திரளாகத் திரண்டு கண்ணனை யெழுப்ப நந்தகோபர்திருமாளிகைக்கு வருகின்றனர். முன்னே, 'பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்' என்றார்களே, இப்போது கண்ணன் திருமாளிகைக்கு வருகிறார்களாகில் அங்கே போவது எப்போதென்னில் பாவைகள மென்பது நோன்பை நோற்கு மிடமாகில் இனி அங்கே போவதாகச் சொல்வது. பாவைகள் எல்லோரும் கண்ணனிடம் பறை பெறச் சேருமிடமே பாவைக்கள மென்னில், கண்ணன் திருமாளிகையைச் சேர்ந்தாற் போல் அது இருப்பதாகும். அங்கே கண்ணன் முன்னமே எழுந்தருளாமலிருந்ததால் அவனைத் திருப்பள்ளி யெழுப்பின பிறகு அவனுடன் அங்கே சேர்ந்து பறை பெறுவரென்று கொள்வது. திருமாளிகைக்கு வந்து வாசற் காப்பானை யெழுப்புவதைப் பற்றின பாசுரம் நாயகப் பாசுரம்;

16. நாயகனுய் நின்ற நந்த கோபனுடைய
கோயில் காப்பானே ! கொடித்தோன்றுந் தோரண
வாசல் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்.
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றுதே யம்மா நீ
நேச நிலேக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

நாயகனுய்—ஸ்வாமியாய்
நின்ற—நிலேத்து விளங்கும்
நந்தகோபனுடைய | நந்தரென்னும் கோபராஜருடைய
கோயில்—திருமாளிகையை
காப்பானே—காக்குமவனே!
கொடி—த்வஜபடம்
தோன்றும்—பிரகாசிக்கும்
தோரணம் வாசல் | வெளிவாசலே (முன்வாசலே)
காப்பானே—காக்குமவனே!
மணி கதவம்—மணிமயமான கதவின்
தாள்—தாழ்ப்பாளே
திறவாய்—திறந்தருளவேணும்.
நென்னல் ஏ—நேற்றே
மாயன் —ஆச்சர்யனுய்
மணிவண்ணன்—நீலமணி நிறத்தனுமான கண்ணன்

ஆயர்சிறுமி | இடையரின் பெண்களாய்
யரோமுக்கு | சிறுவயதிலுள்ள எங்களுக்கு
அறை பறை - கோஷிக்கும் வாத்தியத்தை
வாய் நேர்ந்தான்—வாயால் அளித்தான் (அளிப்பதாக அருளினுன்)
(ஆகவே நாங்கள்)
துயில் எழ—(மணிவண்ணன்) திருப்பள்ளி யெழும்படி
பாடுவான்—பாடுவதற்காக
தூயோமாய்—பரிசுத்தர்களாய்
வந்தோம்—வந்துளோம்
அம்மா, நீ—ஸ்வாமியானவனே! நீ
முன்னம் முன்னம்—முதன்முதல்
வாயால் மாற்றுதே | மறுத்து ஒன்றும் சொல்லாதே
நிலே நேசம்—நிலேயிற் பதிந்துள்ள
கதவம்—கதவை
நீக்கு—திறந்தருளவேணும்.

'கோயில்காப்பானே' என்று திருமாளிகை மதிட்சுவர் சேர்ந்ததும். அங்குள்ள காவற்காரனிடம் உத்தரவு பெற்று உள்ளே புகுந்து, தோரண வாசக்காப்பானைப் பிறகு எழுப்புகிருர்கள் என்று இரண்டு விளிகள் இணங்குமாறு கொள்க. அன்றி, வாசக்காப்பானும், மற்றவருமாகப் பல கோயில் காப்பார் இருப்பர். அவரில் ஒருவனே, ஸாமாந்யாதிகாரம் விசேஷாதிகாரம் இரண்டும் பெற்றிருப்பவனே இரண்டையும் குறிப்பிட்டுக் கேட்கிருர்களென்க. வாசக்காப்பானுக்குப் பெருமை நாயகனுடைய பெருமையைக் கொண்டாதலால் நந்தரை முன்னம் வர்ணிக்கின்றனர். நாயகனுய்—நந்தன் உனக்கும், எங்களுக்கும், முழுக் கோகுலத்திற்கும் நாயகன். அன்றி, போகநாயகனுன எம்பெருமானுக்கும் குருவாகையாலே. அவன் நந்தகோபன் குமரனுகையாலே உலகுக்கே நாயகன், அன்றியும், கண்ணனே நயிப்பிக்கிறவன், நடத்துகிறவன்; நம் நோன்பை நடத்தும்படி யவனுக்கு ஆக்ஞை யிட்டு உள்ளவன். நாயகனுய் நின்ற-எம்பெருமானது விசேஷகடாக்ஷத்திக்குப் பாத்திரமாயிருப்பதாலே, ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவரே கருநாய் கவர்ந்த காலராய் சிதைகிய பானையராய் பெரு நாடு காண இம்மையிலே பிச்சைதான் கொள்வது

போலின்றி தானுள்ள வரையில் நாயகனாகவே நின்றவன் நந்தன். நேற்றுக்கு முன்வரை யில் எங்களைக் கண்ணனோடு சேர்க்கவிசையாத இடையரின் வேண்டுகோளுக்காக அனுமதி பண்ணாமலிருந்து பிறகிப்போது அவர்களே அனுகூலர்களாகி விட்டதாலே நன்கு நடத்த நின்றவனென்னலுமாம். நந்த:—நந்தயதீதி நந்த: = எல்லோரையும் களிப்பிக்கிறவன். எங்களுக்கு அனுகூலனானதாலே உலகுக்கே அனுகூலன். துர்பிக்ஷத்திலும் கூடிய மட்டில் உழைப்பதாலும், ஸுபிக்ஷத்திற்கு வழி தேடினதாலும் நந்தன் என்ற பேரைக் காத்தவன். ஆகவே கோபன் = நாடெல்லாம் காத்தவன். அவனுடைய கோயில் கோயிலாவது ஸ்வாமியிருக்குமிடம். நந்தனும் எசமானனானதாலே அவனது மாளிகை கோயிலாயிற்று. அன்றி, கண்ணன் அவதரித்த பிறகு, 'கண்ணன் முற்றம் கலந்தளறாயிற்றே' என்றபடி அவன் திருமாளிகையாகவே பாவிக்கபடுவதால் நந்தராலும் நினைக்கப் பட்ட திருமாளிகை யென்றதாம். நந்தகோபனுடைய கோ = ஸ்வாமியாவான் கண்ணன். அவனது இல் எனவும் பிரிப்பர். நாயகனாய் நின்ற என்பது இப்போது கோ என்றதற்கும் அடைமொழியாம்.

கோயில் காப்பானே—இவனை இவர்கள் இவனது சொந்த வீட்டுக் கதவைத் திறக்க விளிப்பதால் அவன் பெயரிட்டழைக்க நேரலாம். நந்தன் கோயில் கதவைத் திறக்க வேண்டுவதாலும், அவன் பெயர் ஏதாயினும் அப்போதைக்கப்போதும், யாமந்தோறும் வெவ்வேறு காவற்காரர் இருப்பதாலே இன்னானென ஆயச்சிறுமிகள் அறியவியாலாதாகையாலும் பொதுவிலே இங்ஙனமே விளிப்பது யுக்தமாயிற்று. அவனுக்கும், பேரைச் சொல்லாமல் விளித்ததில் பெருமை யதிகமாம். எசமானனிடத்திலே மதிப்புள்ள வேலைக் காரனுக்கு அவனது ஸம்பந்தத்தைக் கொண்டழைத்தாலே யன்றோ பெருமை யிருப்பது ஆகவே. யன்றோ,

'ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்ய: நைவ க்ராமகுலாதிபி: ।
விஷ்ணுநா வ்யப தேஷ்டவ்ய: தஸ்ய ஸர்வம் ஸ ஏவ ஹி' ॥

(एकान्ती व्यपदेष्टव्यः नैव ग्रामकुलादिभिः । विष्णुना व्यपदेष्टव्यो तस्य सर्वं स एव हि ।।)

என்று ஸ்ரீவைஷ்ணவன் தன்னை வைஷ்ணவனென்று சொல்லிக் கொள்ள வேண்டுமே யல்லது ஊரையும் குலத்தையும் சொல்லிக் கொள்வது தகாதென்றது. சில மஹான்கள் அபிஜாத குலவல்லாத குலத்திற் பிறந்திருக்கலாம். அப்ரஸித்தமான ஊரைச் சேர்ந்தவராகலாம். பெற்றும் உற்றும் ப்ரஸித்தி பெறாத வராயிருக்கலாம், ஆக அவற்றைக் குறிப்பது தகாது. எத்தகையராகிலும் அவருக்கு வைஷ்ணவத்வமேற்பட்ட பிறகு மதிப்புக்குக் குறையில்லை. உயர்ந்த ஊரிலும் குலத்திலும் பிறந்து பல குலபிருதங்களையும் வழங்கலாம். ஆகிலும் தான் வைஷ்ணவனெனப் பெயர்பெற்றிருக்கத் தக்க நிலையிலிராத போது உய்ய வழி யேது? ஆகையால் அவை யெல்லாம் பயன்படா என்றபடி. திருமாளிகையைக் கிட்டி நிற்க எங்களை யனுமதிப்பது மட்டும் போதாது. திருமாளிகையுள் புக வுமவேணு மென்று கருதி. அவ்வதிகாரம் அவனுக்குள்ளதையும் விளக்க கொடி தோன்றும் தோரணவாசற் காப்பானே யென்றனர். தோரண வாசல் = தோரணமெனப் படும் வாசல். 'தோரணோஸ்த்ரீ பஹிர்த்வாரம்' (तोरणोस्त्रीबहिर्द्वारम्) என நிகண்டு கொடி தோன்றுமென்றது அதன் விசேஷணம். வேறு வீடுகளுக்கும் நந்தன் மணிமாளிகைக்கும் எவ்வளவோ பேதமிருக்குமாகையாலும், அவ்வாய்ப்பாடியில் பெண்களுக்கு அவர் திரு மாளிகை யின்னதெனத் தெரிந்திருக்குமாகையாலும் கொடி எதற்கென்னில்—எளிதிற் கொடியைக் கண்டு எல்லோரு மறிவது கூடுமாகையாலே அது உசிதமே. மேலும் நாயகன்

வீட்டிற்கு இது முக்கியமான லக்ஷணமாகும். அன்றி, நடக்கும் நோன்புக்குக் கண்ணனே நடத்தும் புருஷனனதாலே அப்பெருமை தோற்றவும் சிறப்பாக அவன் திருமாளிகையில் அவன் எழுந்தருளியிருக்குமிடத்திலே கொடியும் பலவகைத் தோரணங்களும் கட்டி யலங் கரித்திருப்பர். மணிக்கதவம்—அழகிய கதவ மென்பது மட்டு மின்றி, உண்மையிலே மணி மயமாகவே யுள்ள கதவம். தூமணிமாடம் இவன் ப்ரஜைகளுக்கே யிருக்கும்போது இவன் திருமாளிகைக்கு அதற்கு மேலாகத் தானே பெருமை யிருப்பது.

நீங்கள் யார்? எதற்காக வந்தீர்கள்? பகலில் வராமே இப்போது வருவதென்? என்ற வினக்களுக்கு மறுமொழி கூறுகின்றனர். இரவு கழிவதற்குள் வந்தாலும் எங்களை, அவ் வப்போது ஆய்ப்பாடிக்கும் ஐயனை கண்ணனுக்கும் ஆபத்தை விளைவிக்கும் அசுரர்களாக நினைக்க வேண்டா. நாங்கள் இடைப்பெண்கள். பூதனையைப் போலே போலியாய் இவ் வேஷம் பூண்டு விஷ மிட வந்தோ மல்லோம். சிறுமிகளான எங்களிடம் ஸ்தன்ய விஷத் திற்கு இடமேது? நாங்கள் உண்மையில் இவ்வூரிடையரின் பெண்கள். நாங்கள் நோன் புக்குப் பறை பெற வந்தோம். முன்னமே பகலில் நந்தரிடம் விண்ணப்பம் பண்ணிக்கொள் ளாமல் இங்ஙனம் இப்போது வருவது தகாதென வேண்டா. எங்களுக்குப் பறை யளிப்ப வன் நந்தனல்லன். மாயன் மணிவண்ணன். வேறொருவரை நோன்பைக் காக்கக் கூடிய வராக நினைக்க முடியாதே. அவன் தானே மாயன்=ஆச்சர்ய சக்தி வாய்ந்தவன். ஆய்ப் பாடியில் நேருமாபத்தை யெல்லாம் போக்குபவன். அவன் நீலமணி வண்ணனை நாரா யணனை படியாலே எங்கள் மனம் அவனிடமே பதிந்துள்ளது. 'ஆகிலும் அதற்கும். முன்னமே விண்ணப்பம் செய்யவேண்டாவோ. அவன் ஊரார் தூற்றலுக்கஞ்சி உங்களுக்கு ஏதும் செய்யானே' என்ன வேண்டா. எல்லா ஏற்பாடுகளும் ஏற்கனவேயாயின. அவனும் நென்னேலே வாய் நேர்ந்தான். 'ஆகில் எழுந்தபிறகு நானே விண்ணப்பித்துச் சொல்லு கிறேன்; இருங்கள்' என்னில், நாங்கள் திருப்பள்ளி யெழுப்பவே வந்துள்ளோம். ஸமயம் வாய்த்ததே அவனோடு கலவி பெறக் காதலுற்று இரவில் வந்தோமென நினைக்க வேண்டா. தூயோமாய் வந்தோம். இனி நாங்கள் பறை பெற்று நீராட வேண்டியிருந்தாலும் இந்தக் காலத்திற்குத் தக்கபடி முக்கரணங்களின் சுத்தியோடு வந்திருக்கிறோம். உண்மையில் பலனைக் கோராமல் பரமை காந்தி தர்மத்தை யனுஷ்டிப்பவராகையாலே வேறு பலனையே நாங்கள் நோக்காதபோது காமபுருஷார்த்தத்திற்காக நினைக்க இடமேது? மேலும் அவனை அண்டி தொட்டெழுப்ப வரவில்லை; துயிலெழப்ப பாடவே வந்தோம்.

இவ்வளவு இவர்கள் சொன்னதற்கு மேல் தாளைத் திறந்தான். கதவை யசைத்துப் பார்த்தனர். மாமணிக்கதவு அசைக்கவே முடியவில்லை. 'பாட வந்ததாகச் சொல்லி ஏதோ பேசிவருகிறீர்களே இஃதென்? நீங்கள் வெறுமனிருங்கள். வழக்கம் போல் வந்தி வைதாளிகர்கள் திருப்பள்ளியெழுச்சி நடத்துவார்கள். அதன்மேல் விழித்த பிறகு விண்ணப்பிக்கலா' மென்று அவன்சொல்ல முற்பட்டான். அப்போது வேண்டுகின்றனர்— அம்மா! கதவு நிலையில் நன்றாகப் பதிந்திருக்கிறது. எங்கும் இதில் சந்து என்பதைக் காணோம், நாங்கள் பாடுவது அவன் செவியில் விழுந்தால்தானே அவன் அறிவுறுவான். ஆகையால் நீ ஒன்றும் மறுக்காமல் கதவை நீக்க வேண்டும். நாங்கள் உள்ளே நுழையும் படி நீக்க விருப்ப மில்லையாகிலும் எங்கள் பாட்டொலி உள்ளே புகும்படியாவது இருக்க வேண்டும். மேலும், முன்பாகத்தில் பள்ளி கொண்டிருப்பவர் யார், அதற்குப் பின்னே யார் எனத் தெரிந்துகொண்டு தக்கவாறு பாட வேண்டு மென்றனர். எவ்வளவு யோக்ய னாகிலும், ஒருக்கால் அவன் என் செய்வனோ வென அவர் அஞ்சினர். எசமானனைவிட அவனிடம் அதிகாரம் பெற்றவர் கடுமையாக நடந்து கொள்வது இயல்பு.

'ரவிராபி ந தஹதி தாத்ருக் யாத்ருக் ஸந்தஹதி வாலுகாநிகர: ।
அந்யஸ்மாத் லப்தபதோ நீச: ப்ராயேண துர்ஜநோ பவதி' ॥

(रविरपि न दहति तादृक् यादृक् संदहति वालुका निकरः ।
अन्यस्माल्लब्धपदो नीचः प्रायेण दुर्जनो भवति ।।)

என்றான்' பர்த்ருஹரி. கதிரவன் வெப்பத்தைக்காட்டிலும் அவனிடம் வெப்பம் பெற்ற மணற் குவியலுக்கு வெப்பம் அதிகம். ஆகையால் அவன் தடைபோடாமலிருக்க வேண்டுமே யென்று, வாயால் முன்ன முன்னம் மாற்றாதேயென்றனர். முதன் முதல் உன்னிடம் வந்தோம். இனியே அதிகாரியைப் பார்க்க வேண்டும். நாயகனைப் பார்க்க வந்த எங்களுக்கு நீ விநாயகனாக முதலில் ஆக வேண்டாம். உன்னால் தடைப்பட்டதென்ன வேண்டாதபடி நடந்து கொள்ளவேண்டும். அறை பறை பெறுவது அனைவரின் க்ஷேமத்திற்காக, எழுப்பப்போனவிடத்தில் ஒரு பிள்ளை கூட தடையாக ஒன்றும் கூறவில்லை. நீ முதன்முதல் அங்ஙனம் செய்யாதிரு என்றனர். இவர்கள் அவனை நமஸ்காரம் செய்து வேண்டினார்களா, செய்யாமலா என்னில், எப்படியாகில் என்ன? உத்தரவிட்டார்களல்லர். நமஸ்காரம் பாசுரத்திற் பணிக்கப்படவில்லை. பகவானது பரிஜனங்களைப் பணிவதில் குற்றமேது? இது தேவதாந்தர பஜனமாகாது. முன்ன முன்னம் மாற்றாதே—மணி வண்ணன் கருத்தை அறியாமே முதலில் தடை செய்ய வேண்டாம். பெருமாள் திருவுள்ள மறியாமே போரில் நின்ற வாநர வீரர்கள் விபீஷணன் சரணாகதி பண்ணின போது, 'வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ் ஸஹ' (वध्यतामेष दण्डेन तीव्रेण सचिवैस्सह) என்றெல்லாம் தண்டிக்க வேண்டுமென்றனர். கடைசியில் என்னவாயிற்று? ஆகையால் நென்னலே வாய் நேர்ந்த விஷயத்திலே நேர்மையாய் நடந்து கொள்ள வேண்டும். நேச நிலைக்கதவம் – நிலை = வாசக்கால். அதில் நேசமுற்ற, பதிந்த கதவென்றதாம். அன்றி, நேசத்தினால், நிலைபெற்றுள்ள கதவு, அசேதநமான கதவுக்கு நேசமெங்ஙனமெனில்— கண்ணன் திருமாளிகையிலுள்ள யாவும் நித்யஸூரிகளின் அவதாரமாம். திருவாழி திருச்சங்குகளுக்குப் போலே எல்லா வஸ்துகளிலும் நித்ய ஸூரிகள் நித்ய சைதன்ய ப்ரகாசத்தோடிருக்கின்றனர். 'படியாய்க் கிடந்துன்பவளவாய் காண்பேனே' என்று குலசேகராழ்வாரும் ஆசைப்பட வில்லையோ? 'நிவாஸ சய்யாஸந' (निवासशय्यासन) என்ற ச்லோகத்திலே ஆளவந்தாரும் ஆதிசேஷனே கோயிலாக அமைவதை யருளிச் செய்தார். இவ்வுண்மை யறிந்த இவ்வாயச் சிறுமிகள் நேச நிலைக்கதவமென்றனரென்க. அன்றி, உனக்கு எங்களிடத்திலே நேசத்தின் நிலைக்குக் கதவாய் = விரோதியா யுள்ள கருத்தேனும் உன் மனத்திலிருந்தால் அதை நீக்கிக் கொள் என்றதாம். அன்றியும், கண்ணனுக்கு எங்களிடத்தில் இருக்கும் நேசநிலைக்குத் தடைக் கதவாகவே இக் கதவிருக்கிறது. அதை நீக்கு என்றபடி.

உட்பொருள் — தோழிகளை எழுப்பும் பாசுரம் பத்தினாலும், ஆண்டாள் பத்து ஆழ்வார்களை எழுப்பினதாகக் கொள்வதென்று நிர்வஹிப்பாருளரென்றும், பத்து இந்திரியங்களைப் பத்துப் பாட்டுக்களால் எழுப்பினதாக கொள்வதுமா மென்றும் முன்னமே குறித்துள்ளோம். இதன் விரிவு வேறிடத்தில் ஆகுக. பத்து இந்திரியங்களாவன—கர்மேந்திரியங்கள் ஐந்தும், ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்தும். இப்பக்ஷத்தில் பதினோராம் இந்திரியமான மனத்தை இப் பாசுரத்திலே கொள்வது பொருந்தும். 'மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:' (मन एवमनुष्याणाम् कारणं बन्धमोक्षयोः) என்றபடி மனமே ஸம்ஸாரத்திற் சுழல்வதற்கும் காரணமாய் வீடு பெறுவதற்கு விரகாயு மிருப்பதாலே ப்ரதானமானது.

உபநிஷத்திலும் ஈசாவாஸ்யத்திலே, 'ஹிரண்மயேந பாத்ரேண ஸத்யஸ்யாபிஹிதம் முகம். தத்வம் பூஷந் அபாவ்ருணு ஸத்யதர்மாய த்ருஷ்டயே'

(हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखं । तत्त्वं पूषण् अपावृणु सत्यधर्माय दृष्टये)

என ஓதப்பட்டுளது. பாத்திரம் பொன்மயமானாலும் அதனால் முகத்தை மூடிவிட்டால் பொன்னிலுள்ள அபிமானத்தாலே பெருமைபட்டிருக்க முடியுமோ? கண் மறைந்து வாய் மூடி யிருப்பவன் எப்படிக் காண்பதும் உண்பதும் செய்யும்? ஆதலால் பொன்னை அப்புறப் படுத்தவே அவன் ப்ரயத்தனப்படுவான். அதுபோல் ரஜஸ்தமோமயங்களான பல விஷயங் களிலே பிறந்துள்ள ராகமோகங்களாலே மனது மூடப்பட்டு எம்பெருமானிடம் செல்லா மலிருக்கிறது. அதனால் சேதனனுடைய (தர்மபூத) ஜ்ஞானமானது தனக்குப் பரம தர்ம மாயுள்ள பரமாத்ம ஸாக்ஷாத்காரமாகப் பரிணமியாதே யொழிந்தது. ஆகவே ஆச்ரிதரைப் போஷிக்கும் பரமனே! நீயே இம்மனத்தின் மறைவை விலக்கி முக்கியமான ஞானத்தை யனுக்ரஹிக்க வேண்டுமென்று அந்த மந்திரத்தின் பொருளாம். அவ்வண்ணமிங்குப் பாசுரத்தில் மனத்தைத் திறக்கச் சொன்னதாம்.

'ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம' (ब्रह्मपुरे दहरम् पुण्डरीकम् वेश्म) என்றபடி ப்ரஹ்மபுர மெனப்படும் இவ்வுடலினுள்ளிருக்கும் ஹ்ருதயபுண்டரீகம் எம்பெருமானின் திரு மாளிகையாகும். அதனைக் காப்பது மனது. (3. 127) சாந்தோக்யோபநிஷத்தானது ஹ்ருதயத்திலே ஐந்து த்வாரங்களை ப்ரஸ்தாவம் செய்து அவற்றில் ஐந்து ப்ராணன்களுக் கும், ஐந்து இந்திரியங்களுக்கும், அவற்றின் தேவதைகளுக்கும் ஸம்பந்தத்தைச் சொல்லி அந்த த்வார பாலகர்களின் உபாஸனத்தைக் கூறியுள்ளது. இப்பாசுரத்திலும் அந்த வாசக்காப்பார்களையே விளித்து ப்ரஹ்மத்தின் உபாஸனம் சரிவர பெறப்படுமாறு ப்ரார்த்தித்ததுமாகலாம்.

மாயன் மணிவண்ணன் நென்னெலே வாய் நேர்ந்தான்-எப்போது ஆசார்யா ச்ரயணம் செய்து உபதேசம் பெற்றேனோ, அப்போதே எம்பெருமான் ரக்ஷிப்பதாக வாக் களித்தான் என்றதாம். தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான். தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினாற் பாடி' என்றபடி வந்தோம். ஹ்ருதய கமலத்திலே வீற்றிருக்கும் பெருமான் நம் விஷயத்திலே ப்ரவர்த்திப்பதற்காக அவனைத் துதிக்க. நேசநிலைக்கதவம். நேசம்=ஸ்நேஹம், பக்தி. நிலை=இடைவிடாமல் அது வளர்ந்து வருவது. ப்ரீதிருபாபந்நஸ்ம்ருதி ஸந்ததிக்குத் தடையானதை நீக்கு. விஷயாந்தரங்களிலே நோக்கற்று, எல்லா வகையிலும் எம்பெருமான் போக்யனாயிருத் தலைச் செவ்வனே பரிசீலனம் செய்தவண்ணமிரு மனமே என்றவாறு காண்க.

யாமிங்கு பாஞ்சராத்ரப்ரக்ரியையை யடைவாக அறிவிக்குமாறு உட்பொருளுரைத்து வருவதால் அதன் படிக்கு இங்குக் கருதப்படும் பொருள் இங்ஙனமாம். உபாதாந கால மான பிறகு நீராடி. இஜ்யை அதாவது திருவாராதனம் செய்யத் தொடங்குமவர் கூறுவது இங்கே சொல்லப்படுகிறது — நாயகன் ஜகந்நாதன். இவனே நாயகனாய் நின்றவன். இவனை விட்டு வேறு எவனை ஸர்வலோக நாதனாகச் சொல்ல முயன்றாலும் அது நிற்காது. இவனே வேதம் முதலான ப்ரமாணங்களாலே நிர்ணயிக்கப் பெற்றவன். ஏனெனில், இவனே நந்தன்=எல்லோரையும் ஆனந்திப்பிக்கிறவன். 'கோ ஹ்யேவாந் யாத் க: ப்ராண்யாத் யதேஷ ஆகாச ஆநந்தோ ந ஸ்யாத்', 'ஏஷ ஹ்யேவாநந்தயாதி'. (को ह्येवान्यात् कः प्राण्यात् यदेष आकाश आनन्दो न स्यात्. एष ह्येवानन्दयाति) அதற்குத் தக்க வாறு தானும் ஆனந்தமயன், இவனை விட. வேதாபஹார-குருபாதக-தைத்ய பீடாத்யா

பத்துக்களுக்குந் தாங்களு முட்பட்டுத் தங்களையண்டி நின்ற பாஞுஸுராதிகளும் பல துன்பங்களுக்காளாம்படி பார்த்திருக்கும் பிரம்மருத்ராதிகள் நாயகராகக் கூடுமோ? காக்கும் திறமையும் அளிப்பிக்குமதுவும் தனக்கே அஸாதாரணமாகக் கொண்டானுகை யாலே, பிரமனுக்கும் ருத்ரனுக்கும் பிறப்பிக்கவும் அழிக்கவுமதிகாரமளித்துத் தானே ரக்ஷகனுய் விஷ்ணுவாயவதரித்தது. அப்படிப்பட்ட எம்பெருமானின் திருகோயிலாழ்வாரைக் கிட்டி, 'கோயில் காப்பானே' என்று ஆராதனம் செய்பவர் விண்ணப்பம் செய்வர். துவார பாலகரைத் தெண்டனிட்டு ப்ரார்த்தித்துப் பிறகே திருக் கதவு நீக்குவது.

ஆயச்சிறுமியரோமுக்கு இத்யாதி. "ஸர்வேச்வரனுடைய பரத்வ மாத்திரத்தை யறிந்து அகலுகையாலே நராதமனென்று பேர் பெற்ற பிறந்து கெட்டானைக்காட்டில் இடைச்சிகளைப் போலே விவேக மில்லையே யாகிலும் ஸௌலப்யத்தை யறிந்து அந்நலனுடையொருவனை நணுகுமவனே பரமாஸ்திகன்" என்று அப்புள்ளாரருளிச் செய்த பாசுரத்தை ஸ்ரீதேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் (11 பரிகர.) அனுவாதம் செய்தருளியிருப்பது காண்க. ஆக ஆயச்சிறுமிகள் போன்ற எங்களுக்கு மாயன் மணிவண்ணனின் அனுக்ரஹ முண்டாகையாலே அவனை யாராதிக்க நணுகியனமென்றதாம். இங்கே அறைபறை என்றதாலே ஆராதன காலத்திற் செய்விக்கும் வாத்திய கோஷமும், தூயோமாய் என்று ஆராதனத்திற்கு முன்னும் மாத்யான்னிகஸ்நாதிகளும், துயிலெழ பாடுவான் வாயால் முன்னமுன்னம் என்று தொடக்கத்தில் வாயைத் திறந்து கணீர் என்று திருப்பள்ளியெழுச்சி முதலானவற்றைப் பரமன் ப்ரீதியுறும்படி பாடுவதும், மாற்ருதே நேச நிலையென்று மனத்தை சலிக்காதபடியிருக்கச் செய்து த்யானம் செய்வதும் பணிக்கப்பெற்றனவாம். (16)

வாசற்காப்பான் கதவை திறந்ததால் உள்ளே புகுந்து நந்தகோபரையும் அசோதைப் பிராட்டியையும், பலதேவனையும் முறையே எழுப்புகின்றனர்.

17. அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபலா யெழுந்திராய்
கொம்பனுர்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதாயறிவுருய்
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய்

அம்பரம் ஏ—வஸ்திரமென்ன
தண்ணீர் ஏ—குளிர்ந்த நீர் என்ன
சோறு ஏ—அன்னமென்ன இவைகளை
அறம் செய்யும்—தர்மமாக அளித்துவரும்
எம்பெருமான்—எங்கள் ஸ்வாமியான
நந்தகோபாலா—ஸ்ரீ நந்தகோபரே!
எழுந்திராய்—விழித்து எழுந்திருக்க வேணும்
கொம்பு எனுர்க்கு எல்லாம் | கொம்பு போன்ற எல்லா மாதர்களுக்கும்
கொழுந்தே—கொழுந்து போன்றவளே!
குலம் விளக்கே—இடைக்குலத்திற்கு விளக்கு போன்றவளே!
எம்பெருமாட்டி—எங்கள் எசமானியான
அசோதாய்—யசோதைப் பிராட்டியே!
அறிவு உருய்—விழுப்பை பெற வேணும்
அம்பரம் ஊடு | ஆகாசாவகாசத்தை யழித்து (அல்லது)

அறுத்து | அண்ட கடாஹத்தை நடுவிலே
ஓங்கி | பிளந்து வளர்ந்து
உலகு அளந்த—எல்லா வுலகையும் ஈரடி களால் அளந்தருளின
உம்பர்கோ—தேவர்களுக்கு ஸ்வாமியான வனுக்கும்
மானே—மஹானாய் (பெரியோனாய் முற்றவனாய்) உள்ளவனே!
செம் பொன் | சிவந்த பொன்னாலான
கழல் | வீரக் கழல்களை யணிந்த
அடி—திருவடிகளை யுடையனாய்
செல்வா—ஜய ஸ்ரீ பெற்றவனே!
பல தேவா—ஸ்ரீ பலராமனே!
உறங்காது | தூங்காமல் எழுந்திருக்க
எழுந்திராய் | வேணும்
உம்பி உம் | உமது தம்பியும்
நீ உம் | நீரு மிருவரும்
உறங்கேல்—உறங்கலாகாது
ஓர் எம் பாவாய்.

முதலிரடிகளில் நந்தகோபரையும் மேலிரடிகளில் அசோதைப் பிராட்டியையும் அதன் மேலுள்ள பாகத்திலே பலராமனையு மெழுப்புவது கூறப்பெற்றது. கோதானம், பூதானம், ஹிரண்ய தானம் முதலான பற்பல பெரும் தானதர்மங்களையும், யாகஹோமங் களையுஞ் செய்துவரும் நந்தகோபரை ஊணும் உடையுமளிப்பவர் எனப் புகழ்வதென்னே எனில்-நீண்டகால துர்பிக்ஷத்தினாலே நாடெங்கும் பரிதவிப்பதைப் பார்த்து மன முருகி, தமக்கு நெடுங்காலத்திற்காகச் சேகரித்து வைத்த தானியங்களைச் சாலவும் செலவு செய்து ஏழை எளியருள்பட எல்லோரும் வயிறு நிறைய வேளைகளில் சோற்றையும், தண்ணீர்ப் பஞ்சம் மிகுந்துள்ள அக்கொடிய காலத்திலே அனேகம் கிணறுகளை வெட்டியும் வேறு வகையிலும் தேவையான போதெல்லாம் தண்ணீரையும், உடுத்த உடைகளையும் அளித்த படியே இருந்தாராகையாலே இவ்விஷயம் இங்குச் சிறப்பாகக் கூறப்படவேண்டியிருந்த தென்க. எந்த துர்பிக்ஷத்தைக் கண்டு துயரமுற்று இவ் அற மநுஷ்டித்து வருகிறீரோ, அந்தத் துர்பிக்ஷத்தை நீக்கவே நாங்கள் நோன்பு நோற்பதால் அதை அழகாக நடத்தி யருளவேணுமென்று ப்ரார்த்திப்பது இடைச் சிறுமிகளின் கருத்தில் முக்கியமாய் நின்றது. எளியருக்கும் அளிப்பது தோற்ற இங்கே, 'காசின் வாய்க் கரம் விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டுத் தேசவார்த்தை படைக்கும் வண்மையினர்கள்' (பெரியா. தி. 4. 4. 10) என்ற பாசுரத்திற் போலே சோறு என்ற பதமெனவும் கொள்க. எளியர் உள்பட வழங்கும் அச்சொல்லைப் பாசுரத்தில் சேர்த்தால் எல்லோருக்கும் சோறிட்டதைக் குறிக்கக் கருதியதாமன்றோ.

அம்பரமே தண்ணீரே சோறே—

'வஸ்த்ரேண வபுஷா வாசா வித்யயா விநயேந ச |
வகாரை: பஞ்சபிர் ஹீநோ நரோ நாயாதி கௌரவம்'

(वस्त्रेण वपुषा वाचा विद्यया विनयेन च । वकारैः पञ्चभिः हीनो नरो नायाति गौरवम्)

என்றபடி வேண்டும் ஐந்திலே வஸ்த்ரமும் சரீரபுஷ்டியும் எல்லோருக்கும் வேண்டியவை. அவ் வூணுடைகளிலும் மாநபங்கத்தைப் பரிஹரிக்க உடை முக்கியமானது, அதை யணிந்தே அன்னபானங்களைக் கொள்வர். அதனால் அது முந்துற முன்னம் கூறப்பெற்றது. அன்ன மிராதபோதும் தண்ணீரைக் கொண்டே சிறிது காலம் ப்ராணரக்ஷணம் செய்ய லாம். சாந்தோக்யோப நிஷத்திலே தத்துவத்தை யுபதேசிக்கப் புகுந்த ஆசார்யன் சிஷ் யனும் மகனுமான ச்வேத கேதுவை, 'பதினைந்து நாள் புசிக்காமலிரு. தண்ணீர் அருந்தி வா. பிராணபய மிராது' என்றார். மேலும் அன்னம் புசிப்பதற்கு முன்னே தண்ணீரைக் கொண்டு சுத்திச்சடங்கு செய்து கொள்ள வேண்டுமாகையாலும் அன்னத்திற்கு முன்னே தண்ணீரைச் சொன்னதாம்.

இங்குள்ள மூன்று ஏகாரங்களும் எண்ணின் குறிப்பெனக் கொள்வது பொருந்தும். இப்படி யெண்ணிப் பார்த்து கொள்வதற்காக 'ஏ' என்பதை ப்ரயோகிப்பது இத் திருப் பாவையிலேயே. சங்கங்கள் போய்ப்பாடுடை யனவே சாலப்பெரும்பறையே பல்லாண்டி சைப்பாரே 'கோல விளக்கே கொடியே விதானமே', 'சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமே' என்றவிடங்களிலும் காணலாம். இங்ஙனமிருக்க 'பிரிவின் குறிப்பு இவை; அவதாரணம் பொருள்' என்கிறனர். அப்போதும், விரித்துரைக்கும் வகை பல வாம். மூன்றையு மளிக்கும் நந்தரை, அம்பரத்தை மட்டு மளிப்பவன், தண்ணீரை மாத்திரம் தருபவன் என்றவாறு கூற வியலுமோ வென்னில், அம்பரத்தை மட்டு மளிப்பதற்காக இருப்பவன் எங்ஙனம் யாருக்குமில்லை யென்னுதபடி பலவகையிலுமதை யளித்து வருவான், அங்ஙனம் அளிப்பவனெனக் கருத்தென்பர் சிலர். 'இந்த நந்தன் என்ன, நாலுவகை புருஷார்த்தங்களையும் நன்குணர்ந்து அளிக்கும் நாராயணனைப் போலாவரோ, இவர் பசி யென்று வந்தவர்க்கும் அம்பரமே யளிப்பவராயிற்றே. ஆடை வேண்டியவருக்கு தண்ணீரைத் தருவரே யென்று பரிஹஸித்தபடி. பரிஹாஸமும் ஸ்துதி யில் முடியலாம். ஸ்துதியும் நிந்தையாகலாம். எம்பெருமானின் ஸ்துதிக்காக நந்தரை நிந்திப்பது கூடுமென்பர் சிலர். அவதாரணத்தை பொருளாக்கிக் கொண்டாலும், பல சரக்குகளை வைத்துக்கொண்டு ஒருவனே அவற்றைக் கொடுப்பது போலன்றி. தனித்தனி மண்டியை வைத்து வியாபாரம் செய்வது போல் ஒவ்வோரிடத்திலும், அம்பரமே அளிப்ப வர் தண்ணீரையே தருபவர், சோறே யிடுபவர் என்ற பலரை யேவி ஒவ்வொன்றையும் தனித்தனியே சிரத்தையுடன் அறமாக அளித்து வருகிறவர் இவர் எனக் கொள்ளலாம். அறம் செய்யும் — இந்தத் துர்பிக்ஷகாலத்திலே ஒன்று கொடுத்துப் பின்னிட்டுப் பல பெறலாமென்றும். விலை யதிகம் வைத்து விற்கத்தக்க ஸமயமென்றும் நினைத்தளிப்பவ ரல்லர் இவர்.

எம்பெருமான்—இது ஒரே பதமன்று. எம்பெருமாட்டி யென்று மேலுள்ள பதம் போலே இதனையும் எம் என்றும் பெருமான் என்றும் பிரித்து எமது ஸ்வாமியென வுரைக்க 'நாயகனாய் நின்ற' என்றவிடத்தில் சொன்னதை. 'பெருமான் என்றவிடத்தில் கொள்க. ஸ்வாபாவிகமான ஸ்வாமித்வம் பகவானுக்கே. யானாலும் கோபிகளைப் பற்ற ஔபாதிக மான ஸ்வாமித்வம் நந்தருக்குண்டே. எம்பெருமா னென வொரே பதமாகக் கொண்டு பகவானை ரூடிசக்தியாலே சொல்லி பகவானுக்கு அதீனனானவனே எனவும் சிலர் உரைத்து விரிவு செய்வர். எம்பெருமானான கண்ணனும் அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும் நந்தரை அவனாகவே நினைத்தன ரென்னலுமாம். துச்சாஸனன் துகிலுரிந்த தருணத்திலே, 'ஹா க்ருஷ்ண! த்வாரகாவாஸ! க்வாஸி யாதவநந்தந!' (हा कृष्ण द्वारकावास क्वासि यादवनन्दन) என த்ரௌபதி கதறினபோது வித விதமாக எண்ணற்ற வஸ்திரங்களின் விசித்ர ஸ்ருஷ்டி செய்தவனவன் தர்மபுத்ரரது ராஜ ஸூயயாகத்திலே பெரியோர்கள் எல்லோர்க்கும் பாதத்திற்குத் தீர்த்தம் அளித்ததாலே தண்ணீர்த் தர்மம் செய்தவன். பாரத யுத்தத்திலே தேர்க் குதிரைகளுக்குத் தண்ணீரை யொரு ஸமயம் ஸங்கற்பித்தவனுமவன். சோறு அறம் செய்ததை, துர்யோதனனால் அனுப்பப்பட்டு தர்மபுத்ராதிகளிடம் அரண்யத்திலே பசியுடன் வந்த துர்வாஸமஹர்ஷிக்கு வயிறு நிறையச் செய்த வரலாற்றைக் கொண்டு தெளிக. இப்படிப்பட்ட எம்பெருமான் கண்ணனே இவ்வெம்பெருமான் நந்தகோபால னென நினைத்தனரென்றபடி.

எழுந்திராய் — எழுத்திருப்பது கண்ணனை எழுப்பவும், தான் கூடின ஸஹாயங் களைச் செய்யவும், அவனையெழுப்ப அனுமதி யளிக்கவுமாம்.

கொம்பனார்க்கு-பருத்துக்கிடக்காமே தந்வீ என்றும், காத்ரயஷ்டி என்றும் சொல்லும் படி கொடிபோல் மெலிந்திருப்பதாலே கோலுக் கொத்த உருவமுள்ளவர் பெண்மணிகள். அன்றி, கொம்பு வஞ்சிக் கொம்பாய் அது போன்றவர்; வணக்கமுற்றவர் வஞ்சிக்கொம்பு போல் ஒடுங்கின இடையுடைவர் என்பது முண்டு. கொழுந்தே — மென்மையாலே மற்ற பெண்டிர்க்கும் அசோதைக்குமுள்ள வாசியானது கொம்பிற்கும் கொழுந்துக்கும் உள்ள தற்கு ஒத்தாகுமென விளக்கினதாம். கொம்பிற்கு ஏதேனும் வாட்டமுண்டாகில் அது கொழுந்திலே முதலில் தெரியுமாபோலே கோபஸ்த்ரீகளுக்கேதேனும் வருத்தமுண்டாகில் அது அசோதையின் முகத்திலே அக்கணத்திலேயே தோற்றுமென அவளது குணமும் குறிக்கப் பெற்றதாம். கொம்பிற்குக் கொழுந்தால் அழகும் வளர்த்தியுமென்றாற்போலும் கொள்க. குலவிளக்கே—இவளால் இடைக்குலத்திற்கே பிரகாசமேற்பட்டது. ஆயர்பாடிக் கணிவிளக்கான எம்பெருமானைப் பெற்றளித்ததாலே தொண்டர் குலத்திற்குத் தெய்வத் தைத் தோன்றச் செய்தவளிவள் என்றதுமாம். அறிவுறாய்—நந்தகோபாலன் அறிவுறுவ தோடு எழுந்து கண்ணன் முலமெல்லா மளிக்க ஸஹாயமாயிருக்க வேண்டுமாகையாலே அவர் விஷயத்திலே எழுந்திராயென்றனர். இவள் உறங்காமல் எல்லாம் சரிவர நடக் கிறதா என்று கவனித்துகந்தாற் போதும்; செய்ய வேண்டுவதொன்றில்லை யெனக் கருதி அறிவுறு யென்றதை மட்டும் கூறினர்.

முதலில் நந்தர் படுத்திருந்ததாலே அவரை யெழுப்பிப் பிறகு அசோதையின் படுக் கையைக் கிட்டி அவளையுமறிவுறுவித்து வேறு படுக்கையைக் கண்டு அங்கே யுறங்கு பவரை யெழுப்புகின்றனர் அம்பர மித்யாதியால். இங்கே உம்பர் கோமானே என்று தேவர்களுக்குக் கோமான் = ஸ்வாமியான எம்பெருமானாகிய கண்ணனை யெழுப்புவதாக வும், கடையீரடிகளால் மாத்திரம் பலராமனை யெழுப்புவதாகவும் உரைப்பர். நப்பின்னைப் பிராட்டியை யெழுப்பின பிறகு கண்ணனை யெழுப்புவது மேலே கண்கூடாகவிருக்க இங்கும் கண்ணனை யெழுப்புவதெங்ஙன மென்னில், முதலில் அவனை யெழுப்பினர்; அவன் எழுந்திராததைக் கண்டு புருஷகாரர்களை யெழுப்பிப் பிறகு அவனை யெழுப்புவது தகுமென்று கொண்டனர் என்ன வேண்டும். இதைவிட வசோதையை யெழுப்பி அவளுக் கருகிலுள்ள படுக்கையைப் பார்த்து அவள் குமரனான கண்ணனே ஆங்குப் பள்ளிகொண் டிருக்க வேண்டுமென நினைத்து அவனை விளித்தார்களென்றும், அருகிற் சென்றபோது அவன் பலராமனெனத் தெரியவந்ததால் பிறகு பலராமனையே விளித்தனரெனவும் உரைக் கலாம். பலராமனும் எம்பெருமானின் அவதாரமாகையாலே கோமானே என்றும் அவனையே விளித்து எனவும் சொல்ல முயல்வர். உண்மையில் இதன் பொருளைப் பதவுரையில் விளக்கியுள்ளோம். கோமானே என்பதற்கு கோவிற்கு மஹானே எனப் பொருள் கொள்வது யுக்தமானது. திரிவிக்ரமாவதாரம் செய்து மிகப் பெரியவனாய் நின்ற பெருமானுக்கும் பெரியவன் நீ என்றபோது பலராமனுக்கு மிகவும் பெருமை பணித்த தாயிற்று. இப்படி மிகப்பெரிய வனென விளக்கவே மற்ற ஆகாரங்களை விட்டு த்ரிவிக்ர மாவதாரத்தை யெடுத்தது. அன்றி, த்ரிவிக்ரமாவதாரம் பலவகையில் ஜலத்துக்குக் காரணமானமையால் துர்பிக்ஷம் நீங்க எங்கும் தீர்த்தத்தை யபேக்ஷிக்கும் இவர்களுக்கு த்ரிவிக்ரமாவதாரத்திலே ஈடுபாடு அதிகமென்பதை மூன்றும் பாசுரத்திலேயே உரைத் துள்ளோம். இங்கும் அவ்விஷயம் மற்றொருபடி வியக்தமாக்கப்படுகிறது. எங்ஙனே யென்னில் — அம்பர மூடறுத்து என்பதற்கு ஆகாயத்தின் நடுவை யறுத்து என்பதைவிட பதவுரையிற் சொன்னபடி கொண்டால் அர்த்த புஷ்டியுண்டு. த்ரிவிக்ரமாவதாரத்திலே எம்பெருமான் அண்டகடாஹத்தைப் பிளந்தோங்கி வளர்ந்தானென்பதை நம்மாழ்வாரும்

அருளிச் செய்தார். 'ஆழியெழச் சங்கும் வில்லுமெழ திசை வாழியெழத் தண்டும் வாளு மெழவண்டம், மோழையெழமுடி பாதமெழவப்பன் ஊழியெழ உலகம் கொண்டவாறே' என்றவாறு. ஸ்ரீவிஷ்ணு புராண வியாக்யானமான ஸ்ரீவிஷ்ணு சித்தீயத்திலும் (2—8). த்ரிவிக்ரமாவதாரத்திலே முதலில் பிரமன் தன் கமண்டலுவினின்று திருவடிக்குத் தீர்த்தம் சேர்த்து அது போதாதமையைக் கண்டு தர்ம தேவதையைத் தீர்த்தமாய் உருகிப் பெருகச் சொன்னாரென்றும் அதுவும் போதாமே, எம்பெருமான் அண்டகடாஹத்தைத் திருவடியால் பிளந்தபோது அங்குள்ள அதிமதுர சீதளமான ஸமஷ்டி ஜலத்தாலே திருவடிக்குப் பாத்யம் போதுமாயிற்றென்றும் ப்ரமாண வசனங்களைக் கொண்டு நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ளது.

இவ்வர்த்தம் இங்கே குறிக்கப்படுகிறது. அம்பரமென்பதற்கு அம்பு = ஜலம்; அதற்கு அரம் = கதவு; அதாவது—ஸமஷ்டிஜலம் உலகிற் புகாதபடி தடையாயிருக்கும் அண்டகடாஹம். அமூர்த்தமான ஆகாசத்தை விட்டு அண்டகடாஹத்தை அம்பரமென்ற தாகக் கொண்டால் ஊடறுத்து என்பதற்குப் பொருள் பொருந்தும். அவதார மேன்மையும் சிறப்பாகச் சொன்னதாம். அதனை நடுவில் திருவடியாலறுத் தோங்கி உலகளந்தாரென்ற தாலே அதிபாவனமான ஸமஷ்டி ஜலம் கலந்த ஆகாச கங்கைக்குக் காரணமாய் மிகப் பேருருவமெடுத்து மிக்க ஸுபிக்ஷத்தை விளைவித்த எம்பெருமானின் பெருமையை வர்ணித்து இப்படி உம்பர் கோவாய் உலகைக் காத்தவனுக்கும் மானாய் = மூத்தவனாயிருக் கும் உன் மேன்மையை என்னவென்று கூறுவதென்று பலதேவனை விளித்து விளக்கின ரென்க. முதலடியில் அம்பரம், தண்ணீர், அறம் என்ற சொற்களைச் சொல்லும்போதே எம்பெருமான் ஆகாசமளாவி வளர்ந்ததும், தர்மதேவதை தீர்த்தமானதும் நினைவுக்கு வந்ததாலும் வேறு அவதாரங்களை விட்டு த்ரிவிக்ரமாவதாரத்தைக் குறித்ததாம்.

கண்ணனைப் போலே பலதேவனும் தங்களுக்கு நோன்புக்கு ஸஹாயமாயிருக்கும் பெருமை வாய்ந்தவனென வுரைத்து விளிக்கின்றனர் செம்பொற் கழலடிச் செல்வா. கழல் என்பது வீரகடகம். பல அஸுரர்களைக் கொன்று பேர் பெற்றவனாகையாலே அவனடிக்குச் செம்பொற்கழல் சாத்தப்பட்டுள்ளது. இவ்வளவு பராக்ரமசாலியான நீ எழுந்து எங்கள் நோன்பைக் காக்கவேண்டும்; உறங்கேலென்றனர். இனி, உம்பர் கோவிற்கும் மானென்ற படி மேன்மைக்குக் காரணம் நீ செம்பொற் கழலடிச் செல்வனானதாலே. அதாவது சிவந்த, பொன்மயமான கழலணிந்த எம்பெருமான் திருவடியின் செல்வமாய், அதாவது (பாதுகை) திருவடிநிலையா யுள்ள ஆதிசேஷனானதாலே என்றதுமாம். செம்பொற்கழலையுடைய உலகளந்த வடிக்குச் செல்வா-கடகமாயும் பாதுகையாயுமிருந்தவனே! செம்பொற்கழலான அடி = ஸ்வாமிக்கு செல்வா = கைங்கர்யபரனே! என்றவாறுமாம். பலதேவா. விஜ்ஞானம், பலம் என்ற ஆதிசேஷனின் குணங்களிரண்டில் பலா (வலா)ம்சம் இவரிடம் அதிக மென்க. உம்பியும் நீயு முறங்கேல்—நீ யுறங்கேலென விவ்வளவே கூறவேண்டியிருக்க உம்பியும் நீயுமென்றதென் எனில், எம்பெருமானுக்கு மேற்பட்டவனாகவும் வீரக்கழலணிந்த வனாகவும் இவரை சொன்னபோது, நம்மையே யெல்லாமளிக்க இவர் கேட்பார்களென்றி வர் நினைப்பர். அஃதில்லையென் வறிவிக்க என்னலாம். அன்றி, நீ உறங்காமலிருந்து சத்ருக்களை ஸம்ஹரித்து நோன்பைக் காத்துவந்தால் கண்ணன் எங்களை விட்டகலாது எங்களுக்குப் போகத்தை யளித்த வண்ணமிருப்பா னென்றதாம்.

உட்பொருள்—எம்பெருமானை யாராதிக்கப் போம்போது ஆசார்யர்களை யடிபணிந்து விட்டே அதை செய்யவேண்டும். ஸ்ரீவைகுண்டத்திலும், ஆசார்யர்களின் திரளைத்

தெண்டனிட்டுப் பெருமானைக் கிட்டுவதாம். ஆக, பகவத் ஸந்நிதியில் ஆசார்யனை யெழுப்புவது அம்பரமே இத்யாதியால் சொல்லப்படுகிறது. தத்துவ ஹித புருஷார்த்தங்கள் மூன்றையும் தர்ம புத்தியாலே கிருபை செய்து உபதேசித்தவன் என்றது முதலடியாற் கருதப்பெற்றது. 'ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்' (ईशावास्यमिदं सर्वं) என்றபடி ஸர்வ வஸ்துக்களையும் வியாபித்து, வஸ்திரம் உடலை மறைத்துத் தன்னையே காணச் செய்வதுபோல் யோகிகளுக்கு உலகை விடத் தன்னையே யெங்கும் காணச் செய்கின்ற அவனை அம்பரமென்னலாம். ஆகாசம் போலே எங்கும் பரந்திருப்பாலும் பரமாத்மா அம்பரமாம். இனி. அம்=அழகிய பரம்=பரமாத்மவஸ்து என்றதுமாம். ஆண்டாள் ஸ்த்ரீயான படியாலே ஸ்த்ரீகளுக்குத் திருவஷ்டாக்ஷரத்திலே ப்ரணவத்திற்குப் பதிலாக உபதேசிக்கப்படும் பீஜாக்ஷரத்தை முதலில் கூறி இதற்கு பரமான, அதாவது பொருளான தத்துவ மென்றனளென்றதுமாம். அகாரவாச்யனான ஸ்ரீமந் நாராயணன் இங்ஙனம்சொல்லப் பெற்ருன். தண்ணீர்—தண்ணீரே அன்னத்திற்குக் காரணம். தானியங்கள் தண்ணீரால் பெறப்படுகின்றன. தண்ணீரைக் கொண்டுதான் சோற்றைப் பெறவேண்டும். ஆக, அது உபாயம். இனி, தண் சீதலமான தாரை. இன்பமயமாய் தைலதாரையைப்போல் ப்ரவஹியாநிற்கும் பக்திரூப த்யான மென்னலுமாம், சோறு—பரமபுருஷார்த்தம். ஆனந்தமய வித்யை, ஸம்வர்க வித்யை, வைச்வாநரவித்யை முதலான விடங்களிலே பரமான்னமான பரமபுருஷனே புருஷார்த்தமாக ஓதப்பெற்றிருப்பதைக் காண்க. எம்பெருமான்! எமது பெருமானே! 'பீதகவாடைப்பிரானுர் பிரம குருவாகி வந்து' என்றபடி எங்களால் பெருமானுகப் பாவிக்கப் படுபவரே! என்றதுமாம். நந்தன்—ஆசார்யனே சீடர்களை ஆனந்திப்பிக்கிறவன். கோபாலன்—வேதம் முதலிய வாக்குகளைக் காப்பவன். கொம்பனுர் இத்யாதியால் வஞ்சிக்கொம்பு போலாம்படி விநயத்தைத் தருவதும், தெளிவுபட எல்லா விஷயங்களையும் விளக்குப் போலே தெரிவிப்பதும், யசஸ்ஸை யளிப்பதுமான வித்யையும், மந்த்ரமும், அவற்றின் தேவதையும் கருதப்பெற்றதாம். அம்பரமூடறுத்து இத்யாதியாலே ஆதிசேஷனைச் சொல்லி அவர் போன்ற நித்யஸூரிகள் அனைவரையும் ஆராதனத்திற்கு முன் எழுப்புவதாம். உம்பர் கோமானே—எம்பெருமானுக்குப் பள்ளிகொள்ள வியலும்படி அவருருவத்திற்கும் பெரிதான உருவ மெடுத்திருப்பது சொல்லிற்று. எம்பெருமானுக்குப் பாதுகைகளை ஸமர்ப்பித்துத் திருவாராதனத்திற்கு எழுந்தருளப் பண்ண வேண்டியிருப்பதால் செம்பொற் கழல்களை யுடைய பெருமானின் திருவடிக்குக் கைங்கர்யம் செய்யும் திருவடி நிலையேயென்று மேலே ஆதிசேஷனை விளித்த தென்க. செல்வமாவது ஸம்பத்து=கைங்கர்யம், 'லக்ஷ்மணோலக்ஷ்மி ஸம்பந்ந: அந்தரிக்ஷகத: ச்ரீமாந்' (लक्ष्मणो लक्ष्मिसंपन्नः, अन्तरिक्षगतः श्रीमान्) என்றது காண்க. (17)

நந்தகோபரையும் அசோதையையும் பலதேவனையும் முறையே எழுப்பிவிட்டு அவர்களருகில் கண்ணன் பள்ளிக் கொண்டிருக்கக் காணுமையாலே அவர்கள் மூலமாகக் கண்ணனறைக்குச் சென்று அங்கே அவன் நப்பின்னைப் பிராட்டியோடு பள்ளிகொண்டிருப்பதை யொருவாறு அறிந்து முக்ய புருஷகாரமாம் அப் பிராட்டியை எழுப்புகிருர்கள்-

18. உந்து மதகளிற்ற னேடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே நப்பின்னுய்!
கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழியழைத்தனகாண் மாதவிப்

பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

மதம் உந்து | மதஜலத்தைப் பெருக்கும்
களிற்றன் | யானைகளையுடையவனும்
ஓடாத—குலையாத
தோள் வலியன்—புஜபலமுள்ளவனுமான
நந்தகோபாலன்—ஸ்ரீ நந்தகோபருடைய
மருமகளே—நாட்டுப்பெண்ணே !
நப்பின்னாய்—நப்பின்னைப்பிராட்டியே !
கந்தம்—வாசனையை
கமழும்—வீசும்
குழலீ—கூந்தலையுடையவளே !
கடை—கதவை
திறவாய்—திறப்பாயாக.
கோழி—கோழிகள்
எங்கும் வந்து—எல்லாவிடங்களிலும் ஸஞ்சரித்து
அழைத்தன காண்—கூவின.
குயில் இனங்கள்—குயில்களின் கூட்டங்கள்
மாதவி பந்தல் | குருக்கத்திக் கொடி மேல் | பட்ர்ந்த பந்தல்களில்
பல்கால்—பலதரம்
கூவின காண்—சப்தித்தன.
பந்து ஆர்விரலி—பந்து நிறைந்த விரல் களையுடையவளே !
உன் மைத்துனன்—உனது கணவனை கண்ணனுடைய
பேர்—திருநாமங்களை
பாட—பாடிவர
மகிழ்ந்து வந்து—களித்துவந்து
சீர் ஆர் வளை ஒலிப்ப | சீர்மை நிறைந்தது கை வளைகள் குலுக்கி த்வனிக்க
செம் தாமரை கையால் | சிவந்த தாமரைப்பூப் போன்ற கைகளால்
திறவாய்—கடைதிறவாய்.
ஏல் ஓர் எம்பாவாய்.

புருஷகாரமிராமல் எம்பெருமானை யணுகுவது கூடாததாம். புருஷகாரமாயிருக்கும் பிராட்டியும் ஸத்ஸஹவாஸம், ஸதாசார்ய ஸம்பந்தம் முதலான அம்சங்களில்லாத போது எளிதில் எம்பெருமானிடம் சேர்த்து வைக்க மாட்டாள். அவளைப் புருஷகாரமாக வரிப்பதற்கும் இவையெல்லாம் வேண்டும். ஆகையால் இந்தக் கோபகன்னிகள் வாசற் காப்பான், நந்தகோபர் முதலானோரைப் பற்றியதெல்லாம் பிராட்டியைப் பற்றப் பூர்வாங்கமாயிற்று. நந்தகோபருக்கு நப்பின்னை நெருங்கின பந்துவான படியாலே அவர் மூலம் அவளைப் பற்றுவது வெகு அனுகூலமாயிற்று. சுற்றரிடம் ப்ரீதியைக் கண்டு அவள் இவர்களை நேசிப்பது ஸுலபமன்றோ? ஆகவே இங்கும், 'நந்தகோபாலன் மருமகளே' என ஸம்பந்தத்தைக் கூறினர். இங்ஙனம் விளித்தது கீழே துதிக்கப்பெற்ற நந்தருக்கும் ஆனந்தத்தை விளைவிப்பதாயிற்று. புதிதாக ஒருவரைக் கிட்டி யேதேனும் பலனைப் பெற விரும்புவார்க்குப் புருஷகாரமாக ஒருவரை யபேக்ஷிப்பது உலகிலும் ப்ரஸித்தமானதே.

எம்பெருமானிடத்திலே பெரிய பிராட்டியாரே புருஷகாரமாயிருப்பது என்பது மோக்ஷார்த்தமாக அவளைப் பற்றும் போதாம். இது,

'ப்ராயச்சித்த ப்ரஸங்கே து ஸர்வபாபஸமுத்பவே |
மாமேகாம் தேவ தேவஸ்ய மஹிஷீம் சரணம் வ்ரஜேத்'
(प्रायश्चित्तप्रसङ्गे तु सर्वपापसमुद्भवे । मामेकां देवदेवस्य महिषीं शरणं व्रजेत्)

என ப்ரமாணஸித்தம். மற்றப் பலனைக் கோரும்போது வேறு புருஷகாரமும் கூடும். ஸ்ரீவராஹாவதாரத்திலே பூமிப்பிராட்டியைப் போல், ஸ்ரீக்ருஷ்ணவதாரத்திலே அவன் கோகுலவாஸம் செய்த காலம் வரை நப்பின்னைப் பிராட்டியே அந்தரங்கமானவ ளென்பது ஆழ்வார்கள் இசைந்ததாம். இவள் நீளா தேவியின் அவதாரமானபடியாலே இது யுக்தமுமாம். ராதை, பாலிகை போன்ற தேவிகள் பலருண்டாகிலும் அவர்கள் ஸ்ரீ பூமி நீளைகளிற் சேராதவராகையாலே அவர்களை இவர்கள் இவ்வண்ணம் கொண்டாடவில்லை போலும். (யாதவா. 9-9ல் அவர்களை ப்ரஸ்தாபம் செய்திருக்கிறார்.)

நந்தரின் ஐச்வரியத்தை உந்துமதகளிற்ற னென்று கூறி, வலிமையை ஓடாததோள் வலிய னென்றுரைத்தனர். வள்ளல் பெரும்பசுக்கள் ஆற்றப்படைத்தவன் நந்தனென்றால் அது வேறு இடையர்க்கும் ஏறக்குறைய இருப்பதாகலாம். கோபராஜனுக்குச் சிறப்பாயிருப்பது பல யானைகள் கட்டி வாழ்வதே. யானைகளை க்ஷத்திரியர்கள் தாம் வைத்துக் கொள்ளவேண்டுமென்ற வ்யவஸ்தையு மில்லை, வழக்கு மில்லையாகையாலே இவருக்கும் அவை யுளவென்க, வஸுதேவருடைய மித்ரராகையாலே அவரது யானைகளெல்லாம் இவரிடமே யிருந்தன வென்பதுமுண்டு. அவருக்குப் பல களிறுகள் இருந்தன வென்பது பெரியாழ்வார் திருமொழியிலும் பணிக்கப்பெற்றது. (மத்தக்களிற்று வசுதேவர்—1-3-6.) தொடர்சங்கிலியை யென்ற பாட்டிலே (1–8-1), 'படுமும்மதப் புனல் சோர வாரண' மென்று யானைக்கு மூன்றிடங்களிலே மதம் ப்ரவஹிக்கு மென்பது மங்கே பணிக்கப் பெற்றது. மும்மதமாவது 'கபோல த்வயம், மேட்ரம், மஸ்தகம்' என்ற விடங்களில் மதமென அங்கே உரைத்தனர். அவ்வகைக் களிறுகளை யுடையவன் நந்தன். இனி மதம் உந்தும் களிறு போன்றவனென உரைப்பர் சிலர், 'தந்தக்களிறு போல் தானே' இத்யாதியைக் கொண்டு கண்ணனையே களிறாக வைத்து நந்தனை உந்து மதகளிற்ற னென்பது என்னவுமாம். உந்துதல் தள்ளுதலாய், தள்ளப்பட்ட மதயானைகளை யுடையவன், அதாவது யானைகளைத் தள்ளி ஜெயிப்பவன் என வுரைத்தால் வலிமையே சொல்லப்பெற்றதாகும். அது மேலடை மொழியாலும் பெறப்படும். ஓடாத—ஓடுதல்=கெடுதல்=குலைதல். பரிபவப்பட்டு பின்காட்டி யோடாதபடிக்கு வலிவுடைய னெனவு முரைப்பர். கஞ்சனும் இவன்வலிவைக் கண்டு அஞ்சினவனென்ன வேண்டும். ஆகவே அவன் நேரில் வராமல் பல அசுரர்களை மறைத்து அனுப்பியது. அவர்கள் நந்தரிடம் வந்திருந்தால் இவரே அவர்களனைவரையும் அழித்திருப்பர். சிறுபிள்ளைகள் என்று துணிந்து கண்ணனிடமும் பலராமனிடமுமே அவர்கள் நேரில் வந்து எதிர்த்ததாலே அவர்களே அசுரர்களை அழிக்க வேண்டியதாயிற்று.

நந்தகோபாலன்—இப்படி—சத்ருஹந்தாவா யிருந்து நமக்கு ஸுகாவஹனுமிருப்பானுக்கு இப்பேரானது பொருந்தியதாயிற்றென்றபடி. மருமகளே நப்பின்னை யசோதையின் உடன்பிறந்தானான கும்பனின் பெண்; பிறந்தது முதல் அத்தையி லில்லத்திலேயே கண்ணனை விட்டுப் பிரியாமல் வளருகிறவள். இவளும் கண்ணனும் அவதார விசேஷமாகையாலே பகலில் சிறுவர் போல் நடித்து இரவில் தமது ரூபங்களோடே தனியே விஹாரங்களைச் செய்து தாய் தந்தைகளுக்கு இன்பம் ஊட்டுபவர் இவர். 'நாணித்தனையு மிலாதாய் நப்பின்னை காணிற் சிரிக்கும்' என்று சிறு பிராயத்திலேயே கண்ணனிடம அசோதை சொன்னாளல்லளோ? நப்பின்னை—ந என்பது சிறப்பை யுணர்த்தும் முன்னிடை பின்னை—இளையாள். ஆக நப்பின்னை—சிறந்த இளையாள். நீளைப்பிராட்டி.

உள்ளே நானிருப்பது உங்களுக்கெப்படித் தெரியுமென்று அவள் கேட்டால், கண்ணன் மற்றவரைப் போலே வெளியில் பள்ளிக்கொள்ளாமல் அறையினுள் இருப்பதாலே தனியே யிருக்கமாட்டானென ஊஹித்தோமென இவர்கள் சொல்லலாம். உன் குழல்மணமே யுன்னை யறிவிக்கிறதே யென்று வியக்கமாகச் சொல்லக் கருதி, கந்தம் கமழுங் குழலீ யென விளித்தனர். அப்ராக்ருதமான குழலுக்குப் பரிமளமும் இயற்கையிலே இருக்கலாம். அன்றி, 'வம்பவிழ் கோதை', 'கொத்தலர் பூங்குழல்' என்றபடி எப்போதும் பூவணிந்திருப்பதாலும், பல வாசனைத் தைலம் தடவுவதாலும் இவள் குழலின் வாசனை வெளிப்புறமெல்லாம் வீசினது. கந்தம் கமழும். நாங்கள் வ்ரத மநுஷ்டிக்கிறவர்களாகையாலே மலரிட்டு முடியோமாய் வந்திருக்கிறோம். கந்தம் கமழுங்குழலியான நீ வ்ரத பூர்த்தி செய்வித்து எங்களையும் கந்தம் கமழுங்குழலிகளாக்கவேண்டு மெனவும் கருத்தாம். 'கடை'யாவது கதவு. தாழ்ப்பாளென்பது முண்டு. துயிலெழப்பாடுவான் தூயோமாய் வந்து வாசற்காப்பானைக் கதவைத் திறக்கும்படி கேட்டுக்கொண்டோம். நந்தர் முதலானோரைத் தர்சனம் செய்தோம். கண்ணனுடைய ஸேவை கிடைக்கவில்லை. அது உன்முகமாய் ஆகவேண்டும். இந்தக் கதவே கடைக்கதவு. இதற்கு மேல் கண்ணனைக் காண வேறொன்று திறக்க வேண்டா வென்பதும் கடையென்ற பதத்தினின்று தோற்றும்.

வந்தெங்கும் கோழி — கோழி சாமந்தோறும் கூவும். அது இருந்த இடத்திலெ கூவினால் சாமக்கோழி கூவுகின்றதென வைத்து இது விடியற்காலமன்றென்னலாம். வந்து கூவுகின்றதே. இனியும் ஐயப்படுவதோ என்றபடி. குடிசைகளில் வளர்க்கப்படும் கோழிகள் வருவது கிடக்கட்டும். ஒருக்கால் நாங்கள் கோழிகளைக் கொண்டுவந்து விட்டோமெனவும் நினைக்கலாம். உனது இல்லத்து மாதவிப் பந்தலில் குடிகொண்டிருக்கும் குயில்களும் கூவுகின்றனவே. பல கூட்டங்கள் பல கால் கூவுகின்றனவே என்றனர் மாதவி இத்யாதியால்.

பந்தார்விரலி — பந்தானது, விரல் அழுந்தின விடம் நீங்கலாக விரலின்மேல் வந்திருக்குமாகையால் பந்தார்விரலென்றது. படுக்கையில் படுத்துறங்குகின்றவளைப் பந்தார்விரலீ என வரவழைக்கக் கூடுமோ என்னில், அவள் இப்போது பந்து ஆடவில்லையாகிலும் இது, 'ஜாத புத்ர: க்ருஷ்ணகேசோऽக்நீந் ஆததீத' (जातपुत्र: कृष्णकेशोऽग्नीनादधीत) என்றாற்போலே வயோவஸ்தையைக் குறிப்பதாகும். வைதிகாக்நியை ஆதானம் செய்பவனுக்குப் பிள்ளை பிறந்திருக்கவேண்டும், குஞ்சியும் கறுத்தே யிருக்க வேண்டுமென்பதில்லை ஒருவகையான யௌவன காலத்தைக் குறிக்க அங்ஙனம் கூறினது. அது போல் சிறு வயதினிருப்பவள் இவளென்பதைக் குறிக்க இங்ஙன் விளித்ததாம். அன்றி, முன்னிரவில் கண்ணனோடு பந்தால் விளையாடி அதைக் கையில் வைத்தவண்ணமே படுத்துறங்கினளென்க. வீணை முதலான வாத்யங்களை வாசிக்கும் ஸ்த்ரீகள் அவற்றை அணைத்த வண்ணமே உறங்கினதாக ராவணாந்தப்புரத்திலே வர்ணித்த வண்ணம் கொள்க. இனி, நீ எங்களுக்காக சீரார்வளையொலிப்ப எழுந்து வரும்போது பந்தடித்துக்கொண்டு பரமானந்தத்துடன் வர வேண்டுமென்றதுமாம். இவர்கள் எழுப்பும்போதே அவள் பந்தாடிக் கொண்டிருந்தாளென்றால் அது மேற்பாசுரத்திற் கூறுவதோடு முரண்படும். ஒருக்கால் விழித்துப் பந்தாடிக் கொண்டிருக்கலாமென நினைத்திப்படி விளித்தரென்னலுமாம். இவ்விளிச்சொல்லால், எம்பெருமான் எங்களை ஸ்ருஷ்டித்து. 'ஹரே விஹரஸி க்ரீடாகந்துகைரிவ ஜந்துபி:' (हरे विहरसि क्रीडाकन्दुकैरिव जन्तुभि.) என்றபடி பந்தாட்டமாடி வரு

கிருல். இப்படி எங்களை யாட்டுமவனை யாட்டுவது உன் பந்தாட்டமெனக் குறித்ததாம். பந்தைப் பல்கால் ஆடி அவ்வுடையாளங்கள் விரல்களில் தெரியுமாறு பொறுத்து விளை யாடும் நீ, அதைப்போல் கதவைக் திறக்கவும் செந்தாமரைக் கையை யொரு தரம் உப யோகிக்கலாகாதோ என்றதுமாம்.

உன்மைத்துனன் பேர்பாட — நீ பந்தாடப் புறப்பட்டால் உன் மைத்துனன் உன் பேரைப் புகழ்ந்து பாடுவான். நீ அப்போது மகிழ்ந்து வந்து திற என்னலுமாம். நீயே உன் மைத்துனனைப் பாடிக்கொண்டும் பந்தாடிக்கொண்டும் வந்து திற வென்னலுமாம். நாங்கள் பாடுவதற்குத் தக்கபடி சீரார்வளை யொலிப்பத் தாளம் வழங்கிப் பந்து மாடி வா என்பதுமாம். நாங்கள் உள்ளேபுகுந்து பாடுவதற்காக நீ வந்து திறவா யென்றதுமாம். செந்தாமரை-இயற்கையிலே, இவ்வளவு மெல்லிய கையால் கதவைத் திறப்பதென்ருல், அது அதிகம் சிவந்து விடுமே என வருந்துகிரேம். ஆகிலும் அதை நீ எங்களிடமுள்ள பரிவால் பாராட்டாமலிருப்பா யென்றபடி. சீரார் வளையொலிப்ப—வளைக்குச் சீராவது கைக்குத் தக்கபடி யிருக்கை. அழகும் நெருக்கமுமாம். கண்ணனேடு படுக்கையிலிருக் கும்போது கைகள் பருத்து வளை அழுந்திக்கிடக்கும்; எழுந்து நீ கதவைத் திறக்க வரும் போதே அவ் விறைப்பொழுதிலேயே உடல் இளைத்து வளை தளர்ந்து ஒலி மிகுமென்றபடியு மாம்,

'யாமி ந யாமீதி தவே வததி புரஸ்தாத் க்ஷணேந தந்வங்க்யா: |
களிதாநி புரோ வலயாந்யாபரணாநி தத்தைவ தளிதாநி'.

(यामि न यामीति तवे वदति पुरस्तात्क्षणेन तन्वङ्ग्याः । गलितानि पुरो वलयान्याभरणानि तथैव दलितानि)

என்பரே. (நயாமி என்பதை, நயாமி என்று ஒரு பதமாகவும், ந யாமி என இரு பதங் களாகவும் தென்க.) மகிழ்ந்து — இவ் விறைப்பொழுதில் உன் தசையைப் பார்த்து, எப் பொழுதும் உன் மைத்துனனை விட்டுப் பிரிந்த எங்கள் தசை எவ்வண்ணமிருக்கு மென்பதை நோக்கி நாங்கள் வந்ததற்கு மிக மகிழ்ந்து வந்து திறவாயாக. திறக்கும்போது வளை யொலித்தால் கேட்டதும் நாங்களும் மகிழ்ந்து நிற்போமென்றதுமாம்.

கந்தமானது குழலினின்று கமழ்வதால் மூக்கிற்கு மிக ஸுகம். கோழி முதலியன கூவுதல் வளையொலித்தலென்றவற்ருல் காதுக்கு த்ருப்தி. மகிழ்ந்தோ மாகையால் மனமும் த்ருப்தி யடைந்தது. நீ செந்தாமரைக் கையால் வந்து திறந்தால் நாங்கள் உன்னைப் பார்த்துக் கொண்டு உள்ளே நுழைந்து மற்ற இந்த்ரியங்களுக்கும் த்ருப்தி யளிப்போ மென்றபடியும் காண்க.

உட்பொருள் —ஆராதனத்திற்கு முன்னே ஆசார்யரையும், அனந்த கருட விஷ்வக் ஸேநாதிகளையும் பள்ளி யுணர்த்திய பிறகு. பிராட்டிமார்களைப் பள்ளி யுணர்த்துவது இப்பாசுரத்தில். நப்பின்னை என்றது நப்பின்னை வரையிலாக எல்லாப் பிராட்டியையும் குறிக்கவென்க.

இப்பாட்டில் எம்பெருமானர் விஷயமாக ஓர் ஐதிஹ்யம் சொல்வர். அதை இவ் வாறு தெளிக. திருப்பாவை யநுஸந்தானத்துடன் வழக்கம்போல் பிக்ஷைக்கு எழுந் தருளும் எம்பெருமானர் ஒருநாள் பெரிய நம்பி திருமாளிகைக்கு எழுந்தருளும்போது, நப் பின்னய் கந்தம் கமழுங்குழலீ கடைதிறவாய் என்று இப்பாட்டை இவர்தம் முதலிகளோடு

அநுஸந்தித்தும், அங்கே அத்துழாய் கதவைத் திறந்ததும் ஒரே ஸமயமாயிருக்க, எம்பெருமானார் அவளை நப்பின்னை யென்றே அத்யவஸித்து மதி மயங்கிச் சாத்திக்கொண்டிருந்த பாதுகைகளை விட்டு ப்ரணாமம் செய்ய முற்பட்டார். அத்துழாயும் இஃதென்ன வென்று திகைத்துப் பெரிய நம்பிகளிடம் சென்று விண்ணப்பிக்க அவருமெழுந்தருளி அருகிலிருந்த திருக்குருகைப்பிரான்பிள்ளான் முதலானோர் மூலமாக 'உந்து மதகளிற்றன்' பாட்டின் அநுஸந்தான மென வுணர்ந்து உவந்தருளினா ரென்றது. இவ்வைதிஹ்யத்தைக் கருத்திற் கொண்டே ஸ்ரீ தேசிகனும் யதிராஜஸப்ததியில்,

'லிப்ஸே லக்ஷ்மணயோகிந: பதயுகம் ரத்த்யா பராகச்சடா-
ரக்ஷாரோபண தந்யஸூரிபரிஷத் ஸீமந்த ஸீமாந்திகம் |
பிக்ஷாபர்யடநக்ஷணேஷு பிபராஞ்சக்ரே களத்கில்பிஷா
யத்விந்யாஸமிஷேண பத்ரமகரீ முத்ராம் ஸமுத்ராம்பரா ॥'

(लिप्से लक्ष्मणयोगिनः पदयुगं रथ्यापरागच्छटारक्षारोपणधन्यसूरिपरिषत्सीमन्तसीमान्तिकम् ।
भिक्षापर्यटनक्षणेषु बिभराञ्चक्रे गलत्किल्बिषा यद्विन्यासमिषेण पत्रमकरी मुद्रां समुद्राम्बरा ॥)

என வருளினாரென்பர். ஸமுத்ரத்தை அம்பரமாக அதாவது வஸ்த்ரமாக உடையவள் பூமிப்பிராட்டி. ஸமுத்ராம்பரைக்கு முத்ரையும் அம்பரமும் கூடவேண்டுமாம். ஸமுத்ரம் அம்பரமாய்விட்டது. முத்ரையளித்தார் எம்பெருமானார். அவர் அத்துழாயைக் கண்டு நப்பின்னையென நினைத்துப் பரமானந்தப்பட்டு அவளைப் புரஸ்கரிப்பதற்காகப் பாதுகைகளை விலக்க அத்தருணத்தில் அவருடைய திருவடியை ரேகைகளுடன் அணிந்து மணமகளும் மகரிகாபத்ர முத்ரையைப் பெற்றவளானாள். அதனால் பூமியுள்ளாரெல்லாரும் அந்தத் தூளைச் சென்னியில் தரித்துத் தன்யஸூரிகளாம் நிலை யேற்படவே அஸுரர்களாலுண்டான பூபாரம் குறைந்தது. ஆகவே பூமியானவள் (களத்கில்பிஷா) பாவம் நீங்கப் பெற்றாள். இங்ஙன மளித்த முத்ரையுடன் எம்பெருமானை அவள் நெருங்க, இம்முத்ரையின் அழகையும் இதனை அளித்த எம்பெருமானாரின் பக்தியின் பெருமையையும் எம்பெருமான் கண்டு உவந்தான். இவ்வளவுக்கு இப்பாட்டு முக்யகாரணமாயிருந்ததாலே இங்கே இது அநுஸந்திக்கத் தக்கதாம்.

இப்படி அழைத்தபோதும் நப்பின்னைப்பிராட்டி எழுந்துவந்து கதவை திறக்காமலிருக்க சன்னல் வாயிலாக உள்ளே பார்த்து அங்குள்ள நிலைமையை யுணர்ந்து கண்ணனை முன்னம் எழுப்பி நப்பின்னையையும் அழைக்கின்றனர். மேற்பாசுரத்திலே கண்ணனை எழுப்பாதிற்க இங்கு மவனை யெழுப்புவது என் என்னில், இது நப்பின்னை யெழுந்து வருவதற்காம்படி யொருவகை யெழுப்புதலென்க. நன்றாக எழுப்புவது மேலே நடவாநிற்கும் — (18)

19. குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்

மைத்தடங் கண்ணினுய் நீயுன் மணுளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பவாய்

குத்து விளக்கு—நிலை விளக்கு
எரிய—நன்ருக ப்ரகாசிக்க
கோடு—தந்தத்திருலான
கால்—கால்களை யுடைய
கட்டில் மேல்—கட்டிலின் மேலே
மெத்து என்ற—மென்மையென்றே சொல்லப்பட வேண்டிய
பஞ்ச சயனத்தின் மேல் ஏறி | ஐந்து அம்சங்கள் கொண்ட படுக்கையின் மேலேறி யிருந்து.
கொத்து—கொத்துக் கொத்தாயிருக்கும்
அலர்—மலர்ந்த
பூ—பூக்களை (அணிந்த)
குழல்—கூந்தலை யுடைய
நப்பின்னை—நப்பின்னைப் பிராட்டியின்
கொங்கை மேல்—ஸ்தனங்களின் மேல்
வைத்து கிடந்த | அசையாமல் வைக்கப் பட்ட
மலர் மார்பா—மலர்ந்த திருமார்பை யுடையவனே!

வாய்திறவாய்—திருவாய் மலர்ந்தருளாய்.
மை தட கண்ணி னுய்! நீ | மை யிட்டவையும் விசாலங் களுமான கண்களை யுடையவளே! நீ
எதனை போதும் உம் | ஒரு சிறு கால வளவும்
உன் மணுளனை—உனது கணவனுன கண்ணனை
துயில் எழ ஒட்டாய் காண் | தூங்காமல் எழுந்திருக்க ஸம்மதிக்கமாட்டாய் என நம்புகிருேம்.
எதனை ஏல் உம்—சிறிதளவு கூட
பிரிவு—பிரிந்திருப்பதை
ஆற்றகில்லாய்—பொறுக்க மாட்டுகிரு யல்லை.
ஆல்—ஹா!
தத்துவம் அன்று—இது புருஷகார ஸ்வ ருபமன்று.
தகவு—தயை தான் (புருஷகார ஸ்வருபமாம்.)
ஏல் ஓர் எம்பாவாய்.

முன்பாட்டிலே நப்பின்னையை யெழுப்பினதால் அவளும் எழுந்து வந்தாள். அப்போது கண்ணன், இவளுடைய அபிமான பாத்ரர்களாம் ஆய்ச்சிகளை நாமே திறந்தழைப்போம்; 'இவள் முற்படுவதென்' என நினைத்து அவளை மல்கட்டாகக் கட்டிக் கட்டிலின் மெத்தைமீது தள்ளி எழுந்து வராதபடித் தானுமவள்மேல் விழுந்து அந்த ஸுகத்திலே மூழ்கி மயங்கிக் கிடந்தா னென்பர். புருஷகாரமாயிருப்பவள். 'ந கச்சிந் நாபராத்யதி' (न कश्चिन्नापराध्यति) என்பாள்; இவன் அதற்கும் மேற்பட வாத்ஸல்ய முள்ளவன். 'என்னடி யாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்' என்பானல்லனே அவன் என்று அவளை ப்ரசம்ஸிப்பது யுக்தமானுலும், அங்வன் உள்ள அவன் அவளைத் தள்ளிக்கொண்டு முன் வந்து திறந்தாலன்றோ வாத்ஸல்யம் நிலைநிற்பது? அவளையும் தடுத்து தானும் வராமற் கிடப்பதோ வாத்ஸல்ய மென இங்கே கேள்வி இடம் பெறுகிறது. ஆகிலும் என் செய்வது? அவளைக் கட்டிலில் நிறுத்திவிட்டுத் தான் வரவேண்டுமென்று தான் எண்ணினுன். அந்த ஸுகாநுபவம் அவனைக் கெடுத்தது. அல்லது, அதற்குள் இவர்கள் விரைகின்றனரென்ன வேண்டும். அன்றி, இங்ஙனமும் கருத்தாகலாம்—அவர்களிருவரும் உறங்கிக்கொண்டே யிருந்தாலும், இவர்கள் நினைத்ததாவது, 'நப்பின்னை புறப்பட்டிருக்கலாம், அவன் அவளை வீழ்த்திப் படுத்திருக்கிருன். தன் மேல் சயனித்திருக்கும் கண்ணனைத் தான் எப்படி யெழு

செய்வதென நினைத்து அவள் வெறுமனே யிருக்கிறாள். பந்தோசையும் வளையொலியும் கேட்டு அவன், இவள் திறந்துவிடுவாளென்று நினைத்துத் தடுத்துவிடவே இவள் படுத்திருக்கிறாள். இப்படித் தடுத்தால் நாமென் செய்வோமென்று அவன் பார்க்க விரும்புகிறான் போலும்' என்றவாறு, ஆதலே அவனையே பார்த்துச் சொல்லுவோமென நினைத்து முன் நாலு அடி பாடுகின்றனர். இது நிற்க. (வேறு கருத்தையும் செவ்வனே மேலே சொல்லக்கடவோம்.)

குத்துவிளக்கெரிய—மலர்மார்பா! விளக்குத் தானும் ப்ரகாசித்துக் கொண்டு பிறவஸ்துக்களையும் ப்ரகாசப்படுத்துவது போல் நப்பின்னையுமொரு குத்துவிளக்காய் தன்னைப் போல் எங்களையும் உனக்குப் பிரகாசிப்பியா நிற்க, நீ எங்களைக் காணாதவன் போலிருக்கலாமோ? விளக்குக்கு விளக்கு (வேறொரு புருஷகாரம்) வேண்டுமோ என்றதுமாம். இருட்டிலே முகம் தெரியாமே ஒளித்துக் கலந்து ஓடிப்போம் பெண்களையும் போலன்றி, உற்றார் விளக்கேற்றிவைக்க, அதுவும் சிறந்தெரிய, அதனால் ஒருவருக்கொருவர் முகம் கண்டு களிக்கும் பாக்கியம் நீங்கள் பெற்றீர்கள். அவ்விளக்கின் அருகே எங்களையு மழைக்கலாகாதோ?

கோட்டுக்கால்கட்டில்— உந்து மதகளிற்றனுன நந்தனுக்கு தந்தத்திற்கு என்ன குறைவு? முழுக்கட்டிலும் தந்தமாகலாம். ஆனாலும் பொன்னும் மணியுமாக மேலே செய்பவனுய் கால்களை மட்டும் கோட்டினால் செய்தான் போலும். இது நப்பின்னைக்கு தந்தையான கும்பன் கொடுத்ததுமாம். மெத்தென்ற—மென்மை வெண்மை, வாசனை, குளிர்த்தி அழகென்ற ஐந்து குணங்களிலே மென்மையே வடிவுகொண்டாற்போலுள்ளது படுக்கை, அவ்வைந்து குணங்களையே பஞ்சசயனமென்ற விடத்திலே பஞ்சபதத்தாலே விவரிக்கிறபடி அன்றி—தளிர், மலர், பஞ்சு, பட்டு, மெல்லிய கம்பள மென்ற ஐந்தாலான சயனமென்பர். அல்லது—அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிற்றூவியென ஐந்தாலான சயன மென அகராதியிற்கண்ட உரையாம். ஆக—

சைத்ய ஸௌகந்த்ய ஸௌந்தர்ய தாவள்ய ம்ருதுபாவத; ।
அநுஷ்ணசீதஸுரபித்ருச்யவிஸ்த்ருதபாவத; ॥
பட்ட ப்ரஸூந கார்பாஸ ப்ரவாள ப்ருதுகம்பளை; ।
மாயூர ஹம்ஸதூலாப்யாம் கார்பாஸைஸ்த்ரிவிதைரபி ॥
பஞ்சாத்மகம் விது: ப்ராஜ்ஞா: சயனம் ததிஹோதிதம்; ।
பஞ்சசப்தோ விஸ்த்ருதார்த்த: கார்பாஸார்த்தச்ச கத்யதே ॥

(शैत्यसौगन्ध्यसौन्दर्यधावल्यमृदुभावत: । अनुष्णाशीतसुरभिदृश्यविस्तृतभावत: ॥
पट्टप्रसूनकार्पासप्रवालपृथुकम्बलै: । मायूरहंसतूलाभ्यां कार्पासैस्त्रिविधैरपि ॥
पञ्चात्मकं विदु: प्राज्ञा: शयनं तदिहोदितम् । पञ्चशब्दो विस्तृतार्थ: कार्पासार्थश्च कथ्यते)

பஞ்ச என்பதற்குப் பஞ்சலான எனவும் பொருளுரைப்பர். பஞ்ச=விஸ்தாரமான எனவுமாம்

கொங்கைமேல்—வெகு உயரத்தில்அவன் படுத்திருக்கிறான். கட்டில் மேல் சயனத்தின் மேல் கீழிருந்து ஏணி வைத்துத்தான் மேல் ஏறி அங்கே கொங்கையின் மேல் மலையின் உச்சியிற் போல் படுத்திருக்கிறான். இவ்வளவு உச்சஸ்தானத்திலிருந்து உடனே இறங்கி வருவதானுற் கூடத்திறங்கத் தாமதமாகுமே; எழுந்திருக்காமலே யிருந்தால் எப்படி என்றதாம் வைத்துக் கிடந்த—அகன்ற மார்பும் ஒரிடத்திலே கிடக்கும்படி மிகவும் பரந்த பர்வதாகாரமான ஸ்தநங்களவையானதாலே ஆடாமல் அசையாமல் பதிய

வைத்தாயென்றதாம். கிடந்த என்பதற்கு உறங்கின எனப் பொருளாகில் கண்ணனுடைய உறக்கத்தை மார்பிலே ஏறிட்டுக் கூறினதாகக்கொள்க. மலர்—கொங்கையின் சேர்க்கையில் ஏற்பட்ட களிப்பாலே அதற்கேற்ப மலர்ந்து விட்டது மார்பென்றபடி. மலர் மங்கை யுறைந்திருப்பதாலே மலர்ந்த மார்பான்து இவள் கொங்கைமேல் அவளையும் சேர்த்துக்கிடந்ததோ யென்றபடியுமாம்.

வாய்திறவாய்— ஏன் உறங்குகிறாய்? அங்கு கிடந்த வண்ணமே அதரபானம் செய்யலாமே. அதற்காவது விழித்துக்கொள். அன்றி உறங்காமல் இளைந்திருக்கும் நீ இந்தச்சேர்க்கையை விடாமல், எழுந்தும் வராமல், வருகிறேனென்று திருவாய் மலர்ந்தாலும் போதுமே. அல்லது, அனுப்புகிறேனென்றாவது சொல். நீ போய் வா என்றாவது அவனுக்குச் சொல்வாயாக. நீ எழுந்து அனுப்பாதிருந்தால் அவள் எழுந்து வரமுடியாதே என்றனர்.

இவள் கீழே சயனித்திருந்தால் 'கொத்தலர் பூங்குழல்' என்றபடி அவள் குழலிலுள்ள பூங்கொத்துக்களை காண்பது ஸுலபமாகாது கண்ணன் கீழே சயனித்திருந்தால், 'கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா' என்றது பொருந்தாது. கொங்கையை தன்மேல் வைத்துக்கிடந்த மார்பனே எனப்பொருள் கொள்வது ஸ்வரஸமன்று. ''நீளாதுங்கஸ்தனகிரிதடீஸுப்தம்'' (नीलातुङ्गस्तनगिरितटीसुप्तम) என்பதையும் காண்க. ஆகையால் குழலிலுள்ள பூங்கொத்துக்கள் காணலாம் படியவள் ஒருக்கணித்து, வல்லது முகத்தை ஒருபக்கம் வைத்து சயனித்திருப்பதாகவும், அவளுடைய கொங்கைமேல் மார்பை வைத்து மற்ற அவயவங்கள் பெரும்பாலும் பஞ்சசயனத்திலிருக்கும்படி அவன் சயனித்திருப்பதாகவும் கொள்ளலாம்.

இவ்வளவு எழுப்பியும் அவன் எழுந்திருக்கவில்லை புருஷனைவிட பெண்களுக்கே உறக்கம் மெலிவாயிருக்குமென்று மறுபடி அவளையே எழுப்புகின்றனர். இனி - முதலில் நப்பின்னையை எழுப்பினதும் அவள் அவனை எழுப்பாமலிருக்கவே முன் ராமாவதாரத்திலே தன்னைக் காகாசுரன் நலியும் போது கூட 'ஸுகஸுப்த: பரந்தப:. பர்யாயேன ப்ரஸுப்தச்ச மமாங்கே பரதாக்ரஜ:'' (सखप्सुतः परन्तपः. पर्यायेग प्रसप्तश्च ममांके भरताग्रजः) என்றபடி தன் மடியிலே உறங்கின ராமபிரானை முதலிலெழுப்பாமலிருந்த பிராட்டியின் அர்சமாகையாலே இவள் அவனை எழுப்ப விரையாள். மேலும் சித்ரைக்கு நடுவிலே பங்கம் செய்தால் புருஷகாரக்ருத்யம் கெட்டுவிடுமோ வென்றும் அஞ்சுவள், ஆகவே நாமே யவனை யெழுப்பி பிறகு அவளை யழைப்போமென நினைத்தார்கள். பிறகு அவன் எழாதிருக்குமையைக் கண்டு அந்த காகாசுரனின் சந்தர்ப்பத்திலேயே முதலில் பிராட்டி எழுப்ப இசையாதிருந்தவிடமும் பிறகு 'தத: ஸ்முத்திதோ ராம: முக்தை: சோணிதபிந்துபி:'. 'ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:' 'ततस्समुत्थितो रामः मक्तैः शोणितबिन्दुभिः, स मया बोधितः श्रीमान सुखसुप्तः परन्तपः' என்றபடி ரெத்தத் துளிகள் ராமனின் திருமேனியிலே விழுவதைக் கண்டு மெதுவாக அவனே எழுப்பினாளே. அதுபோற் இவளே இப்போது எழுப்புவாளென நம்பி மீண்டும் அவளை ப்ராத்திக்கின்றன ரென்னலாம்.

மைத்தடங்கண்ணினாய்—கலந்து விளையாடினதில் கண்மையெல்லாம் கலைந்திருக்கிறது. அவ்விதக் கண்ணழகைப் பார்ப்பாயாக. உன் கண்ணுக்கு மட்டும் மையென நினைக்கிறோம். ஒருக்கால் மணாளனுக்கு மிங்ஙனம் துயில்கொள்ள ஏதேனும் மைபோட்டு விட்டாயோ எனவும் கருத்தாம்.

எத்தனைப்போதும்—இரவு முழுதும் இணைந்ததும் உறங்கினதும் போதாவோ. பகலில் பிரியலாகாதோ. நீ=புருஷகாரமாயிருக்கும் நீ. உன் மணாளனை — எல்லோருக்கும் மணாளனாக வேண்டியவனை உனக்கே மணாளனாகக் கொண்டாயே இது நியாயமோ? தத்துவமன்று—இதுவன்று புருஷகாரதத்துவம். தகவு=தயையே புருஷகாரத்வமாம் அன்றி நீ துயிலெழ வொட்டாய்; பிரிவாற்றகில்லாய். இது தத்துவம்=உண்மை. இப்படி இருப்பது தகவன்று தகுதியன்று=தத்துவமன்று தகவு—இது புருஷகாரத்வமென்கிற ஸ்வரூபமுமன்று. 'அனுக்ரஹமயீம்' என்ற சரண்யத்வ மெனப்படும் தகவுமன்று. புருஷகாரத்வ மென்பது பெருமானுக்கிராமல் பிராட்டிக்கு மாத்திரம் அஸாதாரணமாயமைந்ததாலே அது இவளுக்கு தத்துவமாயிற்று; சரண்யத்வம் எனப்படும் உபாயத்வமானது இருவருக்கும் பொதுவானதாலே இவளுடைய தத்வமாகாதெனத் தனியே தகவென்று அதை சொன்னதென்க, ஒருவன் ,தனக்கும் மற்றெருவனுக்கும் சொத்தாயுள்ளதை தானம் செய்ய விருப்பினல் அதற்காக அவ்வகை தானத்திலே ஊற்ற மில்லாதவனுக்கு அதன் சிறப்பை கூறி அவனை ஸ்வாதீன மாக்கி அவனுடன் சேர்ந்து தானுமவனுமாகத் தானம் செய்வது போல், பிராட்டி பெருமானை வசப்படுத்தி அவனுடன் சேர்ந்து சரண்யையாகிருள். ஆக சரண்யத்வமென்பது இருவருக்கும் பொதுவானதாலே அது இவளுக்கு மட்டுமுள்ள தத்துவமென்றனப் பிரித்தருளினதாம். தத்துவமே இன்னம் ஏற்படாமலிருக்கத் தகவுக்கு இங்கே வழியெப்பொழுதோ எனவும் கருத்தாம்.

அல்லது தகவாகிற உனது தத்துவம் இதன்று. அல்லது எங்களைச் சேர்த்துக் கொள்ளாமல் தனியாக இருந்து அவனைப் பிரியாமலிருப்பது உனது தத்துவமன்று. இதை நாங்கள் கண்டிருக்கிறேம். ப்ரம்ம ருத்ராதிகள் உள்பட எல்லா ப்ரஜைகளும் அஜ்ஞானம் விஞ்சியிருப்பதைக் கண்டு பெருமானை விட்டுப் பிரிந்து வானுலகினின்று விரைவிற் கீழே இறங்கி, அவன் பிறகுத் தவம் புரிந்து பெற்ற போது அவனை துயில் கொள்ளாமலிருந்தெல்லாரையும் காக்கச் செய்ய விசைந்து மண்ணை மெறிக்காத் தேவர்களும் மனிதரும் சேர்ந்து ஒத்தனுபவிக்கும்படி பூமிக்கு வருவித்த அப்ராக்ருதமான திருமலையிலே நின்று மேலிருந்தும் கீழிருந்தும் மற்ற திக்குகளினின்றும் வருமவரையும் காக்க ஏவி, பள்ளிகொள்வதும் வீற்றிருப்பதும் கூட தகா வென்று மணாளனை நின்ற வண்ணமே இருக்கச் செய்து அகல கில்லேனிலறையும் என்றுறையு மலர்மேல் மங்கையும் நியு மொருத்தியே யானபடியாலே பிரிந்து கூட பிறரைக் காப்பதன்றே உனது ஸ்வரூபத்திற்கு தக்கது. அங்கனமிருக்கத் துயிலெழ வொட்டாமலிருப்பது உனக்கு கூடுமோ என்றது மாம்.

இப்பாசுரத்தில் இருவரையும் சேர்த்து அனுஸந்தித்ததினின்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியதாவது —எம்பெருமானுக்கு எப்போதும் பரதந்த்ரையான பிராட்டியை நாம் ஸ்வதந்த்ரையாக நினைக்கில் ராவணனுக்குப் போலே ஹாநி யுண்டாம். பிராட்டியை யுபேக்ஷித்துப் பெருமானை மட்டும் பற்றினல் சூர்ப்பணகை போல் பரிபவப்பட வேண்டும் படியாம். ஆக இருவரையும் புரஸ்கரித்துப் பேறு பெற வேண்டுமென்றதாம்.

உட்பொருள்—குத்து விளக்கெரிதலாவது ஆசார்யோப தேசம், கோட்டுக்கால் கட்டிலென்பது தர்மார்த்த காம மோக்ஷங்களாம் நான்கு புருஷார்த்தங்களைப் பற்றியுள்ள ப்ரபஞ்சம். அல்லது ஜ்ஞானம், இச்சை, ப்ரயத்தனம், லீலா ரஸத்தை யனுபவிக்க வேண்டுமென்ற விருப்பமென்ற ஈச்வரகுணங்களாலான ப்ரபஞ்சம் மெத்தென்ற பஞ்சசயனமாவது, தேவ திர்யக்-மனுஷ்ய-ஸ்தாவர அப்ராணி ரூபமான ஜீவவர்கமாம். மேலேறி—அந்த ஜீவவர்கமாம். க்ஷரபுருஷர்களுக்கு மேற்பட்டவனாய். கொத்தலர்பூ—

—குழாம் குழாமாகக் குவிந்து மகிழ்ந்திருக்கும் நித்ய ஸூரிகள். அவர்களுக்கும் மேலான பிராட்டிமார்களுக்கும் மேலாய் விளங்கும் புருஷோத்தமனே என்பது மலர்மார்பா என்ற வரைக்குமான பாகத்தின் கருத்தாகும். பிரிவாற்ற கில்லாயால் ''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி' யென்றபடி எங்களுடன் கூடவே எப்பெருமானைப் பிரியாதிணங்கும் நீ எங்களை விடுவது தகுமோ வென்றதாம். தத்துவ மன்று. அத்தன்மைத்தன்று. அது நீ யன்று, அவன் நீயாக மாட்டான். நீ தகவல்லையோ தயாமூர்த்தியாயிற்றே என்னலுமாம். (19)

மறுபடியும் கண்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையு மெழுப்புகின்றனர்—

20. முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.

முப்பத்து மூவர்—முப்பத்து மூன்று பேரான
அமரர்க்கு—தேவர்களுக்கும்
முன் சென்று—முன்னரே இருந்து
கப்பம்—நடுக்கத்தை
தவிர்க்கும்—போக்குகின்ற
கலியே—மிடுக்கு உடையனே!
துயில் எழாய்—நித்ரையை விடவேணும்.
செப்பம்—முக்கரணங்களின் ஒத்துமையை
உடையாய்-உடையவனே!
திறல்—நிர்வஹிக்கும் தேஜஸ்ஸை
உடையாய்—உடையவனே!
செற்றார்க்கு—விரோதிகளுக்கு
வெப்பம்—தாபத்தை
கொடுக்கும்—விளைவிக்கின்றவனாய்
விமலா—நிர்மலனாயு மிருப்பவனே!
துயில் எழாய்—நித்ரையை விட்டருள வேணும்.
செப்பு அன்ன—கலசம் போன்றனவும்
மெல்—மென்மை பொருந்தியவையுமான
முலை—ஸ்தனங்கள் உடையவளும்
செம் வாய்-சிவந்த அதரத்தை யுடையளும்
சிறு மருங்குல்—நுண்ணிய இடையுடைய ளுமான
நப்பின்னை—நப்பின்னை யெனப்பட்ட
நங்காய்—குணபூர்ணையே!
திரு ஏ—பெரிய பிராட்டியாகவே யிருப்பவளே!
துயில் எழாய்—நித்ரையை விடவேணும்.
உக்கம் உம்—ஆலவட்டத்தையும்
தட்டு ஒளி உம்—ஒளியுள்ள தட்டான கண்ணாடியையும்
தந்து—அளித்து
உன் மணாளனை—உனது ப்ரியனான கண்ணனை (கொண்டு)
இப்போது ஏ—உடனே
எம்மை—எங்களை
நீராட்டு—நீராடச் செய்
ஏல் ஓர் எம்பாவாம்.

ஏற்கனவே இருவரையும் எழுப்பி யிருக்க மறுபடி எழுப்புவதென் என்னில், இவ்வளவு பிரார்த்தித்தும் எழுந்திராம லிருக்கவே நாம் சொன்ன சொற்கள் அவர்களுக்கு உரோஷத்தைக் கொடுக்கும் முறையிலே யமைந்து விட்டதனால் அவர்கள் நம்மை உபேக்ஷிக்கின்றனர் போலுமென நினைத்து விநயத்துடன் மீண்டு மழைக்கின்றன ரென்க.

இப் பாசுரங்களின் போக்கை யுற்று நோக்கும்போது அறியப் படுவது பின் வருமாறு—முதலில் இருவரும் அறையிலே சென்றிருப்பவர் விழித்து விளையாடிக் கொண்டிருக்கலா மென நினைத்து, பந்தாடலா மெனப் பாவித்துப் பந்தாடிக்கொண்டே வந்து திறவா யென்றனர். அவள் வரவில்லை. அதனால் அவர்கள் என் செய்கிறார்களெனப் பார்த்தனர். அப்போது உள்ளே குத்துவிளக்கெரிவதும் தெரிந்தது. அதைக் கொண்டு கோட்டுக்கால் கட்டிலில் அவர்கள் படுத்திருக்குமாறு கண்டனர். அப்போதும் விழித்துக் கொண்டே படுத்திருக்கலா மென நினைத்து, உறங்கவேண்டா மென்றுமே. வாய்திறவா யென்றும், இத்தனை போதிலும் பிரிய மனம் வரவில்லையோ என்றும் கேட்டனர். உண்மையிலவர்கள் ஆயாஸமுற்று உறங்குகின்றன ரென்று அதன் பிறகே தெளிந்தனர். அதனால் தாங்கள் இதற்கு முன் நினைத்தது சரியென்றென வுணர்ந்து துயிலெழும்படியே இப்போது கேட்டுக் கொள்ளுகின்றனர். அதில் கண்ணன் கொங்கை மேல் வைத்துகிடத்த மலர் மார்பனு மிருப்பதாலே அவன் அசையாமல் அவள் எழுந்திருக்கமுடியாதாகையாலே அவனை முன்ன மெழுப்புகின்றனர்.

முதலீரடிகளில் அவன் செய்யும் ஆச்ரிதரக்ஷணம் சொன்னபடி. செற்றார்க்கு இத்யாதியாலே துஷ்டநிக்ரஹம் சொல்லப்பட்டது. அவ்விரண்டு செயல்களுக்கும் வேண்டிய இரு குணங்கள் செப்பமுடையாய் திறலுடையா யெனச் சுருக்கி யனுபவிக்கப்பெற்றன.

முப்பத்து மூவராவார் எட்டு வஸுக்களும், பதினொரு ருத்ரர்களும், பன்னிரண்டு ஆதித்யர்களும், இந்திரனும், பிரஜாபதியுமென ப்ருஹதாரண்யகோபநிஷத்திலே யாஜ்ஞவல்க்யர் சொன்னார். இவர்களுடைய விபூதிகளையும் சேர்த்தபோது முப்பத்து முக்கோடி தேவதைகளென்கிறது. இந்திரன், பிரஜாபதி யென்ற இருவரை விட்டு அச்விநீ தேவதைகளிருவரை எண்ணுவது முண்டாம். முன் சென்று—எம்பெருமான் உபேந்திரனாக அவதரித்ததால் இந்திரனுக்கு ஸஹாயமாயிருந்து உலகை காப்பானாய் தேவதைகளின். கோரிக்கையைக் கூட எதிர்பார்க்காமல் முன்னதாகவே தானே யாராய்ந்து அவர்கள் துன்பத்தைக் விலக்குவானென்றபடி. அவ்வதாரத்திலே அவர்களுக்குச் செய்த வண்ணம் இவ் வவதாரத்திலெங்களுக்கு அனுகூலிக்கவேண்டுமே என்றறிவித்ததாம். அமரர்கள் = அழியாதவர்கள். அழியாத முப்பத்துமூன்று பேர்களுக்காக நீ படாதன பட்டவன் அழியும் தருவாயிலிருக்கும் எண்ணிறந்த அபலைகளான எங்களுக்கு நாங்கள் அழைத்தபிறகு கூட அநுகூலிக்காம லிருப்பதேனோ என்றதாம். முன் சென்று—போருக்குப் புறப்படும் தேவதைகளின் சேனையிலே முன்னே நின்று போர் புரிவதும் சொன்னதாம். அதனால் அவர்களுக்குப் பெருமை யளிக்க அவர்களுக்கு உழைக்கும் போர்ச்சேவகனு மிருத்தல் தோற்றும். பயந்தோடும் அஸுரர்களின் எதிரிலே சென்று அவர்களை மடக்கி யடித்து முப்பத்து மூவரமரர்க்குக் கப்பத்தைப் போக்குவதுமாம். முன் ராவணனின் பாட்டன்மார் காலத்திலே சரணாகதரான தேவர்களுக்காக மால்யவான் முதலானோரோடு பொருதவளவிலே அவர்கள் இலங்கைக்குப் பயந்தோட, ['பாதாளலோகம் போனாலு முங்களை விடுவதில்லை' யென்று அவர்களைப் பின் தொடர்ந்தே சென்று வதைத்துத் தேவதைகளைக் காத்த விஷ்ணுவின் வாத்ஸல்யமும் இங்கே கருதப்பெற்றதாம். அப்போது மால்யவானானவன்.

'நாராயண ந ஜாநீஷே க்ஷாத்ரம் தர்மம் ஸநாதநம் |
அயுத்தமநஸோ பக்நாந் யோऽஸ்மாந் ஹந்ஸி யதேதர:'

(नारायण न जानीषे क्षात्रं धर्मं सनातनं । अयुद्धमनसो भग्नान् योऽस्मान् हन्सि यथेतर:)

பயந்தோடுகின்ற எங்களை யடிப்பது க்ஷத்ரதர்மமாகுமோ என்று கேட்டதற்கு 'தேவதைகளுக்கு அபயப்ரதானம் செய்துள்ளேன். 'ஸோஹம்வோ நிஹநிஷ்யாமி ரஸாதலகதாநபி'

(सोऽहं यो निहनिष्यामि रसातलगतानपि) என மறுமொழி கூறினன். நான் நாராயணனுன படியாலே துஷ்டர்களைத் தண்டிப்பவனுவேன். எனக்கும் க்ஷத்ரிய தர்மத்திற்கும் என்ன ஸம்பந்த மென இதன் கருத்தென அபயப்ரதான ஸாரத்திலே ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தார்.

முப்பத்து மூவரித்யாதிக்கு வேறு கருத்தும் சொல்வதுண்டு-முதலை வாய்ப்பட்ட கஜேந்த்ராழ்வான் கதறிக் கைகூப்பி, முதலே! முதலே! என்றழைத்தபோது, 'நாஹம் நாஹம் நசாஹம் ந ச பவதி புநஸ் தாத்ருசோ மாத்ருசேஷு' (नाहं नाहं न चाहं न च भवति पुनस्तादृशो मादृशेषु) என்றபடி, 'முதல்வனுகேன். நான் காக்க வல்லனல்லன்' என முப்பத்து மூவரான அமரரும் திகைத்தபோது அவர்கள் எதிரில் அது பாதைப்படுமிடம் சென்று அதன் கப்பம் தவிர்த்தவனென்றதாமது.

அன்றி, கப்பமென்பது (அரசிறை போன்ற) கொடுக்கவேண்டும் திரவியமாய் தேவர்கள் பிறர்க்குக் கப்பம் கட்டாதபடி பார்த்துக் கொண்டவனென்றதாம். இடையர்கள் இந்திர பூஜை செய்ய முயன்ற போது கோவர்த்தன பூஜையைச் செய்வித்து முப்பத்து மூவருக்குச் சேரவேண்டும் கப்பத்தைக் தவிர்த்தவ னென்னவுமாம். இனி, தேவர்ஷி பூதாத்மந்ருணும் பித்ருணும் ந கிங்கரோ நாயம் ருணீ ச ராஜந்' (देवर्षि भूतात्म नृणां पितृणां न किंकरो नायं ऋणी च राजन्) என்கிறபடி பரமைகாந்தியா யிருப்பவனுக்குக் கடன்களை யெல்லாம் சுழற்றுகின்றவன் அவனுகையாலே அவர்களிடும் கப்பம் முப்பத்துமூவரமரர்க்கு எட்டாமற் போகிறதென்பதும்,

'தத்தத்பதை ருபஹிதேऽபி துரங்கமேதே சக்ராதயோ வரத பூர்வ மலப்தபாகா: ।
அத்யக்ஷிதே மகபதௌ த்வயி சக்ஷுஷைவ ஹைரண்யகர்ப்பஹவிஷாம் ரஸ மந்வபூவந்

(तत्तत्पदैरुपहितेऽपि तुरङ्गमेधे शक्रादयो वरद पूर्वमलब्धभागाः ।
अध्यक्षिते मखपतौ त्वयि चक्षुषैव हैरण्यगर्भहविषां रसमन्वभूवन् ।।)

என்றபடி தானே அவர்கள் அளிப்பதை யெல்லாம் பெற்று உவப்பதும் இங்கே அருளின படியாம். உன்னையே கதியாக நினைத்துள்ள எங்களையு முபேக்ஷிப்பதோ என இதன் கருத்து.

செப்ப முடையாய் — நிஷ்கபடமாய் ஆச்ரிதர் விஷயத்திலே உபகரிக்கும் ஸ்வபாவ முடையவனே! இப்படியிருக்கிற உன்னை நாங்கள், வேண்டுமென்றே தெரிந்தே வாய் திறக்காமல் உற காது படுத்திருப்பதாக நினைத்தது தவறெனத் தெரிவித்துக் கொண்ட படி. தர்மமே வடிவெடுத்து வந்த ஸ்ரீராமபிரானு யிருந்தபோது நடுப்போரிலே, 'இன்று போ, நாளை வா' என்று ராவணனை அநுக்ரஹ புத்தியாலே அனுப்பிய பெருந்தன்மை யும், காட்டிற்குத் தசரதர் அனுப்ப நேரிட்டபோது, 'மநஸா பூர்வ மாஸாத்ய வாசா ப்ரதி க்ருஹீதவாந்' (मनसा पूर्वमासाद्य वाचा प्रतिगृहीतवान्) என்றபடி மனப்பூர்வமாகப் பெற்றுச் செய்வதாகச் சொல்லி, பிறகுப் பரதன் எவ்வளவு வேண்டினபோதும் விடாமற் செய்து முடித்தது முதலான வையுமிங்கனுஸந்திக்கப் பெறலாம். திறலுடையாய் — திறலில்லாத வனுயில் செப்பம் தவிர்ந்தொழிய நேரிடும். அஃதில்லை, திறலுள்ளவன், ஒருவனுக்குத் தான் அடங்க வேண்டியதில்லை யென நினைத்துச் செப்பமின்றி யிருப்பான். நீயோ பொன் னுமாய் நாறினுற்போலே செப்பமும் திறலும் சேரப் பெற்று யென்னலுமாம்.

செற்றார் — 'ந மே த்வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய:' (न मे द्वेष्योऽस्ति न प्रिय:) என்ற நினைவுள்ள எம்பெருமானுக்கு ஆச்ரித்விரோதிகளே விரோதிகளாவர். 'பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:' (पाण्डवान् द्विषसे राजन् मम प्राणा हि पाण्डवा:) என்றது காண்க. வெப்பம் கொடுக்கும் விமலா—வெப்பம் கொடுப்பது இவனுக்கு தோஷமாவதில்லை. அவர்களுக்கும் உள்ள அழுக்கை நீக்குவது அது. ஆகையால், 'ரிபுஷு நிஹதேரேவ ஹிததா' (रिपुषु निहतेरेव हितता) என்றபடி குணமாகிறது. ஆகையாலும் விமலன். துயிலெழாய்—நீ உறங்காமல் படுத்து எங்கள் சொல்லைக் கேட்டும் வெறுமனேயிருப்பதாக நாங்கள் நினைத்தது தவறு. உறங்குவது அறிந்தோம். அறிவுற வேணும்.

இவர்களே அவனை எழுப்பினார்களாகில் நப்பின்னை எதற்குப் புருஷகாரமாகிறதென்ன வேண்டா. 'துயிலெழப் பாடுவான்' என்று தாங்கள் திருப்பள்ளியெழுச்சி பாடுவதை முன்னமே சொன்னார்களே. நப்பின்னை புருஷகாரமாவதென்பது பறையைப் பெறுவித்து நீராட்டி வைக்கவே யாம். ஆகையாலே அவனை மேலே யெழுப்புகின்றனர். இப்படி அவள்மேல் வைத்த மார்பனான பிரான் இவர்கள் சத்தம் கேட்டு, தூக்கம் தெளியாமலே, சிறிது அகன்றான். அப்போது நப்பின்னையின் திருமேனி இவர்கள் கண்களுக்கிலக்கானது. ஆகவே கண்ணனுக்குப் போக்யமாயுள்ள அவளங்கவமைப்பை அன்புடன் அனுபவிக்கின்றனர். முன் பாசுரங்களிலே இவளை இங்ஙனம் வர்ணிக்காததற்குக் காரணம் கண்ணனால் மறைக்கப்பட்டு அவ்வமைப்பு இவர்களுக்குக் காணக் கூடாமலிருந்ததே யாம்.

செப்பன்ன மென்முலை—உருவில் பொற்கலசம் போன்ற ஸ்தனங்களுக்கு மென்மை ஏற்றம். மெத்தென்ற பஞ்சசயனம் கூட இவளுக்கு உறுத்துமோ என்னவேண்டியிருந்தது. நப்பின்னையை விட அவள் கொங்கைக்கு மென்மை யதிகம். அவளுடைய ஹ்ருதயமே உருகி அவ்வுருவெடுத்திருக்கிறதென்னலாமே. செவ்வாய் — கண்ணனை வாய் திறவாய் என்றோம். அமுதத் தொண்டை வாயனான அவனும் ஆசைப்படும்படி அமைந்த இதன் அழகு சொல்லத் திறமேது. சிறு மருங்குல் — மின்னுக்கொடி போன்றுள்ளது. இப்படி யிவர்கள் வர்ணிக்கும் போது அவளுக்கும் தூக்கம் கலைவது போலிருந்தது. ஆகவே நங்காய் என்றனர். இனி புருஷகாரக்ருத்யம் பூர்ணம்; தகவுள்ளவளே நீ என்றதாயிற்று. புருஷகாரமாக் வொருவர் வேண்டுமாகில் பெரிய பிராட்டியாரை யாச்ரயிப்பது நலமென்னுமைக்காக இவளையே திருவேயென அழைக்கின்றனர். ப்ரார்த்தனையைப் பார்த்திருந்து காக்கும் பெருமானை விட, பாபமே பெரிதாகச் செய்து வரும்போதே காத்துவரும் பெரிய பிராட்டியாருக்கேற்றமிருப்பதை அசோகவனத்தில் கண்டுளோம்.

'மாதர்மைதிலி ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ் த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜாத் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா |
காகம் தஞ்ச விபீஷணம் சரணமித்யுக்திக்ஷமௌ ரக்ஷத:
ஸா நஸ் ஸாந்த்ர மஹாகஸஸ் ஸுகயது க்ஷாந்திஸ் தவாகஸ்மிகீ ||'

मातर्मैथिलि राक्षसीस्त्वयि तथैवार्द्रापराधास्त्वया रक्षन्त्या पवनात्मजात् लघुतरा रामस्य गोष्ठी कृता ।
काकं तं च विभीषणं शरणमित्युक्तिक्षमौ रक्षत: सा न: सान्द्रमहागसस्सुखयतु क्षान्तिस्तवाकस्मिकी ॥

மேலும் பெரிய பிராட்டி ஆர்த்ராபராதிகளைக் காக்க பூமாதேவியையும் உன்னையும் ஸஹாயமாக வைத்துக்கொள்வதுண்டே-எனவும் கருதினர்.

'ஆர்த்ராபராதிநி ஜநேऽப்யபிரக்ஷணார்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமாநே |

பார்ச்வே பரத்ர பவதீ யதி தத்ர ந ஸ்யாத்
ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திதம் ஸ்யாத்'

अद्रापराधिनि जनेऽप्यभिरक्षणार्थं रङ्गेश्वरस्य रमया विनिवेद्यमाने ।
पार्श्वे परत्र भवती यदि तत्र न स्यात् प्रायेण देवि वदनं परिवर्तितं स्यात् ॥

என்றது காண்க. மேலும் அவள் பரோக்ஷமாயிருக்கும் ஸமயத்திலே அவளுக்குப் பதிலாகவும் நீ யாவாய். ஆக உன்னைத் திருவே யென விளிக்கின்றோம். இப்படி நீ யவளேயாகையாலே, 'துயிலெழ வொட்டாய் காண். எத்தனையேலும் பிரிவாற்ற கில்லா யால் தத்துவ மன்று தகவு' என்று நாங்கள் செய்த ஆர்த்ராபராதத்தையும் நீ க்ஷமிக்க வல்லையென்றதுமாம். பெரிய பிராட்டியைப் புருஷகாரமாக்குவ தென்பது மோக்ஷத்திற்காகச் செய்யும் சரணாகதியில் மட்டும். மற்ற பலன்களைப் பெறவேண்டிய போது மற்ற பிராட்டிமார்களும் புருஷகாரமாகலாம். 'யாபிஸ் த்வம் ஸ்தந பாஹு த்ருஷ்டிபிரிவ ஸ்வாபி: ப்ரியம் ச்லாகஸே' (याभिस्त्वं स्तनवाहुदृष्टिभिरिव स्वाभिः प्रियं श्लाघसे) என்றபடி எல்லாப் பிராட்டிகளும் அவளுடைய அம்சமாகையாலே யார் புருஷகாரமாக யிருந்தாலும் அவளே புருஷகாரமாக இருந்த படியுமாம். துயிலெழாய்—நீ உறங்காமலிருப்பதாக நாங்கள் நினைத்தது பிசகு என்றபடி.

இங்ஙன மெழுப்பப்பட்டவுடன் அவள் எழுந்து கடாக்ஷித்தருள, உடனே புருஷகார ப்ரார்த்தனை செய்கின்றனர் உக்கமு மித்யாதியால். தந்து—கண்ணனிடம் முதலில் தந்து. அவன் மூலம் எங்களுக்குத் தந்து. அல்லது நீயே யுன் செந்தாமரைக் கையால் எங்களுக்குத் தந்து. உன் மணாளனையும் எம்மையும் நீராட்டு எனவு மந்வயமாம். பறை போன்ற பெரிய வஸ்துக்களை அவனளிப்பான். அப்போது தன் கையாலெடுத்துக் கொடுக்க கூடிய உக்கமும் தட்டொளியு மெங்களுக்கு அளிப்பாயென்றலுமாம். இவர்கள் மேலே பறை கொள்வானன்று காண் என்று விண்ணப்பித்து அவனுக்கடிமைப் பட்டிருத்தலை யபேக்ஷிக்கப் போகிறார்களாகையாலே, 'உன் மணாளனையும் எம்மையும் நீராடலுக்கு அதாவது சுனையாடலுக்குச் சேர்த்துவிடு; நாங்களும் உன்னைப் போலனுபவிக்க வேணுமென்றதும் ப்ரார்த்திக்கப் பெற்றதாம். உக்கமும் தட்டொளியு மென்றது நோன்புக்கு வேண்டும் மற்றவற்றிற்கும் குறிப்பாகும். அல்லது துயிலெழுங் கண்ணனுக்கு ச்ரமபரிஹாரத்திற்கும் காண்பதற்கும் உபசாரமாக முதலிலே உக்கமும் தட்டொளியும் தந்து' பிறகு நீராட்டி அனுப்பிவைப்பாயாக என்றதுமாம். (20)

இவர்கள் பிரார்த்தனைக்கிணங்கி நப்பின்னைப் பிராட்டியும் கடைதிறந்து, 'அங்ஙனமேயாகக் கடவது. நீங்கள் கண்ணனை யாச்ரயிக்கப் பெறுவிக்கிறேன், முன்னே, 'உன் மைத்துனன் பேர் பாட' என்றும், 'தூயோமாய் வந்தோம் துயிலெழப்பாடுவான்' என்றும் நீங்கள் சொன்னபடி நம் ப்ரபுவிஷயமாகத் திருப்பள்ளியெழுச்சி பாடுவது தொடங்கியெல்லாம் செய்யுங்கோள் என வனுக்ரஹித்தாள். அவ் வனுக்ரஹத்தைப் பெற்று இவர்களும் கண்ணனைத் துயிலெழ உணர்த்துகின்றனர்—

21. ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய்.
ஊற்ற முடையாய் பெரியாய் உலகினில்

தோற்ற மாய்நின்ற சுடரே துயிலெழாய்.
மாற்றா ருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஏற்ற—தகுந்த
கலங்கள்—பாத்திரங்களுக்கு
எதிர்—எதிரிலே
பொங்கி—உயர்ந்து
மீது அளிப்ப—பாத்திரங்களைச் சுற்றி வழியும்படி.
மாற்றாதே—விடாமல் (வஞ்சனை பண்ணாமல்)
பால் சொரியும்—பாலைச் சுரந்து பெருக்கின்றனவும்
வள்ளல்—உதாரங்களுமான
பெரும் பசுக்கள்—மிகப் பெரிய பசு மாடுகளை
ஆற்ற—நிரம்ப
படைத்தான்—பெற்றவனான நந்தகோபனுடைய
மகனே—குமாரனான கண்ணபிரானே!
அறிவு உறாய்—விழித்துக் கொள்ளவேணும்
ஊற்றம் | ச்ரத்தை
உடையாய் | யுடையவனே
பெரியாய்—நிர்வாஹ சக்திவாய்ந்தவனே!
உலகினில்—மண்ணுலகில்

தோற்றம் ஆய்—ஆவிர்பாவம் செய்து
நின்ற—நிலைத்தருளின
சுடரே—பரஞ்ஜோதிஸ்ஸே!
துயில் எழாய்—நித்திரையை விட்டருள்.
மாற்றார்—விரோதிகள்
உனக்கு—உன் விஷயத்தில்
வலி — பலமெல்லாம்
தொலைந்து—அழிந்து விடவே
ஆற்றாது—மன திட மற்று
உன—உனது
வாசல் கண்—திருமாளிகை வாசலிலே
வந்து—வந்து நின்று
உன் அடி—உனது திருவடிகளை
பணியும் | ஸேவிக்கு மாறு
ஆ போலே | போலவே
யாம்—நாங்கள்
புகழ்ந்து—(உன்னைத்) துதித்து
போற்றி—விஜயத்தை விருப்பிக் கூறி
வந்தோம்—வந்து அடி பணிந்தோம்.
ஏல் ஓர் எம் பாவாய்.

கோகுலத்திற்கு அதிபதியான நந்தகோபரை முன்னிட்டே இவர்கள் கண்ணனிடம் பறை பெற வேண்டுமாகையாலே, முன்னே நப்பின்னைப்பிராட்டியை, ‘நந்தகோபன் மருமகனே’ என வழைத்தது போல இங்கும், ‘ஆற்றப் படைத்தான் மகனே’ என விளிக்கின்றனர். அங்கே நந்தருடைய வலிமையை வர்ணித்தாய் விட்டதனால் இங்கே கோபர்களுக்கு முக்கியமாய் வேண்டும் செல்லவத்தின் சிறப்பே சொல்லப்படும்.

ஏற்ற கலங்கள்—பசுக்களின் உருவத்திற்கும் அவையளிக்கும் பாலுக்கும் தக்கபடியல்லவோ கலங்களை வைக்கவேண்டும். யானையைப் போன்ற பசுக்களின் கீழே வைக்கிறபடி குதிரைகளைப் போன்ற பசுக்களின் கீழ் வைக்கமுடியுமோ. ஒவ்வொரு கலமும் கால் உயரத்திற்குத் தக்கபடி உயர்ந்திருக்கும். அப்படிக்கொத்த கலங்களும் ஒவ்வொரு பசுவுக்கும் பல வாம். அவற்றில் ஒரு பீறு இழுக்க முயன்றபோது பால் உள் அடங்காமல் அரைத்துக் கொண்டு கலங்களின் மேலே சிறிது தூரம் கீழே விழாதபடி எதிர்பொங்கும். பிறகு திரவமாயிருப்பதாலே வெகுதூரம் உயரமாட்டாமே கலங்களைச் சுற்றி வழியும். இப்படிப் பாலைச் சில கலங்களுக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு பசுக்கள் அடக்கிக் கொள்ளுமென நினைக்கவேண்டா. முதலில் கொடுக்கத் தொடங்கின போதிருந்த நிலைக்குக் கடைவரையில் வாசி யேது மிராதபடியாய் மாற்றாமே தரும். கறக்கும் இடையன் புதியவன் சிறு பிள்ளை, ஸ்திரீ யென்றவாறெல்லாம் பார்க்காமே யாராயிருந்தாலும் கொடுக்கும்படியவை வள்ளல்கள். பெரும் பசுக்கள் — எல்லா இடங்களைக் காட்டிலும் கோகுலத்திலே

பசுக்கள் பெரியன. அவற்றிலும் கண்ணன் காலத்திலே அவை மிகப் பெரியன. அவற்றிலும் மற்ற கோபர்கள் இல்லங்களிலுள்ளவற்றை விட சாலவும் பெரியன நந்தகோபன் பசுக்கள். இவற்றிற்கு மேல் உருவிலும் குணத்திலும் மற்றென்று பெரிதாகாதபடி பெருப்பெருத்த பசுக்களாமவை. ஆற்ற — கற்றுக்கறவைக் கணங்கள் பலவென்று முன் சொன்னவிடத்தைக் காட்டிலும் இங்கே எண்ணிக்கை மிக வதிகமாம். நெய்யும், தயிரும் பாலுமெல்லா மெவ்வளவு கண்ணன் உண்டாலும் குறைவறவே யிருக்கும்படி அவை எண்ணிறந்தவையாம். படைத்தான் — இவ்வளவு பசுக்கள் உடையவனென்றது மட்டுமின்றி இப்படிக்கொத்த பசுக்களை ஸ்ருஷ்டிக்கும்படி வயதிற் பெரிய பசுக்களையு முடையவனென்றதுமாம். படைத்தான் மகனே - அவனுக்கு இந்தச் செல்வம் பின்னிட்டுப் பிறந்தது. அவனுடைய மகனான நீ கர்பச்ரீமான் 'பிது: சதகுணம் புத்ர:' (पितु शतः गुणं पुत्रः) என்றபடி அதற்கு மேலும் நீ பெறப் பாக்கியமுற்றவன் இப்பெரும் செல்வத்திற்கு என்றும் அழிவிராதபடி நோன்பை நடத்திவைக்க வேணும். மேலும், கறக்கும் பாலுக்காவது இப்பொழுதே அறிவுறுயென்றதுமாம். ஆடுமாடு மேய்ப்பவனுக்கு அவற்றின் குணம் சேருமென்பர். ஆக, நீ அவற்றைப் போலே வள்ளலாக வேண்டுமே. காமாதிகமாய் அதாவது கோருதலுக்கு மேலாகவே அவை கொடுக்குப்போது கேட்டமட்டிலேயாவது நீ கொடையாளியாக வேண்டாவோ. அசேதனப்ராயங்களான அவற்றிற்கே இவ்வளவு தயையும் பெருந்தன்மையுமிருந்தால் சேதநஸார்வ பௌமனான உனக்கு எவ்வளவோ இருக்கவேண்டுமே. உன் அனுக்ரஹத்தால் உனது சேர்க்கையாலே அவற்றிற்கு இச் சிறப்பென்னில் உனக்கு இயற்கையிலேயே அது இருப்பதாயிற்றே. ஆக நீ எங்களை யுபேக்ஷிக்கலாகாதென வெல்லாம் குறிக்க இங்ஙனம் விளித்ததாம். அறிவுறாய்— நாமெழுந்திருக்க வேண்டும் வேளையிதென்பதை உணர வேண்டும். அப்போது எழுந்திருக்க மனம் வரும்.

பசுக்களைப் போலே அளவற எல்லாம் சுரக்கு முளக்கு எங்களை எப்போதும் எப்படியிலும் காக்கவேண்டுமெனத் தயையும் ச்ரத்தையுமிருப்பது சிறப்பாகுமென அறிவிக்க ஊற்ற முடையாய் என்றது. தயை யுள்ளவனுக்குச் சக்தியில்லையாகில் தானும் துக்கமுற்றழியும் படியாம். சக்தியுள்ளவனுக்குத் தயையில்லையாகில் துர்ஜநனென்று ஜநங்கள் தூறும்படியாம். பெருமையும் தயையோடு சேர்ந்ததால் பொன்னுமாய் நாறினாற் போலேயுள்ளவன் நீ என்கிறார் பெரியாய் என்றனர். இடையன் மகனான இளம் பையனுக்கு இவ்வளவு பெருமை யெங்ஙனமென நினையாமைக்காக அவனது அவதார ரஹஸ்யம் கூறப்படுகிறது உலகினில் இத்யாதியால். உலகினில் உனது பிறவியொன்றே உண்மையில் தோற்றமெனக் கூறக் கூடியதாம். மற்றவர் பிறவி வெறும் பிறப்பே. ப்ரம்மருத்ராதிகளுக்கும் கர்மாதீனமான பிறப்பே யல்லது அவதாரமென்பது கிடையாது. 'அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோநாராயண:(अपहत पाप्मा दिव्यो देव एको नारायण:)' என்று நீ யொருவனே கர்மங்களாலே பாதிக்கப்படாதவனாக ஓதப்பட்டுள்ளாயென்றபடி.

'அஜோऽபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோऽபி ஸந் :
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்ம மாயயா'

(अजःऽपि सन् अव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् । प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ।।)
என இவன் தானுமருளிச் செய்தான். 'எனக்குத் கர்மாதீனமாகப் பிறவி கிடையாது. ஆகவே எனது ஜ்ஞானத்திற்கு ஸங்கோசமென்பது, அதாவது ஒருவித குறைபாடும் என்றும் கிடையாது இயற்கையில் அப்படிப்பட்டவனாகிலும், எனக்கு மேலுள்ள ஒருவனால் பலாத்காரமாக நான் ஒரு பிறவி பெறுவிக்கபடுவேனென வேண்டா. நானே எல்லோருக்கு

மீச்வரன்; எனக்கு மேல் யாருமில்லையே. ஆகில் இப்போது பிறந்திருக்கிறீரே. ஆகை யால் மாயவலைக்குட்பட்டீரல்லீரோ?' வென்னில், ஈச்வரனுடைய மாயைக்குட்பட்டுப் பிறக்கும் பிரஜைகள் மாயவலைக்குட்பட்டவராவர். உங்களைவலைப்படுத்தும் மாயையெனக் குளது 'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா' (दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया) என்றதைக் காண்க. தானே தன்னுடைய மாயையிற் சிக்குண்டிருப்பது உண்டோ' ஆகையால் எனது மாயையாலே நான் பிறக்கிறே னென்றால், இம் மாயை என்னை மோஹிப்பிக்கும் மாயை யாகாது. பின் எதென்னில் மாயையாவது ஜ்ஞானம்; ஸங்கல்ப் பம். ஒருவருக்குமில்லாத உயர்ந்த ஸங்கல்பமாம் இது. ஆச்சர்யமாய் ஸ்ருஷ்டிக்கும் சக்தி வாய்ந்த தொன்றை மாயையென்று சொல்வர். இப்படி, 'இச்சாக்ருஹீதாபிமதோரு தேஹ' (इच्छागृहीताभिमतोरुदेहः) என்றபடி நானே விரும்பிப் பெறும் இப் பிறவி ஜீவ ராசிகளின் பிறவி போன்றதாகாது. 'ஆனாலும் விரும்பிப் பிறந்தாலும் விரும்பாமே ஒருவன் பலாத்காரம் செய்யப்பிறந்தாலும் துக்கமயமான உடலைப் பெற்ற பிறகு நீரும் ஜீவனைப் போலாய்விட்டீரே'யென்ன வேண்டா. ஜீவனைப் போலே துக்கமயமான ப்ரக்ருதி ஸம்பந்த மெனக்கில்லையே. எனக்கென்றே ஏற்பட்ட ஸ்வபாவத்தைக் கொண்டு அப்ராக்ருத்தமாய் ஆனந்தமயமான திவ்ய திருமேனியுடன் நான் அவதரித்திருப்பவனுமிற்றே யென்றது அதன் பொருள். 'இப்படி லோக விலக்ஷணமாக அவதரிப்பதென்றால் இது எதற்காக. உலகத்தாரைப் போலே புண்ய பாபங்களின் பலனை யனுபவிக்க என இயலாதே' யென்னில், அவதாரத்திற்கும் பலனுண்டு. 'பரித்ராணாய ஸாதூநாம்' (परित्राणाय साधूनां) என்றபடி பலன்கள் பலவாறு உள. இவ்வவதார ரஹஸ்ய மறிந்தானுக்கு மறுபிறவியின்றி மோக்ஷம் பெறப் பாக்ய முண்டென்று கீதையில் விஸ்தாரமாக அருளிச் செய்தது காண்க. இங்ஙனம் அவதாரமாகப் பிறக்கிறபடியாலே அவனது ஜ்ஞான சக்திகளுக்கு அழிவில்லை யென்பதை விளக்க, சுடரே என்றதாம்.

இனி, மாற்ற மித்யாதியாலே அவனுடைய அவதாரங்களெல்லாம் கூறப்பட்டன வாம். உடலும் புலன்களுமில்லாமையாலே வல்வினைகளை மாய்த்தி வீடு பெற வியலாமை விழுந்துகிடக்கும் ஜீவர்களைக் கண்டு கருணைபுரிந்து ஸ்ருஷ்டி செய்ய ஸங்கற்பம் கொண்ட வாஸுதேவனே! ஆகவே பெரிய விச்வருபமெடுத்து ப்ரத்யும்நாநிருத்த ஸங்கர்ஷண வ்யூஹருபனாகி ஸ்ருஷ்டி ஸ்திதிஸம்ஹாரங்களைச் செய்பவனாய் த்ரிமூர்த்தியாய்ப் பெரிய வனாயிருப்பவனே! பிறகு தன்னாலே ஸ்ருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகினில் அப்போதைக்கப் போது எல்லாம் ஒழுங்காக நடந்துவருகிறதா என்று மேற்பார்வையிடப் பலவிபவாவதாரங் களைச் செய்வதாலே உலகினில் தோற்றமானவனே! இப்படி மின்னல் போலும், மழைக் காலத்திலே யோடும் ஆற்று வெள்ளம் போலும் தோற்றமாய் மறைவதில் ப்ரஜைகளுக் குப் பயன்பெற இடமில்லையென்று உலகில் எங்கும் அர்ச்சைகளாய் நிலைத்து நின்றவனே! இங்ஙனம் நின்ற ருபங்களை ஸேவித்து ஏகாந்தத்தில் த்யானம் செய்ய விரும்புவது நல மென்ற திருவுள்ளத்தாலே எல்லோருக்கும் வைச்வாநராக்னியின் ஜ்வாலையினுட்புகுந்து விளங்கும் அந்தர்யாமிச்சுடரே! என எல்லா ருபங்களையும் இக் கண்ணபிரானுடையனவாக அனுஸந்தித்தபடி.

சுடரே துயிலெழாய் — ஸ்வயம்ப்ரகாசனான உனக்குத் தூக்க மென்பது ஏது? அவதாரத்திற் செய்யும் அபிநயத்தை நினைத்து நாங்கள் உன்னை யெழுப்புவதத்தனை யென்றபடி. நப்பின்னைப் பிராட்டியின் கொங்கையை விட்டகன்று படுக்கையில் படுத் திருக்கும் நீ உறங்கும் காலம் கடந்ததை யுணர்ந்து உறக்கம் செய்வதை விட்டருள வேணும்.

இப்போது திருப்பள்ளியெழுப்பும் நாங்கள் நிச்சலும் எழுப்பும் வந்தி வைதாளிகர்களெல்லோம். நேற்று விண்ணப்பித்தபடி வந்துள்ள கன்னிகைகளென அறிவிக்க மாற்றார் இத்யாதி. மேற்பாசுரத்தில் அங்கண்மா ஞாலத்தரசரை யருளப்போவதால் இங்கே மற்ற மாற்றாரைக் கொள்வது யுக்தமாகும். 'உலகினில் தோற்றமாய்' என்று பல அவதாரங்களைச் சொன்னதாலே முன் அவதாரங்களின் நடந்தனவும் இங்கே குறிப்பிடத் தகும். ஆகையால் ஸ்ரீ ராமாவதாரத்திலே பரசுராமர், காகாஸுரன், கபந்தன் முதலானோரின் நிலைமை யறிவிக்கப்பட்டதாம். வைஷ்ணவ வில்லின் பெருமையைக் கூறி த்வந்தயுத்தம் கூட செய்ய வேண்டுமென்று வந்த பரசுராமர், ஸ்ரீராமபிரான் அந்த வில்லிலே வாணத்தைத் தொடுத்தபோதே தெளிந்து, 'அக்ஷய்யம் மதுஹந்தாரம் ஜாநாமி த்வாம் ஸுரேச்வரம்' (अक्षय्यं मधुहन्तारं जानामि त्वां सुरेश्वरम्) என்று புகழ்ந்து, தம் கதிக்கு கேடு வைக்காததற்கு மெச்சி ப்ரதக்ஷிணம் செய்துபோனார். காகாஸுரன் கொடிய அபராதம் செய்து மூவுலகும் திரிந்து பறந்தோடி வந்து திருவடியில் விழுந்துகிடந்தான். கபந்தனும் வெட்டுண்டுஇன்னாரென அறிந்து புகழ்ந்தான்.

இனி இதற்குக் கருத்து இங்ஙனமுமாம். கண்ணனிடம் இவர்கள் வந்து சேர்ந்தாலும் அவன் ஒருக்கால் இவ்வாறு கூறலாம் — நீங்கள் மட்டும் தனியாக இருந்தால் நான் பறை கொடுக்க வரமுடியாது. நேற்று உங்களைத் தூண்டின கோபர்கள் யாவரும் வந்து சேர்ந்தால் அவர்கள் இஷ்டத்தை மறுபடியும் கண்டு அவர்கள் முன்னிலையில் பஹிரங்கமாகத் தான் கொடுக்க வேண்டும். நீங்கள் போய் அவர்களை அழைத்து வாருங்கள் என்றவாறு. அதற்காக இவர்கள் இவ்வாறு கூறினர். இதனால் நாமறியவேண்டிய திங்ஙனமாம். கோபர்களும் திருவோலக்கத்தில் கண்ணபிரானைக் கொண்டு எல்லாம் நடத்திவைக்கக் குழுமினர். வாசலுக்கு முன்னே கன்னிகள் இருந்தபடியாலே அவர்கள் சிறிது தூரத்திலே கூடி நின்றிருந்தனர். நப்பின்னைப் பிராட்டியா லழைக்கப் பெற்றுக் கன்னிகள் உள்ளே புகப் புறப்பட்டு, அப்போது வாசற்கடையில் வந்துசேரும் கோபர்களைக் கண்டு. நமக்கு மாற்றாராய், சேர்த்திக்குத் தடைகளைச் செய்து விரோத மனப்பான்மையுடனிருந்தவரெல்லாரும் கூட அதனை விட்டு அடிபணிந்து நிற்கின்றனர். அவர்களைப்போல் நாங்களும் வந்தோம். புருஷர்களும், பெண்களும் எல்லோரும் வந்து குவிந்தனம். இனித் தாமதிக்காமல் அருளவேண்டுமென்றவாறு. கோபர்களை மாற்றாரென்று குறிப்பது வியங்கியமாத் தெரியவேண்டுமேயல்லது நேர்படத் தெரியக் கூடாதென நினைத்து மாற்றாரும் நாங்களுமென்னாமே, 'மாற்றார் — பணியுமா போலே' என்று த்ருஷ்டாந்த ரூபமாகக் கூறினரென்க. யாம் வந்தோம். எங்களுடைய அனுக்ரஹத்திற்காகவே கோகுலத்திற்கு தேவரீர் எழுந்தருளினதாக நினைத்து. ஸ்திரீகளை யலைவிப்பதுதகாதென்ற திருவுள்ளத்திலும் கோபர்கள் எங்களைத் தடுத்தடைந்து வருவதினாலும் அவர்களுக்குத் தெரியாமே நாங்கள் உள்ளவிடத்திலேயே ஏகாந்தமாக வந்து புகுந்து தேவரீர் களித்து வரலாமென்று மனவுறுதி கொண்டு எதிர்பார்த்த வண்ணமிருந்தோம். இங்ஙனம் செய்தால் ஸ்திரீகளை மட்டும் அனுக்ரஹித்ததாகுமேயல்லது கோபர்களை யனுக்ரஹித்ததாகாதென்று தேவரீர் அவர்களையும் அனுக்ரஹிக்கக் கருதி அவர்களுக்கே எங்களைத் தேவரீடம் அழைத்து வரும்படி விரகு தேடி அங்ஙனம் செய்விக்க நினைத்து இதுவரையில் எங்களையும் காணாயலே இருந்து விட்டதாலே நாங்கள் எங்களுக்கிருந்த வலியையிழந்து தேவரீரோடிணைவது எப்போதென்றேங்கி இப்படி வந்துளோமென்றபடி.

போற்றி புகழ்ந்து —'வந்துன்னடி பணியுமாபோலே' யென்று வருவதும் அடிபணிவதும் சொல்லப்பெற்றதால் இங்கும் வந்தோமென்று வரவும், போற்றி யென்று வணங்குதலும் சொல்லப்பெறலாம். அ...ற், போற்றி புகழ்ந்து என்றவை கீழினும் அந்வயம்

பெறும். வந்தடிபணிந்தோமெனப் பொருள். புகழ்ந்து — புகழ்ச்சியாவது அவன் செய்துள்ள அற்புதச் செயல்களை யெடுத்து விரித்துப் பெருமையாக் கூறுவது. ஆகவே போற்றுதல் புகழ்தலாகாது. இப்படிப்பட்டவன் இனியும் இத்தகைய பெருமையுடனே பல்லாண்டு வாழ்வதற்காம் மங்களாசாஸனம் (ஜய விஜயயீபவ என்றவாறு) போற்றுதலாம். 'புகழ்ந்து' என்றவிடத்திலே 'புகுந்து' எனப்படித்து உனது குணங்களிலே அவகாஹித்து என உரைப்பாரு முளர்.

உட்பொருள் — திருவாராதனத்திற்கு எம்பெருமானை யெழுப்பு மிப் பாசுரத்திற்கு, முன் சொன்ன பொருள் போன்றதொரு பொருள் ஸுலபமாகையால், உட்பொருளை விரிவாகக் கூறவேண்டியதில்லை யாகையால் ஸ்ரீ பட்டநாதனை பெரியாழ்வாரைப் போலே தமக்குச் சீடர்களாய் வள்ளல் பெரும் பசுக்களைப் போன்ற பல பட்டர்களுக்கு ஸர்வார்த்தோபதேசம் பண்ணின மஹானால் மகனாக பாவிக்கப்பட்டு அருமையுடன் ஆராதிக்கப்படுகிறவனே! பல அவதாரங்கள் செய்து அஸுரஸ்வபாவ முள்ளவர்களையும் கூடுமான வரையில் வசீகரிப்பவனே! பள்ளியெழுந்தருளா யென்று ப்ரார்த்தித்தபடி யாராய்ந்து கொள்க. (21)

உண்மையில் கண்ணபிரான் நப்பின்னையுடன் பள்ளியில் துயிலமர்ந்திருக்க இவர்கள் விழித்துக் கொண்டிருப்பதாகவே நினைத்து, வந்து திறவாயென்றும், வாய்திறவாயென்றவாறும் முதலில் கூறி, அவர்கள் உறங்குவதை யுணர்ந்து துயிலெழவே வேண்டிக் கொண்டனர். அப்போது துயிலெழுந்தறி வுற்ற எம்பெருமான் திருக்கண்களை நப்பின்னை முகம்போன்ற நல்ல இடத்திலே மலர்த்தி விழிக்கவேண்டுமென ஆராயும் வண்ணமிருந்தான். அதற்குள்ளே இவர்கள் நப்பின்னைப் பிராட்டியால் அழைக்கப்பெற்றுப் பள்ளிக் கட்டிலினருகிலே சென்று நின்று தங்கள் மேல் விழித்தருள விண்ணப்பிக்கின்றனர்—

22. அங்கண்மா ஞாலத் தரச ரபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற் கீழே
சங்கமிருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப்பூப் போல்
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ
திங்களு மாதித்தியனு மெழுந்தாற் போல்
அங்கணிரண்டுங் கொண்டெங்கண்மேல் நோக்குதியேல்
எங்கள்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய்.

அபிமானம் | அஹங்காரம்
பங்கம் ஆய் | அழியப்பெற்று
வந்து—நெருங்கி வந்து
நின் பள்ளி | நீர் சயனித்திருக்கும் கட்டி
கட்டில் கீழ் | லின் அடியிலே
சங்கம்—கூட்டமாக
இருப்பார்—தர்சனம் செய்யக் காத்திருக்கிற
அம்—அழகிய
கண்—இடங்களை யுடைய
மா—பெரிய
ஞாலத்து—பூமியிலிருக்கும்
அரசர் போல்—எல்லா ராஜக்களையும் போல்
(நாங்கள்)
வந்து தலைப் | நின் பள்ளிக்கட்டிற் கீழே
பெய்தோம் | வந்து நெருங்கியுள்ளோம்.
கிங்கிணி—சலங்கையின்
வாய்—வாய் போன்ற [illegible]
செய்த—செய்தனவான

செம் கண்—(உமது) சிவந்த திருக்கண்கள்	அம் கண் இரண்டும் | அழகிய கண்க
தாமரைப்பூ | செந்தாமரைப்பூப்போலவே	கொண்டு | ளிரண்டினாலும்
போல் ஏ |	எங்கண் மேல்—எங்களின் பேரில் (கண்களின்)
சிறுசிறிது ஏ—சிறுகச்சிறுக	நோக்குதி ஏல்—கடாக்ஷத்தைச் செலுத்து கிறீராகில்
எம் மேல்—எங்களின்மேல்	எங்கள் மேல்—எங்களிடத்திலுள்ள
விழியாவோ—மலரலாகாதோ?	சாபம்—பாபமெல்லாம்
திங்கள் உம்—சந்திரனும்	இழிந்து—அழிந்திடும்.
ஆதித்தியன் உம்—சூரியனும்	ஏல் ஓர் எம் பாவாய்.
எழுந்தால் | உதயம் செய்தாற் போலி	
போல் | ருக்கும்	

கண்ணபிரானுடைய பள்ளிக்கட்டிற் கீழே எல்லாவரசரும் வந்து நின்றதாக எங்கே கூறப்பட்டுள்ள தெனவேண்டா. இவ்வடிகளின் கருத்திங்ஙனமாகுக—உலகில் அரசர்களுக்கு அபிமானம் அதாவது அஹங்கார மமகாரங்கள் அதிகமாயிருக்கும். அதற்குக் காரணம் மாஞாலமானது அங்கண்ணுயிருப்பது. பூமியிலுள்ள இடங்கள் பெரும் பான்மை மிக நேர்த்தியானவை. அவற்றிலும் பாரதவர்ஷத்தின் பெருமை வாக்குக் கடங்காதது. பலவகை யாறுகளும் நீர்வளமும் நிலவளமும் உள்ளதும், சீதோஷ்ணங் களில் சமநிலை பெற்று வஸந்தம், க்ரீஷ்மம் என்றவாறுள்ள ருதுக்கள் ஆறும் அடைவாக வந்த வண்ணமிருக்கப் பெற்றதும், எல்லா வித்யைகளும் விளங்குமிடமுமான இப்பாரதத் திலே பிறந்து நற்செயல்களைச் செய்தவனே எங்கு மின்புறுவானென்பர் ஆன்றோர். தேவதைகள் கூடமறுபடி பாரதபூமியிலே மனிதப் பிறவியை நன்கு பெற விரும்புகின்றனர். என்றார் பராசரமுனிவர் ('வி. பு. 2—3.) அப்படிக்கொத்த இடங்களைக் கைப்பற்றியிருக் கும் அரசர்களுக்கு, 'நாமே பெரியோம்' என்ற அஹங்காரம் மேலிட்டு எல்லோரையும் எதிர்த்து நின்று மேன்மேல் இராஜ்யத்தைப் பறிக்கப் பெருமுயற்சி எழுவது இயற்கை அப்படிப்பட்ட அரசராய் பூவுலகிலிருப்பார் எல்லோரும் விஷ்ணுபுராணத்திற் கூறிய படியே தங்கள் அஹங்காரத்தை விட்டுத் தத்துவஞானத்தைப் பெற்றுப் பெருமானின் திருவடிகளை பணிந்திருத்தல் மிகவு மரிதாம். அப்படியான அவர்களின் வரவுக் கொத்தது எங்கள் வரவென்றபடி. உண்மையில் நாங்கள் ஏழையான இடைச்சிறுமிகளாயினும் எங்களுக்கு அவ்வரசர்களுக்கு மேற்பட அஹங்காரமிருந்தது. இப்போது அது தொலைந்த தென்றபடி. இனி, பள்ளிக்கட்டில் என்றதாலே படுதோல்வி யுற்ற வரசர்களைப் பொருட் படுத்தாது நிர்பயமாய், அவர்கள் வரும்போது பள்ளிகொண்டிருப்பதை விளக்கினதாம். கண்ணபிரான் துவரையில் தம் திருமாளிகையிலே சயனத்திருக்கும் போது, தங்களுக்குப் போரிலே ஸஹாயம் செய்தருளவேணுமென்று ப்ரார்த்திப்பதற்காக, மாற்றாரான—ஒருவருக்கொருவர் எதிரிகளான துர்யோதனனும் அர்ஜுனனும் வந்து காத்திருந்தது ப்ரஸித்தமன்றோ? எல்லாவரசர்களுக்கும் மேம்பட்ட இவர்கள் தலைப்பெய்ததால்' எல்லோரும் தலைப்பெய்தாரெனல் கூடுமே அன்றி ஸ்ரீபாகவதத்தில்

'அயுதே த்வே சதாந்யஷ்டௌ லீலயா யுதி நிர்ஜிதா: ।
ப்ரணேமுர் ஹதபாப்மாநோ மூர்த்தபி: பாதயோர் ஹரே: ॥
காலேந தந்வா பவதோऽநுகம்பயா விநஷ்டதர்பாச் சரணௌ ஸ்மராமதே ।
க்நந்த: ப்ரஜா: ஸ்வா: அதிநிர்க்ருணா: ப்ரபோ ம்ருத்யும் புரஸ்த்வா ऽவிகணய்ய துர்மதா: ॥

अयुते द्वे शतान्यष्टौ लीलया युधि निर्जिताः । प्रणेमुर्हतपाप्मानो मूर्धभिः पादयोर्हरेः ॥

कालेन तम्वा भवतोऽनुकम्पया विनष्टदर्पाश्चरणौ स्मराम ते । ह्मन्तः प्रजाः स्वारतिनिर्घृणाः प्रभो मृत्युं पुरस्त्वाविगणय्य दुर्मदाः ।।)

என்றபடி ஜராஸந்தனால் சிறையிலடைப்புண்ட இருபதிறாயிரத்தெண்ணூறு அரசர்களையும் கண்ணபிரான் சிறையினின்று விடுவித்து இராஜ்யத்திற்குச் சென்று சீர்மையுடன் அரசு புரிய நியமிக்க. அவர்களும் கண்ணன் திருவடி பணிந்து, 'இராஜ்ய மிருந்தால் அஹங்கார மமகாரங்கள் மேலிட்டுப் பலவித துன்பங்களுக்குத் தாங்கள் இலக்காகவேண்டி வரும்' என்று வைராக்யத்துடன் விண்ணப்பித்து அபிமானத்தை விட்டு ஆழ்ந்த பக்தி ஜ்ஞானங்களைப் பெற்று விளங்கவே விரும்பின ரென வுள்ள வரலாறு இங்கே கருதப் பெற்றதாம்.

தலைப்பெய்தோம் — முன் வாசற்கடை பற்றியிருந்தார். இப்போது நப்பின்னையாரின் நியமனம் பெற்று நெருங்கி நின்றன ரென்க. இதனால் ஸ்வதந்த்ராத்மப்ரமமும் அந்யசேஷத்வப்ரமமும் நீங்கினது சொல்லிற்றும். இனி இதற்கு இவர்கள் கருதும் பொருள் வேறொன்று முண்டு. ஸம்ஸாரமண்டலத்திலேயிருந்தும் நாங்கள் முக்தர்களைப் போலே அநுபவிக்க ஆசைப்பட்டு வந்துள்ளோம். அபிமானபங்கமாய் = அஹங்கார மமகாரங்களையெல்லா மொழித்தான பிறகு, அம் கண் = 'ரம்யாணி காமசாராணி விமாநாநி ஸபாஸ் ததா. ஆக்ரீடா விவிதா ராஜந் பத்மிந்யச்சாமலோதகா:, ஏதே வை நிரயாஸ் தாத ஸ்த்தாநஸ்ய பரமாத்மந:' (रम्याणि कामचारणि विमानानि सभास्तदा । आक्रीडा विविधा राजन् पद्मिन्यश्चरमलोदकाः ।। एते वै निरयास्तात स्थानस्य परमात्मनः) என்றபடி ஸ்வர்காதிகளெல்லாம் நரகமென்னலாம்படி உயர்ந்தனவும் அழகியவுமான இடங்களைப் பெற்ற மா = மிகவும் பெரிதான ஞாலத்து = ஸ்ரீவைகுண்டபூமியிலே. அரசர் = ஸ ஸ்வராட் பவதி' என்றபடி கைங்கர்ய ஸாம்ராஜ்யம் பெற்ற முக்தர்கள் அர்ச்சிராதிமார்க்கத்தாலே உமது திருமாமணி மண்டபம் சேர்ந்து பர்யங்கத்தின் அருகிற் பணிந்து நிற்குமா போலே நாங்கள் வந்தோம்' வேறு பலனை விரும்பி வந்தவர்களல்லோம் நாங்களென்றவாறு.

கிங்கிணிவாய்—கிங்கிணியின் உள்ளே யிருக்கும் மணி விழாதபடி அதன் வாய்ப்புறம் மிகச் சிறிதாக அமைக்கப்பட்டிருக்கும். கண்ணபிரான் முதலில் சிறிது விழித்தபோது திருக்கண்மலர்தல் கிங்கிணி வாய்க்குச் சமமாக இருப்பது. செய்த என்பது செங்கண் என்றதற்கு அடைமொழி. உவமைக்கு மற்றோர் உவமை வேண்டிராததாலே தாமரைப் பூவிற்கு அடைமொழியன்று. செய்த வென்பது உவமையுரு வென்பர் சிலர். அப்போது கிண்கிணி வாய்க்குச் சமமானப் எனப் பொருளாம். அந்த வாய்க்குச் சமமானது செங்கண் வாயென்றே சொல்ல வேண்டுமாகையால் மேலே வாய் என்ற சொல் இல்லை யாதலால் கிங்கிணியின் வாயைச் செய்த = சிறிது மலர்ந்த என்றே பொருள் என்னலாம். கண்கள் கிங்கிணி வாயை செய்தபோது உள்ளேயுள்ள சிவப்பை யநுபவித்து அது தாமரைப் பூவின் சிவப்புக் கொத்திருப்பதைக் கொண்டு தாமரைப் பூப்போலே செங்கண் என்றனர். இவர்களிடத்திலுள்ள ப்ரேமையினாலே கண் சிவப்புற்றது. மேன்மேல் கண்கள் மலரும்போது கிண்கிணிவாயை உவமானமாகக் கூற வியலாதாகையால் தாமரைப்பூப் போலே சிறுச்சிறிதே விழியாவோ என்றதென்னலுமாம். சிறுகச்சிறுக ஏன் விழிக்க வேண்டினரென்னில், வெகு நாள் உபவாஸமிருந்தவன் உண்ணை விழித்தபோது சிறுகச் சிறுக உண்ணாது ஒரே மூச்சாக மிக வுண்டால் ஜரிக்கமாட்டாததால் உடலுக்குக் கேடாம்; அதுபோல் பெருமவிரஹபீடையாலே பரிதவித்துள்ள நாங்கள் உமது பூரண கடாக்ஷத்தையே முதலில் அநுபவிக்கநேர்ந்தால் ஸாத்மிக்க மாட்டியோ வென்று கருதின ரென்க.

மேலும், செந்தாமரை போன்ற கண் செந்தாமரை போலவே சிறுகச்சிறுக மலர்வது யுக்த மாமல்லது விரைவில் மலரலாகாது. சிறுகச்சிறுக மலர்வதாகில் அவனுக்கும் ப்ரயாஸ மிராது. தங்களுக்கும் சிறிது காலமாவது அவனை ஸேவித்த வண்ணமே தங்கவியலும். சிறுகச்சிறுக' மலரும் வகைகளை யெல்லாம் விடாமலனுபவிப்பதும் மிகப் போக்யமாம்.

எம்மேல் விழியாவோ—முதலில் நல்ல வஸ்துவின் மேல் விழிக்க விரும்பும் தேவரீர் கன்னிகளான எங்கள் முகத்தில் விழிப்பது தகும். யாசிப்பவரின் முகத்திலேயோ முதலில் விழிப்பதென்ன வேண்டா. பரமோதாரனுக்கு அது தானே இஷ்டமாயிருக்கும். யாசிக்க வந்தோ மாயினும் கன்னிகைகள் என்ற மதிப்புள்ளதே. நப்பின்னையை முகத்தை முந்துற முன்னம் பார்க்க விரும்புகின்றீராகில், அதைவிட இதுவே நன்று என நினைக்கவேண்டு மென்கிறோம். உபயோகப்பட்ட வஸ்துவைக்காட்டில் உபயோகம் பெறப் போம் வஸ்து வில் விசேஷமாக ஆதரம் வைக்க வேண்டுமென்பர் மீமாம்ஸகர். நப்பின்னை முன்பே உபயோகித்துக் கொண்டாயிற்று. எங்களை இனித்தானே உபயோகித்துக் கொள்ளப் போகிறது. ஆகையால் எங்களிடம் கண்ணோட்டம் வேண்டும். ஆகவே நப்பின்னையும் எங்களையே நெருங்கச் செய்தது.

இங்ஙனம் ப்ரார்த்தித்தபடிச் சிறுகச் சிறுக அவன் கடாக்ஷித்து வரவே ஸாத்மித்துத் தேறி நின்று பூரண கடாக்ஷம் பெற விரும்பி திங்களுமாதித்தியனு மென்றனர். திங்களை விட ஆதித்யனுக்கு ப்ரகாசம் அதிகமாகையாலே பூரணமாக விழித்தபோது ஆதித்யனுக் கொப்பாகும். விச்வரூபியான எம்பெருமானுக்குச் சந்திரனும் சூரியனும் கண்களென்பர். 'சந்த்ரஸூர்யௌ ச நேத்ரே', 'ர்தஸத்யநேத்ரம்' (चन्द्रसूर्यौ च नेत्रे, ऋतसत्यनेत्र) இத்யாதியைக் காண்க. சந்திரனையும் ஸூர்யனையும் கண்ணாகக் கொண்ட எம்பெருமான் உலகத்தார் செய்யும் செயல்களை அவர்களைக் கொண்டு நேரில் கடாக்ஷித்து வருகிறு னென்க. சந்திரனுக்கு எல்லோரையும் களிப்புறச் செய்வதும், சாதகபக்ஷியைப் போலுள்ள வற்றிற்கு அமுதளிப்பதும் ஸ்வபாவம். அதுபோல் எம்பெருமானும் தன்னை யாச்ரயித்த எல்லோருக்கும் அவரவர் கோரின பலனையும், சாதகம் போன்ற பரமை காந்திகளுக்கு ஆராவமுதத்தையு மளிப்பவன். சூரியனொருவனுக்குச் சிறிது மிருள் இராதபடி செய்யும் சக்தி யுண்டு. நுண்ணிய வஸ்துக்களை நிலா வெளிச்சத்தில் காண்பது கூடுமோ? அது போல் எல்லா இருளையு மகற்றுவது இவன் கண். ஒவ்வொரு கண்ணுக்குமே இந்த சக்திகளெல்லா மிருப்பதாலே ஒவ்வொன்றுமே சந்திரன் சூரியன் இரண்டையும் போன்ற தாம். முன்னே, 'கதிர்மதியம்போல் முகத்தான்' என்று முகத்தைச் சந்த்ர ஸூர்யர்களுக் கொப்பாக்கினதுபோல் இங்கும் ஒவ்வொரு திருக்கண்ணையும் அவ்விரண்டுக்கும் மொப்பாக் கக் கருதினபடியாமே. நித்திரையினின்று விழித்துக் கொள்வதற்கேற்ப 'எழுந்தாற்போல் என்றது. அங்கண்—அம் என அழகை யருளினது. விரோதிகளை நோக்கும்போது வெப்ப மளிக்கும் படியிலே ஆதித்யனுக்கு ஒப்பாதல் போலன்றி அனுகூலமாகும்படி ஆதித்யனுக்கு ஒப்பானமையை யறிவிக்கவாம். விட்டுப் பிரிந்துள்ள காலத்திலே வேதனையை விளைவிக் கும் சந்திரனைப் போலன்றி சேர்த்தியிலே ஸுகமளிக்கும் சந்திரனைப் போலமைந்தமை யையும் இது குறிக்கும். இப்படி, சந்திரனையும் சூரியனையும் சேர்த்துச் சமைத்த ஒரு தேஜோராசி போல் திருக்கண் விளங்கா நிற்கிறதென அபூதோபமை (இற்பொருளுவமை) யுமாம். சந்திர ஸூர்யர்களில் ஒருவரெழும்போது மற்றவர் எழுவதில்லை. இருவரு மெழுந்தால் தாமரைப் பூவானது பாதி மூடினதும் திறந்துமாயிருக்குமெனவும் கருத்து ரைப்பர். அப்போது எழுந்தாற் போலென்ற இடத்தில் எழுந்தாலுள்ள தாமரைப் பூப்

போலே வைப பதங்களைச் சேர்க்கவேண்டும் படியாம். அந்த அரைப்பார்வை, 'சிறுச் சிறிதே' எனக் கீழே கூறப்பட்டுமாயிற்று.

பள்ளியில் சயனித்துக் கொண்டிருக்கும்போதே கடாக்ஷிப்பது கீழ்ச் சொல்லிற்று. இனி, எம்பெருமான் எழுந்து வீற்றிருந்து கடாக்ஷிப்பது திங்கள் இத்யாதியால் சொல்லப் படுகிறது திங்களும் ஆதித்யனும் கண்ணுக்கு உவமானமாம். அவ்விருவருமெழுந்தாற் போலே தேவரீர் எழுந்திருந்து கடாக்ஷிக்க வேணுமென்றபடி. 'தே தம் ஸோமமிவோத் யந்தம்', 'தம் தபந்த மிவாதித்யம்' (तं तं सोममिवोयन्तं, तं तपन्त मिवादित्यं) இத்யாதி களிலே எம்பெருமானைச் சந்திர ஸூர்யர்களுக் கொப்பிட்டது காண்க. சூரியனின் ஒளி யாலே விளங்குபவன் சந்திரன். அங்ஙனமின்றித் தன் ஒளியினாலே விளங்குகிறவன் சூரியன். இதனை, 'உபபந்நம் ஸ்வதேஜஸா' (उपपन्नं स्वतेजसा) என வெளியிட்டருளி னார் வால்மீகி. உண்மையில் எம்பெருமானை யவர்களுக்குச் சமமாக நினைக்கலாகாது. இவனுடைய ஒளியை 'ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்' (न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं) என்றபடி யன்றோ வேதமோதுவது. இவனொளியினின்று ஒளி பெற்றவர்கள் அவர்களென்பதையும், 'தமேவ பாந்தமநுபாதி ஸர்வம்' (तमेव भान्तमनुभाति सर्वं) என்றது. சந்திரன் ப்ரகாசிப்பது சூர்யனாலென்பதை யாருமறிவர். அந்தச் சூரியன் தானும், 'சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத' (चक्षोस्सूर्यो अजायत) என்றபடி அவன் திருக்கண்ணினின்று பிறந்தவன். ஆக அவனுடைய கண்ணொளியின் ஓரம் சமான சூர்யனை அவ்வித கண் உடைய பரஞ்ஜோதியான பெருமானுக்கு உவமையாக்குவது தகுமோ? ஆகையால் அவனை த்ருஷ்டாந்தமாகச் சொன்னது. இஷுவத் கச்சதி ஸவிதா (इषुवत्गच्छति सविता) வாணம் போம் விரைத்தோடுகிறான் சூர்யன் என்பது போல் உலகத் தாருக்குத் தெரிந்ததைக் கொண்டுதானே தெரியாததை விளக்க வேண்டுமென நினைத் தாம். இதனைக் கருதியே வால்மீகியும், 'உபபந்நம் ஸ்வதேஜஸா' (उपपन्नं स्वतेजसा) என வருளினார். அவனிடம் பிச்சையெடுத்துச் சிறிது பெற்றுள்ள ஆதித்யன் அவனுக்குண் மையில் உவமையாகானென்றதாம். நன்காரய்ந்தால் பெருமானைக் கண்டபோது கதிர வனை இருண்ட இருளாகப் பாவிக்க வேண்டும்படி வாசியுள்ளது தோற்றுமாம், இருண்ட இருள், அரை இருள், மின்மினிப்புழு, அக்னி, தீபவகைள், சந்திரன், சூர்யன் என மேன் மேலாகச் சொல்லி சூர்யனொளிக்குப் பெருமையைப் பகர்வர். இப்படிப்பட்ட சூர்யனை இருண்ட இருளென்றே முதற்படியிலே வைத்து அதன்மேல் பல கற்பனைகளை யடைவாகக் கூறி எம்பெருமானின் ஒளியை யெண்ணவேண்டுமென ஸ்ரீதேசிகன் வரதராஜ பஞ்சாசத் திலே யருளிச் செய்தார்.

'மோஹாந்த்காரவிநிவர்த்தநஜாகருகே தோஷா திவாऽபி நிரவக்ரஹ மேதமாநே! ।
த்வத்தேஜஸி த்விரதசைலபதே விம்ருஷ்டே ச்லாக்யேத ஸந்தமஸபர்வ
ஸஹஸ்ரபாநோ; ॥ என்றதால்.

मोहान्धकार विनिवर्तन जागरूके दोषा दिवाऽपि निरवग्रहमेधमाने ।
त्वत्तेजसि द्विरदशैलपते विमृष्टे श्लाघ्येत संतमसपर्व सहस्रभानोः ॥

அங்கணிரண்டும்—ஒருகண்ணும் அரைக்கண்ணும் காண்பது காதல் போன்ற சில காமவிகாராதிகளைப் பற்றினதாம். அங்ஙனின்றி, குழந்தை தாயாரைப் பார்ப்பது

போல் 'ந ராம: பரதாராந் வை சக்ஷுர்ப்யாமபி பச்யதி' (न रामः परदारान् वै चक्षुर्भ्यामपि पश्यति) இரண்டு கண்களாலும் கூட இராமன் பிற ஸ்த்ரீயைப் பார்ப்பதில்லை யென்றபடியுள்ளது இருகண்களாலுமாம் பார்வை. இதனையே இவர்கள் விரும்புகின்றன ரென்பது, 'மற்ற நம் காமங்கள் மாற்று' என மேலே இவர்கள் சொல்வதினின்று விளங்கும்.

இனி முன்போல் செங்கண் என்னுமே அங்கண் என்றதால் உட்கண் வெளிக்கண் என்ற இரண்டையும் குறித்ததுமாம். திருவுள்ளமுவந்து திருக்கண்ணாலே கடாக்ஷித்தருள வேணுமென்றபடி. எம்பெருமானுடைய மனத்திலிருந்து சந்திரன் பிறந்ததை, 'சந்த்ரமா மநஸோ ஜாத:' (चन्द्रमा मनसो जातः) என வேதமோதிற்று. சூரியன் அவனது திருக்கண்ணினின்று பிறந்தானென முன்னமே கூறினம். ஆகவே திங்களுமாதித்யனுமெழுந்தாற்போல் என்றதும் இணையும். திங்களை யெழுவிக்கும் தசையிலுள்ள மனத்தினால் குளிர அநுக்ரஹிப்பதும், சூர்யனை யெழுவிக்கும் படியுள்ள திருக்கண்ணாலே இருளை விலக்குவதும் செய்யக்கோரினபடி, எங்கள் மேல் நோக்குதியேல். ஏற்கனவே அழுக்கு அகன்று அமுத முண்பவரிடம் சூர்யசந்திரர்கள் போன்ற கண்களுக்குப் பலன் காணமுடியாது. எங்களிடத்தில் அவைமுழுப்பலனைப் பெறுமென்றபடி.

எங்கள் மேற் சாப மிழிந்து—பாபம் என்னுமே சாபம் என்றது, பலித்தே தீரும் தருவாயிலுள்ள பாபம் என வறிப்பதற்காக, மற்றைய பாபங்களைச் சிற்சில வழிகளாலே விலக்கலாம். சாபத்தை யனுபவித்தேயாகவேண்டும். அதுவு மெம்பெருமானின் சடாக்ஷத்தாலே விலகுமென்றபடி. செல்வம் மிகுந்து பேர்பெற்ற இவ்வாய்ப்பாடிக்கு மிப்படி துர்பிக்ஷம் வந்தது ஏதோ பெரும் சாபத்தினா லென்னவேண்டும். அது தீர்ந்து ஸுபிக்ஷம் வருவது இவ்வனுக்ரஹத்தினாலாகவேண்டும். உம்மை யனுபவிக்க இட்டுப்பிறந்துப் இவ்வளவு நாள் இழந்திருப்பது ஏதோ சாபத்தினால் தானிருக்கவேண்டும். அது விலகுவதும் கடாக்ஷித்த பிறகே யென்றதுமாம். பக்தி ப்ரபத்திகளைச் செய்பவருக்குப் பாபமெல்லாம் கழிவது அங்கண் இரண்டும் கொண்டு நோக்கினால் தானேயாகும். உபாயத்தின் துவக்கத்திலே, முதலில் நீர் கண்ணால் நோக்குவதொன்று, அதாவது—இவ்வுபாயத்தை நன்கு அனுஷ்டித்துப் பூர்த்தி செய்தால் பாபங்களுக்கு ஆளாக்காமலிருக்கிறேனென்று அருளுவது. உபாயம் நடந்தேறின பிறகு மறுபடி கண்ணால் நோக்குவதாவது—பாபங்களை விலக்கி வேறிடம் புகவிட்டேன் என்று மோக்ஷ மளிக்கும்போது அருள்வது. இங்ஙனம் அங்கண் இரண்டும் கொண்டெங்கள் மேல் நோக்குதியேல். எங்கண்மேற் சாப மிழிந்திடுமென்றது மாம். எங்கண்மேல் என்றதற்கு எம் கண்ணின் மேல் எனவு முரையாம். எம் கண் மேல் உம் கண் விழ வேண்டும். ஒன்றோடொன்று கலக்கவேண்டுமென்றபடி.

உட்பொருளும் வெளிப்பொருளிலேயே அடங்கியுள்ளது. (22)

துயிலெழுந்த எம்பெருமானைத் திருக்கண்களைத் திறக்கப் பிரார்த்தித்த பிறகு திருப்பள்ளியை விட்டுச் சிங்காசனத்திற்கெழுந்தருள ப்ரார்த்திக்கின்றனர்—

23: மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்

போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்காசனத் திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

பூவை பூ—காயாம் பூவின்
வண்ணா—நிறமுடைய பெருமானே!
நீ—நீர்,
மாரி—மழைகாலத்தில்
மலை—மலையிலிருக்கும்
முழஞ்சில்—குகையில்
மன்னி—நிலைத்து
கிடந்து—படுத்து
உறங்கும்—உறக்க முற்ற
சீரிய—வீரியச் சிறப்புடைய
சிங்கம்—சிங்கமானது
அறிவு உற்று—(தூக்கத்தை விட்டு) உணர்ச்சி பெற்று
தீ விழித்து—தீயைப் போன்ற விழிகளைச் செய்து
வேரி மயிர்—பரிமளமுள்ள மயிர்கள்
பொங்க—சிலிர்த்துக் கொள்ள
எ பாடும்—எல்லா அங்க ப்ரதேசங்களிலும்
பேர்ந்து—அசைதலுற்று
உதறி—அங்கங்களை விரித்துக் கொண்டு

மூரி நிமிர்ந்து—சோம்பலிருப்பதாலே உயர்ந்து (சோம்பலை முரிக்க) வளர்ந்து
முழங்கி—கர்ஜித்துக்கொண்டு
புறப்பட்டு—படுத்த விடத்தை விட்டுக் கிளம்பி

போதரும் ஆ	வருமாறு
போல் ஏ	போலவே
உன் கோயில்	உமது திருக்கோயிலை
நின்று	விட்டு
இ ஙன் ஏ	இவ்விடமே (அல்லது) இத் தன்மையாகவே

போந்து அருளி—எழுந்தருளி
கோப்புடைய—அழகிய அமைப்புற்ற
சீரிய—உயர்ந்த
சிங்காசனத்து—ஸிம்மாஸனத்திலே
இருந்து—வீற்றிருந்து

யாம் வந்த	நாங்கள் எந்தக் காரியத்திற்
காரியம்	காக வந்தோமோ, அதை

ஆராய்ந்து—பரிசீலனை செய்து
அருள்—அனுக்ரஹிக்க வேணும்.
ஏல் ஓர் எம்பாவாய்.

அங்கண்மாஞாலத்தரசர் போலே தாங்கள் வருவதை முன்னம் வர்ணித்தனர். இங்கே கண்ணன் வருமழகை வர்ணிக்கின்றனர். இடையூறின்றி நோன்பை நடத்தி வைக்க உம்மைத் தவிர்த்து யாராலும் முடியாதென்று 'நாராயணனே பறைதருவான்' என்றோம். அசோதை யிளஞ் சிங்கமாகிய நீர் சீரிய சிங்கம்போல் எழுந்தருளி உமது சீர்மையைத் தெரிவிக்க வேண்டு மென்கிறனர். இங்கே விழித்தெழுந்து வெளிப்படும் சிங்கத்தை வர்ணிக்கும் வகை மிகவும் அழகியதாம், ஸிம்மவநகுப்தி ந்யாய மென்ப தொன்றுண்டு. அதாவது வனம் (காடு) இல்லாத இடத்திலே சிங்கம் தங்காது. சிங்கமிருக்கும் வனத்திலே வேறு ப்ராணி ப்ரவேசிக்காதாகையாலே வனம் வளர்ந்து வரும். அது போல் பக்தர்களில்லாத விடத்திலே எம்பெருமான் இருக்கமாட்டான். அவனால் அவர்களுக்கு வளர்ச்சியாம். இந்தகைய சீர்மை பொருந்தி எப்பொழுதும் வனத்தில் ஸஞ்சாரம் செய்த வண்ணமிருக்கும் சிங்கம் மாரிகாலத்திலே வெளியில் ஸஞ்சாரம் செய்யாது. மலையின் குகையிலே வெகுநாள் மன்னிக்கிடந்துறங்கும். பெண் சிங்கமுமிருக்கு மாகில அத்துடன் கூடியசையாமற் படுத்திருக்கும். மாரி மாறும் காலத்திலே வெளியில் ஏதேனுமொரு பிராணியின் சத்தத்தைக் கேட்ட மாத்திரத்திலே, 'தன்னைச் சார்ந்தார்க்கு என்ன தீங்கோ' 'தன் காட்டில் வேறெது புகுந்ததோ' என நினைத்து முனிந்து விரைந்து வெளிவரும். முதலில் அறிவுற்றுக் கோபத்தினால் தீவிழி விழித்து எழுந்திருக்கும். மயிர்களைச் சிலிர்த்துக்

கொள்ளும். அப்போது அம்மயிர்களுக்கு இயற்கையாக உள்ளதும் முன்பு பல ஆஹாரங்களை யுட்கொண்டபோது உடம்பிற்பட்ட பல மாம்சங்களாலேற்பட்டதுமான மணம் வெளி வீசும். மயிரைச் சிலிர்த்தவுடன் அங்கங்களை யசைத்துக்கொள்ளும், வெகு நாள் உறங்கினதால் திமிர்பிடித்த உடலை உதறிக்கொண்டு பின்னங்கால்களையூன்றி உடலையும் முகத்தையும் நீட்டிச் சோம்பல் முரிக்கும். இப்படி யுடலை ஓடுவதற்குத் தக்கவாறு அமைத்துக் கொண்டு தான் புறப்படுவதை வெளியிலுள்ள ப்ராணி யறிந்து பயப்படும்படி கர்ஜனையும் செய்யும். பிறகு அடி யெடுத்து வைத்து மேன்மேல் விரைந்துவரும்.

அங்ஙனமே நீரும் போந்தருளவேணும். வெகு நாளாக நாங்கள் உம்மை ஒருவித ஸஹாயத்திற்கும் அழைக்காமலிருந்ததாலே நீர் விசாரமற்று மலை போன்ற திருக்கோயிலிலே முழஞ்சு போன்றதொரு நப்பின்னையின் பள்ளி யறையிலே பரமானந்தமாக மன்னிக் கிடந்துறங்கினதால் திருமேனியில் சுறுசுறுப்பு ஏற்பட வேண்டியிருக்கும். எங்களைக் காக்கும் சீர்மை யுடைய நீர் எங்கள் சத்தத்தினால் அறிவுற்று எங்களுக்குள்ள ஆபத்தை விலக்கத் தீ விழி விழித்து, 'ஸர்வகந்த:' सर्वगन्धः என்றபடி திவ்ய பரிமள மெல்லாம் கொண்ட திருமேனி மயிர்க்கூச்சிட இருபக்கங்களையு மசைத்துக் திருக்கைகளை உதறி எழுந்து கால்களை யூன்றித் திருமேனியையும் திருக்கைகளையு முயர்த்தி நீட்டி மூரி நிமிர்ந்து சிங்கநாதம் செய்து கொண்டு நடந்தெழுந்தருள வேணு மென்றதாம். மூரி. மூரியாலே = மூரியிருப்பதாலே = மூரி தீரும்படி யென்றபடி.

மாரி—மழைக்காலத்திலே சிங்கம் மன்னிக்கிடப்பதுண்டு. மழையில்லாத துர்பிக்ஷத்திலே எங்களை விட்டு மன்னிக்கிடந்துறங்குவது ந்யாயமோ வெனவும் குறித்ததாம். தீ விழித்து—செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ என்று எங்கள்மேல் அனுக்ரஹமான விழி விழுவதைக் கோரினோம். எங்கள் விரோதிகளின் மேல் தீ விழி விழிப்பதை இப்போது கேட்கிறோம். அதுவும் எங்களுக்குப் போக்யமாகவே யிருக்கும்.

'ஸடாபடலபீஷணே ஸரபஸாட்டஹாஸோத்படே ஸ்புரத்க்ருதி பரிஸ்புடத்ப்ருகுடிகே஽பி வக்த்ரே க்ருதே' (सटापटलभीषणे सरभसाट्टहासोद्भटे स्फुरत्क्रुधिपरिस्फुटत्भ्रुकुटिकेऽपि वक्त्रे कृते) என்றபடி சிங்கப்பிரான் தூணினின்று தோன்றியபோது ப்ரஹ்லாதாழ்வானுக்கு எவ்வளவோ போக்யமாயிருந்ததே. முதலில் முகத்திற்கு முன்னே நீண்டிருக்கும் விடரிமயிர்கள் பயங்கரமாகத் தோன்றின. முகம் தூணினுள்ளே இருந்த காலத்திலே அட்டஹாஸம் செய்யமாட்டாதாகையாலே தூணினின்று வெளிவந்த கணமே பரபரப்புடன் அட்டஹாஸமெழுந்தது. பிறகு கோபம் விஞ்சியிருந்தது விளங்கா நின்றது. அவயவங்களை யெல்லாம் ஊன்றிநோக்கும்போது புருவநெறிப்பும் புலப்பட்டது. இவ்வளவு பயங்கரமான நிலையிலும் ப்ரஹ்லாத விஷயத்திலே யிருந்தவண்ணமாவது— தயே வ்ருஷ கிரீசிது: தநுஜ டிம்பதத்த ஸ்தநா ஸரோஜஸத்ருசாத்ருசா ஸமுதிதாக்ருதிர்த்ருச்யஸே' (दये वृषगिरीशितुः दनुजडिम्भ दत्तस्तना सरोजसदृशा दृशा समुदिताकृतिः दृश्यसे) என்றபடி யன்றோ? செந்தாமரைக் கண்ணோடு சேர்ந்து பக்தி ஜ்ஞானங்களென்றும் ஸ்தன்யத்தைப் பருகுவித்து ப்ரஹ்லாத சிசுவைப் போஷித்த தயையுமப்போது ப்ரத்யக்ஷமாக விளங்கின்றே.

இந்த ச்லோகத்திலே ஸ்ரீதேசிகன் த்ருச்யஸே என்று வர்த்தமான காலமாக வருளினது கூடுமோ, ந்ருஸிம்ஹனாய் அவதரித்து விளங்கினது பல அவதாரங்களுக்கு முன்பாயிற்றே என்னில்—மற்ற அவதாரங்களைப் போலின்றி ந்ருஸிம்ஹாவதாரத் தோற்றம் எப்போது மிருப்பதாகத் திருவுள்ளமெனலாம். இது விஷயம் வரதராஜ பஞ்சாசத்திலே

வ்யக்தமாக அருளப்பெற்றது. பக்தஸ்யதாநவசிசோ: பரிபாலநாய பத்ராம ந்ருஸிம்ஹகுஹநா மதிஜக்முஷஸ் தே । ஸ்தம்பைகவர்ஜமது நாபி கரீச நூநம் த்ரைலோகயமே தத்கிலம் நரஸிம்ஹகர்ப்பம் (भक्तस्य दानवशिशोः परिपालनाय भद्रां नृसिंह गुहनामधिजग्मुषस्ते । स्तंभैकवर्जमधुनापि करीश नूनं त्रैलोक्यमेत दखिलं नरसिंहगर्भं) என்றதாமது. 'பத்ராம் ந்ருஸிம்ஹகுஹநா' (भद्राम् नृसिंहगुहनाम्) மெனப்படும் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய தயையை யென்னவென்று வர்ணிப்பது? பல பேருடைய கோருதலுக்காக எம்பெருமான் அவதரிப்பதுண்டு. ஒரு சிசுவுக்காக எடுத்த அவதாரம் ந்ருஸிம்ஹாவதாரம். அந்த சிசுவும் அஸுர சிசு, உயர்ந்த மனுஷ்யசிசுவன்று. சாதி வேற்றுமை யெம்பெருமானுக்குண்டோ? அவன் பார்ப்பது பக்தி. சிசுவும் அவதரிக்கும்படி ப்ரார்த்திக்கவில்லை. பக்தியினால், 'எங்குமுளன்' எனத் தன் மனவுறுதியை மொழிந்தது மாத்திரம்- எங்கு முளனென்றதாலே எல்லாக் காலத்திலுமுள்ள எல்லா வஸ்துக்களிலும் ஹரி எனப்படும் லக்ஷ்மீந்ருஸிம்மன் பக்தனுடைய வாக்கை சத்யமாக்குவதற்காக அவதரிக்க வேண்டியதாயிற்று. இதுவே பரிபாலநம்' வெறும் பாலனம் அவுணன் வதைத்துவந்த ஸமயமெல்லாம் அவதரிக்காமலே செய்யப்பெற்றதே. எனவே ந்ருஸிம்மாவதாரம் எத்தனை யென்றெண்ணிக்க யற்றதாயிற்று. அவற்றிலே அவுணனின் தூணிலிருந்த ரூபம் மட்டும் வெளியில் ஆவிர்பவித்திட்டபடியாலே பிறகு மறைந்துவிட்டது. இப்படிப் பலருக்காக ஒரு ரூபமெடுத்த தசையைவிட ஒரு சிசுவுக்காகப் பல ரூபங்களெடுத்த தசையில் தானே தயை மிகுந்திருக்க வேண்டும். அந்த ரூபங்கள் அத்தூண் தவிர மற்றவிடங்களிலே மஹான்களுக்கு விளங்கா நிற்கிறன. அதனைத் திருவேங்கட முடையானைத் தரிசிக்கும்போது அவ்விடத்திலும் ஆசார்யன் ப்ரத்யக்ஷமாக வனுபவித்து, 'த்ருச்யஸே' என வருளினரென்க.

அப்படிப்பட்ட தயையை நினைப்பூட்ட இங்கே சீரிய சிங்கம் போலென்றதாம். மாரி மலை முழஞ்சில் என்று ஸ்ரீமதஹோபில் குஹையாய், அங்குநின்று லக்ஷ்மீந்ருஸிம்மன் லோக ஸம்ரக்ஷணத்திற்காக வெளியிலே பிறகு ஸஞ்சரித்ததும், அர்ச்சையிலீடுபடுபவளும் ஸர்வஜ்ஞையுமான ஆண்டாளின் இப்பாசுரத்திலே தோற்றுகிறது.

இந்த ந்ருஸிம்ஹனே பிறகு ரகுஸிம்ஹனாய் கோஸல குஹையினின்றே வெளிப் புறப்பட்டு தண்டகாரண்யத்திலே பத்துத்தலை யானை வரையிலெல்லாவற்றையும் ஸம்ஹரித்த விதத்தை ஸ்ரீதேசிகன் பாதுகாஸஹஸ்ரத்திலே அருளிச் செய்தார்—

'தசக்ரீவஸ்தம்பேரமதளநதுர்தாந்த ஹ்ருதயே
விஹாரஸ்வாச்சந்த்யாத் விசதி ரகுஸிம்ஹே வநபுவம் ।
ஸ்வவாத்ஸல்யக்ரோடீக்ருத பரதசாபேவ பவதீ
நிராபாதாம் பாதாவநி ந விஜஹௌ கோஸலகுஹாம் ॥

दशग्रीवस्तम्भेरमदलनदुर्दान्तहृदये विहारस्वाच्छन्द्यात् विशति रघुसिंहे वनभुवम् ।
स्ववात्सल्यक्रोडीकृत भरतशावेव भवति निरावाधां पादावनि न विजहौ कोसलगुहाम् ॥

வால்மீகி பகவானும், 'பர்வதாதிவ நிஷ்க்ராந்த: ஸிம்ஹோ கிரிகுஹாசய: (पर्वतादिव निष्क्रान्त: सिन्हो गिरिगुहाशय:) என்று ஸ்ரீரகுஸிம்ஹம் அந்தப்புரத்திலிருந்து வெளிவருமழகை வர்ணித்தருளினர். இதனை யடியொத்தியே இப்பாசுரம் பிறந்தது போலும். அந்த ராகவஸிம்ஹமதானும் தன்னுடைய சிங்க ரூபத்தை, 'அங்குல்யக்ரேண தாந் ஹந்யாம்' (अगुल्यग्रेण तान् हन्याम्) என்றவிடத்திலே குறித்தருளினன்.

இவன் இப்போது யதுஸிம்ஹமாய் விளங்குவது இங்கு உரைக்கப்படுகிறது. மாரியாவது பாற்கடல். அங்கே மலை ஆயிரத்தலையனான ஆதிசேஷன். படமெடுத்த அவனது தலைகளாலான மேற்கட்டியுள் அடங்கின அவனுடலாம் படுக்கை முழஞ்சு. அங்கே யோக நித்ரை செய்தருளும் எம்பெருமானாகிய சிங்கம் பூதேவியுடன் கூடச் சென்ற ப்ரம்மருத்ராதிகளான தேவர்களினாலே அறிவுற்று, கம்ஸ சிசுபாலாதிகளைக் கொல்லக் கருதி தீவிழித்து, வேரிமயிர் பொங்க, 'உஜ்ஜஹாராத்மந: கேசௌ ஸிதக்ருஷ்ணௌ' (उज्जहारात्मनः केशौसित कृष्णौ) என்கிறபடி பலராமனாகவும் கண்ணனாகவும் ரூபம் அமையத் தனது வெண்ணிற கருநிறங்களாய் மனம் கமழு மிரு குறிஞ்சி மயிர்களை விடுவித்து, எப்பாடும் பேர்ந்து= அதனின்றே அழகிய திருமேனியாம்படி எல்லா அங்கங்களையு மமைத்து, உதறி= தன் படுக்கையான ஆதிசேஷனையும் பலராமனாகப் பிறக்க எடுத்துதறி யனுப்பி, மூரி நிமிர்ந்து= உலகத்தைக் காக்காமல் உபேக்ஷித்து இருந்து விடாதே, முழங்கி= அவதரித்தவுடன் தேவகீ வஸுதேவர்களோடு தன் அவதாரத்தைக் கம்பீரமாகக் கூறி, புறப்பட்டு திரு மதுரையினின்று எங்கள் கோகுலத்திற்கு எழுந்து வந்தருளினாற்போலே — இப்போதும் நீர் மாரிமலையான நந்தபவனத்திலே நப்பின்னைப் பள்ளியறையாம் குஹையினின்று நப்பின்னையோடு மன்னிக்கிடந்துறங்குவதை விட்டெழுந்தருள வேணும். இதனால் எங்களை யனுக்ரஹிப்பதாகிற ஸாது பரித்ராணமே உமது அவதாரத்திற்கு முக்கியமான பலனென்று இவர்கள் பகர்ந்தபடியாம்.

சிங்கம்போலே தீவிழி விழித்து நடந்துவரும் போதும் உமது மென்மையையும் அழகையு மனுபவித்தினியராகிறோ மென்கின்றனர் பூவைப் பூவண்ணா என்றதால். இங்ஙனே அடியார்கள் ஸ்வாமியை வழி காண்பித்து மரியாதையா யழைத்துப் போகும் முறையிலே சொன்ன சொல் இது. இந்த மார்க்கமே எழுந்தருள வேணுமென்றதாம். அன்றி, இங்கே நப்பின்னையின் சேர்க்கையா லுண்டான சில திருமேனியின் திருக்கோலங்களோட எழுந்தருளவேணுமென்றதாம்.

'அநிப்ருதபரிரம்பை ராஹிதா மிந்திராயா: கநகவலயமுத்ராம் கண்ட்டபாகே ததாந: ।
பணிபதிசயநீயா துத்தித: த்வம் ப்ரபாதே வரத ஸததமந்தர்மாநஸம் ஸந்நிதேயா: ॥

अनिभृतपरिरम्भैराहितामिन्दिरायाः कनकवलयमुद्रां कण्ठभागे दधानः ।
फणिपतिशयनीयादुत्थितस्त्वं प्रभाते वरद सततमन्तर्मानसं सन्निधेयाः ॥

என்று கழுத்திலே பிராட்டியின் கைவளை யழுந்தினது தோற்ற எங்கள் மனத்தினில் அமர வேண்டு மென்றதருளினது காண்க. இனி இங்ஙனமே= இங்கே நப்பின்னையோடிருக்கும் வண்ணமே, நப்பின்னையை விடாமல் அழைத்துக் கொண்டே சிங்காசனத்திற் கெழுந் தருளவேணு மென்றதாம்.

கோப்புடைய சீரிய சிங்காசனத்து — நோன்புக்காகவென்று சிறப்பாக அமைக்கப் பட்டுள்ள சிங்காசனத்துக்குத் தகுந்தாகும். நோன்பை நடத்திவைக்கும் திறமை வாய்ந்த ஆண்சிங்கம் நீரே யல்லீரோ. யாம் வந்த காரிய மாராய்ந்து — நோன்பிலேயே நோக்குடன் நாங்கள் வந்தோமோ, அல்லது ஆசாபாசங்களாம் யானைகளை யடக்கும் அற்புத சிங்கநாதம் செய்யும் உமது அடிகளிலே பணிவிடை செய்வதையே பெற வந்தோமோ; எல்லா மாராய்ந்து பார்த்துக் கொள்வீராக என்றதாம். [ஆசாமதங்கஜ...ஸிம்ஹநாத:— யதிராஜஸப்ததி.]

உட்பொருள் — திருவாராதனத்திற்குக் கோயிலுள் புகுந்தவர் முதலில் ஹ்ருதய கமலத்தில் எம்பெருமானை த்யானம் செய்து தாம் மனோரதித்தபடி மேன்மையாக ஆராதிப்பர். அது ஹ்ருத்யாக மெனப்படும். இதற்குப் பிறகு பாஹ்ய யாகம். அதாவது—

வெளியிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மூர்த்திக்குத் தாம் வெளியிலே சேகரித்து வைத்துள்ள வஸ்துக்களைக் கொண்டு கூடுமான ஆராதனத்தைச் செய்வது. இங்கே ஹ்ருத்யாகத்தை உவந்து பாஹ்ய யாகத்திற்கு எழுந்தருளுவதை ப்ரார்த்தித்தபடி.

மாரிமலை—ஸூகதுக்கவர்ஷத்துக்காம் சரீரம். அது ஹ்ருத்யாகம் செய்யும்போது. 'அசலத்வஞ்சாபேக்ஷ்ய' (अचलत्वं चापेक्ष्य) என்றபடி மலைபோலே அசையாது இருக்க வேண்டும். அதிலுள்ள முழஞ்சு—ஹ்ருதயகுஹை. அங்கே, 'குஹாம் ப்ரவிஷ்டாவாத்மானௌ' (गुहां प्रविष्टावात्मानौ) என்றபடி இரண்டு சிங்கங்களிருக்கின்றன. ஜீவாத்மா பேடை, பரமாத்மாஆண், சீரிய சிங்கமென்றவாறு காண்க. (23)

சிங்காசனத்திற்கு எழுந்தருளும்படி ப்ரார்த்தித்ததும் கண்ணன் கட்டிலினின்று புறப்பட்டெழுந்தருள, அப்போது அவன் நடையழகையும், அவன் நன்கொடையளிக்கப் போவதையும் கண்டறிந்து களித்து அதற்கேற்ப, திருவடியையும் திருக்கையையும் முக்ய மாக ஆதரித்துப் போற்றுகின்றனர்—

24. அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின் கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றியாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்.

அன்று—மாவலிராஜ்ய காலத்திலே
இ'உலகம்—இந்த ப்ராக்ருதலோகத்தை
அளந்தாய்—ஈரடிகளாலளந்தவனே!
அடி போற்றி—உனது அடி வாழி.
அங்கு—பதிவ்ரதைகள் பரதவிக்கும் கடலின் அக்கரைக்கு
சென்று—ஸேதுபந்தம் செய்து போய்
தென் இலங்கை—அழகிய லங்கையை
செற்றாய்—அழித்தவனே!
திறல் | (உனது) தேஜஸ்ஸு
போற்றி—வாழி.
பொன்ற—அழியும்படி
சகடம்—சகடாசுரனை
உதைத்தாய்—உதைத்தவனே!
புகழ் போற்றி—கீர்த்தி வாழி.
கன்று—கன்றாய் வந்த அசுரனை
குணில் ஆ—எறிதடியாம் வகையிலே
எறிந்தாய்—எறிந்தழித்தவனே!
கழல் போற்றி—வீரக்கழல் வாழி.

குன்று—(கோவர்த்தன) மலையை
குடை ஆ—குடையாம் வகையில்
எடுத்தாய்—எடுத்தேந்தினவனே!
குணம் போற்றி—ஸௌசீல்யகுணம் வாழி.
வென்று—விரோதிகளை ஜெயித்து
பகை—விரோத மனப்பான்மையை
கெடுக்கும்—அழித்திடும்
நின் கையில் | உனது கையிலிருக்கும்
வேல் போற்றி | வேலாயுதமானது வாழி
என்று என்று | இவ்வாறாக
உன் சேவகம் ஏ—உனது வீரச்செயல் களையே
ஏத்தி-விசேஷமாகக் கூறி
பறை கொள்வான்—பறை முதலியன பெறுவதற்காக
இன்று—இப்போது
யாம் வந்தோம்—நாங்கள் வந்துள்ளோம்;
இரங்கு—தயை புரியவேணும்.
ஏல் ஓர் எம் பாவாய்.

நடைக்கும் கொடைக்கும் கருவியான திருவடியையும் திருக்கைகளையும் முக்கிய மாக்கிப் போற்றும்போது தக்கபடி கொண்டு போற்றுகின்றனர். 'யாம் வந்த காரிய மாராய்ந்தருள்' என்றவர்களைப் பார்த்து, நீங்களே காரியத்தைக் கூறுங்கள் என்றானவன். ஆகவே போற்றி ஏத்தி அதையும் கூறுகின்றனர். 'ஓங்கி யுலகளந்த'. 'சினத்தினால் தென்னிலங்கை', 'பொல்லா வரக்கனை', 'அம்பர மூடறுத்து' என்றனராகையாலே த்ரி விக்ரமாவதாரத்திலும் ராமாவதாரத்திலும் ஈடுபாடு இவர்களுக்கு அதிகமானதால் அவற் றையே இங்கும் பேசுகின்றனர். எல்லோரையும் திருவடியால் தொட்டதாலும், தங்களை யபிமானிக்கும் பிராட்டியைக் காத்துத் தங்களுடைய இப்பிறவிக்குக் காராணமானதாலும் அவை இரண்டும் அடையவே இவர்களுக்கு இஷ்டங்களாம். ஒவ்வோரடிவைப்பின் பெருமையைப் பேச த்ரிவிக்ரமாவதாரத்தை முதலிற் கூறி, மேன்மேல் அடிவைத்துச் செய்ததை மேலே கூறினர். அளந்தது அடியாகையாலே அடி போற்றி யென்றனர். அடி யாவது திருவடியுமாம்; அடி வைப்புமாம். அங்கு சென்று — பிராட்டியும் மற்றும் பல வகைப் பதிவ்ரதைகளும் பாதைப் படுமிடத்திற்குச் சென்று. இப்படிக் கடலைக் கடந்து வரத் திறலுடையோன் நம்மை யழித்துவிடுவானென்று தெளிந்து விரோதி வணங்குவனோ என நினைத்து இவன் அங்கே சென்றது. திறல்—தேஜஸ்ஸு; ப்ரதாபம், அழிப்பதற்கு இதே ஸாதனமாகையால் இதை வாழ்த்தினர். சகடத்தைப் யுதைத்துப் பொடியாக் கினதைப் பார்த்திருந்த பிள்ளைகள் இவனை மிகப் புகழ்ந்துப் பேசினர். அதன் மூலமே அனைவரும் அதை யறிந்தனராகையாலே, 'புகழ் போற்றி' என்றது. குணிலா வெறியக் கையே கருவியாயிருக்க, கழல் போற்றி என்றது. எங்ஙனென்னில்—'கன்றை யெறிய நடந்தபோது குஞ்சித்த திருவடிகளில் வீரக்கழலையும் அகவாயிற் சிவப்பையுங் கண்டு காப்பிடுகிறார்கள்' என்றும், 'நீட்டின திருவடிகளுக்கும் குஞ்சித்த திருவடிகளுக்கும் காப் பிட்டபடி' என்றும் முன்னோர் உரைப்பர். ஆகக் கழல் என்பது திருவடியணியுமாம்; திரு வடியுமாம். கையால் கன்றைச் சுழற்றி விரைவிலெறியும் போது காலும் தூக்கப்படு வதாலே கையின் வேகத்தினளவானது காலின் அமைப்பைக் கொண்டே அறியபடு மென்று, கழல் போற்றி' யென்றதென்னலுமாம். அன்றி, எங்கும் வீரச்செயல் கையாலாவ தொன்றாகிலும் பயந்தோடும் பிறர்காலைப் போலல்லாத காலுக்கே வீரக்கழலணிவது வழக்கமன்றோ? மேலும், கன்றின் கால் இவன் கையிலகப்பட்டுத் தவிக்கும் வண்ணமின்றி யிருப்பது இவன் காலென அதற்கணியளிப்பதாம். மேலும், விளங்கனி வீழக்கன்றொன்றை யெறியக் கரும்பார் நீள்வயலுள்ள வீட்டிலே கன்னி பொருத்திக்குச் சூழ்வலை வைத்துத் திரிந்தானிவனென்று பெரியாழ்வார் (3-1-6) கருத்திலிருப்பதைக் கொண்டு, அதற்காக அவ்விடம் திரிந்துவந்த கழலுக்குக் காப்பிட்டதுமாம். கன்று போலே விளாவும் 'அசுர னென்பது முண்டு. 'பெரியா, ப்ரபந்தரக்ஷை (1-64) வானவரென்ற பாசுரத்திற் காண்க.

குணம் போற்றி-குணமாவது ஸௌசீல்ய மென்பது ஸம்ப்ரதாயத்திலே ப்ரஸித்தம். இரு விபூதிகளுக்கும் ஏகச்சத்ராதிபதியாய் ஸர்வேச்வரனு மிருந்து இடையர்களுக்கும் இடைச்சிகளுக்கும் குடை பிடித்தானென்றதற்கு மேற்பட ஸௌசீல்ய முண்டோ? ஸர்வேச் வரனுமிருந்து, தன்னை யாராதிக்கும்படியே முதலில் ஏவவேண்டியிருக்க, மலையைப் பூஜிக்கச் செய்து, 'மலையே காக்கின்றது பாருங்கோள்' என்று மலைக்கு மஹிமையெல்லாம் எண்பித்த இவன் குணத்தை என்ன வென்று சொல்லுவது? ஏழு நாள் இடைவிடாமல் இப் பெரும் மலையே விரல் நுனியால் தரித்த பிறகு கோபஜாதியரெல்லோரும் கூடி, நீ யாரென்பது தெரியவில்லையே' யென்று வியந்து வினவினபோது, தன் பரத்வத்தைப் பேசினால் ஸௌசீல்யத்திற்குக் கேடுண்டா மென்று தன் மேன்மையை மறைத்து, 'அஹம் வோ பாந்தவோ ஜாத:', மத்ஸம்பந்தே ந லஜ்ஜா சேத் அஹம் பந்துர் விபாவ்யதாம்

(வி. 1-5-13),' (अहं वो बान्धवो जातः मत्संबन्धे न लज्जा चेत् [illegible]) என்னைப் பிள்ளை, பேரன், அத்தான், அம்மாஞ்சி யென்றுற் போலே அவரவர்க்காம் பந்துவாகவே நினையுங்கள். 'வேறு யாருமல்லேன்' என்றே சொன்ன இவனது ஸௌசீல்யகுணமன்றோ குணமாகும்.

வென்று பகை கெடுக்கும்—பகைவரைக் கெடுப்பதில்லை. அவர்களை ஜயித்து வசமாக்கி அவர்கள் தன்மேல் வைத்த பகையை விலக்கி ஸ்நேஹத்திற்கு வழி தேடுவதிலேயே நோக்கமிவனுக்கு அழியும் வரையில் அவிவேகி யாகவே யிருக்கும் பகைவனுக்கு மறுப்பிறவியாவது பகையின்றி யிருக்க வேண்டுமென்று பாரித்தே அழித்தல் செய்வதாம்.

உன் சேவகமே யேத்தி-ஸௌந்தர்யம், லாவண்யம், யௌவனம் முதலியனவற்றை யேத்தவோ பக்தபராதீனனாயிருந்து எங்களது கைங்கர்யங்களைப் பெற்று உவக்கும் விதத்தைப் புகழவோ இன்று யாம் வரவில்லை. கோபர்களின் வேண்டுகோளுக்கிணங்கிச் சேவகமே ஏத்த வந்தோம். அல்லது, உன்சேவகமே யேத்தி—வேறொருவரின் சேவகமேத்தவில்லை எனெனில் பறை கொள்வான். காக்கவல்லவனும் பரமாப்தனுமானவனிடமே பறை பெற வேண்டும். ஆக வேறொருவரை ஸ்மரிக்கமாட்டோமே. ஆகையால் அநந்யகதிகர்களான எங்களுக்கு இரங்கு. இன்றியாம்—இன்று யாமெனப்பிரிக்க. யகரம் மேலே யிருப்பதால் உகரம் இகரமாக மாறிற்று. (24)

முதலில், வந்த காரியமாராய்ந்து' என்றதைப் பறைகொள்வான் என விவரித்தனர். பறை கொள்வதால் பெறப்படும் பலனை இப்போது விளக்குகின்றனராய், அவன் சேவகமே யேத்துவதற்குக் காரணமாகியது அவன் கஞ்சனது வயிற்றில் நெருப்பென்ன நின்றதெனவும் அறிவிக்கின்றனர்—

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்துவளரத்,
தரிக்கிலா னாகித்தான் தீங்குநினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஓர் இரவில்—ஒரே இராத்திரியில்
ஒருத்தி—மதுரையில் தேவகி யென்பாளொருத்திக்கு
மகனாய் பிறந்து—குமாரனாக அவதரித்து
ஒருத்தி மகனாய் ஒளித்து | கோகுலத்தில் யசோதை யென்பாளின் குமாரனாக மறைத்து
வளர—வளர்ந்து வரும்போது
தரிக்கிலான் ஆகி—அதை ஸஹிக்க மாட்டாது
தான் தீங்கு நினைந்த | அசுரராம்சனானதால் (கஞ்சன்) தானே கேடுகளை விளைவிக்க நினைத்திருந்த
கஞ்சன்—கம்ஸனுடைய
கருத்தை—நினைவுகளை
பிழைப்பித்து—பிழையுறும்படி செய்து (நசிப்பித்து)
வயிற்றில்—அவனது வயிற்றிலே
நெருப்பு என்ன—நெருப்பு என்னும்படி
நின்ற—நிலைத்துத் தோன்றின

நெடுமாலே—மிக்க வியாமோஹமுள்ள வனே!
உன்னை—(எங்களுக்கு இஷ்டனான) உன்னையே
அருத்தித்து—அபேக்ஷித்து
வந்தோம் —வந்துள்ளோம்.
பறை தருதியாகில்—நாங்கள் அபேக்ஷித்த பறையை யளிக்கிறாயானால்
திரு—மேன்மை பொருந்திய
தக்க செல்வம் உம்—தகுந்த ஸம்பத்தையும்
சேவகம் உம் — வீர்யத்தையும்
பாடி—கீர்த்தனம் செய்து
வருத்தம் உம் தீர்ந்து—கஷ்டமும் நீங்க
யாம் மகிழ்ந்து—நாங்கள் மகிழ்ந்திருப்போம்.
ஏல் ஓர் எம் பாவாய்.

ஒருத்தி—மற்றொருத்தியினருகே யில்லாத ஒருத்தி. 'திருவின் வடிவொக்கும் தேவகி நங்கைக்கு' (பெரியா, 1-3-17) என்றபடி. எம்பெருமானுக்குப் பெரிய பிராட்டியைப் போலே வசுதேவருக்குப் பல ஜன்மங்களில் பத்நியாயிருந்து தவம் புரிந்த உத்தமிக்கு என்றபடி. பெற்றவள் வேறொருத்தி; தாயாக நினைத்தவள் வேறொருத்தி என்றதுமாம். மகனாய்-'மாதா பிதா' என்றபடி எல்லோருக்கும் அன்னையா யத்தனாயிருப்பவன் மகனானது அவர்களின் பாக்யமாம். பிறந்து—ஜீவர்களைப் போலே பிறக்க வேண்டியதில்லையாகிலும் அவள்வயிற்றிலே முழுமாதங்களும் தங்கி மனிதனென்னும்படி பிறந்து 'அஜாயமனோ பஹுதா விஜாயதே' अजायमानो बहुधा विजायते' எனவாகி ஒருத்தி - பால்கொடுத்து வளர்த்து விளையாட்டுக்களைக் கண்டு களிக்கப் பாக்கியம் பெற்றவள். ஒருவன் மகனாய் பிறந்து ஒருவன் மகனாய் ஒளித்து வளருதல் உலகில் ஸுலபமாகும். ஸ்த்ரீயும் பிள்ளையல்லாதவனைப் பிறந்த பிள்ளையாக நினைப்ப தரிது, 'ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர் நானே மற்றாருமில்லை' (பெரியாழ் 33-1) என்றவாறெல்லாம் நினைத்தவள் அசோதை அன்றி, இராமனை, 'கௌஸல்யாநந்த வர்த்தந:' (कौसल्यानन्दवर्धन:) என்றாற் போலே, க்ருஷ்ணனை தேவகீபுத்ரனெனக் சிறப்பாகக் கூறுவதாம். பல பத்நிகள் இருக்க ஒருத்திமகனானது அவள் பாக்யமன்றோ? நான்கு மூர்த்தியாக அவதரிக்கும் தனக்குப் பொதுவாகயிருந்ததால் அங்கே 'பிதரம் ரோசயாமாஸ ததா தசரதம் ந்ருபம்' पितरं रोचयामास तदा दशरथं नृपम्) என்றது. பிதாவாக வசுதேவரைத் தேடியெடுத்தற்கு மேலாயிற்று அவர் பத்னிகள்அனேகர் இருக்கத் தேவகியையே தாயாக வாதரிக்கத் திருவுளம் கொண்டது. ஆகவே ஒப்பற்றவளான படியாலே அவளை ஒருத்தி என்றது.

ஓரிரவில்-பிறந்த நடுநிசியும் புகுந்த நடுநிசியும் ஒன்றே. இதுவும் ஆச்சரியம் அன்றி, கண்ணன் அவதரித்ததாலே அந்த அஷ்டமி என்ற திதிக்கு ஏற்பட்ட சிறப்பிற்களவேயில்லைமேலும், பெருமாளுடைய அவதாரங்களை ஸ்ரீராமநவமி, ஸ்ரீ ந்ருஸிம்மஜயந்தி என்றபடியிலே திதிகளைக்கொண்டு கொண்டாடுவதுண்டு. ஆசார்யர்களின் அவதாரநாளைத் திருநட்சத்திரங்களைக் கொண்டு கொண்டாடுவர். கண்ணனுடைய அவதாரத்தை இருபடியாலும் கொண்டாடுவது கண்கூடு. ஜந்மாஷ்டமி, ஸ்ரீஜயந்தி எனத் திதியையும் ஸ்ரீரோஹிணியையும் தனித் தனியாகவும் வ்ரதத்திற்கு ஆதரிக்கின்றனரே. மற்ற அவதாரங்களைவிடக் கண்ணனாய் அவதரித்தபோது கீதாசார்யனாயிருந்ததாலே மேம்பாடுண்டு. மேலும், மற்ற அவதாரங்களிலே, ந்ருஸிம்மஜயந்தி, வராஹ ஜயந்தி என்றபடி விசேஷித்துச் சொல்லவேண்டும் முறை இங்கு இல்லை. ஸ்ரீ ஜயந்தி என இவ்வளவே கண்ணனுடைய அவதார நாளையே குறிக்கும். ஆகையால் இவ்விரவு ஒப்பற்ற இரவு.

ஒளித்து—ஒளித்து ஒருத்திமகனா யெனவும் அந்வயம் கொள்க. யசோதைப் பிராட்டிக்கு அவள் வயிற்றில் பிறந்த குழந்தையைத் தெரியாதபடி மறைத்துத் தன்னையும் அவள்

பிறர் குழந்தையாக நினைக்காதபடி செய்து அவள் மகனுனென்றபடி. அவ்வொருத்தி கண்ணன் பிறக்கும்போது தெளிவாக எல்லா மனுபவித்து வந்தவள். யசோதை ஒன்று மறியாது உறங்கிக் கிடந்தவள் என்பதும் ஒருத்தி என்றதில் தோற்றும். ஒளித்து வளர— திருமதுரையில் இருந்தால் வளர்வது ஸாத்யமாகாதென்று தேவகி நினைத்ததால் ஒளித்தே வளரவேண்டியிருந்தது. வளர — பிறந்து சிசுவாயிருக்கும் போது கஞ்சனல் பாறையில் அடிக்கப்பட்டு அழியாததோடு, பாலும் தயிரும் வெண்ணெயுமாய் வேண்டினமட்டு முண்டு திடமாய் வளர்ந்துவர. தரிக்கிலானாகித்தான் தீங்கு நினைந்த — தனக்குச் சிறந்த சக்தி யிருப்பதாக ப்ரமித்தவர்கள் விரோதியாயிருப்பது ஒருவாறு தகும் எந்தக் கணமும் பயந் திருக்குமிவன் தான் தீங்கு நினைப்பது வியப்பிற்கு இடமாயிற்று.

தான் தீங்கு நினைந்த — கண்ணன் கஞ்சனுக்குத் தீங்கு நினைக்கவில்லை. கஞ்சன் நினைத்துத் தீமைகள் செய்துவந்ததாலே அவன் வயிற்றில் நெருப்பென்ன நிற்கவேண்டிய தாயிற்றென்றபடி. கருத்தைப் பிழைப்பித்து — பிழைப்பித்தல் என்றால் உயிர் இருக்கச் செய்தலெனப் பொருளன்று. பிழையுறச் செய்தல், அழித்தல் என்றதாம். அதாவது, அக்கருத்தாலே அவன் அனுப்பிய பூதனை, சகடம், தேனுகன் முதலான எல்லோரையும் அழித்துப் பொகட்டென்றபடி.

நெடுமாலே — கஞ்சனைக் கொல்வது அவன் தேவகி வசுதேவர்களுக்கு விரோதி யென்றதால் மட்டுமன்று. கோகுலத்திற்கும் விரோதியான தாலுமாம். வசுதேவரிட முள்ள அபிமானத்தாலே அவர் மித்ரனான நந்தனிடத்திலும், அவனைச் சேர்ந்தவரென்று கோபரிடமும், அவர்களின் ப்ரஜைகள் என்று எங்களிடமும் அபிமானம் நெடுக நீண்டு வரா நிற்பதாலே நெடுமாலென்பது தகுமென்றதாம் 'மம மத்பக்த பக்தேஷு' மம மத்பக்த भक्तेषु என்கிற ந்யாயமாய் மேன்மேல் ப்ரீதி அதிகமாயிற்று. ஆகவே வஸுதேவரை விட நந்தனுக்குக் கண்ணனின் அனுபவம் அதிகம்; அவனை விட எங்களுக்கென்றதுமாம்.

உன்னை அருத்தித்து வந்தோம் பறை — உன்னிடம் பறையைப் பெற விரும்பி வந்தோமென்றபடி. வந்தோமென்றபடி. வந்து அர்த்திக்கின்றோமென்னுமே அர்த்தித்து வந்தோமென்றதால் அர்த்தித்து என்பதற்கு அபேக்ஷித்து (விரும்பி) எனப் பொருளல்லது கேட்டு எனப் பொருளல்ல. பறை என்றது. 'தருகியாகில்' என்றதோடும் சேருகிறது. இரு இடங்களிலும் அதற்கு தேஹளீதீபந்யாயத்தாலே அந்வயமென்க. அதைத் 'தருதி யாகில்' என்றவாறு ஒரு செயப்படு பொருளை மறுபடி கூறுதொழிந்தது, பறை என்ற தற்கு மேலே அந்வயம் கொண்டு, உன்னை அருத்தித்து வந்தோம்—உன்னையே பெற வந்தோம்; பறைக்காக வரவில்லை, நீயாகப் பறை கருதியால் சேஷியுகந்தபடி கைங்கர்யம் செய்ய வேண்டுவதால் அதற்குத் தக்கபடி செய்கிறோமெனவு மறிவிக்கவாம்.

துர்பிக்ஷத்தாலே தக்க செல்வ மிராததால், சேவகமே யேத்திப் பறை கொள்வான் என்றார்கள். பறை தந்துவிட்ட பிறகுச் செல்வம் சேர்ந்துவிடுவதால், செல்வமும் யாம் பாடி என்றனர் எற்கெனவே செல்வச்சிறுமிகளுக்குச் செல்வத்திற்குக் குறையில்லை. ஆனாலும் நடுவிலே துர்பிக்ஷத்தாலே திருவாய்ப்பாடிக்குத் தக்க செல்வமிராமற் போயிற்று இனிப் பறை பெற்ற பிறகே தக்க செல்வமுண்டா மென்றதாம். திருத்தக்க செல்வமாவது மேன்மை பொருந்திய செல்வம். அதாவது பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யத்திற்கே யாம் செல்வம். இச் செல்வமே திருவினால் விரும்பப் படும் செல்வம். இந்தச் செல்வ

நிலையும் எம்பெருமான் பறை தந்து அனுக்ரஹிக்க வருவதாலே யாம். விடாய் தீர கங்கா ஸ்நானம் பண்ணப் பாபம் போமா போலே, எம்பெருமான் மூலம் பெறும் ஐசுவரியம் பாபங்கள் கழிந்து ஸத்துவம் ஓங்கி வளர்வதாலே இத் தன்மைத்தாம். 'இதே தருதியாகில் திருத்தக்க செல்வமும் என்றதின் கருத்து. இனி, தருதியாகில் என்பதற்கு நாங்கள் உன்னையே விரும்பி வந்தோமே யல்லது 'பறையை விரும்பி' வரவில்லை; ஆயினும் இடையரின் க்ஷேமத்தை நினைத்துப் பறை தரத் திருவுள்ளம் கொண்டிருந்தால் ஏவல் தேவை செய்யும் நாங்கள் தரும் பறையைப் பெற்றுச் செல்வம் வருவதைப் பாடி உன் திருவுள்ளத்தை யுகப்பிப்போ மென்றதுமாம். மகிழ்ந்து என்றவிடத்தில் வினைமுற்றென்று சேர்த்துக் கொள்க.

உட்பொருள்—கீழ்ப் பாசுரத்தில், பாஹ்யயாக மெனப்படும் திருவாராதனத்திற்காக ஸந்நிதானம் செய்தருளின எம்பெருமானின் ஸ்வரூபரூபகுண கண-ஆயுதாதிகளை யெல்லாம் அனுபவித்து இப்பாசுரத்திலே அந்த ஆராதனத்தை நன்கு நடத்தியருள வேணுமென்று அபேக்ஷித்ததாம். (25)

முதற்பாசுரம் தொடங்கி எங்கும் பறை மட்டுமே கூறப்பட்டதால் அது ஒன்றே இவர்கள் விரும்புகின்றனரென நினையாமைக்காவும் தாங்கள் விரும்புன வெல்லாம் பழைய ஆசாரத்தைப் பின்பற்றியே யென வறிவிக்கவும் மேலே மொழிகின்றனர்.

26. மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்

மாலே—வ்யாமோஹ முள்ளவனே!
மணிவண்ணா—நீலமணியின் நிறமும் ஸ்வபாவமு முள்ளவனே!
மார்கழி நீராடுவான் | மார்கழி நீராட்ட மென்ற நோன்புக்காக
மேலையார்—முன்னோர்களால்
செய்வனகள்—செய்யப்படும் கிரிசைகளால் (ளுக்காக)
வேண்டுவன கேட்டி ஏல் | அபேக்ஷிக்கப் படுமவை யாவையென்று கேட்கிறாயாகில் (சொல்லுகிறோம். அவையாவன—)
ஞாலம் எல்லாம்—பூமி முழுவதும்
நடுங்க—நடுங்கும்படி
முரல்வன—ஒலிக்கின்றனவும்
பால் அன்ன வண்ணத்து | பால் போன்ற (வெளுத்த) நிறமுள்ள
உன் பாஞ்ச சன்னியமே | உனது வலம்புரி சங்குக்கே
போல்வன—ஸமமானவையும்
போய் பாடு உடையன | வெகு பெரிய உருவமுடையவையுமான
சங்கங்கள் ஏ—சங்குகளும்,
சால பெருபறை ஏ—மிகவும் பெரிய பறை யென்ற வாத்தியமும்,
பல்லாண்டு இசைப்பார் ஏ | பல்லாண்டு பாடுகின்றவர்களும்
கோலம் விளக்கு ஏ | மங்களமான தீபங்களும்
கொடி ஏ—த்வஜங்களும்
விதானம் ஏ—மேற்கட்டிகளுமாம்.
ஆலின் இலையாய்—ஆலமரத்தின் இலையிற் பள்ளி கொள்ளுமவனே!
அருள்-(அவற்றை) அனுக்ரஹிக்கவேணும்.
ஏல் ஓர் எம் பாவாய்.

மாலே - ஜீவராசிகளிடத்தில் சிறந்த மோஹம் கொண்டுதானே நீ ப்ரளயத்தினின்று ஸ்ருஷ்டியைச் செய்வதும், நடுநடுவே அவதரிப்பதும். எங்களை இப்போது கோபிகளாகப் பிறப்பித்ததும் எங்களிடமுள்ள வ்யாமோஹத்தினுலேயே. இவ்வளவு துர்பிக்ஷத்திற்குக் காரணமானதும் எங்களோடு கலந்து களிக்க நீ பேராவல் கொண்டது தானே யென்றபடி. கீழே, 'நெடுமாலே' என்றவர் இங்கே மாலே என்கிறனர். உனக்கு மிக ப்ரியரான வஸுதேவரைச் சேர்ந்த நந்தரைச் சார்ந்த இடையரின் பெண்கள் என்ற நோக்கத்தாலே வஸுதேவ நிமித்தமாக உனது வ்யாமோஹம் நீண்டு வளர்ந்து வருவதென நினைத்தோம். இப்போது நேருக்கு நேராகவே எங்களிடத்தில் வ்யாமோஹம் விளங்கா நிற்பது தோன்றுகிறதென இதன் கருத்தாம். இனி, 'உன்னையருத்தித்து,' 'திருத்ததக்கச் செல்வமும், 'மகிழ்ந்து'என்றவாருனசொற்களைச் செவிபடுத்தினவுடன், 'காமீ ஸ்வதாம் பச்யதி' என்கிற ந்யாயமாய், இவர்கள் நம்மையே யனுபவிக்க ஆசைப்பட்டு வந்திருக்கின்றனர். திருவுக்குச் சமமாகத் தாங்களும் நம் அனுபவச் செல்வம் பெற இவர்களின் நோக்கு, என வைத்து இவர்களிடம் மிகவும் வ்யாமோஹம் கொண்டான். அதை நேரிற் கண்டு மாலே என்றனரென்னலாம். எனக்கு உங்களிடத்திலே கனத்திருக்கும் மோஹம் உங்களுக்கெப்படி தெரிந்தது என்ன, அதற்கு மறுமொழி கூற, மணிவண்ணு என்றனர். நீலமணி நிறத்தனுன உனது திருமேனியிலே கண்ணுடியிலே கண்டாற் போலே உன் உள்ளத்தி லிருப்பது உள்ளபடி தெரிகின்றதே 'மணிவண்ணன் நென்னெலே வாய்நேர்ந்தான்' என்றேமே. நேற்றுப் பறை தருவதாகப் பகர்ந்த போது இருந்த நிறம் இப்போது மீண்டுமெங்களைக் கண்டபோதுண்டாயிற்றே. 'மாஸாதூர்த்த்வம் 'ந ஜீவிஷ்யே. (मासादूर्ध्वं नजीविष्ये) என்கிற வண்ணம் எங்கள் பேச்சு. 'ந ஜீவேயம் க்ஷணமபி' (न जीवेयं क्षणमपि) என்கிருய் நீ என்றபடி. முன்துணியில் வைத்து முடியலாம்படி அவன் பவ்யப்பட்டிருப்பதை மணிவண்ணுவென்கிற தெனவும் பெரியோர் பலவிடங்களில் பணிப்பதுண்டு. மணிவண்ணு— உன்னுடைய திவ்யாத்மஸ்வருபம் பரமாநந்தமாயிருப்பதோடு உனது திவ்யமங்களவிக்ரஹமும் பரமாநந்தமாய் ஸௌந்தர்ய யௌவநாதிகளுடன் திகழ்ந்திருப்பதாலே ஆனுகூல்யச் சிறப்பாலே எங்களுக்கு உன்னிடம் வியாமோஹம் வருவது ஸுலபம். உன்னையும் உனது திவ்யருபம் முதலானவற்றையும் நிச்சலும் அனுபவியாநிற்கும் உனக்கு அதிநீசமான எங்களிடத்திலே வியாமோஹம் வருவதென்ருல் இது விஷயஸ்வபாவத்தைப் பற்றினதன்று; நீ எங்களிடத்தில் நிஷ்காரணமாய் வைத்திருக்கும் அபிமானத்தினுல் தானுகவேண்டு மென்றபடி. யத்ர நாந்யத் பச்யதி—ஸ பூமா (यत्र नान्यत्पश्यति-स भूमा) என்றபடி உயர்வறவுயர் முழுநலமான நீ எங்களைப் போன்றவர்களையும் இழுப்பதற்காக வன்ருே திவ்யமங்களவிக்ரஹம் பலவாறு பெறுவது. 'யே யதாமாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்' (ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहं) என்றபடி நீ பக்தர்கள் விரும்பினபடி தோன்றி நிற்பவன். ஆகவே உனக்கு இதுதான் நிறம், இவ்வாறு தான் வடிவம், இது தான் ஆயுதம் இதுதான் இருப்பிடம் என்ற வ்யவஸ்தை கிடையாது. கர்மாதீனமான ருபாதிகளும், கிடையா.

'ந தே ருபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம். ।
ததாபி தாத்ருக்ருபஸ் ஸந் பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே'
न ते रूपं न चाकारो नायुधानि न चास्पदं । तथापि तादृग्रूपस्सन् भक्तानां त्वं प्रकाशसे ।।

ஆத்மானந்தத்திலே மூழ்கி மகிழ்ந்துள்ள உனக்கு ருபாதிகளாலாக வேண்டியதென்னவிருக்கிறது. ஆக அவை யெல்லாம் பக்தர்களுக்கென வேற்பட்டவை. இப்படி எல்லா ருபங்களையுமுடையவனுகிலும் ப்ரம்மருத்ராதி ருபங்களைக் காட்டிலும் வேறுபட்ட, முகில், மாகடல், மாமணிபோன்ற வண்ணமுடையவனுன திருமால் நீ யென்பதும் மணிவண்ணு

வென்றவிடத்திலே கருதப் பெற்றதாம். இனி, மாலே என்று அவனுக்கு இவர்களிடமுள்ள வ்யாமோஹம் சொல்லிற்று. மணிவண்ணா என்று இவர்கள் தங்களுக்கு அவனிடமுள்ள வியாமோஹம் வெளியிடப் படுகிறதென்க.

மார்கழிநீராடுவான்—நீ எங்களிடமுள்ள வியாமோஹத்தாலே, நாங்கள் உன்னையாட வந்ததாக நினைத்து மார்கழி நீராட்டத்தை மறந்தாய் போலும். நாங்கள் இப்போது வந்தது மார்கழி நீராட்டத்துக்காக. இது செய்த பிறகு, சூடகம் தோள்வளை போன்ற பரிசுகளும் பெற்ற பிறகு அந்த நீராட்டத்திலே நோக்கு வைக்கலாம். இப்போது தகாது. மார்கழிநீராட்ட மென்றதொரு தர்மம் எங்கே சொல்லப்பட்டிருக்கிறதெனில்—, நாங்கள் இடைச்சிகள். எங்களுக்கு வேதங்களும் தெரிய வழியில்லை. அவைகளைவிடப் பெரியோர் களின் பழைய வழக்கமே ப்ரமாணமானது. 'தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாச்ச' (धर्मज्ञसमयः प्रमाणं वेदाश्च) என்கிற வசனமும் ஆசாரத்தை முக்கியமாகக் கூறி அதுபோல் வேதங்களும் ப்ரமாணங்களென்று பின்னே சொல்லிற்று. மேலும் வேதம் பல பேருக்குப் பலவிதமான தர்மங்களைச் சொல்லுகிறது. அவற்றில் இது நமக்கென்று பிரித்தெடுக்கப் பெரியோர்களின் ஒழுக்கத்தைத் தான் ப்ரமாணமாக்க வேண்டும். ஆகையால் மார்கழி நீராட்ட விஷயத்திலே நம் மேலையாரின் ஆசாரமே போதுமென்னறிவிக்க, மேலையார் செய்வனகள் என்றனர், மேலையாராவார் முன்னோர்; அல்லது பெரியோர், சிஷ்டாக்ரே ஸரர். முன்னே பறையென்று ஒன்றைமட்டும் சொல்லிவிட்டு, நான் இசைந்து வர வழைத்த பிறகு என்னென்னவோ கேட்கிறீர்களே என்ன வேண்டா. மேலையார் வேண்டு வன யாவை. அவற்றை மட்டுமே கேட்கிறோ மென்றதுமாம்.

கேட்டியேல்-கேள் தி=கேட்டி-கேட்கிறாய். அவை யாவையென்று நீ வினவினா லென்ற படி, அல்லது எங்களிடமுள்ள வியாமோஹத்தாலும், உனக்கு வேறுவகையான அனுபவத்திலே நோக்கமிருப்பதாலும் நாங்கள் சொல்வது செவியிற் படாதேபோம். அங்ஙனமாகாதபடி நீ காது கொடுத்துக் கேட்கிறாயாகில் என்றதாம்.

உண்மையில் இந்த நோன்புக்காகவே நாங்கள் வந்தவர்களல்லோம். ஆகிலும், நீ இடையர்களை அபிமானித்து இதை நடத்த நினைத்து எங்களைக் கூறும்படி கேட்கிறாயாகில் கூறுகிறோமெனவும் கருத்தாம்.

ஞாலத்தையெல்லாம்—ஞாலமெல்லா மென்றபடி. ஐ-அசை. இனி, ஞாலத்தைச் சேர்ந்தவையெல்லா மென்னவுமாம். போய்ப்பாடுடையன என்பதை, 'சாலப்பெரும் பறையே' என்பதோடு சேர்த்துரைப்பர். 'ஏ' என்ற எண்ணின் குறிப்புதோறும் ஒவ்வொரு கருவி கூறப்படுவதாகக் கொள்வது பொருத்த முள்ளதாகையாலே உடையனவே என்ற வரையில் சங்குகளையே சொன்னதாகக் கொண்டோம். சங்குகள் உருவம் பெரியனவாகவும் உருவத்திற்குத் தக்க பிலமுள்ளவையாகவு மிருப்பதால் போய்ப்பாடுடையனவாம். பறை பெரிதாயிருப்பது சாலப்பெரும் என்றதாலேயே சொல்லப்படுகிறது.

பல்லாண்டிசைப்பாரே — பண்டைய வாசாரங்கள் ப்ரஜைகளின் க்ஷேமத்திற்காக ஏற்பட்டவையாகையாலே, இந்த நோன்பு இப்போது நன்கு நடைபெறவேண்டும்; பிற் காலத்திலும் இதற்கு அழிவு கூடாதென்று இதனை அனுக்ரஹிப்பதற்காகவும் எல்லாம் நடத்திவைக்கும் எம்பெருமானை மங்களாசாஸனம் செய்வதற்காகவும் பல்லாண்டு பாடு பவரும் வேண்டியதாகிறது.

இங்கே ஆறு கருவிகள் கேட்கப் பெற்றன. முதல் மூன்று ஒலிக்கும் கருவிகள். சங்கின் சத்தம் வெகுதூரத்தில் வெளியூரிலும் கேட்கும். அதனைக் கேட்டு நோன்புக்கு வருமவர் ஊருக்கருகில் வந்தபோது பறையின சத்தம் செவியிற்படும். ஊரில் நுழைந்து ஒரு வீதியிற் புகுந்தபோது மறு வீதியில் பல்லாண்டினிசை கேட்கும். அது கேட்டு அப் பக்கம் சேர்ந்தபோது விளக்கு முதலில் விழியிற் படும். பிறகு நீண்ட கொடிகள். பிறகு மேற்கட்டி. இப்படியே வீதியில் நோன்புக்குப் போகும்போது சங்கமூதுகின்றவர் முன்ன மும், பின்னே பறையடிப்பவரும், அதற்குப் பிறகு பல்லாண்டு பாடுபவரும், பிறகு அடை வாக விளக்கும், கொடியும், கடைசியில் நீராடும் பெண்கள் சேர்ந்து நடக்க மேற்கட்டியும் வரிசையாக அமைந்திருக்கும். ஆதலால் அம்முறையிலேயே இங்கு அருளினது காண்க,

நேற்றே நீங்கள் இவையெல்லாம் வேண்டுமென்று ஏன் கூறவில்லை. இப்போது வரிசையிட்டுக் கூறுகின்றீர்களே, கேட்கும் கருவியாவது அற்பம் சொற்பமா. பல லக்ஷக் கணக்கான கன்னிகளுக்காக பல வாயிரக்கணக்காகச் சங்கு முதலானவை வேண்டியதாகத் தோன்றுகிறதே. ஒவ்வொரு சங்கும் எனது பாஞ்சன்னியம் போலிருக்கவேண்டு மென் கிறீர்களே. எனக்கு நானே நிகரானவன் போல் எனது வலம்புரி சங்குக்கு அதுவேதானே நிகராகும். ஆகப் பல சங்குகள் எங்கே கிடைக்கு மென்றெல்லாம் அவன் கேட்காதபடி ஆலினிலையா யென விளித்தனர். ப்ரம்மாண்ட மெல்லாமழித்து விழுங்கி ஒரு சிறிய ஆலந் தளிரில் மிகச்சிறிய உருவ மெடுத்துப் படுத்திருந்து, விழுங்கின உலகினை யெல்லாம் வயிற்றினுள்ளேயே வைத்திருப்பவனல்லையோ நீ? இவ்வளவு அகடிதகடநா சக்தியுள்ள உனக்குச் செய்ய மாட்டாதது ஒன்றுண்டோ? ஸங்கற்ப மாத்திரத்திலே எல்லாம் செய்யும் சக்தி வாய்ந்தனல்லையோ நீ? மேலும் நினைத்த போது பல ரூபங்களெடுக்கத் திறமை வாய்ந்த பரிகரங்களிருப்பதாலே எல்லாம் கூடும். உனது சங்கே பல சங்குகளாம். சார்ங்க மென்னும் வில்லு பறைகளாகவும், அதன் வாணங்கள் பறையடிக்கும் கோல்களுமாம். ஜீவாபிமானியான கௌத்துவம் பல்லாண்டிசைப்பாராகலாம். திருவாழி பல கோல விளக்காகும். கருடன் கொடிகளாம். ஆதிசேஷன் விதானமாம். ஆகையால் உனது அருள் இருந்தால் எல்லாம் கூடுமென்றபடி, ஆலினிலை யென்றதாலே, அத்தளிர் தனிப்பட இருப்பதொன்றன்று. ஆலமரமே அந்த ஏகோதக ஸமுத்ரத்திலிருப்பது. அதன் தளிர் ஒன்று மரத்திலிருந்தபடியோ 'நீரில் மிதந்திருக்க அதில் பாலமுகுந்தன் பள்ளிகொண்டி ருப்பது' என அறிவிக்கப் பெற்றதாம். இங்கே முடிவில் ஆலினிலையா யென்றதாலே வட பெருங்கோயிலுடையானையே ஆண்டாள் கண்ணனாகப் பாவித்துத் திருப்பாவை யருளியது குறிக்கப் பெற்றது.

உட்பொருள் -ஹ்ருத்யாகம் செய்தபிறகு பாஹ்யயாகம் செய்ய எம்பெருமானை ப்ரார்த்தித்து எழுந்தருள பண்ணினவர்கள் அந்த யாகத்தைச் செய்கின்றனர். அது மேலையார் செய்யும் முறைமையில் ஆறு ஆஸனங்கள் கொண்டது. மந்த்ராஸனம், ஸ்நாநாஸநம், அலங்காராஸனம், போஜ்யாஸனம், புநர்மந்த்ராஸனம், பர்யங்கா ஸனம் என்ற ஆறுமவை. ஒவ்வொரு ஆஸனத்திலும் எம்பெருமானை எழுந்தருளியிருக்க ப்ரார்த்தித்துத் தக்க உபசாரங்களை ஸமர்ப்பிக்க வேண்டும். அவ்வாஸன வகைகளே இங்கே ஆறு கருவிகளைக் கூறும் பதங்களாலே குறிக்கப்படுகின்றன. இங்குச் சொன்ன வற்றிற்கு அந்தந்த ஆஸனத்திலே கூடுமான வரையில் சேர்த்தியை யாராய்க. தொடக் கத்தில் மந்த்ராஸனம். சங்கு ஊதுவதும் தொடக்கத்தில். திருமஞ்சன காலத்தில் பலவித வாத்யங்களை கோஷிப்பது வழக்கம். அலங்காராஸனத்தில் தான் பல பல்லாண்டு இசைப் பாரைக் கொண்டு மந்த்ர புஷ்பம் நடத்தி வேத வேதாந்தங்கள் அருளிச்செயலெல்லாம் சேவிப்பார்கள் எம்பெருமானுக்கு நைவேத்யம் ஸமர்ப்பிப்பதை விளக்கேற்றுவதென்று

சொல்வது உண்டு. அப்போது அது முக்கியம். புனர் மந்த்ராஸனத்திலே கொடியான கெருடன் எழுந்தருளி ஏதாவது ஸஞ்சாரம் திருவுள்ளமோ என்று விண்ணப்பம் செய்வர். பர்யங்காஸனத்தில் பள்ளி கொள்ளுமிடத்திலே கட்டிலுக்கு மேலே உயர மேலாப்பு வேண்டுமாகையால் விதானமென்ற சொல் அந்த ஆஸனத்தைக் குறிக்குமென்றவாறு. (26)

மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள் வேண்டுவன விண்ணப்பித்த பிறகு, மார்கழி நீராடின பிறகு பெறும் சம்மானத்தையுமவனே யருள வேண்டியிருப்பதால் அதையும் முன்னமே விண்ணப்பிக்கின்றனர்.

27. கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனையப் பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

கூடாரை—சேராதவர்களை
வெல்லும்—ஜெயிக்கும்
சீர்—சிறந்த குணங்களையுடைய
கோவிந்தா!—கண்ணபிரானே!
உன் தன்னை பாடி—உன்னை இசையுடன் துதித்து
பறை—நீராட்டக் கருவிகளை
கொண்டு—பெற்று (நோன்பு நோற்ற பிறகு)
யாம் பெறு சம்மானம்—நாங்கள் பெறுகின்ற வெகுமதி யானது
நாடு புகழும் | எல்லோரும் புகழும்
பரிசினால் | விதத்திலே
நன்றாக—நல்லதாகும்படி
சூடகம் ஏ—கைவளை போன்றவைகளென்ன
தோள்வளை ஏ—தோள்வளைகளென்ன
தோடு ஏ—கீழ்க்காதணிகளென்ன
செவி பூ ஏ—மேற்காதிற்கு அலங்காரமான பூவென்ன
பாடகம் ஏ—காலணிகளென்ன
என்றனைய—என்றவை போன்ற
பல் கலன் உம்—பல ஆபரணங்களையும்
யாம்—உன் அபிமானத்திற்கு மிகப் பாத்திரமான நாங்கள்
அணிவோம்—தரிப்போம்.
ஆடை—பட்டாடைகளையும்
உடுப்போம்—உடுத்துக் கொள்வோம்.
அதன் பின்னே—அதற்குப் பிறகு
பாற் சோறு மூட—க்ஷீரான்னத்தை மறைக்க
நெய் பெய்து—நெய்யை பெய்து(சேர்த்து)
முழங்கை வழி—கையிலிருந்து முழங்கை வழியிலாக (அது)
வார—வழிந்து விழும்படி
கூடி இருந்து—சேர்ந்து உண்டிருந்து
குளிர்ந்து—களித்து (இருப்போம்)
ஏல் ஓர் எம் பாவாய்.

இப்படி மார்கழி நீராட்டத்திலே நீங்கள் இழிந்தீர்களாகில், நாம் நினைத்த சுனையாடல் எப்பொழுதோ என்கிறான் போலும் அவன். அது மார்கழி நீராட்டம் முடிந்து நல்ல பரிசாக நாங்கள் சம்மானமும் பெறும்போது ஆடையாபரணங்களை யணிந்து அதன்

பின்னே பாற்சோறுண்ணக் கூடியிருந்து குளிர்ந்தாகுபெல்கின்றனர். கூடாரை வெல்லு முனக்குக் கூடியிருந்து குளிர்ந்து வரவேண்டும் சமயம் தெரியாதோ? கூடாமலிருக்கும் கோபர்களை இவ்வகையில் வென்று, கூடமாட்டாமலிருக்கும் எங்களையும் கூடியிருக்கச் செய்வாய் என்றபடி.

கூடாரை வெல்லும் சீர் — எம்பெருமானோடு கூடாதவர்கள் பலவிதமிருப்பார். ஸுக்ருதம் செய்து பக்தர்களானவர் நால்வர் என்றுற் போலே பாபம் செய்து கூடாதவரும் நால்வரெனக் கீதையிலே காண்கிறோம்.

'ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: |
மாயயாபஹ்ருதஜ்ஞான ஆஸுரம் பாவமாச்ரிதா:' ||

(न मां दुष्कृतिनो मूढा: प्रपद्यन्ते नराधमा: । माययापहृतज्ञाना: आसुरंभावमाश्रिता:)

என்றவர் அவர்கள். எம்பெருமானை யடியோடு அறியாதார், அவன் பெருமையை மட்டு மறிந்து பயந்து அகன்று நிற்பார். அவன் விஷயத்திலே அறிவு பெற்ற பிறகும் விபரீத மதங்களின் குயுக்திகளால் கலக்கமுற்று அவனை யில்லை யென்று நினைப்பார், அவனை நன் கறிந்தே அவன் விபத்தைப் பொறுமே வீணே த்வேஷம் பிடித்தவர் என நால்வரைக் கூறினபடி. இவர் கூடாராவர். இவர்களை வெல்லும் சீரும் எம்பெருமானுக்குப் பலவித மாம். சீரானவை ஜ்ஞானம், சௌர்யம், ஸௌசீல்யம், ஸௌந்தர்யம், முதலானவை. சத்ருக்களாயிருந்து கூடாதவரை 'தநுஷா யுதி சாத்ரவாந்' (धनुषा युधिशात्रवान्) என்கிற படியே சூரத்தன்மை யென்ற குணத்தாலே வெல்லுகிறான். அறிவு பிறவாதவர்களையும் பிறந்த அறிவு அழிந்திருப்பாரையும் 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து' என் கிறபடியே தான் ஆசார்யனா யவதரித்து ஜ்ஞான மென்கிற சீர் கொண்டு ஜயிக்கிறான். வாலியைப் போல் வீரனாயிருந்து அறிவு கெட்டவனை சௌர்யத்தாலே வென்று நன்மதி யளித்து மதிக்கேட்டையும் நீக்கி வசப்படுத்துகிறான். பரத்வத்தை மட்டும் கண்டகன்ற நராதமரென்ற பிறந்து கெட்டாரைத் தனது ஸௌசீல்ய குணத்தைக் காண்பித்து வெல்லு கிறான். இப்படியே ஸ்யமந்தகமணியைப் பற்றி ஸந்தேஹமும், விவாதமும் கொண்ட ஸத்ராஜித்தைப் போன்ற சிலரை சௌர்யம் ஸௌசீல்யமென்ற சீர்களைக் கொண்டு வென்றது. அவ்வரலாற்றை யாராய்ந்தால் தெரியலாகும். தன்னிடத்திலே காதலிருந்தே ப்ரணயகலஹம் செய்து கோபித்திருக்கும் காமினிகளைத் தனது ஸௌந்தர்யம் முதலிய சீர்களைக் கொண்டு வெல்லுகிறா னென்றவாறும் காண்க.

வெல்லும் சீர்க்கோவிந்தா—கோவர்த்தன பூஜை செய்வதைக் கண்டு கூடாராய் நின்ற அமரர்கோமான் முதலானவரால் கோவிந்த பட்டாபிஷேகம் செய்விக்கப்பெற்று யல்லையோ நீ யென்றபடி. கோவிந்தன் என்றால் பூமியில் அவதரித்தவ னென்றதுமாம் எம்பெருமான் பூமியில் அவதரிப்பது கீழ்ச்சொன்னபடி கூடாதவரைக் கூட்டிக்கொள்வதற் காகவே. கூடினவர்கள் நித்யர்களும் முக்தர்களும், கூடாதார ஸம்ஸாரிகளென்னவுமாம். கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா—கூடாரைத்தான் நீ வெல்ல முடியும். கூடினவர் களுக்கு நீ தோற்று நிற்பாயெனவு மறிவித்தபடி.

'யாம் பெறு சம்மானம் நாடு புகழும் பரிசினால்' இத்யாதிககு சம்மானமாவது என்ன வெனில்—நாடு புகழும் ப்ரகாரத்திலே நன்றாக நாங்கள் அணிகள் அணிவோம், ஆடை யுடுப்போம், பால் சோறு உண்போம். கூடியிருந்து குளிர்ந்திருப்போ மென்று இதற்குப்

பொருளுரைப்பதுண்டு, சம்மானத்தை நாடு பரிசினால் நன்றாகப் புகழும்' ஏனெனில், யாமணிவோம் உடுப்போம் மற்றதும் செய்வோமே எனவுமுரையாம். நன்றாக என்பதற்கு நன்றாகும்படி எனப் பொருள் கூறி, நாடு புகழாநிற்கும் வண்ணமான பரிசிலே யாம பெறு சம்மானம் நன்றாகும்படி யாம் அணிவோம். உடுப்போம். மற்றவையும் செய்வோமென ஒரே வாக்கியமாக்கி யுரைப்பது நன்று.

சூடகமே இத்யாதி—ஏகாரம் எண்ணின் குறிப்பு. 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' 'மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்' என்றிருந்து நோன்பை நோற்றான பிறகு அதன் முடிவில் பழையபடி அணியணியும்போது முதன்முதல் உனது பரிசுகளான உயர்ந்த வஸ்துக்களை யணிந்து களிப்போமென்றபடி, கண்ணன் இவர்களுக்குத் தானே அணிகளை அணிய முன் வருகிறான். அப்போது வெட்கமுற்று விலகியிருக்கு மிவர்களின் கையைப் பிடித்து முதலில் கைவளையிடுகிறான். பிறகு முகத்தோடு முகம் சேர்க்க முயன்று கீழ்க்காது மேற்காதுகளுக்கு அணியிடுகிறான், இவ்வளவு செய்தும் இவர்கள் நாணி நிற்க காலையும் பிடித்து இவர்களைத் தன்வசமாக்கிக்கொள்ளப் பாடகமிடுகிறானென வறிவிக்க இவ்வடைவில் அருளினதாம்.

உட்பொருள்—உன்னோடு கூடாமல் ஸம்ஸரித்துத் போரும் ஜீவர்களை வசப்படுத்துவதற்காக இவ்வுலகில் அவதரிக்கும் பிரானே! உன்னைப் பாடிப்பறை கொண்டு, அதாவது மோக்ஷத்திற்காம் உபாயத்தை யநுஷ்டித்த பிறகு, யாம் பெறு சம்மானமானது லோக விலக்ஷணமாம். சூடகமே இத்யாதி—இங்கே ஐந்து வஸ்துக்கள் சொல்லப்பட்டன. இதனால் ''சதம் மாலாஹஸதா:, சதமஞ்ஜனஹஸ்தா:, சதம் சூர்ணஹஸ்தா:, சதம் வாஸோஹஸ்தா:, சதம் பணஹஸ்தா: '' (शतं मालाहस्ताः, शतमञ्जनहस्ताः, शतं चूर्णहस्ताः, शतं वासोहस्ताः, शतं फणहस्ताः) என்றபடி ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் மாலை, மை, மணத்தூள், ஆடை, ஆபரண மெனப்படும் ஐந்துவித வஸ்துக்களைக் கையிலேந்தி எதிர் கொண்டழைக்க விரஜைநதியின் அக்கரையிலே வந்து சேருவதும், பிறகு '' தம் ப்ரஹ்ம கந்த: ப்ரவிசதி, ப்ரஹ்மரஸ: ப்ரவிசதி, ப்ரஹ்மதேஜ: ப்ரவிசதி ப்ரஹ்மயச: ப்ரவிசதி'' (तं ब्रह्मगन्धः प्रविशति, ब्रह्मरसः प्रविशति, ब्रह्मतेजः प्रविशति, ब्रह्मयशः प्रविशति) என்றபடி முக்தனுக்குப் பரப்ரம்மத்தின் திருமேனிமணம் முதலானவையும், 'ப்ரஜ்ஞயா விபச்யதி' (प्रज्ञया विपश्यति) என்ற ஜ்ஞாந விகாஸ முமான ஐந்து கிடைப்பதும் கருதப்பெறும். என்றனையப் பல்கலனும் யாமணிவோம். அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுவிசோகோ விஜிகத்ஸோऽபிபாஸ; ஸத்யகாம: ஸத்ய ஸங்கல்ப: (अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः, सत्यकामः सत्यसंकल्पः) என்ற குணங்களெட்டும் ஆவிர்ப்பவிக்கு மென்றபடி. ஆடையுடுப்போம்—கைங்கர்யத்திற்குக் கருவிகளான கரணகளேபரங்களைப் பெறுவோம். பால்சோறு இத்யாதி—இன்னமுதமான பிராட்டியுடன் சேர்ந்த 'ஷாட்குண்யமந்நம்' (षाड्गुण्यमन्नं) என்னப் பட்ட எம்பெருமானாகிய பரமான்னத்தை அவனுடைய ஸ்வரூப ரூப குண விபவங்களோடனுபவித்து, கூடியிருந்து='காமாந்நீ காமரூபீ அநுஸஞ்சரந்' (कामान्नी कामरूपी अनुसञ्चरन्) என்றபடி எங்கெங்கு அவன் செல்லுகின்றானோ, அங்கங்குக் கூடவே சென்றிருந்து, குளிர்ந்து, 'ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோऽஸ்மி க்ரீஷ்மே சீதமிவ ஹ்ரதம்' (एष ब्रह्मप्रविष्टोऽस्मि ग्रीष्मे शीतमिव ह्रदम्) என்ற பரப்ரம்மானந்தத்திலே மூழ்கிக் குளிர்ந்திருப்போம்.

இனி, இதில் நமுன் திருவாராதனம் சொல்லப்பட்டிருப்பதால் அநுயாகமெனப்படும் அந்தர்யாம்யாராதனம் இங்கே கூறப்படுகிறதென வேறுவகை உட்பொருளும் கொள்க. கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா-'புஞ்ஜம்ச் சிந்த்ய கோவிந்தம், (भुञ्जन् चिन्तय गोविन्दं) என்றதாலே கோவிந்த நாமத்தைச் சொல்லிக் கொண்டே எதுவும் புசிக்கவேண்டுமென்பதைக் கொண்டு 'கோவிந்தா' (गोविन्दा) என வருளினது. 'ஆஹாரசுத்தௌ ஸத்த்வசுத்தி:, ஸத் த்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:' (आहारशुद्धौ सत्वशुद्धिः सत्वशुद्धौ ध्रुवा स्मृतिः) என்றபடி ஸாத்விகமான ஆஹாரத்தை சாஸ்திரப்படி 'யுண்பாருக்கு எல்லா விரோதிகளையும் விலக்கி ஜ்ஞானத்தை யளிக்கும் சீர் உள்ளவனுவான் கோவிந்தன். 'உடுத்துக் களைந்த நின் பீதகவாடை யுடுத்துக் கலத்ததுண்டு தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன சூடுமித்தொண்டர்களோம், என்றும், நெய்யிடை நல்லதோர் சோறும்—கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்' என்றும் அருளினபடி பகவானுக்கு ஸமர்ப்பித்த வஸ்துக்களைத் தக்கபடி உபயோகித்துக் கொள்வது சூடகமே இத்யாதியால் சொல்லப்பெறும். இனி, ஆடை யுடுப்போம் என்று, ' அத்பி: பரித்ததி அசிஷ்யந்த: புரஸ்தாதாசாமந்தி-அசித்வாச ஆசாமந்தி-ததநமநக்நம் குர்வந்தோ மந்யந்தே' (अद्भिः परिदधति आश्नन्तः पुरस्तादाचामन्ति, अशित्वा च आचामन्ति. तदनमनग्नं कुर्वन्तो मन्यन्ते) என்றபடி. ப்ராணனுக்குத் தீர்த்தமாகிற உடையை யுடுத்துவதும், சூடகமே இத்யாதியாலே பஞ்சப்ராணாஹுதிகளைச் செய்வதும் குறித்தாம். பால்சோறு மித்யாதியாலே பிறகுப் பலவித அன்னங்களை யுண்பது சொல்லிற்றும். கூடியிருந்து = அதிதிகள், பந்துக்கள் முதலானோரோடு கூடியிருந்து, குளிர்ந்து = பானகம், நீர் மோர் முதலியன கடைசியில் பருகிக் குளிர்ந்து என்றபடி.

இப்படி இஜ்யாகால மென்ற மூன்றும் காலத்தில் செய்யவேண்டியது முழுதும் மொழிந்தாயிற்று. இனி ஸ்வாத்யாய காலம், யோக காலம் இவற்றில் செய்யவேண்டுவன சொல்லப்படவேண்டும். இங்கே. கூடியிருந்து குளிர்ந்து என்பதையே அவற்றைச் சொல்வதாகவும் கொள்ளலாம், ஸ்வாத்யாய காலத்திலே புராணப்ரவசனம் செய்வது போன்ற கைங்கர்யங்களில் இழிந்தால்,

'மச்சித்தா: மத்கதப்ராணா: போதயந்த பரஸ்பரம் ।
கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச' ॥

(मच्चित्ताः मद्गतप्राणाः बोधयन्तः परस्परं । कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च)

என்கிறபடி பல ரஸிகர்களோடு கூடியிருந்து மனம் களிந்து அனுபவித்தலுண்டே. யோகத்திலும், 'க்ஷேத்ரஜ்ஞம் ப்ரஹ்மணி ந்யஸேத்' (क्षेत्रज्ञं ब्रह्मणि न्यसेत्) என்கிறபடி பரப்ரஹ்மத்தினிடத்திலே ஜீவாத்மாவைக் கூட்டி அவனை யனுபவிப்பதால் கூடியிருந்து குளிர்தலுண்டு. கூடுமான வரையில் யோகத்தைச் செய்து பள்ளிகொண்டு உறங்கும் போது, 'யதா ப்ரியயா ஸ்த்ரியா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேத நாந்தரம் | ஏவம் ப்ராஜ்ஞேநாத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேத நாந்தரம்' (यथा प्रियया स्त्रिया संपरिष्वक्तो न बाह्यं किंचन वेद नान्तरम् , एव प्राज्ञेनात्मना संपरिष्वक्तो न बाह्यं किंचन वेद नान्तरम्) என்கிற வெளியுனுபவங்களை யெல்லாம் விட்டு எம்பெருமானோடு கூடி களித்திருப்பதால், கூடியிருந்து குளிர்ந்ததாம். (27)

இவ்வாறு கண்ணனேடு கூடியிருந்து குளிர ஆவல் கொண்ட கோபஸ்திரீகளுக்குச் சிற்றின்பத்திலே நோக்கின்றித் தன்னைப் பரிபூரணமாக அனுபவிக்க அவா பிறக்கும்படி செய்யத் திருவுளம் கொண்டு கண்ணபிரான் அர்ஜுனனுக்கு விச்வரூபம் காண்பித்தாற் போலும். பரபக்தி யுடையார்க்குப் பரஜ்ஞானத்தை விளைவிக்குமா போலும் தனது ஸௌலப்யத்தில் மட்டுமின்றி பரத்வத்திலும் தெளிவு பிறக்கும்படித் தன் தன்மையைக் காண வருளினன். அப்போது அவனை குறைவில்லாதபடி யனுபவித்து பக்தியும் பயமும் கலந்து நடமாட, அதற்குத் தக்க சில சொற்களை விண்ணப்பிக்கின்றனர்—

28. கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத வாய்க்குலத்து, உன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்றன்னே
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோ மன்பினா லுன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா நீதாராய் பறையேலோ ரெம்பாவாய்.

கறவைகள்—கறக்கும் பசுக்களுக்கு
பின் சென்று—பின்னே தொடர்ந்து போய்
கானம் சேர்ந்து—காட்டை அடைந்து
உண்போம்—உண்ணு நிற்கும்
யாம்—நாங்கள்
அறிவு ஒன்றும்—ஜ்ஞானம் சிறிதும்
இல்லாத—இராமலிருக்கும்
ஆய்குலத்து—இடைக்குலத்தில்
உன் தன்னை—உன்னை
பிறவு பெறும் தனை—பிறவியால் பெறுமளவு.
புண்ணியம் உடையோம் — பாக்கியத்தைப் பெற்றுள்ளவர்களாகிறோம்.
குறைவு ஒன்றும் இல்லாத — சிறிதும் குறையின்றி விளங்கும்
கோவிந்தா—கோவிந்தனே!
நமக்கு உன்தன்னோடு உறவு—எமக்கு உன்னோடு உள்ள உறவானது
இங்கு—இந்த விடத்திலும்
ஒழிக்க—யார் ஒழிக்க முயன்றாலும்
ஒழியாது—அழியாது
இறைவா! நீ—ஸர்வேச்வரனே நீ
அறியாத—நடந்து கொள்ளும் வண்ணமொன்றும் தெரியாத
பிள்ளைகளோம்—சிறு பெண் பிள்ளைகளான நாங்கள்
அன்பினால்—உன்னிடமுள்ள ப்ரீதியினால்
சிறு பேர்—ஈனமான பேர்களை யிட்டு
உன் தன்னை—உன்னை
அழைத்தன உம்—அழைத்தவற்றிற்கும்
சீறி அருளாதே—கோபித்து கொள்ளாமல்
பறை—பறை முதலியவற்றை
தாராய்—தந்தருள்வாய்.
ஏல் ஓர் எம்பாவாய்.

இடைப்பெண்கள் கண்ணபிரானிடம் சம்பானங்களையும் பெற்றுக் குளிர்ந்திருக்க விரும்பி யிருப்பதை விண்ணப்பித்துப் பறை முதலியன அருள ப்ரார்த்தித்தபோது, கண்ணபிரானும் அவர்கள் வேறு காமங்களில் விருப்பமின்றித் தனது கைங்கர்யத்திலீடுபட வேண்டுமென்பதே தன் கருத்தெனத் தெளிவிக்கக் கருதித் தனது பரமைச்வர்யத்தை இவர்கள் காணும்படி யனுக்ரஹிக்க இவர்களும் ஒரு குறைவில்லாதபடி பரத்வமும் ஸௌலப்யமும் நிரம்பி நிற்கும் இறைவனான கோவிந்தனைக் கண்டு, அர்ஜுனன் விச்வரூபத்தைக் கண்டபோது அஞ்சி,

'ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹேஸகேதி ।
அஜாநதா மஹிமாநம் தவேதம் மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி ॥
யச்சாபஹாஸார்த்த மஸத்க்ருதோஸி விஹாரசய்யாஸநபோஜநேஷு ।
ஏகோதவாப்யச்யுத தத் ஸமக்ஷம் தத் க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம்'

सखेति मत्वा प्रसभं यदुक्तं हे कृष्ण हे यदवा हे सखेति । अजानता महिमानं तवेदं मया प्रमादात् प्रणयेन वापि ।।
यच्चापहासार्थमसत्कृतोऽसि विहारशय्यासन भोजनेषु । एकोऽथवाप्यच्युततत्समक्षं तत् क्षामये त्वामहमप्रमेयम् ।।

என்று தான் சிறு பேர் அழைத்து அவமதித்ததற்கு க்ஷமை கொண்டது போல், இவர்களும் அஞ்சி க்ஷமை கொள்ளுகின்றனர். இப்படி யிவன் பரத்வத்தைக் காண்பிப்பது. 'நீங்கள் வீதிகளிலும், வீடுகளிலும் நம்மைக் கண்டபடி பேசி அழைத்துவிட்டு இப்போது பறை கேட்கின்றீர்களே. கொடுக்கமாட்டேன்' என்றறிவிக்கத்தான் இருக்குமென நினைத்து இவர்கள் தங்களுடைய தவறுதலைப் பொறுக்கப் ப்ரார்த்திக்கின்றனர்—கோவிந்தா! குறை வொன்று மில்லாதவனென்று உன்னை யாமறிந்தோம். இப்படிப்பட்ட உன்னை சிறுபேர ழைத்ததும் நாங்கள் அறியாத பிள்ளைகளானதாலும், அன்பினாலும் உனக்கு மெமக்கும் இங் கொழிக்க ஒழியாத உறவினாலும் நேர்பட்டது. அவ்வுறவு தானும் பிறவியின்றி உன்னைப் பெற்றதாலானது. அதாவது நீ எங்கள் இடைக்குலத்தில் வந்து பிறந்ததாலும், சேதநர் களான எங்களுக்கும் இறைவனான உனக்கும் ஔத்பத்திகமாக அதாவது ஸஹஜஸித்தமாக அநாதியாக உன்னைப் பெற்றதாலுமானது. அவ்வுறவைக் கண்டே எங்களை நீ காக்க வேண்டுமே யன்றி' நாங்கள் இடும் பச்சையில் பெருமையைக் கண்டன்றென்றபடி.

அறிவும் அனுஷ்டானமு மில்லாதவர் யாம் என விளக்க, கறவைகள் இத்யாதி. கண்ணபிரானே! நீர் இவ்வவதாரத்தில் ஸாந்தீபினியின் பின்சென்றும், ராமாவதாரத்தில் வஸிஷ்டவிச்வாமித்ராதிகளைப் பின் பற்றியும் அறிவு பெற்றது போலவும், உலகில் உத்த மர்களான ஆசார்யர்களின் பின் சென்று சீடர்கள் வித்யைகளைப் பெறுவது போலவும் நாங்கள் ஒரு பெரியாரின் பின் சென்றதில்லை. செல்லுவதெல்லாம் கறவைகள் பின்னே. எங்களுக்கு ஆசார்யர்களே ஸாக்ஷாத் பசுக்களென்றால் எங்களுக்கு எவ்வளவு அறிவிருக்கு மென்பது சொல்லாமலே விளங்கும். அக் கறவைகளின் பழக்கத்தினால் நாங்கள் கற்றவை எவையென்னில், அவற்றைப் போல் பால் கறப்பதல்ல; கானம் சேர்வதும் உண்பதுமே.

இப்படி யறிவில்லாத எங்களுக்கு அனுஷ்டானத்திற்கு இடமேது? கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துண்போம்—பசுக்களைக் கறப்பது விடியற் காலத்திலே. கறந்தவுடன் அவிழ்த்துவிட்ட அவை கானத்திற்குப் புறப்படுகின்றன. அவற்றின் பின்னே போக வேண்டிய நாங்கள், காலத்தில் ஸ்நானம், ஸந்த்யை முதலானவற்றைச் செய்ய அவகாசம் பெறுவதில்லை. போகுமிடத்தில் வழியில் தீர்த்தமுள்ள விடத்திற்குப் போவதென்பது மில்லை. கறவைகள் போம் வழியிலே பின்னே போகின்றோமே யன்றி, நாங்கள் போக வேண்டு மிட மாராய்ந்து கறவைகளைக் கொண்டு போவதில்லை. இப்படிக் கானம் சேரும் வரை செல்வதே தொழிலாக வுள்ள எங்களுக்கு நடுவில் ஸ்நானாதிகளுக்கு இடமில்லை. கானம் சேர்ந்த பிறகும் வெகுகால மாயிடுவதாலே பசி பொறுக்காமே உண்பதே பெரிதா கிறது. ஆகவே சேர்ந்துண்போம். சேர்ந்த தக்கணமே உண்ண விழிகிறோம், அங்கும் பின் சென்று உண்போம். கறவைகள் செல்லும் காடுமேடெல்லாம் பின்னே சென்று கொண்டே, உட்காருவதற்குக் கூட அவகாசம் பெறாமல், ஓடினபடி உண்போம். இது எங்கள் அனுஷ்டானத்தின் வகை. உண்போம்— நாங்கள் உண்பதை இன்னதென்று சொல்லுவதற்கில்லை. ஸ்நானஸந்திகளே இராதபோது எம்பெருமானுக்குத் திருவாராதன மேது. ஆக எம்பெருமானுக்கு நிவேதனம் செய்யாத அன்னம். அதுவும் முதனாள் இரவிலே

சித்தப்படுத்திய பர்யுஷிதாந்நம், எழுந்தவுடன் எடுத்து வரப்பெற்றது. அது போதாத போது கறவைகளைக் கண்ட ஸமயமெல்லாம் (கன்று தூரத்திலிருந்தாலும்) கறந்துண் போம். அதற்காகவும் நாங்கள் கறவைகள் பின் செல்வது. வைச்யர்கள் பலவகைப் படுபவர். 'க்ருஷி கோரக்ஷவாணிஜ்யம் வைச்யம் கர்ம ஸ்வபாவஜம்' (कृषिगोरक्षवाणिज्यं वैश्यं कर्मस्वभाजं) என்னப்பட்டதன்றே. வட்டிபெறுதல், வியாபாரம், விவஸாயம், கால்நடை மேய்ப்பது என்ற நாலுவகைத் தொழிகள் உள. அவற்றில் மற்றைத் தொழில்களிலிழிந்த வைச்யர்கள் காலத்தில் ஸ்னானதிகளைச் செய்துகொண்டு தொழிலில் இறங்குவது ஸுலப மாகக் காண்கிறது. கால்நடை மேய்க்கு மெங்களைப்போன்றோர்கும் அனுஷ்டானத்திற்கும் வெகு தூரம்.

இப்படி ஈனமான இடைக்குலமும் உயர்வற உயர்ந்துள்ள உன்னைப் பிறவியினின்று பெறப் பாக்யம் உடைத்தானதை என்னென்று சொல்வது. உண்மையில் நாங்கள் இராமா வதார காலத்தில் அன்றீன்ற தனக்கு இறங்கும் கறவைகள் போன்ற பெரிய மஹர்ஷி களின் பின் சென்று கானம் சென்று அவர்களிடம் வித்யைகளை ஓதி உன்னை (உண்டு) அனுபவித்து வந்தோமே, அந்த புண்யமே இப்போது அறிவொன்றுமில்லாத ஆய்க் குலத்தில் நாங்கள் பிறந்தவிடத்திலும் உன்னை விடாமே பெறக் காரணமாயிற்றெனல் வேண்டும்.

அல்லது நாங்கள் எவ்வளவு க்ருத்யத்தை விட்டாலும் எங்களுக்கேற்பட்ட கோர ரக்ஷை என்ற பெரிய தர்மத்தைப் பேராவலோடு நாங்கள் நடத்துவதால் அது வொன்றே உன் தன்னைப் பிறவி பெறும் தனைப் புண்ணியமாயிற்று. கறவைகள் மேய்வதற்கு முன்னே நாங்கள் உண்பதில்லை. பூரணமாகச் செய்தால் இதற்கு மேலும் பலனுண்டு. (இதுவும் கறவை இத்யாதிக்குக் கருத்தாம்.)

இடைப்பிள்ளைகள் ஆடவர் கறவைகள் பின்னே சென்று கானம் சேர்வதுண்டு. பெண்கள் செல்வதாகச் சொல்லக் கூடுமோ வென்னில், ஸ்த்ரீ, புருஷன் என்ற பேதத்தை வைக்காமல் பொதுவிலே சாதித் தொழிலைச் சொன்னதென்க. இனி, ஆண்பிள்ளைகள் முன்பே போகப் பெண்பிள்ளைகள் அவர்களுக்கு ஊண் எடுத்துக் கொண்டு பின்னே போய் அவர்களுக்கு மளித்துத் தாமும் உண்பர்.' மேலும், புருஷர்கள் மாடுகளை மேய்க்கப் போனால் பெண்டிர் பசுக்களின் சாணகத்தைப் (கோமயத்தை) பொறுக்கிச் சேர்த்து வரக் கறவைகள் பின் செல்வதுண்டு.

பிறவி பெறும் தனை—குஹன், சபரி முதலானோருக்கு இராமனைப் பெறப் புண்ணியம் இருந்தது போல வன்று எங்கள் புண்ணியமிருப்பது, வேறிடத்திற் பிறந்து ஏதோ வொரு காலத்திலே மட்டும் அவர்கள் அவனைப் பெற்றது. அங்ஙனின்றி நீ பிறந்ததே இங்கே என்று சொல்லும்படி பிறவி பெறும் தனைப் புண்ணிய முடையோம் யாம்.

குறைவொன்றுமில்லாத கோவிந்தா — உண்ணும்போது கோவிந்தனை நினைக்க வேண்டு மென்பர். நாங்கள் உண்ணும்போது கோவிந்தனை நினைப்பது மட்டுமில்லை. நேரில் கண்டுகொண்டு மிருப்பது. நீ இறைவனாக மட்டுமிருந்திடாதே இக் குலத்திற் பிறந்து கோவிந்த பட்டாபிஷேகம் செய்து கொண்டு எங்களுக்கும் கறவைகளுக்கும் கூட எளிதிற் சேர்ந்து களிக்கும்படி வெகு ஸுலபனாய் ஸுசீலனாய் விட்டதாலே குறை வொன்றுமில்லாதவனானாய். பரமபதம் முதலான விடங்களில் இருந்தபோது பரத்வம் மட்டுமே காணப்பட்டதால் உனக்குக் குறையிருந்தது. இப்போது அஃதில்லை. நீ உன் னுடைய ஸ்வரூபஸ்வபாவங்களைப் பூரணமாக இப்போது எங்களுக்குப் புலப்படச் செய்த

தாலே பரபக்தி நிஷ்டர்கள் பரஜ்ஞானம் பெறுவது போல் நாங்கள் உன் விஷயமாக விசத ஜ்ஞானம் பெற்று உனது குறைவில்லாமையை நன்குணர்ந்தோம். ஆக நீயே இறைவன்.

உறவேல்—ஏல்—அசை. உறவோவென்றால் என்ற பொருளை இது குறிக்குமாகில் கொள்க. இங்கொழிக்க ஒழியாது—இங்கு. இந்த ஜன்மத்திலே. இடைக்குலத்திலே எங்களோடு நீயும் பிறந்ததாலேற்பட்ட உறவு இந்த ஜந்மத்திலே ஒழிக்க ஒழியுமோ என்றபடி. மேலும் நீ இறைவனான படியாலே உனக்கும் எங்களுக்கும் சேஷசேஷி பாவம். அதாவது நீ ஸ்வாமி, நாங்கள் அடியோம் என்கிற உறவு எங்குமே எப்போதுமே உன்னாலும் எங்களாலும் மற்றும் யாராலும் ஒழிக்க ஒழியாததாயிருக்க இங்கு மட்டும் ஒழிவதெப்படி? ஒருக்கால் இருக்குமுறவும் எங்களுக்குத் தெரியாமலிருந்தால், இருந்தும் இல்லாதது போன்றதாகையாலே உறவொழிந்ததென்னலாம். நாங்கள் இது விஷயம் நன்கு தெளிந்து கொண்டிருப்பதால் இங்கு = இந்த ஜன்மத்திலே உறவு ஒழிக்க ஒழியாது—இங்கொழிக்க ஒழியாது.— இங்குச் சிலருக்குத் தெரியாதென்னலாம்.— ஒழியாது. ஒழியுமென்ன வொண்ணாது; இவ்வுறவை ஏல் ஏற்றுக்கொள்.

மேலும், இங்கொழிக்க ஒழியாது. ராமாவதாரத்திலே ஸம்பந்தம் ஏற்பட்டிருந்தது. 'தே வயம் பவதா ரக்ஷ்யா: பவத்விஷயவாஸிந:' (ते वयं भवता रक्ष्याः भवद्विषयवासिनः) என்றுரே! அந்த உறவு அந்த இடத்தை விட்டு தேசாந்தரலோகாந்தரங்களிலே ஸஞ்சாரம் செய்தொழிந்தால் ஒழியும். இங்கு இந்தப் பிறவியுறவு ஒழிக்க ஒழியாது. இனி, உன் தன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது உன்னை விட்டு வேறெவரோடு எங்களுக்கிருக்கும் உறவானது நிருபாதிகமன்று; ஔபாதிகம்; சாதி. குலம் போன்ற ஸம்பந்தத்தாலுண்டானது. ஆக அது இங்கு ஒழியும். அதைப்போல் உன்னோடுள்ள உறவு இங்கு ஒழியாது பரமபதத்திலே போலே இங்கும் நிலைத்தே நிற்குமெனவும் பொருளாம்.

அறியாத பிள்ளைகளோம்-நீ மனுஷ்யபாவனையைச்செய்து பரம் பாவத்தை மறைத்ததாலே நாங்கள் அறியாமலிருந்தோம். இப்போது பரத்வத்தை வெளிப்படுத்தினதாலே உண்மை யுணர்ந்தோம். அப்போது நாங்கள் சிறுபேரழைத்தாலும் சிசுபாலாதிகளைப் போலே த்வேஷத்தினாற் பேசினதொன்றுமில்லை' அன்பினாலழைத்தோம். சிறுபேர்—மிகவும் ஸுலபனாய் ஸுசீலனாயுள்ள உன்னை, கோவிந்தா என்று அழைப்பதே உனக்கு உகப்பாயிருக்க, உனக்குக் குறைவு தோன்றும்படி நாராயணா என்றும் இறைவா என்றுமழைப்பதே எங்களுக்குக் குற்றமாகும். ஆகிலும் சீறவேண்டா மெனவுரைப்பர். இப்போது பரத்வத்தை மட்டு முணர்த்தும் நாமங்களே சிறுபேர்கள். கீதையிலே அர்ஜுனன் சொன்னது போல் பரத்வத்தை மறந்து சிறுமையைத் தெரிவிக்கும் ஈனப் பேர்களைச் சொல்வதே சிறுபேரழைப்பது என்பதும் யுக்தமே. இனி, கோவிந்தா என்றது மட்டுமோ. இறைவா என்றது மாத்திரமோ சொன்னால் சிறுபேர் அழைத்ததாம். குறைவொன்றுமில்லாத கோவிந்தா, இறைவா என இரண்டையும் சேர்த்துச் சொன்னால் சீறுவதற்கில்லை யென்னலுமாம். அழைத்தனவும் = அழைத்தல்களுக்கும், சீறியருளாதே—சீறுவதும் ஒருவித அருளேயாம். ஸம்ஹாரம் முதலியனவும் தயையின் கார்யங்களென்று தயாசதகத்திலே ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தார். ஆகிலும் எங்களுக்கு அவ்வருள் வேண்டாம். சிறந்த அருளே வேண்டும்—அது ஏதென்னில், பறை தாராய் — பறை தருவது போன்றவற்றை நடத்தும் அருளே என்றபடி, இறைவா என்றதாலே ராமாதியவதாரங்களைப் போலின்றி தனது ஐஸ்வர்ய ஸ்வபாவத்தைத்தெளிவாக்கு மிவ்வவதாரத்தின் பெருமையும் கருதப்பெற்றதாம்.

உட்பொருள்—மாயவனை யென்ற பாசுரத்திலே ஆசார்யன் தத்துவஹித புருஷார்த்தோபதேசம் செய்யும் வகைச் சொல்லப்பெற்றது. பிறகுப் பாஞ்சகாலிகப்ரக்ரியையாலே எம்பெருமானை ஆராதிப்பது சொல்லியாயிற்று. இப் பாசுரத்தில் இப்படி யநுஷ்டானம் செய்துவரும் சிஷ்யர்கள் ஆசார்யோபதேசத்தைப் பின்பற்றி ப்ரபத்தியை யநுஷ்டிக்கும் முறை கூறப்படுகிறது. 'கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துண்போம்' என்று கர்மயோகம் செய்ய வியலாமையைச் சொல்லி, 'அறிவொன்றுமில்லாத' என ஜ்ஞானயோகம், பக்தியோகம் ஒன்றுமில்லாமையைச் சொன்னதாம். ஆகக் கார்ப்பண்யம் கூறப்பெற்றது. கறவைகள் இத்யாதியால் மாடுமேய்ப்பதென்னும் தங்கள் விருத்தியைச் சொன்னதால் ஆனுகூல்யஸங்கல்ப்பமும் அறிவிக்கப்பெற்றதாம். 'புண்ணியம் யாமுடையோம், குறைவொன்று மில்லாத, உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது' என்றவற்றால் இதுவரையில் படிப்படியாக நடத்திவந்த எம்பெருமானிடம் தமக்கு உள்ள ஸ்வாமித்வமென்ற ஸம்பந்தத்தின் விசேஷத்தை, அதாவது, ஒழிக்கவொழியாமையைச் சொன்னதால், அவன் அவசியம் காப்பான் என்ற மஹாவிச்வாஸம் மொழிந்தபடியாம், 'சிறுபேரழைத்தனவும்' என்று இனி ப்ராதிகூல்யத்திலே ப்ரவர்த்தியாமையைப் பகர்ந்ததாம். 'நீ தாராய் பறை' என்று கோப்த்ருத்வவரணமும் ப்ரஸமர்ப்பணமும் சொல்லிற்று. 'உன்தன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது' என்று நித்ய சேஷத்வாநுஸந்தானம் அடங்கிய ஆத்ம நிக்ஷேபமாகிற ப்ரபத்தியும் பணித்ததாம்.

இனி, கீழே இஜ்யாகாலத்திற் செய்யவேண்டியதைச் சொன்ன பிறகு இங்கு ஸ்வாத்யாயகாலம் யோககாலமிவற்றில் நடக்கும் கார்யங்களைக் கூறினதாம்—கறவைகள் என்ற அடியாலே. ஸ்வாத்யாயகாலத்திலே வாத்ஸல்யம் மிகுந்து பசுக்களைப்போன்ற பாகவதர்களை யாச்ரயித்து அவர்களுடன் திவ்ய ஸூக்திகளை யனுபவித்து வருவோமென்றதாம். 'அறிவொன்றுமில்லாத' இத்யாதியால் ஜாகரம் (விழிப்பு) சொப்பனமென்ற அலைதலின்றி எம்பெருமானைப் பெற்றுறங்கும்படி புண்யம் செய்திருப்பது சொல்லப்பெற்றதால் யோகமும் சொல்லியாயிற்று. 'அன்பினால் சிறுபேரழைத்தனவும் சீறி யருளாதே' என்று இதுவரையில் உபசார வியாஜமாக அபசாரங்கள் செய்ததை யெல்லாம் பொறுக்கவும், 'நீ தாராய்பறை' என்று ஒழுங்காக இனி அபிகமனம் முதலாக எல்லாம் நடக்குமாறு அனுக்ரஹிக்கவும் ப்ரார்த்தனை செய்யப்பெற்றதென்றபடி. (28)

தனது ஸ்வரூப ஸ்வபாவங்களை யெல்லாம் தெரியும்படி செய்த கண்ணனின் நோக்கத்திற்கிணங்கி இடைப்பெண்களும் தங்கள் உட்கருத்தை வெளியிடுகின்றனராய், பறை பெறுவதற்காகவோ கோபர்கள் நினைத்த வண்ணம் கண்ணனைக் கணவனாகப் பெற்றுச் சிற்றின்பத்திலிழிவதற்காகவோ தாம் வரவில்லை யென்பதையும் வெளிப்படையாக விண்ணப்பிக்கின்றனர்—

29. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்தநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்தன்னோ
டுற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

கோவிந்த—கோவிந்தனே!
சிற்றம் சிறுகாலே—மிகச்சிறிய காலை வேளையிலே
வந்து—நீ உள்ள இடம் வந்து
உன்னை சேவித்து உன்னைத் தெண்டனிட்டு
உன் பொன் தாமரை அடி ஏ | தாமரைப்பூப் போன்ற உனது அழகிய திருவடி களையே
போற்றும் பொருள் | மங்களாசாஸனம் செய்வதன் பலனை
கேளாய்—செவிபடுத்திக் கொள்வாயாக.
இற்றை (இன்று)—இன்றைய தினம்
பறை—பறையை
கொள்வான்—கொள்வதற்காக
அன்று—அன்று (நாங்கள் போற்றுவது)
காண்—(ஏனெனில்)
எற்றைக்கும்—இந்த ஜந்மத்தில் எல்லா நாளும்
ஏழ் ஏழ் பிறவிக்கும் | வரும் ஏழேழு பிறவி களிலும்
உன் தன்னோடு—உன்னோடு
உற்றோமே ஆவோம் | உறவுள்ளவராகவே யிருப்போம்
உனக்கு ஏ—ஸதா ஸர்வஸ்வாமியான
நாம்—நாங்கள் [உனக்கே
ஆள் செய்வோம்—பணி செய்வோம்.
பெற்றம்—பசு மாடுகளை
மேய்த்து—மேயவிட்டு
உண்ணும்—ஜீவித்து வரும்
குலத்தில்—இடைக்குலத்தில்
பிறந்த நீ—அவதரித்துள்ள நீ
எங்கள் குற்றேவல்—நியமனப்படி நாங்கள் செய்யுமவற்றை
கொள்ளாமல் போகாது | ஸ்வீகரிக்காது இராமல் (ஸ்வீகரித்துக் கொண்டு)
நம் மற்றை காமங்கள்—எங்களுடைய மற்ற காமங்களை
மாற்று—நீக்கு, ஏல் ஓர் எம்பாவாய்.

கோவிந்தா—கோபாலா என்ற சொல் போன்றதன்று இந்தச் சொல். இதன் கருத்தாவது—கோவர்த்தந மலையைக் கையிலேந்தி நின்று கன்மாரி காத்துக் கோவிந்தபட்டாபிஷேகம் செய்துகொண்ட பிறகும் உனது பெருமையை யறியாதார் உளரோ வென்ற வாறு. சிற்றஞ்சிறுகாலே — மிகச் சிறிய காலை வேளையிலே வந்துள்ளோம். விடியற்காலமென்பது செய்யத் தகாதவைகளை விலக்கித் தக்கவைகளைக் கொள்ள ஆராய்வதற்குத் தகுந்த காலம். அந்தக் காலத்திலே நாங்கள் மற்ற காமங்களைக் கேட்க வருவோமோ? காலே என்ற விடத்தில் 'காலை' என படிப்பது வெகுவாகப் பெரியோர் இசையாதது. கால் என்பதற்குப் பொதுவிலே காலம் என்றே பொருளானாலும் இடைப்பெண்கள் வந்தது விடியற்காலமாகையாலே அச்சொல்லே அதைக் குறிக்கும். இனி, எங்கள் வாழ்நாளிலே உன்னிடம் வர எங்களுக்கு நேரும் காலம் மிகச் சிறியது. அதில் வந்திருப்பதாலே உபேக்ஷியாமலருள வேண்டு மென்றதுமாம்.

வந்து — இடையர்களின் கார்யத்தைப் பூர்த்தி செய்ய அவர்கள் உன்னை நாங்கள் உள்ளவிடமே அனுப்புவார்களே. அப்படியிருக்க நாங்கள் இங்கே வந்தது எங்களுடைய ஆகிஞ்சன்யத்தையும் அநந்ய கதிகத்வத்தையும் விண்ணப்பித்துக் குற்றேவல் செய்யக் காத்திருப்பதற்கு இணங்க நடந்து கொள்ளவேண்டு மென்பதற்காக. அடியார்கள் அடிகள் உள்ளவிடம் சென்றல்லவோ பணிவிடை செய்வது தகும். உன்னை — நோன்பு நடத்தவே வந்தவர்களாகில் நப்பின்னையிடம் சொல்லிவிட்டு கூடப் போய்விடலாம். நேரில் விண்ணப்பிக்க வேண்டு மென்பதில்லை. சேவித்து, ஏற்கனவே இடையர்கள் உன்னை வேண்டியும், நியமித்துமிருக்கிறார்களே. நோன்புக்கு அதுவே போதுமே. நாங்கள் இங்ஙனம் சரணாகதி செய்ய வேண்டுமோ! உன் பொற்றாமரை யடியே போற்றும் உண்மையில் நோன்பு நோற்பதற்கு வேறு யாராவது கூடத் துணையாகலாம். செம்பொற் கழலடிச் செல்வனான பலதேவன் துணையாகக் கூடியவனல்லனோ? ஆதலால் அவனையும் விட்டு

உன்னைச் சேவிப்பது நோன்புக்காகவன்று. அதிலும் உன்னடியைக் போற்ற வந்தோமே யல்லது உனது ப்ரதாபங்களை சொல்லும் நோக்கத்தினாலல்ல. அதனால் அடியார்களா யிருக்க விரும்பி யிருப்பது தோற்றும். பொன்னடியைக் போற்ற வந்தோமென்கிறோம். இதனால் அதனழகிலீடுபட்டு அதையே ப்ராப்யமாக நினைத்திருக்கிறோமென்பது தெரிய லாம். மேலும் போற்றுகின்றோம். போற்றுவதாவது மங்களா சாஸனம் செய்வது. அதாவது எங்களுக்கென்று ஒரு பலனை விரும்பாமல் உனக்கே எல்லாச் சிறப்பையும் வேண்டிக் கொள்வது. இது எங்களுக்கு உன்னைப் பற்றவுள்ள அடிமைத் தனத்தை நன்கு நினைத்து வருவதாகையாலே நாங்கள் ஒரு பலனிலும் நசை வைக்காமலிருப்பது தெளிவென்றபடி.

போற்றும் பொருள் — போற்றுவதென்றதாலே பலனொன்றையும் விரும்புகிறதில்லை யென விளக்குமிவர் போற்றுவதற்குப் பொருள் ஒன்றிருப்பதாக வைத்து இங்ஙனம் சொல் வது சேருமோ வென்னில், திருப்பல்லாண்டிலே பெரியாழ்வார் பல்லாண்டு பாடுவதற்கும் பலனை, 'பல்லாண்டென்று — நவின்றுரைப்பார் நமோ நாராயணாயவென்று பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே' எனவருளிச் செய்துள்ளாரே. பல்லாண்டு பாடுவதற்கு பல்லாண்டு பாடுவதே தான் பலன். பல்லாண்டென்ற சொல் லானது பரவசமாய் ஸ்வயம் ப்ரயோஜநமாய் வருகையாலும், ஒரு தரம் பல்லாண்டு பாடினவனுக்கு எம்பெருமானுடைய அனுக்ர்ஹத்தாலே பல தரம் பல்லாண்டு பாட வாய்ப்பதாலும் அதற்கு அதுவும் அதைப் போன்றதுமே பலனாகா நின்றது. இப்படிப் பரிபக்குவமான சேஷத்வஜ்ஞானமானது, பல்லாண்டு பாடி வைப்பது போல் கைங் கர்யத்திலும் இழிய வைக்கிறதாகையாலே இப்பாசுரத்திலே ஆட் செய்வதையும் போற்று தலின் பொருளாகப் பணித்தனர். ஆகையால் தங்களுக்காகவாம் பலனொன்றைக் கோலாமே போற்றுவதாலே போற்றுதலுக்குப் பொருள் வேறு கிடையாதென்கிறது. மங்களாசாஸனத்திற்கு அபேக்ஷித்தபடி மங்களம் சித்திப்பதேபலன். பிறிவியின்றி பல் லாண்டு பாடுவதும் அபேக்ஷிக்கப்படுவதாமே.

பெற்ற மித்யாதி—இங்கே, 'நீ கொள்ளாமற் போகாது' என்பதற்கு, 'நீ கொள்ளா மற் போக வொண்ணாது' என வினை முற்றாகப் பொருள் கொள்வர். போகவொண்ணாது என்னும் சொல் போகாது எனக் குறைந்து கிடக்கிறதென்ன வேண்டும் போலும். இங்கே 'போகாய்' என்னாது, போகாது என வருவினதால் போகாமல் எனப் பொருள்தான் அதற் கென்பதற்கேற்ப, மாற்று என்பதோடு அதைச் சேர்த்து ஒரு வாக்யமாக்கிப் பதவுரை வரைந்தனம். நீ எங்கள் குலத்திற் பிறந்திருப்பதாலே எங்கள் குற்றேவல்களைக் கொள்வா யென்றே நினைக்கிறோம். அப்படிக் கொள்வதோடு கூட, நாங்கள் ஏழேழ் பிறவிக்கும் ஆட் செய்ய விரும்பியிருப்பதாலே அது விஷயத்தையும், மற்றைய காமங்களை மாற்றுவதை யும் அருளக் கேட்டுக் கொள்ளுகிறோமென்றதாம். ''குற்றேவலெங்களை என்றவிடத்தில், 'ஐ' சாரியையாம். வேற்றுமையுருப்பாகவே வைத்து, 'குற்றேவலுக்காக எங்களைக் கொள்ளாமற் போகாமல்' என்வர்வது உரைக்க. 'கொள்ளாமற் போகாது' என்பதற்கு ஏழேழ் பிறவியிலும் ஆட்செய்ய நாங்கள் விரும்பியிருப்பதாலே எல்லாக் காலத்திலும் எங்கள் குற்றேவலை ஸ்வீகரித்து எனவும் பொருள் உரைக்கலாம். இப்படிக் கொள்வதற்கு கிருபை செய்வதற்கு முக்கியமான காரணம் நாங்கள் ஸேவிப்பதும் போற்றுவதுமே யல்ல; பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து உறவைத் திடப்படுத்திக்கொண்டதே யாம். பசுக்களின் வயிறு நிறைந்த பிறகு உண்ணும் குலமிது. கோக்களுக்கு ஆராதனம் செய்யும் குலமிது என ஆதரம் வைத்துக் கோவிந்தனாய் நீ அவதரித்தருளினாய். கோக்களுக்கு

அந்தர்யாமியாயிருந்து ஸ்வீகரித்து, நேரிலும் ஸ்வீகரிக்க அவதரித்துள்ளாயென நம்புகிறேனென்றபடி. இரு விபூதிகளுக்கு மிறைவனானவன் இங்கு இடைக்குலத்தி லெழுந்தருளியிருக்கும்போது தக்க உபசாரங்களைச் செய்து ஆராதிக்காமலிருக்கமாட்டாமே ஆய்ப்பாடிக்குச் செல்வத்தை விருப்புவது குற்றமாகாதெனவும் இவர்கள் உள்ளமிருப்பது. 'இஃதென்ன வித்தை? இதுவரைப் பறை கொள்ள வந்ததாகச் சொன்னீர்களே. எது உண்மை யென்னவே, 'இற்றைப் பறை கொள்வான் அன்று காண்' இத்யாதியைக் கூறினர்.

குற்றேவல்—குறு ஏவல் = குற்றேவல். குறுதல் தரித்தல் = தாங்க முடிதல். சக்யமானது ஏவல் = ஆஜ்ஞா கைங்கர்யம்.

'பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷசதம் ஸ்த்திதே ।
ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாமிதி மாம் வத ॥
(परवानास्मि काकुत्स्थ त्वयि वर्षशतस्थिते । स्वयं तु रुचिरे देशे क्रियतामिति मां वद)

என்றபடி சேஷியினுகப்பை நன்கறிந்து செய்வதில் உள்ள குதூஹலத்தாலே ஆஜ்ஞையை எதிர்பார்ப்பது. என்ன செய்வது என்று கேட்டுச் செய்தால்தானே கைங்கர்யமாகும். நித்யர்களும் முக்தர்களும் போலே நேராக ஸ்வாமியின் கருத்தைக் காண வியலாதபோது, கேட்டுத் தெரிந்து செய்ய அனுகூல மேற்பட்டுள்ளபோது, அங்ஙனம் செய்வதே உசிதமாம் இங்கே கோவிந்தா. குற்றேவல் என்றருளினதை நினைத்துத் திருமொழியிலும், 'கொம்மை முலைகளிடர் தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய் செய்யும் தவந்தானென்' என ஆண்டாள் அருளிச் செய்தாள்.

இவர்களைக் கைங்கர்யத்திற்கு வைத்துக்கொண்டால் விஷய ப்ராவண்யமே இவர்களுக்கு நேர்ந்துவிடுமென அவன் நினையாமைக்காக, 'மற்ற நம் காமங்கள் மாற்று' என்றனர். எங்களுக்குக் காமங்கள் உண்மையில் இல்லை—

'ந தேவலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே'
பத்யு: ப்ரஜாநாமைச்வர்யம் பசூநாம் வா ந காமயே ।
அஹம் கதம்போ பூயாஸம் குந்தோ வா யமுநா தடே,'
(न देवलोकाक्रमणं नामरत्वमहं वृणे । पत्युः प्रजानामैश्वर्यं पशूनां वा न कामये ।
अहं कदम्बो भूयासं कुन्तो वा यमुना तटे)

'இந்த்ரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன்'
என்ற நிலையிலுள்ள எங்களுக்கு வேறு காமங்களில் நோக்கமேது? மநுஷ்யாவதாரம் செய்த உன்னிடமும் இத்தகைய காதல் கொள்வதாயில்லை. ஒருக்கால் நேரும், ஆகிலும் அவை வாராதபடி செய்வதும் உனக்கு அதீனமாகையாலே அந்தப் பாரத்தை எங்கள் மேல் சுமத்தாதே நீயே மாற்றி எங்களைத் திருத்திப் பணி கொள் என்றபடி.

எற்றைக்கு மென்றது இம்மையிலும் இன்று மட்டுமன்று. எல்லா நாட்களிலும் மெனவறிவிக்க. ஏழேழ் பிறவிக்கும்' எத்தனை ஏழு ஜன்மங்களானாலும் உனக்கு ஆட்செய்யும் ஜன்மங்களாகவே யிருக்கவேண்டுமே யல்லது,

'ஸுசிர்யஸ்ஸதா து யோ பக்த: ஸப்தஜந்மாந்தரம் நர: ।
தஸ்யைவ து ப்ரஸாதேந ருத்ர பக்த: ப்ரஜாயதே ॥

சங்கரஸ்ய து யோ பக்த: ஸப்தஜன்மாந்தரம் நர: ।
தஸ்யைவ து ப்ரஸாதேந விஷ்ணுபக்த: ப்ரஜாயதே'

(सूर्यस्यैव तु यो भक्तः सप्तजन्मान्तरं नरः । तस्यैव तु प्रसादेन रुद्रभक्तः प्रजायते ।।
शंकरस्य तु यो भक्तः सप्तजन्मान्तरं नरः । तस्यैव तु प्रसादेन विष्णुभक्तः प्रजायते ।।

என்கிறபடி வேறு தேவதைகளிடம் பக்தி பண்ணுவதில் பலவேழு ஜன்மங்களைக் கழிப்பது வேண்டாமென்றபடி.

உற்ரேமேயாவோம்—ஒழிக்க வொழியாத உறவைவுடையோமென்பது மட்டுமின்றி அவ்வுறவை அறிந்து மிருப்போமென்றதாம். இனி, கீழ் ஏழுலோகங்களிலும் மேல் ஏழு லோகங்களிலும் பிறந்தபோது மென்றதாம்.

'திவி வா புவி வா மமாஸ்து வாஸோ நரகே வா நரகாந்தக ப்ரகாமம் ।
அவதீரிதசாரதாரவிந்தௌ சரணௌ தே மரணேऽபி சிந்தயாமி' ॥
(दिवि वा भुवि वा ममास्तु वासः नरके वा नरकान्तकप्रकामम् ।
अवदीरितशारदारविन्दौ चरणौ ते मरणेऽपि चिन्तयामि ।।)

என்றது காண்க. உனக்கே நாமாட் செய்வோம் — உற்ரேமே யாவோம் என்று உறவை விடாமலிருப்பதைக் கோலின கணக்கிலே, உனக்கு ஆட்செய்வோமேயாவோ மெனக் கூரு தொழிந்ததென் எனில், சிற்சில சமயங்களில் முக்தர்கள் அனுபவத்திலாழ்ந்து நின்று கைங்கர்யத்திலிழியாமலிருப்பது முண்டாகையாலே எப்போதும் ஆட்செய்வதென்பது இல்லையாதலாலென்க. 'உனக்கே ஆட்செய்வோம். வேருெருவர்க்கு ஆட்செய்வதில்லை' யென்றதாலே பாகவதர்க்கு ஆட்செய்வதை விலக்கினதாகாது. தன் விஷயத்திற் போலே தன்னைச் சார்ந்தார் விஷயத்திலும் நாம் அடிமைகொள்ள வேண்டுமென எம்பெருமான் திருவுள்ளமிருப்பதாலே அவனுகப்பையே நோக்கி ப்ரவர்த்திக்கும் அவன் தாஸர்களுக்கு அவனுகப்பிற்காகவே பாகவதர்க்கடிமை செய்வதும் முக்கியமாகிறதன்ரே? ஆக பாகவதர்க்கு ஆட்செய்வதும் அவனுக்கே ஆட்செய்வதாக முடிகிறது. பாகவதர்களுக்கு பாகவதத்வமடியாக ஆட் செய்வதாகும். 'குணைர் தாஸ்யமுபாகத:' (गुणैर्दास्य मुपागतः) என்றபடி அவர்களின் குணங்களிலீடுபட்டு அடிமை செய்தால் அப்போது எம்பெருமானிடத்திலே ஜ்ஞானமும் பக்தியும், எம்பெருமானைச் சார்ந்தாரிடம் ப்ரேமமும், எம்பெருமானுக்காகாத விஷயத்திலே வைராக்யம் போன்றவையுமாகின்றபடியாலே அப்போதும் எம்பெருமானைப் புரஸ்கரிக்கக் குறையில்லை. மேலும், ஸத்யம், அஹிம்ஸா, பூததயை போன்ற சில குணங்களிலீடுபடுவதானுலும் பாகவதத்வமடியாக வந்த அடிமைக்கு அது விருத்தியைக்கொடுப்பதத்தனை பாகவதத்வ மில்லாத விடத்திலே அவைகளைக் கண்டாலும் இவன் அடிமை செய்வதில்லையே யெனவாராய்க.

கீழ்ப்பாசுரத்திலே சரணுகதியின் அங்கங்கள் சொல்லப் பெற்றன. இங்கே அதன் பலன் வெளியிடப்படுகிறது. இப்படி இவர்கள் நோன்பிலே நோக்கில்லாமையைத் தெளிவித்ததாலே கீழ்ப் பாசுரங்களிலே ஆங்காங்கு பறை யளிக்கப் பிரார்த்தித்த இடங்களிலும் இக் கருத்துக் கிணங்கவும் பொருள் கொள்ளக் கூடுமென்பதைக் கீழே உறைத்துள்ளோம்.

உட்பொருள்—தத்துவஹித புருஷார்த்தங்களை ஸதாசார்யன் மூலமாக நன்கறிந்து, அபிகமநம், உபாதாநம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என ஐந்து வகையாகப்பிரித்து

நான்தோறும் கைங்கர்யம் செய்வதும்' ப்ரபத்தியை யநுஷ்டித்துக் கிருதகிருத்யனுவதும் கீழ்ப் பாசுரங்களிலே கூறப்பட்டன. இப்பாசுரம் அவற்றைச் சுருக்கிக் கொண்டு ப்ரபத்தி யின் பலனை வியக்தமாக வெளியிடுகிறது.

சிற்றஞ்சிறுகாலே — சிறு, அஞ்சு இறுகால் எனப் பதம் பிரிக்க. முன்னே சிற்றஞ் சிறு என்றதற்கு மிகச்சிறியதான எனப பொருள் கன்னங்கறேல், பச்சைப்பசேல் என்றாற் போல் சிற்றஞ்சிறு என்றது எனக் கொண்டோம். இவ்வட்பொருளுக்கேற்பவே ஆண்டாள் சிறுகாலே என்னுமே சிற்றஞ் சிறுகாலே என வருளினதாம். இறுகாலென்றது வினைத் தொகை. இறுதல் முடிதல், சிறியனவும் அஞ்சுமான முடிவுறும் காலங்களிலே என்றபடி. ஐந்து விதங்களில் ஒவ்வொன்றையுமே ஒரு நாள் முழுவதும் செய்தால் கூடக் காலம் போதாதென்னலாம். அங்ஙனமிருக்க இவற்றையெல்லாம் ஒவ்வொரு நாளிலும் அனுஷ் டிப்பதென்றால் அவற்றிற்கு முடிவிட்டு வகுத்த காலம் சிறியதாகத் தானேயிருக்கும்.

இப்படி அபிகமனாதிகளைச் செய்துகொண்டு பஞ்சகால ப்ரக்ரியை நிஜ கர்மங்களை நடத்துவதாலே அனுகூலனாய், ப்ரபத்தியை யநுஷ்டித்து நிர்பரனாய் வேறு காமங்களிலே மனம் செல்லாது பரமபுருஷார்த்த மொன்றிலேயே மனத்தைச் செலுத்தியிருக்க வேண்டு மென்றதாம்.

பெற்றமித்யாதி — மாடு மேய்க்கும் குலத்தில் பிறந்து மிகவும் மூடர்களான இடை யர்களைத் திருத்திப் பணி கொண்ட நீ எங்கள் குற்றேவல்களையும் கொள்ளாமற் போகாமே கொள்வதற்கு விரோதிகளாகும் காமங்களை மட்டும் மாற்றவேண்டும். உற்றோமேயாவோம் என்று பரசேஷதைகரஸமாகத் தம்மை எப்போது மநுபவிப்பது சொல்லிற்று. 'ஆட்செய் வோம்' என்ற கைங்கர்யம். இது த்வயத்தில் உத்தர கண்டத்திலே முதலிரண்டு பதங் களின் பொருளாம். மேலே நம: என்பதின் பொருள், 'மற்ற நம் காமங்கள் மாற்று' என்றுரைக்கப்பட்டது கைங்கர்யம் செய்யும்போது அதனால் க்யாதி, லாபம், பூஜை இவை களை யபேக்ஷிக்கின்றவனுக்கு அஹங்கார்ம்மகாரங்கள் இருக்கும். அஹங்காரதிகளை விட்டானாகில் தனக்கென்று அவன் அபேக்ஷிப்பதொன்றுமில்லை

கண்ணனுக்காட்செய்யவே காதல்கொண்ட கோபகன்னிகள் [illegible]களால் நோன்பு நோற்க ஏவப்பட்டு அதை நடத்தவேண்டும் முறையை முதலிலே தாங்கள் அறிவித்துக் கொண்டு, அதற்காக ஒருவரை ஒருவர் எழுப்பி ஒன்று சேர்ந்து நந்தன் திருமாளிகையே வந்து முறைப்படிக் கண்ணனை யெழுப்பித் தங்கள் கோலுதலைச் செவிபடுத்து கின்றவராய் கடைசியில், இற்றைப் பறை கொள்வானன்று காண் கோவிந்தா என்றார்களே. இவர்கள் இந்த நோன்பு நோற்றார்களா, இல்லையாவென்னில் — நோற்றார்களென்று சொல்வதே பொருந்தும். ஆனால் கண்ணனை யெழுப்பும் பாசுரத்திற்கு மேல் சிங்காசனத்திற்கெழுந் தருளப் பிரார்த்திக்கும் பாசுரத்தைக் கண்டபோது கண்ணன் எழுந்து விட்டதாகப் பாவிப் பது போல், மாலே மணிவண்ணாவில் மார்கழி நீராடுவான் வேண்டுவன கேட்டுப் பிறகு கூடாரையில் சம்மானத்தைக் கேட்பதால் நடுவே நோன்பு நோற்றாய் விட்டதென்ன வெண்ணுது. அதற்கு மேல் கறவைகளிலும், 'இறைவா நீ தாராய் பறை' என்று பறையையே கேட்கப் போவதாலே பறை பெற்றுச் செய்யவேண்டும் நோன்பு நடைபெற வில்லை யென விளங்குமன்றோ? ஆகிலும் அதற்கு மேல் சிற்றஞ் சிறுகாலில் பறைகொள்வ தற்காக நாங்கள் வரவில்லை என்றதால் நோன்பை விட்டு விட்டார்களென்னலாமே யென்பது ஸ்வரஸமாகாது. இந்த நோன்பு தேவதாந்தர ஸம்பந்தமிராதபடியும் பாரமை காந்தியத்திற்குப் பங்கம் விளைவிக்காத படியும் அமைக்கப்பட்டிருப்பது முதல் ஐந்து

பாசுரங்களிருந்தே தெரியலாயிருப்பதால் அதை விடுவது யுக்தமாகாது. மேலும், 'மேலை யார் செய்வனகள் வேண்டுவன' என்று பண்டையாசாரத்தை ப்ரமாணமாக்கியிருப்பதாலே செய்யப்பட வேண்டுமென ஏற்படுகிறது. இது இடையர்கள் ஒவ்வொரு வருஷமும் செய்ய வேண்டிய நித்யமான நோன்பு மாகலாம். அல்லது, 'யஸ்யாஹிதாக்நேரக்நி: க்ருஹாந் தஹேத் ஸோऽக்நயே க்ஷாமவதே புரோடாசமஷ்டாகபாலம் நிர்வபேத்' (यस्याहिताग्नेरग्निः गृहान् दहेत्सोऽग्नये क्षामवते पुरोडाशमष्टाकपालं निर्वपेत्) என்று ஆஹிதாக்நியாயிருப்பானுக்கு வீடு எரிந்தால் அக்நியைக் குறித்து இஷ்டியை விதித்தாற் போலே துர்பிக்ஷம் நேர்ந்த போது அதையே நிமித்தமாக்கி விதித்த நோன்பாகலாமிது. இந்த நோன்பு, ஜாதேஷ்டி யானது அவசியம் பண்ண வேண்டியதாயிருந்து புத்திரனுக்குத் பலன்களை யளிப்பதாயு மிருப்பது போல், நைமித்திகமாயிருந்தே துர்பிக்ஷத்தை விலக்கிச் செல்வம் விளைவிப்பது மாகலாம். ஆகையால், 'இற்றைப் பறை கொள்வானன்று' என்றவிடத்தில் பறை கொள்வது விலக்கப்படுகிறதன்று. அப்போது இவற்றை என்பதும் வீணும். இன்றைக்குப் பறை கொள்வதற்காக வன்று. என்றைக்கும் ஆட்செய்வதற்காக என்றால் பறை கொள்வதும் ஆட்செய்யும் வகையிற் சேர்ந்ததென்றே விளங்கும். பறை கொண்டு இன்றைக்கு ஆட் செய்கிற வண்ணம் எப்போதும் ஆட்செய்வதை கோலி ப்ரபத்தி பண்ணுகின்றார்கள் இவர்கள். கடைப்பாசுரத்திலும், 'அங்கப்பறை கொண்டவாற்றை' என்று பறை கொண்ட வகையைச் சொல்லுகிறது. திருப்பாவை யென்றதாலே நோன்பு நோற்றது நிலைக் கின்றது. இல்லையேல் பறை கொள்ள வேண்டியதில்லையே. இப் பாசுரத்தில் இடைப் பெண்கள் கண்ணனிடம் விண்ணப்பித்தது முடிவுற்றது. இவர்கள் ப்ரார்த்தித்த வண்ணம் இசைந்து எப்போழ்தும் கைங்கர்யத்தி லீடுபட்டிருப்பதை அவர்கள் கோலினபடி அனுக் ரஹிக்கின்றவனாய், தற்போது நடத்தும் நோன்பாம் கைங்கர்யத்திற்காகப் பறையுமளித் தான். அதனால் நோன்பு நன்கு நடந்தேற, துர்பிக்ஷமும் நீங்க மறுபடி துர்பிக்ஷத்திற்கு இடமில்லாதபடி நீங்காத செல்வம் நிறைந்து திருவாய்ப்பாடி சிறந்து விளங்கிற்றென்ற வரலாற்றை மேலும் கீழு முள்ள பாசுரப் போக்கினாலே பாங்காகத் தெளியலாம்.

ஆக இடைப் பெண்கள் நோன்பு நோற்ற வகையை நமக்கு 29 பாசுரங்களாலே ஆண்டாள் வெளியிட்டருளினாள், (29)

இனி இத் திவ்ய ப்ரபந்தத்தைக் கற்பதின் பலன் கூறப்படுகிறது—

30. வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியற் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்குந் திருவருள் பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

வங்கம்—அலைகள் (நிறைந்த)
கடல்—ஸமுத்திரத்தை
கடைந்த—கடைந்தவனாய்
மாதவனை—ச்ரிய:பதியும்
கேசவனை—ப்ரம்மருத்ரஸ்வாமியுமான
கண்ணனை
திங்கள்—சந்திரனின்
திரு—மேன்மையை யுடைய
முகத்து—முகத்தையுடையரும்
சே இழையார்—செவ்விய ஆபரணங்களை
யுடையருமான (இடைப்
பெண்கள்)
சென்று—இறைஞ்சி கிட்டி வணங்கி
அங்கு—அந்தத் திருவாய்ப்பாடியிலே
அ—அப்படிப்பட்ட
பறை கொண்ட | நோன்புக்குப் பறை
ஆற்றை | முதலியன பெற்ற
வகையைப் பற்றி
அணி புதுவை—அலங்காரமான ஸ்ரீவில்லி
புத்தூரைச் சேர்ந்தவரும்
பை கமலம் | பசுமையான தாமரை
தண் தெரியல் | களாலான குளிர்ந்த
மாலை யுடையருமான

பட்டர் | ஸ்ரீ பட்டநாதரெனப்படும்
பிரான் | பெரியாழ்வாரைச் சேர்ந்த
கோதை—ஆண்டாளால்
சொன்ன—சொல்லப்பெற்ற
சங்கம்—ஸங்கம்—விரும்பத்தக்க
தமிழ்—தமிழ் பாஷையில்
மாலை | கோக்கப்பட்ட பாசுரங்க
முப்பது உம் | ளாம் முப்பது மாலைகளையும்
தப்பாமே—தவறுதலின்றி
இங்கு—இந்த இடத்தில்
இ பரிசு—இவ் வகையில்
உரைப்பார்—ஓதுமவர்
மால் வரை—பெரியமலை போன்ற
ஈர் இரண்டு தோள்—நான்கு தோள்களை
யுடையவனும்
செம் கண் | சிவந்த திருக்கண்கள்
திருமுகத்து-கொண்ட திருமுகமுடையனும்
செல்வம்—ஐச்வர்யம் நிறைந்தவனுமான
திருமாலால்—ச்ரிய: பதியால்
எங்கும்—எல்லா விடங்களிலும்
திருஅருள் பெற்று—மேன்மை பொருந்திய
தயையைப் பெற்று
இன்பு உறுவர்—ஸுகமடைவர்.
எம் பாவாய்!

முதலடியில் எம்பெருமானுக்குத் தன்னைச் சேர்ந்தவரிடத்திலே உள்ள வியாமோஹமும், இரண்டாமடியிலே இடைப்பெண்களுக்கு அவனிடமிருந்த அளவில்லா அபிமானமும் குறிக்கப்படும். அவனுடைய ஸௌலப்யஸௌசீல்யங்களை யனுபவிக்க அனுபவிக்க அவனைப் போலாகி அஹங்கரியாமே அவனிடத்தில் அடிமை கொள்ள வாசை யுண்டாமென இதனாலறிவித்தபடி.

வங்க மென்பதற்குக் கப்பலெனவும் பொருளுண்டு. உப்புக்கடலிலேயே வியாபாரிகள் கப்பல் விடுவதால் பாற்கடலில் அஃதில்லையாகையாலேயே திரையென்ற பொருளே தகும். பாற்கடலில் பெருமானை ஸேவிப்பவர் நித்யஸூரிகளும், சிற்சில தேவதைகளும், அவர்கள் கப்பலில்லாமலே வானத்திற் பறந்து நின்று அவனைத் தர்சனம் செய்யலாமாகையாலே அங்கே கப்பல் எதற்கென்பர். கப்பலில்லாமலே கிட்டக் கூடியவர்களானாலும் நடுக்கடலிலே நாகபர்யங்கத்தெப்பத்திலே பள்ளி கொண்டிருக்கும் பெருமானை அந்த நித்யஸூரிகளே உல்லாஸமாய்க் கப்பலேறி உலாவி ப்ரதக்ஷிணப்ரணாமங்களைச் செய்து ஏத்த விரும்பினார்களாகில் அதில் குற்றம் யாது? பாற்கடல் இயற்கையிலும், கடையும் போதும் திரை மோதினவண்ணமிருக்குமாகையாலே வங்கக்கடலாமென்றபோது எம்பெருமான் ப்ரயாஸப்பட்டு அதனைக் கடைந்தது குறிக்கப்பட்டதாம். கடைந்த—தேவதைகள் பலம் பெற்றழியாமலிருப்பதற்காக அமுதமளிப்பதாகச் சொல்லி அவர்களை அஸுரர்களோடு நேசபாவனை செய்து இருதரத்தாரும் சேர்ந்து மந்தரமலையை நாட்டி வாஸுகியென்னும் நாகம் சுற்றிக்கடைய நியமிக்க அவர்கள் மலையைக் கொண்டு சேர்க்கக்கூட மாட்டாமே தவிக்க, தானே தன் வாஹநமான கருடன் மேல் அதை வைத்துக் கொண்டு

சேர்த்து, பிறகு வாஸுகியின் தலைப்பக்கம் அஸுரர்களும் வால்பக்கம் தேவர்களுமாக நிற்கவைத்துக் கடையச்செய்ய, மலையானது மூழ்கிவிட அதைப் பதமாக நிறுத்தத் தானே ஆமையாயவதரித்து முதுகினால் தாங்கி, மறுபடி மலையானது மேலே கிளம்பிவிடாதபடி மற்றொருருவமெடுத்து மலையின்முடியில் உட்கார்ந்து அழுத்திக்கொண்டு, இவ்வண்ணமிருக்க தேவாஸுரர்கள் தங்களாலியன்றவரை கடைந்தும் கோலின அமுதம் குவிந்துத்திரண்டு வராமலிருக்கத் தானே இருபக்கங்களிலும் இருருபங்களெடுத்து வாஸுகியின் தலையையும் வாலையும் கைகளால் பிடித்து வெகு விரைவிற் கடைந்தெடுத்தானுகையாலே கேசவனையே கடைந்தவனாக அருளினது. மாதவனை—தேவதைகளுக்கு அமுதளிப்பதற்காகக் கடைவதாகச் சொன்னானாகிலும், எம்பெருமான் அதற்காகக் கடைந்தானல்லன்; பிராட்டியைத் தான் பெறுவதற்காகவே கடைந்தான். பிராட்டியும்,

'திவ்யமால்யாம்பரதரா ஸ்நாதா பூஷணபூஷிதா ।
பச்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:
ததோऽவலோகிதா தேவா ஹரிவக்ஷஸ்தலஸ்தயா ।
லக்ஷ்ம்யா மைத்ரேய ஸஹஸா பராம் நிர்வ்ருதிமாகதா:

(दिव्यमाल्यांवरधरा स्नाता भूषणभूषिता । पश्यतां सर्वदेवानां ययौ वक्षस्थलं हरे : ।।
ततोऽवलोकिता देवा: हरि वक्षस्थलस्थया । लक्ष्म्या मैत्रेय सहसा परां निर्वृ ति मागता: ।।

என்றபடி ப்ரம்மருத்ராதிகளெல்லாம் பார்த்திருக்க, பகவானின் திருமார்பிற் சென்று வீற்றிருந்து தேவதைகளை யனுக்ரஹித்தருளினாள். அதனால், ச்ரிய: பதியான நானே பரமபுருஷன், ப்ரம்மருத்ராதிகள் எனக்கு தாஸர்கள்' என்பதை எம்பெருமானும் விளக்கினதாயிற்று. அதனை யறிவிக்க இங்குக் கேசவனை யென்றது. மார்கழி நீராட்டத்திற்கு புறப்பட்டவர் மார்கழி மாதத்திற்கு தேவதையான கேசவனைத் தானே கொண்டாட வேண்டும். 'மாஸாநாம் மார்கசீர்ஷோऽஸ்மி' (मासानां मार्गशीर्षोऽस्मि) என்ற அந்தக் கேசவனே கேசி ஸம்ஹாரம் செய்து இங்கும் கேசவனானான்.

இப்படி உலகக்ஷேமத்திற்காகத் தான் மாதவனாக வேண்டுமென்று தானே பிராட்டியுள்ளவிடம் சென்று அவளொருத்திக்காகப் பல பாடுகள் பட்ட பிரான் அவ்வண்ணமே இடைப்பெண்கள் விஷயத்திலும் பாடுபட ஸித்தமாயிருக்க அவனுக்கு அவ்வளவு ஆயாஸத்தை யளிப்பதில் மனம் நொந்து தானே அவனுள்ளவிடம் சென்ற இடைப்பெண்களின் குணாதிசயத்தை என்னென்று கூறுவது? பிராட்டியைப்போன்றவர்களாகில், இவர்களையும் பெற இவனே முயன்றிருப்பான். அஃதில்லை'. யென்னவேண்டா என வருள, 'திங்கள் திருமுகத்து' என்றது. பிராட்டிக்கு உடன் பிறந்த சந்திரனின் ஒளி அவளுடைய திருமுகத்திற் போலே இவர்களுடைய திருமுகத்திலும் வீசினதாலும், ஊன்றி நோக்கும்போது திருவினுடைய முகம் போன்ற முகமுள்ளவர்கள் இவர்களென விளங்கினதாலும் மாதவனுக்கு இவர்களிடம் மிக்க மோஹமுள்ள தென்றபடி. சேயிழையார் — 'திவ்யமால்யாம் பரதரா ஸ்நாதாபூஷணபூஷிதா' (दिव्यमाल्यांवरधरा स्नाताभूषण भूपिता) என்று பிராட்டிக்குச் சொன்னது இவர்களுக்கு மிருந்ததே. வநவாஸ காலத்திலும் விசித்திரமான ஆபரணங்களை யணிந்த வண்ணமே ஸீதாபிராட்டி யிருக்க வேண்டுமென்று சக்ரவர்த்தி முதலானோர் கருதினபடி இடையர்களும் இவர்களை எல்லாத் தசையிலும் நேரிழையராகவே இருக்கச் செய்தனர். அதனாலும் இவர்களெல்லாரும் பிராட்டி யென்றே சொல்ல வேண்டியதாயிற்று. சென்றிறைஞ்சி — பல உருவங்களெடுத்துப் பாற்கடல் கடைந்து தன்னைப் பெற முயன்ற மஹாபுருஷனைத் தானே பல உருவங்களெடுத்து, அவன் பிரயாஸப்படாதபடி அவனுள்ள இடம் சென்றுபெற வேண்டுமென்ற நோக்கத்தோடு பிராட்டியே இத்தனை

இடைச்சிகளாவை போலும். அவனிவர்கள் காலில் விழ்ந்து கெஞ்சும் தருவாயி லிருக்கும் போதும் இவர்கள் அவனை யிறைஞ்சித் தங்கள் ஸ்வரூபத்திற்குத் தக்கபடி நடந்து கொண் டது இவர்களுக்கு மிக்க மேன்மையாம்.

அங்கு — கண்ணனோடு தங்களைச் சேர்க்க விசையாத இடையர் நிறைந்த விடத்தி லேயே. இதனால் எம்பெருமானை யாச்ரயித்துத் தக்க கைங்கர்யம் செய்யப் பல இடையூறு கள் இருக்கும் இப்ப்ரக்ருதி மண்டலத்திலே விரோதிகளையு மொரு வகையில் வசமாக்கிக் கொண்டு விவேகிகள் முயன்றுவரவேண்டு மென உபதேசித்தபடியாம். அப்பறை கொண்ட வாற்றை -- இம்மையில் ஸுகப்பட்வே இவர்கள் நோன்பு நோற்பதாக இடையர்கள் நினைத்தார்கள். அவிவேகிகளான அவர்களின் புத்தியை வீணே கலக்கிவிடாமல் அவர் களுக்கொத்திருந்து அந்த நோன்பை நடத்த வேண்டிக் கொள்வது போல் நடித்துத் தங்கள் விவேகத்திற்குத் தக்கபடி இவர்கள் நடந்து கொண்டனர். இச்சதிர் எல்லோருக் கும் ஸுலபமாக ஏற்படாது. 'ஸ்த்ரீணும் அசிக்ஷிதபடுத்வம் அமாநுஷீஷு' (स्त्रीणामशिक्षितपटुत्वममानुषीषु) என்றான் மஹாகவி. அப்படியிருக்க இவர்கள் இவ்வளவாராய்ந்து செய்யததில் என்ன வியப்பு?

வாரீர் கோதைப் பிராட்டியாரே! இடைப்பெண்கள் இடையர்களுக்கிணங்கி ஒரு வகையாகப் புறப்பட்டுத் தமதுபரமைகாந்தி நிலைமைக்குவிரோதம் வாராதவண்ணமாகவே பரமபுருஷ கைங்கர்யத்தையே விரும்பி அதற்குள்ளடக்கியே பறையும் பெற்றார்களென்ற வரலாறு எந்த ப்ரமாணத்தினாலே உம்மாலறியப் பெற்றது என்று சிலர் வினவலாமென நினைத்து ஆண்டாளும் தனக்குத் தந்தையாரின் உபதேசமூலம் இவ்வர்த்தம் தெரிய லாயிற்று என விளக்கத் தகப்பனாரைக் குறிக்கின்றனள். அவருக்கு இவ்வளவு நிஷ்கர்ஷத் திற்குக் காரணம் யாதென்ற கேள்வி அவர் மஹிமை யறிந்தாரிடத்தில் கிளராதென அறி விக்க அணிபுதுவை இத்யாதி. பெரியாழ்வார் அவதரித்த முதல் புதுவையானது பூ மண்டலத்திற்கே ஓர் அலங்காரமாயிற்று.

'யஸ்யாநுபவ பர்யந்தா புத்திஸ்தத்வே ப்ரதிஷ்டிதா ।
தந்திருஷ்டிகோசரா: ஸர்வே முச்யந்தே ஸர்வகில்பிஷை: ॥
(यस्यानुभाव पर्यन्ता बुद्धिर्गोचरा । तद्दृष्टिगोचरा: सर्वे मुच्यन्ते सर्वकिल्बिषै:)

என்கிறபடி அநுஷ்டானம் வரையிலான விசேஷ ஜ்ஞானமுள்ள மஹநீயர் அவர். ஸ்ரீ வைஷ்ணவலக்ஷணங்களை நிரம்பப் பெற்ற புருஷோத்தமர் அவர்.

'யே கண்டலக்ந துளஸீநளிநாக்ஷமாலா: யே பாஹுமூல பரிசிந்ஹிதசங்கசக்ரா: ।
யே வா லலாடபலகே லஸிதோர்த்வபுண்ட்ரா: தே வைஷ்ணவா புவநமாசு பவித்ரயந்தி ॥
(ये कण्ठलग्न तुलसीनलिनाक्षमाला: योवहुमूलपरिचि हिनतशंखचक्रा: ।
येवा ललाटफलके ललितोर्ध्वपुण्ड्रा: ते वैष्णवा भुवनमाशु पवित्रयन्ति ॥)

விஷ்ணுவினிடத்தில் பக்தியுண்டான மட்டிலே தங்களை வைஷ்ணவராக நினைப்பாரு முளர். அவர்களால் உலகு விரைவில் பவித்ரமாகாது. வைஷ்ணவனிவனென்று எல்லோ ருமறியும்படி இலச்சினைகளையும் தரிக்கவேண்டும். பிராட்டியும் பெருமாளும் இருவரும் உபாயமும் உபேயமுமானவர் என்றது தோற்றத் தாமரை மாலையையும் துளஸிமாலையை யும் சேர்த்துத் தரித்த மஹான்கள் வைஷ்ணவ ஸார்வபௌமராவர். வாடாத தாமரைப் பூமாலையைப் புதிது புதிதாகத் தரிக்கத் தமக்கு அநுகூல மேற்பட்டிருந்ததாலே இவர் தாமரைப் மணிமாலையைத் தரித்தாரல்லர். அல்லது பைங்கமலத்தண்தெரிய லென்று

தாமரை மணிமாலையையே சொன்னதாகலாம். தண்தாமரைமணிமாலையைச் சொல்லு மிவ்விடத்திலே சிறிது உஷ்ணமான துளஸீமாலையும் கருதப்பெற்றதென்று கொள்க. இப்படி மாலைகள் மிகச்சிலரே தரிப்பார்களாகையாலே வேறு வைஷ்ணவ லக்ஷணம் இரண்டாம் பாதத்திலே சொல்லப்பெற்றது. ஐந்து ஆயுதங்களையும் தரிப்பவரும் சிலருளர். சங்க சக்கரங்களைப் புஜங்களின் அடிகளிலே தரித்தலே போதுமென்கிறது இவ்வசனம். இவ்வடையாளமும் ஆசார்யஸமாச்ரயணம் செய்தபிறகு வரவேண்டுவதால் சிறுவயது தொடங்கி திகழும் அடையாளத்தைக் குறிப்பிடுவது மூன்றும்பாதம். 13 அல்லது 12 திருமண்காம்புக்கள் வேண்டுமென்பதில்லை. 'தாமோதரம் கேசவஞ்ச ந கதாபி பரித்யஜேத்' (दामोदरं केशवञ्च न कदापि परित्यजेत्) என்றபடி முதல் திருமண்காப்பும் கடைத்திருமண் காப்புமாவது சேர்ந்திருக்க வேண்டுமென்பதுமில்லை. நெற்றியில் நேர்த்தியாகத் திருமண்காப்பு திகழ்ந்தால் போதுமென்றபடி. இங்குச் சொன்ன அடையாளங்களெல்லாம் சேர்ந்திருக்கவேண்டுமென்பதில்லை கடையிற் சொன்ன ஓரடையாளம் உடைய வைஷ்ணவன் கூட உலகைப் பவித்ரமாக்க வல்லன் எனவறிவிக்க இந்த ச்லோகத்திலே, 'யே வா' என்று வாகாரத்தை ப்ரயோகித்தது. திருமண்காப்பும் திருவாழி திருச்சங்கு விலச்சினையுமுள்ளவன் அவனை விட உயர்ந்தவனுவான்; துளஸிமாலையும் தாமரைமாலையும் கூடத்தரித்தானாகில் அவன் உத்தம வைஷ்ணவனென் 'இதன் கருத்து. இவ்வாழ்வார். தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடி யாட் செய்யும்குலத்தில் தோன்றினரென்பதை அவர்தாமே யருளினர். திருமண் காப்பிற் கேற்பட்ட திருநாமங்கள் பன்னிரண்டையும் கூட, போய்ப்பாடு (2-3) என்ற திருமொழியிலே கடிப்பிடும்போது அனுஸந்தித்தருளினர். இவர் தாமரைமாலை முதலியன தரித்தமை இங்கே அவர் புதல்வியாரால் அருளப்பெற்றது.

இத்தகைய உத்தம வைஷ்ணவராவர் ஸ்ரீவிஷ்ணுசித்தர். ஜ்ஞானமிராமே அனுஷ்டானம் மட்டுமுள்ள பெரியாரு முலகிலுளர், இவர் அதிலும் மிகச் சிறந்தவரென்ன, பட்டர் பிரான் என்றது. பட்டராவார், பல நூல்களை யோதினவர். அவர்களுக்கு அந்நிலையை யருளினவர் இவர். புதுவை நகர் முதலான விடங்களிலிருந்த பட்டர்களெல்லாம். 'குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாந் அசேஷாந்' (गुरुमुखमनधीत्य प्राह वेदानशेषान्) என்றபடி ஸர்வ வேதங்களை அறிந்தவரும், கல்ப்பஸூத்ர வ்யாக்யானம் செய்தருளினவரும், அகஸ்த்ய முனிவர் ஆதரித்த செந்தமிழில் சிறந்த ப்ரப்ந்த மருளின வருமான பெரியாழ்வாரைப் பணிந்தே பல யோக்யதைகளைப் பெற்றூராகையாலே இவர் பெருமைக்கு அளவில்லை. அத்துடன் பரமதங்களை நிரஸித்துப் பரதத்துவஸ்தாபனமும் செய்த இம்மஹநீயருக்குப் பட்டர் பிரானென் பிருதமளித்தான் பாண்டியராஜன்.

ஆக மயர்வறமதிநல மருளப்பெற்ற இம் மஹானின் உபதேசத்தாலே ஆய்ச்சிகள் நோன்பு நோற்ற விதம் நம்மாலறியப் பெற்றதென விளக்க பட்டர்பிரான் கோதை யெனத் தன்னைத் தெரிவித்து கொண்டனள். கோதை பெரியாழ்வாருக்கு வடமொழி தென்மொழி யிரண்டிலுமுள்ள அபிமானம் தம் புதல்விக்கு அவர் இட்ட திருநாமத்தினின்றே விளக்கமாகிறது. எம்பெருமானுக்கு மாலை தொடுத்து ஸமர்ப்பித்துக் கைங்கர்யம் செய்து வந்த அம்மஹானுக்கு நந்தவனத்தில் உழுது வரும்போது பூமியில் ஆவிர்பவித்த இவளைக் கண்டதும் இதோர் எம்பெருமானுக்கு அளித்தத் தக்க மாலை யெனத் தோன்றினதாலே

கோதை எனப் பெயரிடலாயிற்று கோதை என்றது பொதுவிலே ஸ்த்ரீயைச் சொல்லும் வடமொழிப் பெயர் என்பதுமுண்டு. பூமியினால் கொடுக்கப்பட்டவள், வாக்கை யளிப்பவள் என்றவாறு பொருளும் என்ற வடமொழிக்கு உண்டு. இங்ஙனம் பலப் பொருளைக் கொடுக்கும் பெயரை இவளுக்கிட்ட ஆழ்வாரின் கருத்துக் கிணங்க இவள் சொன்ன மாலை சங்கத் தமிழ்மாலை யாயிற்று. இவளும் கோதை. இவளுடைய தந்தையாரும் பைங்கமலத்தண் தெரியலானவரென்றால், இவளுடைய சொற்களும் மாலையாகத் தானே யாகும். சங்கத் தமிழ்—ஆண்டாளுடைய ஸ்ரீஸூக்தியை அக் காலத்திலும் ஆண்களும் பெண்களும் திரள் திரளாகக் குழுமிக் கேட்டிருந்ததால் இம் மாலை சங்கத்தமிழ் மாலை யாயிற்று. சங்கமாவது அழகு: விருப்பமென்னவுமாம். மாலைபோல் தமிழும் அழகியதும் விரும்பத்தக்கதுமாம். சங்கமென்பது संघ संग என்ற வட சொற்களின் திரிபு.

தப்பாமே—பிழையற்று; பொருள் விடாமல், நாள் தவறாமே. இங்கு-அங்குத் திருவாய்ப்பாடியிலே இடைப்பெண்கள் ஒரு பாஷையிலே பேசி நடத்தினதைத் தமிழ்ப் பாஷையிலே ஆண்டாள் அருளிச் செய்திருப்பதால் இது தமிழ் தேசத்திலுரைக்கத் தக்கதாயிற்று. அல்லது இங்கு—இந்த லோகத்தில். இப் பரிசு உரைப்பர் - இடைப்பெண்கள் போலே எம்பெருமானுடைய கைங்கர்யமாக நினைத்துரைப்பார்; அல்லது த்வயம் முதலிய மந்த்ரங்களின் விவரணமாயும் ப்ரபந்நருடைய அனுஷ்டான முறையை வெளியிடுவதாயுமுள்ள வகை யறிந்துரைப்பார். அல்லது எனது தோழியே! உனக்கு நான் பாசுரங்களை யியற்றியுரைக்கும் போது எங்ஙனம் இசை. தாளம் எல்லாம் பொருந்த, பொருள்பட உரைக்கின்றேனோ, இங்ஙன முரைப்பார். ஈரிரண்டு மால்வரைத் தோள் கல்ப்ப விருட்சத்தில் கிளைகளெழுந்தாற் போலே யிருக்கின்றனவும், நாலு புருஷார்த்தங்களையும் கொடுக்கின்றனவுமான நாலு புஜங்களின் மூலபாகமா யுள்ள தோள்கள், இடைச்சிறுமிகளிடத்தில் இப் பாசுரங்களை ஓதுகின்றவர்களிடத்திலும் மிக்க மால் கொண்ட திருமாலின் தோள்களான படியாலே மால்வரை போலாகும். இம் முப்பது பாமாலைகளையும் பூமாலைகளாக்கித் தன் மால்வரை தோளில் தாங்குகிறான் அவன். அப்போது மால்வரை போல் அவை அகன்று வளருகின்றன என்றபடி. எங்கும் - எல்லாவுலகிலும்; பரமபதத்திலும். தத்துவஹித புருஷார்த்தங்களைத் தெரிவித்து ஆஜ்ஞா கைங்கர்யங்களில் இழியவைத்து ரஹஸ்ய த்ரய நிஷ்டையை நிலைநாட்டுவதாலே இது பரமபதத்தில் இன்புறுவதற்கு காரணமாயிற்று. திருவருள் பெற்று — இப்பாசுரத்திலே மாதவனை என்று பிராட்டியுடன் சேர்ந்த பெருமானைச் சொல்லி, திருமுகத்து, திருமாலால், திருவருள் என்று ஒரு தரத்திற்கு நாலு தரமாகத் திரு என்னும் பதத்தைச் சொல்லித்தனக்கு எம்பெருமானிடத்திலே போலப்பிராட்டியினிடமு மிருக்கு மீடுபாட்டை யொருவாறு அறிவிக்கின்றனள் போலும். எம்பெருமான் அருளுவது அவன் திருமாலானபடியாலே திருவின் புருஷகார க்ருத்யத்திலே மதிமயங்கினதால். அங்ஙனம் திருமால் தன்க்கு ஸ்வாதீனமாய் விட்டபடியாலே திருமாலின் நோக்கத்தைக் கண்டு திருவும் உபாயமாய் நின்று அருளுகின்றனள். ஆகத் திருவாலும் மாலாலும் திருவருள் பெற்றென்றபடி. இனி, எங்கும் திருவருள் பெற்று என்று,

'ச்ரேயோ ந ஹ்ய ரவிந்தலோசநமந: காந்தாப்ரஸாதா த்ருதே।
ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்' ||

(श्रेयो नः ह्यरविन्दलोसंनमनःकान्ताप्रसादादृते ससृत्यक्षरवैष्णवादसु नृणां संभाव्यते कर्हिचित्)

என ஆளவந்தார் அருளிச்செய்தபடி ஐச்வரியம், கைவல்யம், மோக்ஷம் என்ற பலன்க ளெல்லாம் திருமாலின் அன்பார்ந்த திருவின் அனுக்ரஹத்தினாலேயே வரவேண்டி யிருப்ப தால். 'திருமாலால் இன்புறுவர், திருவினருள் பெற்று இன்புறுவர்' என இருவருக்கும் உபாயத்வத்தை யருளினது என்னவுமாம். பிராட்டிக்கும் பெருமாளோடு இந்தப் பரம ஸாம்யத்தை விளக்கவே துளஸி மாலையோடு தாமரைமணிமாலையையும் தத்துவ ஜ்ஞாந முள்ள வைஷ்ணவர் அணிந்து விளங்குவது.

இன்புறுவர்—எங்கு மின்புற வேண்டுமென்ற நோக்கத்தோடு. இத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே யுரைப்பார் எங்கு மின்புறுவர். 'ஸகலாங்கோபஸம்ஹாரே காம்யம் கர்ம ப்ரஸித்யதி' (सकलाङ्गोपसंहारे काम्यं कर्म प्रसिद्ध्यति) என்கிறபடி. அங்கலோபம் நேர்ந் தால் பலனைக் கோலிச் செய்யப்படுமது பலன் பெறுதாகையாலே அப்போது தப்பாமே உரைத்தல் வேண்டும். ஆத்ம யாத்ரை, ப்ரபத்த்யநுஷ்டானத்தைக் கண்டுவந்த பரம புருஷனுக்கு அதீனை யென்றும், தேஹயாத்ரை பூர்வ கர்மாக்களுக்குத் தக்க பலனை ஸங் கற்பிக்கும் அப்பிரானுக்கே அதீனை யென்றும் தெளிவுற்று அவனுடைய கைங்கர்யத்திலே ஈடுபட்டு போக்யமாக இச் சொன்மாலையை யனுஸந்திப்பராய், அஹங்கார மமகாரங் களின்றி அக் கைங்கர்ய புத்தியும் தவறாமே நடந்து கொள்வார்க்கும்,

'சரீராரோக்ய மர்த்தாம்ச்ச போகாம்ச் சைவாநுஷங்கிகாந் |
ததாதி த்யாயிநாம் பும்ஸாம் அபவர்க ப்ரதோ ஹரி:' ||

(शरीरारोग्यमर्थांश्च भोगांश्चैवानुषङ्गिकान् । ददाति ध्यायिनां पुंसां अपवर्गप्रदो हरिः)

என்கிற ந்யாயமாக எல்லா இன்பங்களு முண்டாகும். ஆனால் அவற்றில் அவர்களுக்கு நோக்கில்லை யென்பது விசேஷம். இவற்றுடன் சொன்மாலையைப் பொருளுடன் அநு ஸந்திப்பதே பேரின்பமாகையாலே இன்புறுவதற்கு வேறு விஷயமும் வேண்டா; வேறு ஸமயமும் வேண்டா. உபாயாநுஷ்டானம் நன்கு நடைபெறுவதற்கு முன் எம்பெருமான் உகப்பையே நினைந்து இச்சொல்மாலை உரைப்பார்க்கும் உபாய பூர்த்தியை செய்வித்து எம்பெருமான் எங்குமின்ப முட்டுவன் என்றவாறு கொள்க.

எம்பாவாய் — முன் பாசுரங்களிலே, 'ஏலோரெம்பாவாய்' எனவே எங்கு மிருந்தா லும், 'அம்பரமே' என்ற பாசுரத்தில், 'உறங்கேலோ ரெம்பாவாய்' என்றவிடத்தில் ஓரெம் பாவாய் என்றதை மட்டும் அருளினது போல், இங்கு 'ஒர்' என்பதையும்விட்டு எம்பாவாய் எனவே அருளினது இப்பாசுரம் இடைச்சிகள் போன்றுரின் பேச்சாகாததாலும் நோன்பு விஷயம் முன் பாசுரத்திலே முடிவுற்றதாலும், நிகமத்தில் திவ்ய ப்ரபந்தத்தின் பலனை இங்கு ஆண்டாள் அருளுவதாலும் ஆண்டாள். அருகிலிருக்கும் தனது தோழியொருத் தியை எம்பாவாய் என விளித்ததாகக் கொள்வது தகுமென்றும், ஆகவே முன் பாசுரங் களிலும் இங்ஙனமே உரைப்பது பொருந்து மெனவும் ப்ரவேசத்திலேயே பரக்கச் சொன்னோம்.

இப்படி யாண்டாள் திருப்பாவை யென்னும் இத்திவ்யப்ரபந்தம் வாயிலாக இடைப் பெண்கள் முன் நடத்திய நோன்பின் நிலைமையைப் பரமைகாந்தி ஸார்வபௌமராய் பட்டர்பிரானென்று புகழ்பெற்ற பெரியாழ்வாரின் திருவுள்ளத்திற்கிணங்க, ஒரு பாவையை விளித்து உலகுக்கு வெளியிட்டு. எல்லோரும் எளிதில் எம்பெருமானிட மீடுபடும்படியும், அதனால் இங்குற்ற இன்பங்களுக்கு இடையூறென்று மில்லை யென்று தெளியும்படியும் செய்தருளி திரள்திரளாக இருந்து தன் தென்மொழிகளை எல்லோரும் அநுபவிக்கும்படி அநுக்ரஹித்து அவதாரத்தின் பலனை யற்புதமாக பெற்று வந்தாள்.

श्रीरङ्गलक्ष्मणमुनेश्चरणारविन्दसेवापरः सकलसाधुजनप्रियार्थी ।
श्रीवीरराघवसुधीर्व्यवृणोदितीमं गोदाकृतं व्रतपरं प्रगुणं प्रबन्धम् ॥

உத்தமூர் திருமலைநல்லான் சக்கரவர்த்தி
வீரராகவாசார்யர் இயற்றும் ப்ரபந்தரக்ஷையில்
திருப்பாவை ப்ரபந்தரக்ஷை முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்
ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

சுபமஸ்து